அ5

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

தொகுதி-32 எண்-1

பிப்-1993

©

## உள்ளக்கம்.

10—2—1993


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | III—V |
| Personnel of the Government of Tamil Nadu. | VII—X |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் .. .. .. | XIII– XIV |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | XV– XXV |
| 1. இரங்கல் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. | 1—2 |
| 2. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 2—3 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 3 மற்றும் 4) .. .. .. | 39—181 |
| 3. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். | 181—184 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களின் காவேரி பாசன நெற்பயிர்களைப் பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டியது குறித்து .. .. .. .. | 184—18 |
| 5. அறிக்கைகள் அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. | 187—188 |
| 6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1993 .. .. .. | 188—189 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. தீர்மானம்— | |
| விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்தல் | 189—190 |
| 8. தனித் தீர்மானம்— | |
| சென்னைத் தொலைக்காட்சி நிலையம் இரவு 9 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பவும் மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோருதல் .. .. | 190—214 |
| 9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. | 214—264 |
| *1. திரு. வ. சத்தியமூர்த்தி .. .. | 214—218 |
| 2. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் .. | 218—224 |
| *3. டாக்டர் ஜெ. பரந்தாமன் .. | 224—228 |
| 4. திரு. வே. தம்புசாமி .. .. | 229—246 |
| 5. திரு. மு. தென்னவன் .. .. | 246—259 |
| 6. திரு. கு. சீனிவாசன் .. .. | 259—263 |
| *7. திரு. எஸ். வி. சண்முகம் .. | 263—264 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் . | 265—266 |


164982



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:
பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:
நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு, நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:
வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:**
கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு.

6. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

7. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்**
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

8. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:**
கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

9. பொதுப்பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:**
பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

10. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

11. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:**
உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள், பால், பால் பெருக்குத் திட்டம்.



12. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சே. ரகுபதி:**
தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி மற்றும் கால்நடைப் பராமரிப்பு.

14. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:**
வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

15. சமூக நலத்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:**
சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட) சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

16. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:**
ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், முன்னாள் இராணுவத்தினர் நலன்.

17. பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:**
பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர் மற்றும் மீனளம்.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்:**
சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

Thiru Bhishma Narain Singh

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1 Chief Minister .. **THE HON. DR. J. JAYALALITHA :**
Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Electronics and Newsprint Control.

2 Minister for Finance .. **THE HON. DR. V. R. NEDUNCHEZHIAN**
Finance, Planning, Elections and Legislature.

3 Minister for Law .. **THE HON. THIRU K. A. KRISHNASAMY:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.

4 Minister for Revenue **THE HON. THIRU S. D. SOMASUNDARAM:**
Revenue, District Revenue Establishment Deputy Collectors, Registration, stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5 Minister for Education. .. **THE HON. DR. C. ARANGANAYAGAM:**
Education, Technical Education Science and Technology, Sports and Youth Welfare and Archaelogy, Tamil Development and Tamil Culture.

6 Minister for Health .. THE HON. THIRU S. MUTHUSAMY : Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

7 Minister for Transport. .. THE HON. THIRU K. A. SENGOTTAYAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports Forests and Cinchona.

8 Minister for Handlooms and Textile. .. THE HON. THIRU E. MADHUSUDHANAN : Handlooms and Textiles.

9 Minister for Public Works. .. THE HON. THIRU S. KANNAPPAN : Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

10 Minister for Local Administration. .. THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU : Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

11 Minister for Food and Co-operation. .. THE HON. THIRU G. VISWANATHAN : Food, Co-operation, Civil Supplies, Price Control, Statistics and Dairy Development.

12 Minister for Labour .. THE HON. THIRU S. REGUPATHY : Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

13 Minister for Agriculture. .. THE HON. THIRU KU. PA. KRISHNAN : Agriculture, Agricultural Engineering Agro Service, Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development and Animal Husbandry.



14 Minister for Housing and Urban Development. .. THE HON. THIRU T. M. SELVA GANAPATHI : Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

15 Minister for Social Welfare. .. THE HON. THIRUMATHI R. INDIRA KUMARI : Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

16 Minister for Adi-Dravidar Welfare. .. THE HON. THIRU M. ANANDAN : Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

17 Minister for Backward Classes and Fisheries. .. THE HON. THIRU D. JAYAKUMAR : Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees and Fisheries.

18 Minister for Rural Industries. .. THE HON. THIRU S. NAGOORMEERAN : Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

### பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. க. அர்ச்சுனன்
3. திரு. கி. தருமலிங்கம்
4. திரு. ஆர். சிங்காரம்
5. திரு. ஜி. பழனிசாமி
6. திரு. செ. கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. செ. க. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. கா. செ. சுந்தரராஜன், பி. ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 2. | திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், பி.ஏ., பி.எல்., டி.பி & பி.ஏ | இணைச் செயலாளர் |
| 3. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல். | இணைச் செயலாளர் |
| 4. | திரு. பா.கி. இராஜேந்திரன், பி.ஏ. | துணைச் செயலாளர் |
| 5. | திரு வெ. இராசாராமன், பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| 6. | திரு. பெ. இராசமாணிக்கம். பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| 7. | திரு. கோ. சண்முகநாதன், பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| 8. | திரு. ப.சி. வெங்கடராமன், பி. காம். | குழுஅலுவலர் |
| 9. | திருமதி. முனீர் உனிசா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | குழு அலுவலர் |
| 10. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| 11. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி.,பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 12. | திரு.கி. சாயிநாதன், பி.ஏ.,பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 13. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| 14. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ.,பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 15. | திரு.சா. கணேசன், பி.ஏ.,பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 16. | திரு. சே. க. இராஜசேகரன், எம்.ஏ.,பி.எல். | சார்புச் செயலாளர் |
| 17. | திரு ஜெ அப்துல் சத்தார், பி.ஏ.,பி.எல். | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. ந. முடிகோபதி, எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. கா. சம்பத்ராஜன், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. எம். ஜோபாய், பி.காம். | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. கோ. வெங்கடராமன், | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| 23. | திரு. செ. ஏ. துரைபாண்டியன், பி.ஏ. | தலைமை நிருபர் |
| 24. | திரு. துரை சுந்தரராஜுலு, எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 25. | திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 26. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ.,எல்.எல்.பி. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2 | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.). |
| 3 | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை |
| 4 | அப்பு நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 5 | அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு |
| 6 | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 7 | அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 8 | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 9 | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 10 | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 11 | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 12 | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 13 | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 14 | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 16 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம் |
| 17 | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி–1 |
| 18 | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 19 | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்ப்பேட்டை (செ.வ.) |
| 20 | இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி |

| | | |
|---|---|---|
| 21 | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 22 | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம் |
| 23 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 24 | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம் |
| 25 | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 26 | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 27 | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 28 | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம் |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. | இளையாங்குடி |
| 32 | இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி |
| 33 | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 34 | இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |
| 35 | இராஜமன்னார், திரு. சூ. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 36 | இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |
| 37 | இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம் |
| 38 | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 39 | இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 40 | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 41 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 42 | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 43 | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 44 | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 45 | கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 46 | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 47 | கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 48 | கலைச்செல்வி, திருமதி கே.எம். | காட்பாடி |
| 49 | கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி |
| 50 | கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி |
| 51 | கனகவல்லி, திருமதி என். | விளாத்திகுளம் |
| 52 | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 53 | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 54 | காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 55 | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ. வ.) |
| 56 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 57 | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | தாம்பரம் |
| 58 | கிருஷ்ணன், திரு. கு. ப. | ஸ்ரீரங்கம் |
| 59 | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 60 | குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 61 | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 62 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 63 | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 64 | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 65 | கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | சங்கரநயினார் கோயில் (செ.வ.) |

| | |
|---|---|
| 66 கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.) |
| 67 கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 68 சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 69 சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 70 சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 71 சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 72 சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு |
| 73 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 74 சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி |
| 75 சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 76 சரஸ்வதி, திருமதி அ.இ. | சத்தியமங்கலம் |
| 77 சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 78 சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.) |
| 79 சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 80 சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 81 சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 82 சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 83 சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 84 சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 85 சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 86 சிவபதி, திரு. என்.ஆர். | தொட்டியம் |
| 87 சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88 சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 89 சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர் |



| | |
|---|---|
| 90 சின்னப்பன், திரு. கே. சி. | ஜெயங்கொண்டம் |
| 91 சீனியம்மாள், டாக்டர் ப. | அவினாசி (செ.வ.) |
| 92 சீனிவாசன், திரு. ஆ.கு. | பெரணமல்லூர் |
| 93 சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 94 சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 95 சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 96 சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 97 சுந்தரம் திரு. எம்.கே. | தண்டராம்பட்டு |
| 98 சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 99 சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர் |
| 100 சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |
| 101 சுப்பிரமணியம், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 102 சுப்பிரமணியன், திரு. வி.என். | பெருந்துறை |
| 103 சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 104 சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 105 சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 106 சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 107 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிப் பாளையம். |
| 108 செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 109 செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம் |
| 110 செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 111 செல்வகணபதி, திரு. டி.எம். | திருச்செங்கோடு |

| | | |
|---|---|---|
| 112 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 113 | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |
| 114 | செழியன் திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 115 | சேகர், டாக்டர் எம்.பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 116 | சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 117 | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 118 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர் |
| 119 | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 120 | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 121 | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |
| 122 | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 123 | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 124 | தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம் |
| 125 | தமிழரசன், திரு. செ. கு. | வந்தவாசி (செ.வ.) |
| 126 | தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர் |
| 127 | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 128 | தருமலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 129 | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 130 | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 131 | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 132 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 133 | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 134 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |



| | | |
|---|---|---|
| 135 | துரை, திரு. எஸ்.எம். | ஆத்தூர் |
| 136 | துரைமுருகன், திரு. கே.எஸ். | பல்லடம் |
| 137 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138 | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 139 | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 140 | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 141 | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 142 | நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143 | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி |
| 144 | நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145 | நிர்மலா திருமதி பி. | திண்டுக்கல் |
| 146 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147 | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ. |
| 148 | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம் |
| 149 | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150 | பரமசிவம், திரு. ஆர்.பி. | சின்னசேலம் |
| 151 | பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152 | பலராமன், திரு. உ. | பூங்கா நகர் |
| 153 | பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154 | பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155 | பழனிசாமி, திரு. நா.சா. | கிணத்துக்கடவு |
| 156 | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157 | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 158 | பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம் |
| 159 | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160 | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161 | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162 | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |
| 163 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164 | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166 | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 167 | பாலசுப்ரமணியன், திரு. எஸ்.ஆர். | பொங்கலூர் |
| 168 | பாலன், திரு. எம்.கே. | சைதாப்பேட்டை |
| 169 | பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170 | பிட்ரிக்ஸ் டி'சோசா, டாக்டர் | நியமனம் |
| 171 | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172 | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173 | புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174 | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175 | பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176 | பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177 | பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178 | பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179 | பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180 | பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி |
| 181 | பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி |



| | | |
|---|---|---|
| 182 | பொன்னுவேலு, திரு. ஏ.தா. | வரகூர் (செ.வ.) |
| 183 | போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184 | மணிமேகலை, டாக்டர் சு. | அரியலூர் |
| 185 | மணிமேகலை, திருமதி வி.ஜி. | அருப்புக்கோட்டை |
| 186 | மணிவாசகம், திரு. கே.பி. | உடுமலைப்பேட்டை |
| 187 | மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188 | மரியம் உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி |
| 189 | மல்லிகா, செல்வி கோ. | புவனகிரி |
| 190 | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர் |
| 191 | மாணிக்கம், திரு. சி. | திருச்சிராப்பள்ளி-2 |
| 192 | மாலா, டாக்டர் ஜி.ஆர். | ஈரோடு |
| 193 | முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 194 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 195 | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 196 | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 197 | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர் |
| 198 | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 199 | முனுசாமி, திரு. கா.பூ. | காவேரிப்பட்டினம் |
| 200 | முகமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 201 | மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202 | மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203 | ரகுபதி, திரு. சே. | திருமயம் |

| | | |
|---|---|---|
| 204 | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205 | ரங்கராஜன், திரு. டி.எம். | மயிலாப்பூர் |
| 206 | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207 | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208 | ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி |
| 209 | ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210 | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211 | ராமசுப்பு திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 212 | ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213 | ராஜு, திரு. கே.ஆர். | கூடலூர் |
| 214 | ராஜு, திரு. கே.பி. | பேரூர் |
| 215 | ராஜேந்திரன், திரு. என்.ஆர். | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 216 | லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 217 | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218 | லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219 | வரதராஜன், திரு. செ.து. | செங்கல்பட்டு |
| 220 | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221 | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222 | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223 | வெங்கடேசன், திரு. பி.ஆர். எஸ். | கடலூர் |
| 224 | வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225 | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 226 | ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 227 | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |



| | | |
|---|---|---|
| 228 | ஜீனத் சர்புதின், திருமதி | சேப்பாக்கம் |
| 229 | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 230 | ஜெயக்குமார், திரு. டி. | ராயபுரம் |
| 231 | ஜெயராமன், திரு. எஸ்.ஆர். | சேலம்-1 |
| 232 | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 233 | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 234 | ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |
| 235 | (வெற்றிடம்) | ராணிப்பேட்டை |
| 236 | பிட்ரிக்ஸ் டி'சோசா, டாக்டர் | நியமனம். |

---

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1993 பிப்ரவரி 10 புதன்கிழமை

### தை 28, ஆங்கிரச, திருவள்ளுவர் ஆண்டு—2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று''

பின்னர் எண்ணி எண்ணி கவலைப்படுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும். தப்பித் தவறி செய்து விட்டாலும் மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருப்பது நல்லது.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் வி. பூவராகன் மற்றும் டபிள்யூ. ஜெ. பெர்னாண்டஸ் ஆகியோர் 22—12—1992 ஆம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பூவராகன் அவர்கள் 1937 ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர்—கும்பகோணம் நகரியங்கள் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டபிள்யூ. ஜெ. பெர்னாண்டஸ் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை ஆங்கிலோ—இந்தியத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் 1952 முதல் 1957 ஆம் ஆண்டு வரை அன்றை ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையில் முதல் நியமன உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளார்கள்.

[1993 பிப்ரவரி 10

அன்னாரவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத் தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப் பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மௌனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண். 41, திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள்.

41—

சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உடன் பதில் அளித்தல்.

*10484—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு தவறாமல் பதில் எழுத வேண்டும் என்பன போன்ற அறிவுரைகள் அரசு உயர் அலுவலர்களுக்கு வழங்கப்பட் டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : முதலமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே இருக்க வேண்டிய அலுவல் சம்பந்தமான கடிதப் போக்குவரத்து பற்றி பதிலளித்து



1993 பிப்ரவரி 10]

விதிமுறைகள் அடங்கிய நடத்தை விதித் தொகுப்பில் இதுபற்றி கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:

(1) சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் ஏற்ப் பளிக்கப்பட்டு அக்கடிதங்கள் சீரிய கருத்துடன் பரிசீலிக்கப் பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும் ரகசியமற்றதும் அரசுக் கொள்கைக்கு முரண்பாடற்றது மான உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை அலுவலர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும்.

(2) அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதங்களுக்கு அமைச்சரே பதிலளிப்பது நல்லது. அம்மாதிரி அனுப்ப இயலவில்லையெனின் துறைச் செயலாளரோ அல்லது துறைத் தலைவரோ கையொப்பமிட்ட பதில்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பலாம்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறரைக் கோடி தமிழர் நெஞ்சில் நிறைந்த அன்பு தெய்வமாகவும் திராவிட இயக்கக வரலாற்றின் திருப்புமுனையாகவும் திராவிட சக்தியாகவும் இயங்கி இன்றைக்கு திராவிட இயக்கத்தை தேசிய சக்தியாக பரிணாம வளர்ச்சி அடையச் செய்து தேசிய அரசியலும் நல்லாட்சியும் நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கி, இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் நல்ல கருத்துக்களை பதிலுரையாக வழங்கியிருக்கக்கூடிய நிலையிலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமுக்கியத்துவம் கருதி பொதுமக்களுடைய பிரச்சினைகளை அதிகாரிகளுக்கு அனுப்பும்போது ஒருசில அதிகாரிகள் அதனுடைய முக்கியத்துவத்தை உணராமல் பதில் அனுப்பாமல் இருந்து வருகிறார்கள்.

முற்பகல் 10.05

இந்த நிலையிலே எங்களால் அந்தப் பிரச்சினைகளுக்கு ''ஃபாலோஅப் ஆக்ஷன்'' எடுக்க முடியாத சூழ்நிலையும் உரு வாகிறது. எனவே இதய தெய்வம் டாக்டர் புரசித் தலைவி அவர்கள், அதிகாரிகள் எங்களுக்கு பதில் அனுப்புவதற்கு ஒரு கால அளவை நிர்ணயித்து ஆணை பிறப்பிப்பார்களா என கருத்தைப் பணிவன்போடு அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 10

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற
மேலவையின் உறுப்பினர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
உறுப்பினர் ஒருவர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்
ஆகியோருடன் அரசு அலுவலர்கள் வைத்துக் கொள்கின்ற
தகவல் தொடர்புகள் அனைத்துமே கடித வடிவத்தில்
தான் இருக்க வேண்டுமென அரசு 1955-ஆம் ஆண்டு
வாக்கிலேயே உத்தரவு பிறப்பித்தது. பின்னர் 1958-ல்
சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்
களிடமிருந்து பெறப்படும் கடிதங்களுக்கு முதலில் உடனே
ஒப்புகை வழங்க வேண்டும் என்றும், இறுதி பதில்கள் உரிய
நேரத்தில் வழங்கப்படவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது
மீண்டும் 1968-ல் வலியுறுத்தப்பட்டது. அதனை அடுத்து,
பொதுத் துறையின் 24-5-1969 நாளிட்ட 976-ஆம் எண்
ணுள்ள அரசு நிலை ஆணையில், அரசு, சட்டமன்ற உறுப்பினா
களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையேயான உறவு முறைப்
படுத்துவது குறித்து 15 விதி முறைகள் அடங்கிய நடத்தை
விதிக் கோவை ஒன்றை வகுத்தது. இந்த நடத்தை விதிக்
கோவையில் விதிகள் 9 மற்றும் 10-ல் சட்டமன்ற உறுப்பினர்
களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள் குறித்து எடுக்க வேண்டிய
நடைமுறைகள், ஏற்கெனவே நான் சொன்னது போல; சட்ட
மன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் ஏற்பளிக்கப்பட்டு அக்கடி
தங்கள் சீரிய கருத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டும்; இரகசிய
மற்றதும், அரசு கொள்கைக்கு முரண்பாடற்ற உள்ளூர் முக்கி
யத்துவம் வாய்ந்த அவர்கள் கேட்கும் தகவலை அலுவலர்
அளிக்க வேண்டும்; அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதத்
திற்கு அமைச்சரே பதில் அளிப்பது நல்லது; அம்மாதிரி
அனுப்ப இயலவில்லையெனில் துறைச் செயலாளரோ அல்லது
துறைத் தலைவரோ கையொப்பமிட்டு பதிலை அவர்களுக்கு
அனுப்பலாம் என்று அந்த விதிக் கோவையில் கூறப்பட்டுள்ளது.
அதனை வலியுறுத்தி 1976-ஆம் ஆண்டிலும், 1982-ஆம் ஆண்டி
லும் அரசு அலுவலகங்களுக்குக் கடிதங்கள் எழுதப்பட்டன.

இப்போது இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்புரத்தினம்
அவர்கள் தெரிவித்தது போல, இப்போது கூட அரசு அலுவலர்
களிடமிருந்து உரிய நேரத்திற்குள் பதில்கள் வருவது இல்லை
என்பது உண்மையானால், இது குறித்து பரிசீலித்து மீண்டும்
அரசு அலுவலகங்களுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டு, எந்தக்
காலவரையறைக்குள் இந்தப் பதில் அவர்களுக்கு அனுப்பப்பட
வேண்டும் என்பதை நிர்ணயிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி.)

<u>திரு ஆ. சுப்புரத்தினம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய
விரிவான பதிலுக்கும் நல்ல சிந்தனை ஓட்டமான செயல்பாடு



1993 பிப்ரவரி 10]

களுக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் அவர்களுடைய பாதம்
களிலே காணிக்கையாக்கி, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும்
கடிதங்களுக்கு உயர் அதிகாரிகள் பதில் எழுதும்போது, அவர்
களுக்குக் கீழே பணியாற்றக் கூடிய சப்-ஆர்டினேட் அபிஷியலை
வைத்து கையொப்பமிடச் செய்கிறார்கள். இங்கே சிந்திக்க
வேண்டிய ஒன்று என்னவென்றால், இதய தெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுடைய பல்வேறு வேலைப் பளுவுக்கும்
இடையே நாங்கள் அவர்களுக்கு எழுதக் கூடிய கடிதங்களுக்கு
அவர்களே கையொப்பமிட்டு (மேசையைத் தட்டும் ஒலி)
எங்களுக்கு மிக உயர்ந்த மரியாதையை இன்றைக்கு, தமிழக
வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்
களுடைய உரிமையைக் காப்பாற்றி, மரியாதையை தந்து வரு
கிறார்கள். இந்த நிலையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
உயர் அதிகாரிகள் அனுப்பக்கூடிய கடிதங்களுக்கு அவர்களே
கையொப்பமிட்டு அனுப்பக்கூடிய ஒரு நடைமுறையை வலி
யுறுத்தி இங்கே ஆணை பிறப்பிப்பார்களா என இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதங்களை வணங்கி
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே நான் இங்கே
தெரிவித்தது போல ஆணையிடப்பட்டுள்ளது. நான் ஏற்
கெனவே சொன்னது போல, அரசுத் துறைச் செயலாளரோ
அல்லது துறைத்தலைவரோ சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்
களுக்குப் பதில் எழுத வேண்டும் என்று ஏற்கெனவே விதிக்
கோவையில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது, ஆனால்
அந்த விதியை மீறி சப் ஆர்டினேட் ஆபீசர்ஸ் கையொப்பமிட்டு,
கடிதங்கள் அனுப்பப்படுகின்றன என்றால் இது குறித்து தக்க
நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்
களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு கே. ஆர். இராமசாமி
அம்பலம்.

<u>திரு கே. ஆர். இராமசாமி அம்பலம் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசு துறைகளில் இவ்வாறு
கடிதப் போக்குவரத்துக்கள் இருந்தாலும், மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகத்திற்கு எழுதப்படும் கடிதங்களுக்கு மாவட்ட
ஆட்சித் தலைவரிடமிருந்து எங்களுக்குப் பதிலாக கடிதங்கள்
வருவதில்லை. அன்றாட பிரச்சினைகளை நாங்கள் மாவட்ட
ஆட்சித் தலைவரிடம் தான் கூற வேண்டிய நிலைமை இருக்
கிறது. அது போன்றே கடிதங்களுக்கு மாவட்ட ஆட்சித்
தலைவர் நிச்சயமாக பதில் கடிதம் அனுப்புமாறு இந்த அரசு
கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. சின்னசாமி

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத அளவிற்கு தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை நபர்களும், யார் வேண்டுமானாலும் மகஜர் கொடுக்கலாம் ; தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்ளலாம் என்ற அளவிற்கு, கோட்டையில் உட்கார்ந்து வாங்குகிற மனுக்கள் அத்தனைக்கும் இன்றைக்கு தமிழகத்தின் மூலை முடுக்குகளில் இருப்பவர்களுக்கு எல்லாம் பதில் தருகிற நடவடிக்கையை எடுத்தவர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நினைவுபடுத்த கடமைப் பட்டிருக்கிறேன். அவருடைய ஆட்சியில் நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு கோப்பு என்று அமைத்துக்கொடுத்து, அதிலே நாங்கள் கொடுக்கிற மனுக்களை பெற்று எங்களுக்கு பதில் அனுப்புகிற ஒரு நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உங்களுக்குப் பதில் எழுதுவது பற்றியதாகும். அமைச்சர்கள் அதற்கு கோப்பு வைத்திருக்கிறார்களா என்றெல்லாம் அவர்களுடைய அன்றாட அலுவல் நடைமுறைக்குள்ளே போய் கேள்வி கேட்கக்கூடாது. (குறுக்கீடு).

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, நாங்கள் கொடுக்கிற மனுக்களுக்கு தனியாக ஒரு ஃபைல் வைத்துக் கொடுத்து, அதற்கு பதில் அனுப்புகிற நடவடிக்கையை மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வருகிற கடிதங்களுக்கு பதில் எழுதுவதற்காக என்னை பொறுத்தவரையில் வெறும் கோப்பு மட்டும அல்ல. அதற்காக ஒரு பெரிய செக்ரட்டரியையே பணியில் அமர்த்தி இருக்கிறேன் அவருடைய பணியே சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் கடிதங்களைப் பரிசீலித்துப் பார்த்து



சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்து தக்க நடவடிக்கையெடுப்பது குறித்து அறிவுரைகளை வழங்குவது தான். எனவே அப்படி இருக்கையில் நிச்சயமாக நம்முடைய அமைச்சர் பெருமக்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்காகவே, மனுக்களுக்காகவே தனி கோப்பை இனிமேல் வைத்துக் கொள்வார்கள். ஏற்கனவே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றுதான் நம்புகிறேன். அப்படி இல்லையென்றால், இனிமேல் வைத்துக்கொள்வார்கள் என்ற உறுதியை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 42, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

42—

## அரசுப் பணியில் சேர வயது வரம்பை உயர்த்தல்.

*9952—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசுப் பணியில் சேருவதற்கு விதிக்கப்பட்டு இருக்கிற வயது வரம்பு உயர்த்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் அரசுப் பணியில் சேரும் வயது வரம்பும் உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : — மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் மக்களின் நலனுக்காக அளிக்கப்படுகிற உறுதிமொழிகள் அனைத்தையும் தன்னால் நிறைவேற்றித் தருகிற ஒரே நூற்றுக்கு நூறு உடனடியாக முதலமைச்சர் இந்தியாவில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி.) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர் என்ற வகையில் சொல்லிக்

கொள்வதில் பெருமை அடைகிறேன். எதிர்பாராமல் குடும்பத்
தலைவர் இறந்துவிட்டால் வாழ வழியின்றி தவிக்கும் குடும்பங்
களைக் காப்பாற்ற கருணை காட்டிடும் வகையில் மாண்புமிகு
இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் அந்தக் குடும்பத்தில் தகுதியான ஒருவருக்கு சிறப்பு
நேர்வாக வேலை வாய்ப்பு அலுவலக சீனியாரிட்டி இல்லாமல்
இருந்தாலும், அல்லது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு
செய்யாமல் இருந்தாலும் கூட, மனு செய்தவுடனே உடனடி
யாக வேலை வாய்ப்பு அளித்து இன்னலுறும் குடும்பங்களைக்
காப்பாற்ற அருள்கூர்ந்து ஆணையிடுவார்களா என்பதை அறிய
விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மூலக் கேள்வி வயது
வரம்பைத் தளர்த்துவது பற்றியது. நீங்கள் வேலை வாய்ப்பு
அலுவலகப் பதிவையே தளர்த்துவது பற்றிக் கேட்கிறீர்கள்.
அது இந்த மூலக் கேள்வியில் வராது. எனவே, தனிக்கேள்வி
போடவும். இரண்டாவது கேள்வி கேளுங்கள். அது வயது
வரம்பைப் பற்றிய கேள்வியாக இருக்க வேண்டும்.

முற்பகல் 10-15

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவேண்டும் என்று
தாங்கள் கூறியிருந்தாலும் கூட, அதற்கான பதில் என்னிடத்தில்
இருப்பதால், இப்போதே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி). Employment on Compassianate
grounds இதனை உடனடியாக வழங்குவதற்கு எல்லா
நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என்று அண்மையில்
தான் ஒரு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, எல்லா அரசு
அலுவலகங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத்
தட்டும் ஒலி).

<u>டாக்டர் ஜெ. பரந்தாமன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
ஆதரவு இல்லாமல் இருப்பவர்களுடைய ஒரே ரட்சகராக
விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம்,
தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விதவை
கள், உடல் ஊனமுற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்
கள் போன்ற ஆதரவு இல்லாமல் இருப்பவர்களுக்காவது இந்த
வயது வரம்பைத் தளர்த்தி, வேலைவாய்ப்பு நேர்முகத்
தேர்வுக்கு குறைந்தபட்சம் 3 முறையாவது அழைக்க ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 6-10-1979 ஆம் நாளிட்ட
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அரசு ஆணை
எண். 1135-ல் அரசுப் பணியில் சேரும் வயது வரம்பினை
26-லிருந்து 28-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. இந்த
உச்ச வயது வரம்பான 28-ஐ, 30 ஆக உயர்த்தி 27-2-1989
ஆம் நாளிட்ட, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை
அரசு ஆணை எண். 112-ல் ஆணையிடப்பட்டுள்ளது. சில பணி
யிடங்களில் 30 வயதுக்கும் மேலாக உச்ச வரம்பு வயது ஏற்கனவே
சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்டு இருந்தால், அந்த வயது
வரம்பு தொடரும். ஏற்கனவே கீழ்க்கண்ட இனங்களில் சிறப்பு
விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பு பின்பற்றப்பட
மாட்டாது என தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி
விதிகளில், பொது விதி 12(டி)-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) சிறப்பு விதிகளில் பட்டப் படிப்புக்கும் குறைவான
தகுதி வரையறுக்கப்பட்டுள்ள பணியிடங்களில் குறைந்தபட்ச
பொதுக் கல்வித் தகுதிக்கும் (Minimum general educational
Qualification-க்கும்) அதிகமான தகுதியைப் பெற்றுள்ள
பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்,
சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும்
ஆதரவற்ற விதவைகள்.

(2) பட்டப் படிப்பு தகுதியாக வரையறுக்கப்பட்டுள்ள
பணி இடங்களில், அதற்குக் குறையாத பட்டப் படிப்பைப்
பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர், சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
மற்றும் ஆதரவற்ற விதவைகள்.

மேற்கூறிய சலுகை தற்போது அமலில் உள்ளது. குறைந்த
பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேற்படாத தகுதி நிர்ணயம்
செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கு அத்தகுதியை மட்டும்
பெற்றுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு
உச்ச வயது வரம்பு மேலும் 5 வருடங்களுக்கு ஏற்கனவே
அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது விதி 53-ன்படி, உடல் ஊனமுற்ற நபர்களுக்கு
10 வருட வயது சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி,
உடல் ஊனமுற்றவர்களுக்கு மட்டும் வயது வரம்பு தளர்த்தப்
பட்டு சத்துணவுப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஜீனத் சர்புதீன்

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் சேருவதற்காக
எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்து கொள்கிறார்கள்.
ஆனால் சில நேரங்களில் சில பேருக்கு மட்டும்
வயது வரம்பு கடந்த பின்பும் கூட அவர்களுக்கு நேர்முகத்
தேர்வுக்கு வருவதில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒரு
கருணை அடிப்படையில் பிரியாரிட்டி லிஸ்ட் எடுத்து வைத்துக்
கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசு
முனவருமா, அல்லது பரிசீலனை செய்ய முன்வருமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச வயது வரம்பை, 30
லிருந்து மேலும் உயர்த்தும் கருத்துரு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 43,
திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

ஆண்டிமடம் தொகுதி புக்குழியில் வாக்குச்சாவடி அமைத்தல்.

*12568—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு நிதி
அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிமடம் தொகுதி, புக்குழியில் வாக்குச்சாவடி
அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி
ஒன்றியம், செலம்பூர் ஊராட்சியைச் சேர்ந்த புக்குழி,
திருக்கோணம் ஆகிய கிராமங்களில் சுமார் 850 வாக்
காளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாக்களிக்கச் செல்ல
வேண்டும் என்றால், 4 கிலோ மீட்டர் தூரம் பாரஸ்டிலே
கடந்து சென்று, செலம்பூரில் உள்ள வாக்குச் சாவடியில்
வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அங்கே
யிருக்கின்ற மக்கள் எல்லாம் விவசாயத்தை நம்பிக் கொண்டு
இருப்பதாலும், வாக்களிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக்



கொண்டிருக்கிறது. எனவே, அவர்கள் வாக்களிப்பதற்கு
வாய்ப்பாக அங்கே வாக்குச் சாவடி அமைத்துக் கொடுக்க
அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

முற்பகல் 10-20.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் சட்ட
மன்றத் தொகுதி, புக்குழியில் வாக்குச்சாவடி அமைத்துக்
கொடுக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.
புக்குழி கிராமத்திலுள்ள வாக்காளர்களுக்கு தற்போது
செலம்பூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுப்பள்ளியில்
வாக்குச் சாவடி எண் 70 ஆண்களுக்கும் மற்றும்
70 பெண்களுக்கும் ஆக இரண்டு வாக்குச்
சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அக்கிராமத்தில் சுமார்
795 வாக்காளர்கள் உள்ளனர். மேலும் அக்கிராம மக்களிட
மிருந்து புக்குழியில் தனி வாக்குச்சாவடி அமைத்துத் தர
வேண்டுமென்ற விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை என்று
திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.
மேலும், வாக்காளர்கள் பட்டியல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு
முறை தீவிர முறையில் திருத்தப்பட்டு புதிய வாக்காளர்கள்
பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு 1-1-1993-ஐ
தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, தமிழ் நாட்டி
லுள்ள சட்டமன்றப் பேரவை தொகுதிகளின் வாக்காளர்
பட்டியல்களை தீவிர முறையில் புதியதாக தயாரிக்கும்படி
இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இதன்படி
வாக்காளர் பட்டியல் திருத்தப்படுகிறது. வாக்காளர் பட்டி
யலில் தீவிர திருத்தம் முடிந்த பின் ஒரு வாக்குச்சாவடியில்
இணைக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு அதிக
மாக இருக்குமேயானால் அவ்வாக்குச்சாவடிகளை மாற்றி அமைக்
கவும், புதிய வாக்குச் சாவடிகள் அமைக்கவும் வாய்ப்பு
உண்டு. தற்போது தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல்
இறுதி வெளியீடான 9-3-1993-க்குப் பிறகுதான் வாக்குச்
சாவடிகளை மாற்றி அமைப்பது குறித்தான கருத்துக்களை
தனது பரிசீலனைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று
தெரிவித்துள்ளது. எனவே புக்குழி வாக்காளர்களுக்கு தனி
வாக்குச்சாவடி அமைப்பது குறித்து 9-3-1993-க்குப் பிறகு
தான் தேர்தல் ஆணையத்துடன் கலந்து பரிசீலிக்க வேண்டும்.
ஆகவே, தனி வாக்குச்சாவடி அமைக்க வேண்டிய அவசியம்
ஏற்பட்டு, வாக்காளர்களின் எண்ணிக்கையும் பெருகியிருக்குமே
யானால் 9-3-1993-க்குப் பிறகு, அரசு பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 44
திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு சட்டத் துறை
அமைச்சர்.

44—

**சிவில் நீதிமன்றங்களின் கோடை விடுமுறையை ரத்து செய்தல்**

*10754—திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள சிவில் நீதிமன்றங்களுக்கு உள்ள கோடை விடுமுறையை ( Summer Holidays ) ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள அனைத்து சிவில் நீதிமன்றங்களும் கோடை காலத்தில் இயங்காமல் மே மாதம் 1 ஆம் தேதி முதல் ஜுன் மாதம் முதல் வாரம் வரை கிட்டத் தட்ட 40 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்படுகின்றது. இந்தக் காலக் கட்டத்திலே பொதுமக்களின் சிவில் உரிமைகளை நிலை நாட்டுவதற்கும் அவசரமாக சில உத்தரவுகளை இன்ஜெஜங்ஷன் ஆர்டர், ஸ்டே ஆர்டர் போன்ற ஆர்டர்கள் வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்ற அரசு அலுவலகங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை விடப்படுகின்றது. ஆகவே இந்த மக்களுடைய கஷ்டத்தைப் போக்க நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி, நீதி தேவதையின் ஆட்சியில் இந்த விடுமுறை ரத்து செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று கோடை விடுமுறையிலும் விடுமுறைக் கால நீதிபதிகளை நியமிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 16—4—1992 முதல் ஆணையிட்டிருக்கிறார் ள். இந்தக் கோடை விடுமுறை நாட்களில் கூட நீதிமன்றங் ள் இயங்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. கே. ஆர். முருகானந்தம் : தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்கள் இந்த 40 நாட்களில் ஒரு வாரத்தில் ஒருநாள்தான் இருக்கிறது. அதுவும் சில மாவட்ட நீதிமன்றங்களாக இருக்கக் கூடியவைகள் அமர்வு நீதிமன்றங்களாகவும் செயல்பட வேண்டி யிருக்கிறது. உயர்நீதிமன்றங்களிலும், சில குற்றவியல் வழக்கு களை அந்த நீதிமன்றங்களிலே ஜாமீன் எடுக்க வேண்டியவர்கள் எல்லாம் எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி வாரத்தில் ஒருநாள் இருக்கின்ற அந்த முறையை அதிக நாளாக, வாரம் 2 முறை, 3 முறையாக நீடிக்க அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால், உயர்நீதிமன்றத்திலேயிருந்து இதற்கான தகவலைப் பெற்றுத் தர முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்க ராஜன்.

முற்பகல் 10–25.

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்ட காலத்திலே ஆங்கிலேய நீதிபதிகள் இருந்த காரணத்தினால் கோடை விடுமுறை கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு நீதிமன் றங்களைப் பார்க்கின்றபோது, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை என்று எடுத்துக்கொண்டால் 104 நாட்களும், பப்ளிக் ஹாலிடேஸ் என்று எடுத்துக் கொண்டால் 22 நாட்களும், அது தவிர சம்மர் ஹாலிடேஸ் என்று எடுத்தால் 45 நாட்களும், தசரா ஹாலிடேஸ் 7 நாட்களும், கிருஸ்துமஸ் ஹாலிடேஸ் என்று 7 நாட்களும் ஆக மொத்தம் 185 நாட்கள் விடுமுறை நாட்க ளாகவே இருக்கின்றன. இன்றைக்கு ஒரு நீதிமன்றம் என்பது வருடத்திலே 6 மாதத்திற்குதான் இயங்குகின்றது. வழக்குகள் தேங்கி இருக்கின்றன. இந்த நிலையிலே அந்த விடுமுறை களையெல்லாம் ரத்து செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல உயர்நீதி மன்றத்திலே கலந்து, முதலமைச்சரிடத்திலேயும் கலந்து அது சீரமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போதெல்லாம் வெகேஷன் கோர்ட் என்று
விடுமுறை காலங்களிலே வைத்திருக்கிறார்கள். அந்த
வெகேஷன் கோர்ட் என்பது வாரத்திற்கு ஒரு நாளோ அல்லது 2
நாட்களோதான் ஒரு சப்ஜெட்ஜ் வைத்து நடைபெறுகிறது.
கிரிமினல் கோர்ட் என்று சொன்னால் மர்டர் போன்ற
கேஸ்களுக்கு பெயில் எடுக்க வேண்டும் என்று செஷன்ஸ் ஜட்ஜ்
வைத்து வாரத்திற்கு ஒரு நாள் அல்லது 2 நாள்தான் வைக்
கிறார்கள். அதை தவிர்த்து வாரம் முழுவதும் இந்த வெகே
ஷன் கோர்ட் இயங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா
என்பதையும், அதைப் போல ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்
கும், நமது அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டது போல ஒரு தாலுக்காவில் இருக்கக் கூடிய
அத்தனை சிவில் நீதிமன்றங்களுக்கும் செல்ல மாவட்ட தலை
நகருக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு
ரெவின்யூ டிவிஷனிலும் ஒரு முன்சீப் கோர்ட் அமைத்து, ஒவ்
வொரு மாவட்டத்திலும் 3 அல்லது 4 வெகேஷன் கோர்ட்டுகள்
இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்கு விளக்கம்
அளித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 45,
திரு.மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை, அவருக்குப்
பதிலாக திரு. கே. ஏ. மனோகரன்.

45—

தேன்கனிக்கோட்டை வட்ட விவசாயிகளுக்கு பட்டா வழங்கல்.

*10029—திரு. மு. வெங்கடராம ரெட்டி : மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு
விடையளிப்பாரா :

தேன்கனிக்கோட்டை தாலுகாவில் நீண்ட காலமாக
சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்கும்
திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை
அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.



திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த 20, 30 ஆண்டுகளாக தேன்கனிக்கோட்டை
தாலுக்காவில் உள்ள சில மலைப்பாங்கான பகுதிகளிலே சில
ஏழை விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டிருக்கக் கூடிய
நிலத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என்ற முறையிலே கடந்த 4
ஆண்டுகளுக்கு முன்பே அங்கே இருந்த சாராட்சியர் அவர்களால்
ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு ஏதோ காரணத்தால் கொடுக்
கப்படாமல் இருக்கின்றன. அதனை அரசு மறுபரிசீலனை
செய்து அந்த ஏழை விவசாயிகளுக்கு கொடுக்க அரசு முன் வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலை வாழ் பகுதி
கள், அங்கே இருக்கக் கூடிய ஆக்கிரமிப்புகள், அந்த ஆக்கிர
மிப்புகளை அகற்றுவதா அல்லது முறைப்படுத்துவதா என்பதைப்
பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்வதற்காக 1—9—1989-ல் ஒரு
உயர்மட்டக் குழு போடப்பட்டிருக்கிறது. நில நிர்வாக
ஆணையர் தலைமையிலே, வனத்துறை தலைவர் ஒரு உறுப்பின
ராகவும், தலைமைப் பொறியாளர்(விவசாயம்) ஒரு உறுப்பினராக
வும், மாவட்ட ஆட்சித் தலைவர், உதகமண்டலம், நில அளவை
இயக்குநர், நில நிர்வாக இணை இயக்குநர் ஆகியவர்களை
போட்டு ஒரு குழு அமைத்திருந்தது. அந்த உயர்மட்டக் குழு
வினுடைய பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. அரசு அதை
பரிசீலனை செய்து, அந்த ஆக்கிரமிப்புகளுடைய தன்மையையும்
பார்த்து ஏழை எளியவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் வராத
படி நல்ல முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ.முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கிராமப் புறங்களிலே மேடு பள்ளங்களை சமன்
செய்து கொண்டு நல்ல விளை நிலமாக உருவாக்கிக் கொண்டு,
அந்த கிராமப் புறத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிற, மக்கள்
பலமும் பண பலமும் கொண்ட சில பெரும் விவசாயப் பெருங்குடி
மக்கள் அடங்கலிலே தன்னுடைய பெயரை பதிவு செய்து
கொண்டு அரசு பட்டா கொடுக்கிற கால கட்டத்திலே அடங்கலில்
என்னுடைய பெயர் தான் இருக்கிறது. எனக்குத்தான் அந்தப்
பட்டாவை கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றங்களுக்கு செல்
லக் கூடிய சூழ்நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் பல வழக்குகள்
நிலுவையில் உள்ளன. எனவே அரசு இது போன்ற விவசாய
நிலங்களுக்குப் பட்டா கொடுக்கிறபோது யார் அங்கே நீண்ட
காலமாக பயிர் செய்து வந்தார்கள் என்பதை முறைப்படுத்தி,
நீண்ட காலமாக அடங்கலில் உள்ளவர்களுக்கு பரிசீலனை செய்து
அந்தப் பட்டா வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 10

முற்பகல் 10-30.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பயிர் செய்கிறார்களா குறுகிய காலம் பயிர் செய்கிறார்களா என்பதை விட அந்த நிலம் அரசினுடைய நிலமா, தனியாருடைய நிலமா என்பதைப் பார்த்து அது அரசினுடைய நிலமாக இருந்தால் அதில் பயிர் செய்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் பயிர் செய்கிறார்கள் என்பதை யோசிக்காமல் பயிர் செய்கிறவர்கள் தகுதி உடையவர்களா, தகுதி இல்லாதவர்களா-தகுதியா, தகுதி இல்லையா என்பது நிலம் அற்றவர்களா, ஏழை எளியவர்களா, பணக்காரர்களா? ஆதிக்கம் படைத்தவர்களா என்பதைப் பார்த்து தகுதி உடையவர்களுக்கு ஏழை எளியவர்களுக்கு கொடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சியையும் எடுக்கும். அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 46, திரு. ஆர். டி. அரங்கநாதன். இருக்கையில் இல்லை.

வினா எண். 47, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

47—

ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக்கூடம் அமைத்தல்.

* 9574—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் உடற்பயிற்சிக் கூடம் ( Indoor Gymnasium ) அமைக்க போதிய நிதி வசதி இல்லாததால் எந்தவிதமான திட்டமும் அரசிடம் தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1993 பிப்ரவரி 10]

டாக்டர் எம். கருப்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தரணியெங்கும் இத்தமிழன் புகழ் பரவ வேண்டும். விளையாட்டு வீரர்கள் உலக அளவில் உன்னதமான தரத்தை எட்ட வேண்டும் என்பதற்காக நம் தாயகத்தின் பெயர் சொல்லும் அளவுக்கு விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற அவாவினால் வெறும் ஏழுரை மாதங்களில் ஆசியாவினுடைய மிகப் பெரும் ஸ்டேடியத்தை உருவாக்கி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் மாண்புமிகு டாக்டர்புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், உறுதியான உடல் வளம் வேண்டும், அப்பொழுது தான் விளையாட்டு அரங்கில் வெற்றிப் புள்ளிகளை குவிக்க முடியும் என்று இளைஞர்களுக்கு எல்லாம் ஊக்கம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு விளையாட்டு அரங்கத்தை உடற்பயிற்சிக் கூடத்தைத் தனியாருடைய உதவியினாலோ அல்லது அரசாங்கத்தினுடைய உதவியினாலோ அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியிலேயும் மாணவர்கள் விளையாடுவதற்கான ஆடுதளங்கள் அமைப்பதற்காக ஆங்காங்கே முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இண்டோர் ஜிம்னாசியம் என்பது மிகவும் செலவாகக் கூடிய ஒரு ஏற்பாடு ஆகும். இது எல்லா பள்ளிகளிலேயும் அமைக்க கூடிய நிதி வசதி இப்போது இல்லை. இதைவிட முக்கியமாக முன்னுரிமை பெற்ற பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவது போன்ற அந்தப் பணிகளுக்கே போதுமான நிதி இல்லாத காரணத்தினால் இது போன்ற முயற்சிகளிலே இப்போது அரசு இறங்க முடியவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் 1973-ஆம் ஆண்டு ஒரு ஜிம்னாசியம் கட்டப்பட்டது. அப்போதே கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டு உடற் பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு இதுவரை அதற்குரிய கருவிகள் வாங்கி போடப்படவில்லை. அதற்காவது அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட பள்ளிக் கூடத்தைப் பற்றிய விவரம் அமைச்சரிடம் இருக்காது. பொதுவான மூலக் கேள்வி கேட்டுவிட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தைப் பற்றி துணைக் கேள்வி கேட்டால், அதற்குப் பதில் இருக்காது. தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 48—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

[1993 பிப்ரவரி 10

48—

குளித்தலையில் சித்த மருத்துவப் பிரிவு துவக்குதல்.

*10412 — திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தாலுக்கா தலைநகரமாக இருப்பதால் அங்கு சித்த மருத்துவப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆவன செய்யும்.

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப, தாலுக்கா தலை நகரங்களில் சித்த மருத்துவப் பிரிவு படிப்படியாக ஆரம்பிக்கப்படும் பொழுது குளித்தலையிலும் சித்த மருத்துவப் பிரிவு துவக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா நகரங்களில் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய காலத்திலே படிப்படியாக செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் குளித்தலையிலே எப்போது துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 124 தாலுக்கா மருத்துவமனைகள் இருக்கின்றன. அதிலே 78 இதுவரை செய்து முடிக்கப்பட்டு இருக்கிறது. நிதி நிலைமை சரியாகின்ற பொழுது தான் அதைச் செய்ய முடியும். எனவே, மொத்தமாக எல்லா தாலுக்கா மருத்துவமனைகளிலும் எடுத்து செய்துவிட முடியாது. படிப்படியாகத்தான் செய்யவேண்டி இருக்கிறது. எனவே குறிப்பிட்ட காலத்தை இப்போது சொல்ல முடியாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க அது கருத்திலே வைக்கப்பட்டு தீவிரமாக பரிசீலிக்கப்படும்.



1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 49 திரு. பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

49—

கோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தின் பிரதான சோதனைச் சாவடியை மாற்றியமைத்தல்.

10096 — திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, கோடிக்கரை வன விலங்கு சரணாலயத்தின் பிரதான செக் போஸ்ட் உப்புத் தொழில் செய்யும் பகுதியில் இருப்பதால் உப்புத் தொழில் தொடர்பான வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேர்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செக் போஸ்டை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி கோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தின் பிரதான சோதனைச் சாவடியை மாற்றியமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

முற்பகல் 16–35

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு கருத்து இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த கேள்வி நேரத்தில் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது சிறப்பாக இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு ஐ. எப். எஸ். அதிகாரியை நீங்கள் அனுப்பி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் உங்களுக்கு தரப்பட்டிருக்கிற பதிலில் கூட பிரதானமாக அந்த செக் போஸ்டில் இருக்கின்றவர்களுடைய நலன்களில் மட்டும், ஒருசிலர் நலன்களில் மட்டும் அக்கறை வைத்து அந்த முடிவு எடுக்கப்பட்ட காரணத்தால் உங்களுக்கு அப்படி தரப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்றைக்கு 25 ஆண்டு காலத்தில் பெருகி வந்திருக்கின்ற இண்டஸ்ட்ரிஸ்-தேவையில்லாமல் நூற்றுக்கணக்கான லாரிகள் அந்த

இடத்திலே சோதனையிடப்படுகின்றன. அந்த சரணாலய எல்லையிலே அது கிடையாது. வன வளம், வன வள பாதுகாப்பு 1972, ஒயில்டு லைப் ஆக்ட் இவைகளை நீங்கள் தீவிரமாக அமல்படுத்துவதில் எடுத்து இருக்கின்ற அக்கறையை உணர்ந்துதான் நான் நிச்சயமாக பேசுகிறேன். அதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா? பிரத்தியேகமாக ஒரு அதிகாரியை அனுப்பி ஒரு சிறப்பு அறிக்கையைப் பெறுவீர்களா என்று இந்த நேரத்தில் உங்கள் வாயிலாக நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய மனிதர்களிட மிருந்து மனிதர்களையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இந்த அரசு அதேபோல் கொடிய மனிதர்கள் இந்த விலங்கு களை அழிக்கின்றபோது அந்த மனிதர்களிடமிருந்து அந்த விலங்குகளைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால் தான் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று உங்களுடைய கருத்து இருந்தாலும் கூட அதை மாற்றுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. சரணாலயத்தின் எல்லைக்குள் அதை கொண்டு வாருங்கள் என்று சொல்லு கிறேன். சரணாலயத்தை விட்டு வெளியே கொண்டு போய் செக் போஸ்டு வைத்து இருப்பதில் அர்த்தமே இல்லை. ஆனால் சரணாலயத்திலிருந்து வெளியேறுகின்ற எந்த வாகனமும் பல்வேறு வழிகளில் சென்று விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சரணாலயத்ினுடைய பெரிபெ யிலேயே இருப்பது தான் பொருத்தமாக இருக்கும். அதனால் நான் மெத்த பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன். சிறப்பாக பிரத்தியேகமாக ஒரு ஐ. எப். எஸ். அதிகாரியை நீங்கள் அனுப்பி ஒரு அறிக் கையைப் பெறவேண்டுமென்று மீண்டும் பணிவன்போடு கேட்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுவது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ராயர்பாதம் என்ற இடத்திலே அந்த செக் போஸ்ட் இருந்தால் நலமாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்கள். இருந்தாலும் கூட முதலில் இருக்கின்ற செக் போஸ்டி லிருந்து செல்வதற்கு 2, 3 பாதைகள் இருக்கின்றன. அந்த வனக் காடுகளுக்குள் செல்வதற்கு வன விலங்கு சரணா



லயத்திற்கு செல்வதற்கு உப்பளம் என்ற இடத்திலிருந்து செல்லலாம். அதிலே மண் சாலைகள் இருக்கின்றன. அதைப் போல பல்வேறு கிராமங்களுக்குச் செல்வதற்குப் பாதைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த வன விலங்குகளை அழிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எங்களுடைய துறையின் சார் பாக அவர்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று மீண்டும் துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56. திரு. ஏ. எம். பரமசிவன், இருக்கையில் இல்லை.

வினா எண் 51, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

*1—

## மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுதல்

9819— திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுக்கா கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலுள்ள மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்ட அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் போது அப்போது இந்த வினா எழுப்பப்பட்டது. மீண்டும் நம்முடைய ஆட்சி வந்த பிறகு இந்த வினா எழுப்பப்

பட்டது. இந்த மத்தகிரி காட்டுவாரியில்
ஆண்டு ஆண்டுதோறும் மழைக் காலங்களில் அதிக வெள்ளம்பெரு
கெடுத்து ஓடுவதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற விளை நிலங்
கள் குறிப்பாக விவசாயிகளின் கிணறுகள், பம்பு செட்டுகள்
மூடப்பட்டு மிகவும் பொருட் சேதமும், ஆட்சேதமும் ஏற்படு
கிறது. அதே சமயத்தில் அதன் அருகில் இருக்கின்ற ஹைவேஸ்
ரோடு பாதிக்கப்படுகிறது. இதனால் பஸ் போக்குவரத்திற்கும்
தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே, நடப்பு ஆண்டில் இந்த
மத்தகிரி காட்டுவாரியை அமைப்பதற்கு அரசு உத்தேசிக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இந்த மத்தகிரி காட்டுவாரி என்பது
வைய்ய மலையில் உற்பத்தியாகி ஐய்யனூர் ஏரிக்குச் செல்கிறது.
ஏற்கனவே இது நீண்ட நாள் பிரச்சினை என்பதை இந்த அரசு
அறியும். ஆகவே, அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்
கின்ற விதத்தில் கடந்த காலங்களில் இருந்த அரசு செயற்
படுத்தாவிட்டாலும் கூட நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்
குப் பின்னால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுடைய கேள்வி வந்தற்குப் பின்னால் உடனடி
யாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரூபாய் 85 ஆயிரத்துக்கு
மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகளைச் செய்வதற்கு
இருக்கிறோம், இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை
மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 52, டாக்டர்
ஆரோக்கியசாமி இருக்கையில் இல்லை.

திரு. எம். தங்கவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்
சர்.

52—

## திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

10579—டாக்டர் ச. ஆரோக்கியசாமி :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும்
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும்
செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை
அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில்
உள்ள மூதறிஞர் இராஜாஜி டி. பி. சானிடோரியம் அமைந்துள்ள
இடத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்கவும் தற்போது
உள்ள பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாக பயன்
படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சானிடோரியம் உள்ள
இடத்தில் 12 ஏக்கர் நிலத்தை திருச்சி நகராட்சிக்கு ஒப்படைக்க
திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்
பட்டுள்ளார்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நெருக்கடியாக இருக்கின்ற அந்த பேருந்து நிலை
யத்திற்கு மாற்று பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அதற்கு
நன்றியைத் தெரிவிப்பதோடு அந்த மாற்று பேருந்து நிலையம்
எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத் தலைவர்
அந்த நிலத்தை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்து வரு
கிறார்கள். நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விரைவாக
பேருந்து நிலையம் அமைக்கும்பணி துவங்கப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, திருச்சியில் தற்பொழுது சிந்தாமணியிலே ஒரு பேருந்து
நிலையம் இருக்கிறது. இப்போது புதிய பேருந்து நிலையம்
அமைக்கப்படும் போது சிந்தாமணி பேருந்து நிலையம் அங்கே
இருக்குமா ? அல்லது சிந்தாமணிக்கு என்று தனியாக பேருந்து
நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் உருவாக்கு
கின்ற நேரத்தில் இது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. பாப்பா
சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ராஜாஜி டி. பி. சானிடோரியத்தில் பேருந்து நிலையத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது திருச்சி யின் தெற்கு பகுதியிலே இருப்பதால் வடக்கு அல்லது மேற்கு பகுதிகளில் இருந்து தான் அதிக பேருந்துகள் வருவதால் அது நகரின் மையப் பகுதியிலே இருப்பதால், நகரத்திலே போக்கு வரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, திருச்சியின் வடக்குப் பகுதியிலே ஆர்ஜிதம் செய்யப்பட்ட சிந்தாமணியின் பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்கு மாணபுமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் மீண்டும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, திருச்சியினுடைய பல்வேறு பகுதி களைக் கருத்திலே எடுத்துக் கொண்டு தான் இந்தப் பேருந்து நிலையத்திற்கு நிலத்தை தேர்வு செய்திருக்கிறோம். அந்த இடத்தில் தான் நவீன பேருந்து நிலையம் அமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜி. ஆர். மாலா.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு, மறைந்த நமது முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியின் போது, சிந்தாமணி பகுதியில் புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக அதற்கு செயலாக்க வடிவம் கொடுக்கப் படாமல் இருக்கிறது. மேலும் திருச்சி மையமாக இருப்பதால் வட திசையில் இருந்து வரும் பேருந்துகள் தென் திசைக்குப் போகும் போது திருச்சி வழியாகப் போவதால் தமிழக மக்களுக்கே இது ஒரு பெருதவியாக இருக்கும் வண்ணம் இருப்பதால சிந்தா மணி பகுதியில் புதிய ஒரு பேருந்து நிலையம் அமைக்க வரும் நிதியாண்டில் செயலாக்கம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கிற பலவேறு பகுதி மக்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆய்விலே எடுத்துத் தான் இப்போது மூதறிஞர் ராஜாஜி டி. பி. சானிடோரிய பகுதி யில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஏற்பாடு செய் யப்பட்டு வருகிறது. வேறு பகுதிக்கு மாற்றுகிற யோசனை அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

53—

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயற்கைமுறை நெல் உலர்த்தும் ஆலை ஏற்படுத்தல்

*9475—திரு. கு. தங்கமுத்து :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அறுவடை காலங்களில் அதிகமாக மழை பெய்வதால் நெல் ஈரப்பதத்தோடு இருப்பதைத் தடுக்க செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள நடுவர் கிராமத்தில் இவ்வாலை அமைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ) செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் அறுவடைக் காலங்களில் குறிப்பாக, குறுவை அறுவடைக் காலங்களில் தொடர்ந்து அடைமழை பெய்கின்றபோது நெல் வயல்களில் முளைத்து விடுகிறது. அதுபோல் அறுவடை செய்த தற்குப் பின்னாலும், நெல்லை கொள்முதல் நிலையங்களில் சேர்ப்பதற்கு முன்னாலும் முளைத்து விடுகிறது. எனவே, இந்த அறுவடை செய்யப்பட்ட நெல்கள் முளைப்பதை தவிர்ப்பதற்காக ஈரப்பதத்தை உலர்த்துகின்ற வகையில், செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை, அரசு கவனத்திலே கொண்டு உருவாக்கிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆலைகளை நடத்தி வருகின்றது. அப்படிப்பட்ட

நவீன அரிசி ஆலைகளில் செயற்கை முறையில் நெல்
உலர்த்தும் இயந்திரங்கள் 20 இயங்கிக் கொண்டு இருக்கின்றன.
அதுபோக, அங்கே மழைக் காலங்களில் தங்கிப் போகின்ற,
நெல்லை உடனடியாக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பிவைத்து
அந்த மாவட்டங்களில் அரைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து,
வருகிறோம்.

முற்பகல் 10.45

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இதுபோன்ற நடைமுறைகள், செயல்முறைகள்
இருந்தாலும், இந்த ஆண்டு கண்கூடாகப் பார்க்கின்ற நிலை
இருந்தது. நெல் அறுவடை ஆவதற்குப் பின்னால் நெல்லைக்
கொள் முதல் செய்கின்ற நிலையங்கள் நெல்லை விற்கிற பொழுது
கூட, கிட்டங்கியில் சேர்த்து வைக்கின்ற பொழுதுகூட குறிப்பிட்ட
சதவீதம் முளைத்துப் போகின்ற தன்மை இருந்தது. ஆகவே,
அதை மனத்திலே கொண்டு, இப்படிப்பட்ட சூழ்நிலை உருவா
காமல், நெல் முளைத்து விடாமல் பாதுகாக்கின்ற அளவிற்கு
இது இன்னும் அதிகரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நெல்லை வாங்கியவுடன் எவ்வளவு விரைவாக
அரைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அரைப்பதற்கு எல்லா
நடவடிக்கைகளையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம்
எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்னால் உருவாக்கப்பட்ட நெல் உலர்த்தும் ஆலை
கள் இப்பொழுது வீணாகக் கிடக்கின்றன. அந்த ஆலைகளை
யாவது சீர் செய்து, அப்படி மழைக் காலங்களில் தேக்கும் அடை
கின்ற நெல்லை உலர்த்துவதற்கு ஆவன செய்வதற்கு அரசுமுன்
வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, 19-67-68 ஆம் ஆண்டுகளில் இந்திய உணவுக்
கழகம் 27 இடங்களில் நெல் உலர்த்தும் இயந்திரங்களை அன்
றைக்கு அவர்கள் துவக்கினார்கள். அது சரியாகப் பயன்படுத்
தப்பட முடியாத காரணத்தால் அவைகளைத் தமிழ் நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகத்திற்கு அவர்கள் விற்று விட்டார்கள்
அதைத்தான் எடுத்து அவைகளிலே சில மாறுதல்களைச் செய்து
இப்பொழுது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 54, திரு.
வி. கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்
துறை அமைச்சர்

54—கூட்டுறவுத் தேர்தலில் வாக்காளர் புகைப்படம் ஒட்டிய
அடையாள அட்டை வழங்கல்.

*11114—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்
கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

வரவிருக்கிற கூட்டுறவுத் தேர்தலில் வாக்காளர்களுக்கு புகைப்
படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க அரசு நடவடிக்கை
எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்
துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
கூட்டுறவுத் தேர்தல்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள
அட்டை வழங்கும் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை.
எனினும், நெசவாளர், பால் உற்பத்தியாளர், வீட்டு வசதி
மற்றும் வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்
களுக்கு அவர்கள் உறுப்பினர்களாக உள்ள அனைத்து கூட்டுறவு
சங்கங்களுக்கும் பொதுவாக பல்நோக்குடைய (Multi-Purpose),
புகைப்படம் ஒட்டிய ஒரு அடையாள அட்டை வழங்குவது
குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் கடைசி முறையாகத்
தமிழகத்தை ஆண்டபொழுது, அவசரக் கோலத்திலே ஒரு
கூட்டுறவுத் தேர்தலை அரைகுறையாக நடத்தினார்கள். அப்படி
நடத்துகிற பொழுது கூட்டுறவு விதிகளையே தலைகீழாக மாற்றி
விட்டார்கள். 100 ரூபாய் கொடுத்து பங்குதாரராக வேண்டு
மென்று சொன்னால் 10 ரூபாய் கொடுத்தால் போதும் ; பங்கு
தாரர் ஆவதற்கு அந்த இரசீதிலே கையெழுத்து போட வேண்டு
மென்ற அவசியமில்லை ; நுழைவுப் பதிவேட்டிலே கையெழுத்து
போட வேண்டுமென்ற அவசியமில்லை என்றெல்லாம் மாற்றப்
பட்டிருக்கின்றபொழுது ஒரு வாக்காளர் உண்மையான வாக்
காளரா அல்லது போலி வாக்காளரா என்று கண்டுபிடிப்பதற்கு

[1993 பிப்ரவரி 10

வேறு வழியில்லாமல் இருக்கிறது. எனவே, புகைப்படம் ஒட்டிய
அடையாள அட்டை வழங்கப்பட்டால்தான் போலி வாக்காளர்
களைத் தவிர்க்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே,
அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லி
யதைப் பார்த்தால், அது அடையாளம் மாறியதாலே ஏற்பட்ட
தவறு அல்ல ; அன்றைக்கிருந்த அரசாங்கம் விதிகளை மாற்றிய
தாலே ஏற்பட்ட தவறினால் பல குழப்பங்கள் அன்றைக்கு நடந்
தன. அவைகளைக் களைந்தெறிவதற்கு என்னென்ன நடவடிக்கை
கள் எடுக்க முடியுமோ அனைத்துச் சட்டத் திருத்தங்களை
யும் இப்பொழுது கொண்டு வந்திருக்கின்றோம். ஆகவே, அப்
படிப்பட்ட தவறுகள் இந்த ஆட்சியில் நடக்காமல் பார்த்துக்
கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களில், கூட்டுறவுச்
சங்கங்களில் இருக்கக்கூடிய படிக்காதவர்களும் கூட வாக்களிக்
கிறார்கள். அந்த வாக்காளர்கள் வாக்களிக்கின்றபொழுது வேட்
பாளர்களுக்கு எண்களாகச் சின்னங்களைத் தருகிறார்கள். அதற்கு
மாற்றாக அவர்களுக்கு சின்னமாகவே தருவதற்கு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுவரை அரசாங்கத்தில் இப்படிப்பட்ட
பரிசீலனை எதுவும் இல்லை. அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட
எண்ணம் வருமானால், அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்க
டப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எந்தக் காரியங்களானாலும், செம்மை
யாக நேர்மையாக நடைபெற வேண்டும் என்று எண்ணுகிற
புரட்சித் தலைவியின் ஆட்சியிலே-இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கங்
களில் தி.மு.க. காரர்கள், 10 முறை, 15 முறை** ஓட்டுப்
போடுவதை நாம் கண்டிருக்கிறோம். ஆகவே, அவற்றைப் புறக்
கணிக்கும் வகையிலே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில்
குற்றச்சாட்டு கூடாது; அதைத் தவிர்க்கவும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அவற்றைத் தவிர்க்கும்
வகையிலே, ஓட்டளிப்பவர்களுக்கு பொதுத் தேர்தலில் மையிடு
வதைப்போல, இதற்கும் மையிடுவதற்கு அமைச்சர் அவர்கள்
ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சென்ற ஆட்சி காலத்தில், கூட்டுறவுத்
தேர்தல்களில் என்னென்ன தில்லுமுல்லுகள் நடைபெற்றன என்
பதை இந்த அரசு அறியும். அப்படிப்பட்ட எந்தவிதமான
தில்லுமுல்லுகளும் நடக்காமல் இருக்க புரட்சித் தலைவியின்
அரசு பார்த்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தை
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண். 55, திரு. சி. சுவாமிநாதன் ; இருக்கையில்
இல்லை.

வினா எண். 56. திரு. என். ஆர். சிவபதி; மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்.

56—

விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர்
டிராக்டர் வழங்குதல்.

*9797 — திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும்
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர்
டிராக்டர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எதன் அடிப்படையில் மானியத்
தொகை வழங்கப்படும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[ 1993 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத்
துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தப் பொன்னாடு, உழவரின் திருநாடு,
வேளாண்மையில் முதன்மை பெற்று விளங்க வேண்டும்
என்று விரைந்து செயல்படும் நம் ஆற்றல் மிக்க முதலமைச்சர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1992—93 ஆம்
ஆண்டில் பவர் டில்லர் வழங்கும் திட்டத்தை, கடந்த
கூட்டத் தொடரில் இந்த மாமன்றத்தில் அறிவித்தார்கள்.
இத்திட்டத்தில் சிறுகுறு விவசாயிகளுக்கு ரூ. 12,000 மானியத்
தில் 2 ஆயிரம் பவர் டில்லர்கள் வழங்கப்பட்டு வருகிறது.
இதற்கு அரசு 240 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர்கள்
வழங்குவது, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக வழங்கப்
படுகிறதா ? அல்லது, நேரடியாக வேளாண்மைத் துறையின்
மூலம் வழங்கப்படுகிறதா? மேலும், மொத்த விலையில்,
எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது? அதில் ஆதிதிராவிடர்
களுக்கு சிறப்புச் சலுகைகள் எத்தனை உள்ளது என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின்
வாயிலாக இந்த பவர் டில்லர்கள் வழங்கப்படுவதில்லை.
வேளாண்மைத் துறையைச் சார்ந்த வேளாண் அலுவலர்
களிடத்திலே, சிறுகுறு விவசாயிகள் விண்ணப்பம் செய்
கிறார்கள். அவர்கள் தகுதியின் அடிப்படையில், தகுதி
உடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண்
தொழில் கழகத்தின் வாயிலாக பவர் டில்லர்கள் வழங்கப்
படுகிறது. இதிலே அனைத்துப் பிரிவினருக்கும், ஆதிதிரா
விடர்கள், சிறுகுறு விவசாயிகள் அனைவருக்கும் ஒரு பவர்
டில்லருக்கு 12,000 ரூபாய் மானியத்தை அரசு வழங்கு
கிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே எண்ணிக்கையில்
கொடுக்காமல், நஞ்சைப் பகுதிகளுக்கு பவர் டில்லர்கள்
அதிகரித்துக் கொடுக்கப்படுமா? ஏனென்றால், எனது
தொட்டியம் தொகுதியில், தொட்டியம் ஒன்றியம்,
தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம் என்ற இரண்டு ஒன்
றியங்கள் இருக்கின்றன. அவற்றில், தொட்டியம் ஒன்றியம்



1993 பிப்ரவரி 10]

நஞ்சைப் பகுதி அதிகமாக உள்ள பகுதி. தாத்தையங்கார்
பேட்டை ஒன்றியம் புஞ்சை அதிகம் உள்ள பகுதி. ஆகவே,
நஞ்சை பகுதியில் ஒதுக்கப்படுகிற பவர் டில்லர்களை உடனடி
யாக வாங்கி விடுகிறார்கள். ஆனால், புஞ்சைப் பகுதியில்
ஒதுக்கப்படுகிற பவர் டில்லர்கள் அதிகமாக விற்பனை
யாகாமல் அங்கேயே இருக்கின்றன. ஆகவே, நஞ்சைப்
பகுதிகளுக்கு அதிக எண்ணிக்கையில் பவர் டில்லர்கள்
ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தமிழ்நாடு
முழுவதிலுமுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில்,
அனைத்து மாவட்ட மக்களுக்கும் வழங்கப்படுகிறது. இருந்
தாலும், எந்த மாவட்டத்திலே, எவ்வளவு விவசாயிகளுக்கு,
எவ்வளவு பவர் டில்லர்கள் தேவையோ, அந்தப் பகுதி
களுக்கு வேண்டிய அளவு வழங்குவதற்கு, தமிழக முத
லமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். மேலும்,
18 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர்கள் சிறுகுறு விவசாயி
களுக்கு ரூ. 30 ஆயிரம் மானியத்தில் வழங்குவதற்கும் தமிழக
முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள்
என்பதையும் தங்கள் வாயிலாக, இந்த அவைக்குத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி
நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
பவர் டில்லர்கள் வழங்குகிறபோது, வேளாண்மைத் துறையை
அணுகி அவர்கள் மனுக்களைக் கொடுத்த பின்னர், வங்கி
களுக்குப் போய், அவர்களை அணுகுகிற வேளையிலே,
அவர்களுக்குப் பிரச்சினை எழுகிறது. குறைந்தபட்சம்
இவ்வளவு ரூபாயை அங்கே செலுத்தினால்தான் அதைப்
பெறமுடியும் என்கிற ஒரு நிபந்தனை விதிப்பதால், விவ
சாயிகள் அதைப் பெற முடியவில்லை என்று எங்களைப்
போன்ற வெள்ளத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள்
கருதுகிறார்கள். ஆகவே, அதற்கு ஏதாவது விதிமுறைகளைத்
தளர்த்துகின்ற அல்லது அந்த விவசாயிகளுக்குச் சுலபமான
முறையிலே அதனைப் பெற்றுக்கொள்ளுகின்ற வாய்ப்பினைத்
தருகின்ற திட்டம் அரசிடம் எதுவும் உள்ளதா
என்பதை அறிய விரும்புகின்றேன்.

]1993 பிப்ரவரி 10

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் ரொக்கமாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ அல்லது கூட்டுறவு, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது லேண்டு டெவலப்மெண்ட் பேங்க் மூலமாகவோ மனுச் செய்தால் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சிறு குறு விவசாயிகளுக்கு பவர் டில்லருக்கு ரூ. 12,000 மானியமாகவும் டிராக்டர் வாங்குவதற்கு ரூ. 30,000 மானியமாகவும் கொடுப்பதாகச் சொன்னார்கள். சிறு குறு விவசாயிகள் 5 ஏக்கர், 3 ஏக்கருக்கு கீழே உள்ளவர்கள்தான். ஆனால் கொஞ்சம் மீடியம் நிலையிலே உள்ளவர்கள் 10 ஏக்கருக்கு நிலம் இருந்தால் அவர்களும் பவர் டில்லர் உபயோகப்படுத்தலாம். டிராக்டர் உபயோகப்படுத்தலாம் எனவே, அந்த விவசாயிகளுக்கும் மானியத் தொகையிலே பவர் டில்லர் டிராக்டர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை சிறு குறு விவசாயிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு விதிமுறை வகுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசினுடைய ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் என்கின்ற காரணத்தினால் அவர்கள் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்திற்கு விதிவிலக்கு வாங்கித் தந்தால் நம்முடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 57, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.



1993 பிப்ரவரி 10]

57—

மேட்டுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டும் பணி.

*10033—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தருவதற்காக இடம் வாங்க ஆய்வு செய்யப்பட்ட பணி எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேட்டுப்பாளையம் மற்றும் காரமடை போன்ற இடங்களில் குடியிருப்புகள் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட நிலம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கமிட்டியில் நிலத்தின் மதிப்பீடு பற்றி முடிவு செய்யப்படுவதற்காக பரிசீலனையில் உள்ளது.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் இருந்த திட்டத்தை, சாதனை படைத்து வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த வருடம் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறித்து நிலத்தினுடைய மதிப்பீடு முடிவு செய்யப்பட்ட பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக் கொண்ட கமிட்டி மூலம் அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். அந்தப் பரிந்துரை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டும் கூடிய விரைவில் இந்தத் திட்டம் செயலாக்கத்திற்கு விடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 58, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

[1993 பிப்ரவரி 10

58—

பார்வையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

*10258 —திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பார்வையற்றோர் பள்ளிகளில் படித்துப் பட்டம் பெற்ற பார்வையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலத் துறை அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டப்படி 1 சதவீத இடம் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் கண்டிப்பாக வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்று இருந்தும் பல இடங்களிலே அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் அதே போன்று 1975 முதல் 1986 வரை பார்வையற்றோர்கள் பள்ளியிலே படித்த மூன்று பெண்களுக்குச் சமூகநலத் துறை பல்லாவரத்தில் நடத்தி வரும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி அளித்து வந்தார்கள். ஆனால் இப்போது அந்த வாய்ப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அவர்களுக்கு அளிக்க அவர்களை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்க்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஜூலை மாதம் வரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டதாரி ஆசிரியர் பணிக்காகப் பதிவு செய்து காத்திருக்கும் 247 பேர்களில் 154 பேர்களுக்கும் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 93 பேர்களுக்குத்தான் பணி கொடுக்கப்பட வேண்டியுள்ளது. கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரை சில பொருள்களுக்கான அறிவியல், கணிதம் போன்றவை நீங்கலாக ஆசிரியர் பணியிடங்களை பார்வையற்றவர்களுக்கு ஒதுக்கவும், காது கேளாதவர் மற்றும் வாய் பேசாதோருக்கு ஒதுக்கப்பட்ட 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டினையும் பார்வையற்றோர்களுக்கே வழங்கி பார்வையற்றோர்களுக்கு 2 விழுக்காடு இடங்களை ஒதுக்கி மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்



1993 பிப்ரவரி 10]

என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன். 1988-லே இருந்து 1990 வரை பார்வையற்றோருக்கு 1 சதவீத இட ஒதுக்கீடு என்பது அரசு அலுவலகங்களிலே நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல் முறையாக பொறுப் பேற்றதற்குப் பின்னால் அந்த ஒரு சதவீத இட ஒதுக்கீடு இன்றுவரை ஒழுங்காக அரசு அலுவலகங்களில் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லாவரம் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பணியிடங்களை நிரப்புவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கோரிக்கை சமூக நலத் துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 59, திருமதி சியாமளா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

59—

கோவில்பட்டி ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதல்.

*10319—திருமதி ரெ. சியாமளா :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எம் ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டியில் உள்ள அரசு மாணவர் விடுதியில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை 1992–93–ஆம் ஆண்டில் 80-லிருந்து 85-ஆக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்ததற்காக எங்களது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

[1993 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 60, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**60—**

தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட் மூலம் 50 சிசி. மொபெட்டுகள் தயாரித்தல்.

*11034—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஸ்காட் எனப்படும் தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட் மூலம் தரமான 50 சிசி மொபெட்டுகளை மீண்டும் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செஸ்காட் நிறுவனம் மீண்டும் தரமான 50 சிசி மொபெட்டுகளின் உற்பத்தியை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரதைவத் தலைவர் அவர்களே, செஸ்காட் என்கிற தமிழ்நாடு நிறுவனத்தை மொபெட்ஸ் மீண்டும் தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ஆம் ஆண்டில் அப்பொழுது பிரபலமாக ஓடிக்கொண்டிருந்த இரண்டு சக்கர வாகனங்களான 50 சிசி பற்றித் திட்டமிட தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் ஒரு பிரிவு அமைக்கப்பட்டது. அகமதாபாத்திலுள்ள தரக் கட்டுப்பாடு நிறுவனத்திடமிருந்து தேவையான ஒப்புதலைப் பெறுவது மிகவும் சிரமமாக இருந்தது. அடிக்கடி வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு தரக்கட்டுப் பாடு நிறுவனம் கூறிய யோசனைகள், மாற்றங்களைச் செய்து



1993 பிப்ரவரி 10]

கொண்டே வந்தால் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் 1977 ஆம் ஆண்டு வழக்கமான மொபெட் உற்பத்தி தமிழ் நாடு மொபெட் என்ற பெயருடன் துவங்கப்பட்டது. நிதி நிலை, இடவசதி மற்றும் பல காரணங்களினால் பெருவாரி யான உற்பத்தியைத் துவங்க இயலவில்லை. எனவே, இக்கால கட்டத்தில் தனியார் நிறுவனம் மொபெட் உற்பத்தியில் மிகப் பெரிய அளவில் நவீன தொழில் நுட்ப வசதிகளோடு உற்பத்தி செய்யப்பட்ட வண்டிகள் சந்தையில் விற்பனைக்கு வந்துவிட்டன. இதனால் இவை அப்போது நிறுத்திவைக்கப் பட்டுவிட்டது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாராவது மேற்படி நிறுவனத்தைத் துவங்க முன்வந்தால் அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனம் இப்போது மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் தமிழ்நாடு என்ற புதிய பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் கேஸ் அடுப்பு, உதிரி பாகங்களை இணைப்பது இயந்திரங்களை இணைத்துக் கொடுப்பது போன்ற மூன்று விதமான பணிகளைச் செய்து வருகிற காரணத்தால் இது போன்ற திட்டம் எதையும் இப்போது பரிசீலிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**46—**

விருத்தாசலம் நகரில் விளையாட்டுத் திடல் அமைத்தல்.

*9499—திரு. ஆர். டி அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் மாணவ, மாணவியர் விளை யாட்டுப் பயிற்சிக்காக விளையாட்டுத் திடல் ( Stadium ) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

[1993 பிப்ரவரி 10

50—

வாடிப்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.

*8097—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பின்தங்கிய தாலுக்காவான வாடிப்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் :

வாடிப்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் கருத்து எதுவும் அரசிடம் இல்லை.

55—

பள்ளி மாணவர்களுக்கு விடுமுறைக் காலங்களில் தொழிற் பயிற்சி அளித்தல்.

*13723—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவர்களுக்கு விடுமுறைக் காலங்களில் தொழிற் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

இல்லை.



1993 பிப்ரவரி 10]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(பட்டியல் 3).

1—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறு சேமிப்பு மூலம் கிடைத்த தொகை.

வினா எண். 11664—டாக்டர் எஸ். சுந்தரநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுசேமிப்பு கடன் பத்திரம் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு பெற்ற தொகை எவ்வளவு ?

(ஆ) இது கடந்த ஆண்டை விடக் கூடியுள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) 1991-92 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட மொத்த வசூல் ரூ. 26.29 கோடியும், நிகர வசூல் ரூ. 8.25 கோடியும் ஆகும்.

(ஆ) ஆம்.

2—

போளூர் கிளைச் சிறைச்சாலைக்குப் புதிய கட்டிடம்.

வினா எண். 6172—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் உள்ள கிளை சிறைச்சாலைக்குப் புதிய கட்டிடம் அமைத்து நவீனப்படுத்தித் தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): போளூர் கிளைச் சிறையினைப் புதுப்பிக்க அரசு ஆணை 1129, உள்துறை, நாள் 4—6—1990-ன் மூலம் ரூபாய் இரண்டு லட்சம் அனுமதிக்கப்பட்டு, தற்போது மேற்கூரை முழுமையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கிளைச் சிறைக்கு காவல் அறை, அலுவலக அறை மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க, சிறை நிர்வாகத்தினை நவீனமாக்கும் திட்டத்தின் கீழ் அரசு ஆணை பல்வகை எண். 1133, உள்துறை, நாள் 17-5-1988-ன் மூலம் ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதினாயிரம் நிதி அங்கீகாரம் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

3—

## NUMBER OF PRISONERS ESCAPED FROM VELLORE CENTRAL JAIL.

Question No. 8317—Thiru, M. SUNDARADOSS : Will the Honourable, the Law Minister be pleased to state:

(a) Whether a number of prisoners had escaped from the Vellore Central Jail during November 1991?

(b) The details thereof?

(c) Whether a few LTTE men were also involved in the escape?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): மத்திய சிறை வேலூரில் 15—11—1991 அன்று இரவு சிறைக்காவலும் 8 ஆயுள் தண்டனை கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்:—

1. சிறைவாசி எண். 6635, உதயகுமார்.
2. சிறைவாசி எண். 6636, ராஜன்.
3. சிறைவாசி எண். 6726, துலாயல் அகமது.
4. சிறைவாசி எண். 6728, ஜான்.



1993 பிப்ரவரி 10]

5. சிறைவாசி எண் 5709, நேரு.
6. சிறைவாசி எண் 6235, மூர்த்தி.
7. சிறைவாசி எண் 5708, பெருமாள்.
8. சிறைவாசி எண் 6727, சுரேஷ்.

மேற்கூறிய 8 நபர்களும், அவர்கள் அடைக்கப்பட்டிருந்த அடைப்பின் மேற்கூரையின் ஓடுகளைப் பிரித்து வெளியில் வந்து பக்கத்திலுள்ள தற்காலிக அடைப்பிலிருந்து சவுக்கு கம்புகளைப் பிடுங்கி ஏணியாக உபயோகித்து சிறையின் பிரதான மதில் சுவர் வழியாக ஏறித் தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்கூறிய 8 சிறைவாசிகளில் முதல் ஆறு நபர்கள் 10—2—1992 அன்றும் ஏழாவது நபரை 12—2—1992 அன்றும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். மீதம் உள்ள ஒரு சிறைவாசி 6727, சுரேஷ் என்பவரைக் கைது செய்யத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களின் தப்பித்தலுக்குக் காரணமாக அன்று பணியில் இருந்த சிறைப் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தப்பித்தலைத் தவிர்க்க தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

4—

## தேச ஒருமைப்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குக் கொள்கைகளை வலியுறுத்தும் திரைப்படங்களுக்கு முழு வரி விலக்கு அளித்தல்.

வினா எண் 5276—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேச ஒருமைப்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்குக் கொள்கைகளை வலியுறுத்தித் தயாரிக்கப்படும் சிறப்பான திரைப்படங்களுக்கு அரசு முழு வரி விலக்கு அளிக்க முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

இது தொடர்பான திரைப்படங்கள் திரையிடுவதற்கு முன்னர் அதன் தயாரிப்பாளர்கள் அரசுக்கு விண்ணப்பித்தால், கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க அரசு ஆவன செய்யும்.

5—

## பரங்கிப்பேட்டை ஒன்றியம் மஞ்சக்குழிக்கு மனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 7652—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சக்குழிக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம் வட்டம், நத்தம் சர்வே தனி வட்டாட்சியரால் மஞ்சக்குழி மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா ஜனவரி 1993-க்குள் வழங்கும் நிலையில் உள்ளது.

6—

## பரங்கிப்பேட்டை ஒன்றியம், அத்தியாநல்லூரில் மனைப்பட்டா வழங்கல்.

வினா எண் 7679—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், அத்தியாநல்லூர் சர்வே எண் 117, 118, 119 ஆகியவற்றில் மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?





விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்க திட்டப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. புலத் தணிக்கை செய்து விசாரணை முடிவுற்றதும் பட்டா வழங்கப்படும்.

7—

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்களிடம் அளிக்கப்படும் முறையீடுகள்.

வினா எண் 9728—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட கலெக்டர், ஆர். டி. ஓ. மற்றும் தாசில்தார்களிடம் அளிக்கப்படும் முறையீடு மனுக்கள் அல்லது கடிதங்கள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற தகவல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் குறிப்பிட்ட காலவரைக்குள் அனுப்பப்படாமல் இருக்கும் நிலையை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

மக்களுடைய குறைகளைக் களைவதில் மாவட்ட வருவாய் நிர்வாகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. எல்லாத் தரப்பு மக்களாலும் சாதிச் சான்றுகள், வருமானச் சான்றுகள் நிலப் பட்டாக்கள், வீட்டுமனைப்பட்டாக்கள், மனைப்பட்டாக்கள் போன்றவைக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்டாட்சித் தலைவர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு அளிக்கப்படும் மனுக்கள் அல்லது கடிதங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நடவடிக்கையின் முடிவுகள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. சில நேர்வுகளைப் பொறுத்தவரையில் விரிவாக விசாரணை மேற்கொண்டும் நன்கு ஆய்வு செய்தும் ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளதால், ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் மனுதாரர்களுக்கு பதில் அனுப்புவதற்கான சாத்தியக் கூறு ஏதுமில்லை.

[1993 பிப்ரவரி 10

8—

**அரசு அச்சக தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ விடுப்பு.**

வினா எண் 11243—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சகத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு தற்பொழுது மருத்துவ விடுப்பு எத்தனை மாதங்கள் வரை எடுக்க அனுமதிக்கப்படுகிறது?

(ஆ) அச்சக அமைச்சுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படும் மருத்துவ விடுப்பு கால அளவு தங்களுக்கும் அளிக்க வேண்டுமென அவர்களின் சங்கம் முறையீடு செய்துள்ளதா?

(இ) ஆமெனில் அரசின் நடவடிக்கை யாது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) 18 மாதங்கள்.

(ஆ) ஆம்.

(இ) அரசு அச்சகத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு இதுகாறும் மருத்துவ விடுப்பு 12 மாதங்கள் அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட விடுப்பினை 18 மாதங்களாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து, அரசு அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு அளிக்க அரசு 3—4—1992 நாளிட்ட ஆணை எண் 160-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9—

**கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் கணிப்பொறி அறிவியல் பாடம் துவக்குதல்.**

வினா எண் 4853—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் அடுத்த கல்வி ஆண்டில் கணிப்பொறி அறிவியல் பாடம் (Computer Science) துவக்கப்படுமா?



1993 பிப்ரவரி 10]

(ஆ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் பயில அனுமதிக்கப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): 1992-93 ஆம் ஆண்டில் அரசுக் கல்லூரிகளில் வேலை வாய்ப்பை அளிக்கக் கூடிய (Job-oriented) வகுப்புகள் அரசின் நிதி நிலைமைக்கேற்ப துவக்கப்படும்.

10—

**அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம்.**

வினா எண் 7761—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யும் நேர்வில் காலியாகும் இடத்தையும் அதே நாளில் நிரப்பும்படி அரசு ஆணையிடுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யும் நேர்வில் ஏற்படக்கூடிய காலியிடங்களைக் கூடிய மட்டும் உடனுக்குடன் நிரப்ப ஆணையிடப்படுகிறது. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்களின் பொது இடமாற்றம் கோடை விடுமுறையின்போதே மே, ஜூன் மாதங்களில் செய்யப்படுகின்றன. அந்த இட மாற்றங்களின்போது ஒரு அரசுக் கல்லூரியிலிருந்து மற்றொரு அரசுக் கல்லூரிக்கு எதிரெதிர் மாறாகவே (Vice Versa) ஆசிரியர்களின் இடமாற்றம் செய்யப்படுகின்றது. எனவே காலிப் பணியிடங்கள் முடிந்த அளவில் தாமதமின்றி நிரப்பப்படுகின்றன.

11—

**தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்குதல்.**

வினா எண் 8119—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கவும் சுழற்சி முறை (Roster) ரத்து செய்யப்படவும் அரசிடம் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு உள்ளதா?

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

12—

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை, மாநில விளையாட்டு வாரியம் ஆகிய இரண்டையும் ஒரே துறையின் கீழ் கொண்டு வருதல்.

வினா எண் 8142— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை என்றும் மாநில விளையாட்டு வாரியம் எனவும் இரண்டு நிர்வாகமாக இயங்கி வருவதை சிக்கனம் கருதி ஒரே துறையின் கீழ் கொண்டு வர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இளைஞர் விளையாட்டு பயிற்சித் துறையையும், தமிழ் நாடு விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகிய இரண்டையும் இணைத்து தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் (Sports Development Authority of Tamil Nadu) என்ற அமைப்பினை அரசாணை எண் 641, கல்வி, நாள் 18—7—1992-இல் அரசு நிறுவியுள்ளது.

13—

சீர்காழியில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம்.

வினா எண் 8200—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழி தொகுதியில், சீர்காழியில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

பேரணாம்பட்டு இசுலாமியப் பள்ளியை பிளஸ் 2 தேர்வு மையமாக அனுமதித்தல்.

வினா எண். 8275—திரு. ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டு இசுலாமிய மேல் நிலைப்பள்ளி பிளஸ் 2 தேர்வு மையமாக 1991-92 ஆம் ஆண்டில் அனுமதிக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பள்ளி மார்ச் 1992 மேல்நிலைத் தேர்விற்கு புதிய தேர்வு மையமாக அமைக்கப் படவில்லை.

(ஆ) தற்போதைய அலுவலக அளவுகோலின்படி புதிய தேர்வு மையமாக்க ஆண்கள் பள்ளியாயின் 100 மாணவர் களும், பெண்கள் பள்ளியாயின் 75 மாணவியர்களும் இருத்தல் வேண்டும். ஆனால், இப்பள்ளியில் 70 பேர்கள் (ஆண்கள்) மட்டுமே உள்ளனர். எனவே புதிய மையமாக அமைக்கப்பட வில்லை.

15—

லால்குடி வட்டத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கல்லூரிகள் தொடங்குதல்.

வினா எண். 8669—திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லால்குடி வட்டத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கல்லூரி இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசுக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

(இ) தனியார் கல்லூரி தொடங்க முன்வந்தால் அரசு அனுமதி வழங்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நிதி நெருக்கடி காரணமாக அரசுக் கல்லூரி ஏதும் தொடங்க அரசு அனுமதி வழங்குவதில்லை.

(இ) அரசு நிதி உதவி பெறாத தனியார் கல்லூரி துவங்க விண்ணப்பம் பெறப்பட்டால் உரிய நிபந்தனைகளின்படி ஆராய்ந்து அரசு முடிவெடுக்கும்.

16—

தமிழ்நாட்டில் உயர் கல்விக்கான குழு அமைத்தல்.

வினா எண். 8793—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உயர் கல்விக்கென்று குழு ஒன்று அமைப்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) உயர் கல்வி குறித்து தக்க அறிவுரைகளை அரசுக்குத் தெரிவிக்கவும் உயர் கல்விக்காகப் பல்கலைக் கழகங்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தை முறைப்படுத்தவும், பல்கலைக் கழகங்களின் உயர் நோக்குத் திட்டங்களுக்கு தக்க வடிவம் கொடுத்து ஒருங்கிணைந்து செயல்படவும், தேர்வுகள், ஆராய்ச்சிகள் போன்றவற்றை நெறிப்படுத்தவும், மாநில உயர் கல்வி மன்றம் ஒன்றினை அமைப்பதற்கான சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. (தமிழ்நாடு 1992-ஆம் ஆண்டைய சட்ட எண். 40) இவ்வுயர் கல்வி மன்றத்தினை ஏற்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.





17—

தொழிற் பிரிவு மாணவர்களுக்கு கல்லூரியில் சேர 50 சதம் இட ஒதுக்கீடு

வினா எண் 8826—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழக தொழிற்பிரிவு மாணவர்களுக்கு கல்லூரியில் சேர 50 சதம் இட ஒதுக்கீடும், அப்ரெண்டிஸ் பயிற்சியும், பாட நூல்கள் வெளியிடவும், உபகரணங்கள் வழங்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தொழில்நுட்பக் கல்வித் துறையில் வாழ்க்கைத் தொழில் (Vocational) கல்வி பயிலும் மாணவர்களுக்கென்று இட ஒதுக்கீடு மட்டும் செய்யப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் 100 மாணவர்களுக்கும், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் 250 இடங்களும் அளிக்கப் படுகின்றன. இவ்வாறு படிக்கும் மாணவர்கள் பட்டம் பெற்றுத் தாங்களாகவே வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள இயலும். பட்டயம் (டிப்ளமோ) பெறும் மாணவர்களுக்கு, அப்ரெண்டிஸ் பயிற்சி, போர்டு ஆப் அப்ரெண்டிஸ் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. பாடநூல் வெளியிடவும் உபகரணங்கள் வழங்குவதும் குறித்த கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

18—

வாஞ்சலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்.

வினா எண் 8929—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வாஞ்சலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

53—444—7

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

19—

**எட்டு நோயாளிகளுக்கு ஒரு செவிலியர் நியமனத்தை நடைமுறைப்படுத்தல்.**

வினா எண். 1236—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எட்டு படுக்கைகளின் நோயாளிகளைக் கவனிக்க ஒரு நர்ஸ் நியமிக்கப்பட வேண்டும் என்கிற நடைமுறையை அரசு கொண்டு வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. க. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு மருத்துவத் தொகுப்பில் (Medical Codet) தெரிவிக்கப்பட்டுள்ளபடி, எட்டு (8) படுக்கைகளுக்கு (உள் நோயாளிகளின்) ஒரு செவிலியர் என்ற விகிதத்தில் பணி இடங்கள் மருத்துவக் கல்வி இயக்குநரது நிர்வாகத்தின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் உருவாக்கப்பட்டு, செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் சிறப்புப் பகுதிகள் அனுமதிக்கப்பட்ட சில மருத்துவமனைகளில் ஐந்து படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்திலும் சிலவற்றில் ஆறு (6) படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்திலும் பணி இடங்கள் உருவாக்கப்பட்டு, செவிலியர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

(ஆ) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணி இயக்குநரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள் நோயாளிகளை, கட்டில்களைத் தவிர பாய்களிலும் படுக்க வைத்து சிகிச்சை அளிப்பதால் மருத்துவமனைகளில், உள் நோயாளிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளதால் செவிலியர்களின் வேலைப்பளு அதிகமாகிறது எனவே, அனுமதிக்கப்பட்ட உள்நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு செவிலியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டவுடன் 8:1 (உள்நோயாளிகள் : நர்ஸ்) என்ற விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும்.





20—

**புளியங்கொட்டை, கடுக்காய்த் தோல் ஆகியவைகளின் பொடி டீத்தூளில் கலப்படம் செய்வதை தடை செய்தல்**

வினா எண் 2580—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புளியங்கொட்டையையும் மாட்டுத்தோல் பதப்படுத்தப் பயன்பட்ட கடுக்காய்த் தோலையும் பொடி செய்து டீத்தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

(இ) இவ்வாறு டீத்தூளில் கலப்படம் செய்வதினால் புற்று நோய் வரும் என்பது உண்மையா ?

(ஈ) இதுவரை டீத்தூளில் கலப்படம் செய்தது குறித்த வழக்குகள் எத்தனை பதிவு செய்யப்பட்டுள்ளன ?

(உ) இதுபோன்று டீத்தூளில் கலப்படம் செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. க. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) 1990 மற்றும் 1991-ஆம் ஆண்டுகளில் உணவு ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்ட டீத்தூளில், புளியங்கொட்டையும் மாட்டுத்தோல் பதப்படுத்தப் பயன்பட்ட கடுக்காய்த் தோலும் கலந்திருக்கவில்லை என்பது, உணவு மாதிரிகள் பகுப்பாய்வின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் சில டீத்தூள்

[1993 பிப்ரவரி 10

உணவு மாதிரிகளில், டீத்தூளுடன் முந்திரிக்கொட்டையின் மென்மையான உள்தோலும், உணவுக் கலப்படத் தடைச் சட்ட விதிப்படி அனுமதிக்கப்படாத ''கோல்டார்'' சாயமும், மற்றும் சிலவற்றில் உளுத்தம் பருப்புத் தோலும் கலந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் டீத்தூள் மாதிரிகள் உட்பட்ட பலவகையான உணவு மாதிரிகள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டு பரிசோதனைக்குப் பிறகு உணவு மாதிரிகள் கலப்படம் என அறிய வந்தால், கலப்படம் செய்தோர்மீது வழக்குகள் தொடரப்பட்டு தண்டனையும் விதிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதின் மூலம் உணவு கலப்படத்தை கட்டுப்படுத்த முடிகிறது.

(இ) உணவு கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படாத ''கோல்டார்'' சாயம் கலந்த டீத்தூளை தொடர்ந்து பல காலம் உட்கொள்ளுவதால் புற்றுநோய் வர வாய்ப்பு இருக்கிறது.

(ஈ) 1990 ஆம் ஆண்டில் மட்டும் 1,424 டீத்தூள் உணவு மாதிரிகள் எடுத்து பரிசோதிக்கப்பட்டது. அதில் 65 டீத்தூள் உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது. கலப்படம் செய்தோர்மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

(உ) பெரும்பாலும் இதுபோன்ற வழக்குகளில் சுமார் ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை அபராதம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

21—

காரைக்காட்டுச் சாவடிக்கு மகப்பேறு இல்லம் அமைத்தல்

வினா எண் 7799—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி, காரைக்காட்டுச் சாவடிக்கு மகப்பேறு இல்லம் ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கிள்ளை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் பொன்னந்திட்டு துணை சுகாதார நிலையம் இயங்கி வரு உள்ளடக்கிய கின்றது. காரைக்காட்டுச் சாவடி கிராமம் பொன்னந்திட்டு துணை சுகாதார நிலையத்தினால் பயன்பெறும் மக்கட்தொகை 4,809 ஆகும். 5,000 மக்கட்தொகைக்கு ஓர் துணை சுகாதார நிலையம் வீதம் அரசு அமைத்து வருகிறது. எனவே மேற்கொண்டு புதிதாக காரைக்காட்டுச் சாவடியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய தேவை இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

22—

நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள்.

வினா எண். 7995—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் எங்கெங்கு செயல்படுகின்றன ?

(ஆ) மேலும் புதிதாக எங்கெங்கு அமைக்கப்படவிருக்கின்றது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் செயல்படுகின்றன:

மாநில நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் செயல்படும் இடங்கள் :

(1) அரசு கண் மருத்துவமனை, சென்னை. 2 பிரிவுகள்.

(2) அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை 2 பிரிவுகள் தஞ்சாவூர்.

(3) அரசு இராசாஜி மருத்துவமனை, 2 பிரிவுகள். மதுரை.

(4) அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை, 1 பிரிவு. கோயம்புத்தூர்.

(5) அரசு மருத்துவக் கல்லூரி, 1 பிரிவு. திருநெல்வேலி

மாவட்ட நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் செயல் படும் இடங்கள் :—

(1) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம்.

(2) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, கடலூர்.

(3) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, வேலூர்.

(4) அரசு மாவட்ட தலைமை மருவத்துமனை, ஈரோடு.

(5) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தர்மபுரி.

(6) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி

(7) அரசு மாவட்ட தலைமை மருந்துவமனை, திருச்சி.

(ஆ) மேலும் புதிதாகக் கீழ்க்கண்ட இடங்களில் மாவட்ட நடமாடும் கண் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையிலுள்ளன :—

(1) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, திருவண்ணாமலை.

(2) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம்.

(3) அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, நாகர்கோயில் மற்றும்

(4) அரசு மாவட்ட தலைமை மருந்துவமனை, திண்டுக்கல்—அண்ணா.



23—

## Common Effluent Plant at Ranipet

Question No. 8278 Tmt. V. G. Manimegalai :

Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether any common effluent plant is being set up at Ranipet area in Tamil Nadu?

(b) the details thereof ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நடத்துபவர்களை ஒன்று திரட்டி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் உருவாக்கியுள்ளது. அதன்படி ராணிப்பேட்டையில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமையவிருக்கின்றன.

| வரிசை எண். | பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவிருக்கும் இடம். | தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீடு ரூபாய் லட்சத்தில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ராணிப்பேட்டை சிட்கோ தொழிற்பேட்டை. | 77 | 275 |
| 2 | மேல் புதுப்பேட்டை .. | 19 | 57 |
| 3 | செட்டித்தாங்கல் .. | 9 | 27 |

ராணிப்பேட்டை —சிட்கோ தொழிற்பேட்டையில் அமையவிருக்கும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான திப் பந்தப்புள்ளி தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற விண்ணப்பித்துள்ளது. மேல் புதுப்பேட்டை மற்றும் செட்டித்தாங்கல் ஆகிய இடங்களுக்கான திட்ட அறிக்கை நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர வேறு 70 தோல் பதனிடும் தொழிற்சாலை கள் தமிழ்நாடு தோல் மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :-

| வரிசை எண். | பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவிருக்கும் இடம். | தோல் பதனிடும் தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | திட்ட மதிப்பீடு ரூபாய் லட்சத் தில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ராணிப்பேட்டை .. | 70 | 300 |

இப்பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் வன்னிவேடு என்ற கிராமத்தில் சுமார் 20.84 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய விருக்கின்றது. அதற்கான பணிகள் தமிழ்நாடு தோல் மேம் பாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் நடைபெற்று வரு கின்றன.

24—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வனச்சரக அலுவலகங் களிலுள்ள மரங்கள்.**

வினா எண். 3508—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வனச்சரக அலுவலகங்களிலும் மர மண்டிகளிலும் இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஏலம் போடாமல் இருப்பதால் மட்கி சேதமடைந்து போவது அரசுக் குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனுக்குடன் ஏலம் விட்டு விற்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.





(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மரக் கிடங்கு களில் இருக்கும் அரசுக்குச் சொந்தமான தடி மரங்களை விற்க முறையாக அவ்வப்போது ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. பல்லாகுள மரக் கிடங்கில் இருப்பிலுள்ள தடி மரங்களை விற்பது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. மற்ற மரக் கிடங்குகளில் மீதமுள்ள தடி மரங் களையும் விரைவில் விற்க அரசு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

25—

**சுற்றுலா மையங்களை வனத்துறை மூலம் அமைத்தல்.**

வினா எண். 5827—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தரும் வகை யிலும் வனத்துறைக்கு அதன் மூலம் வருவாய் வரும் வகை யிலும் சுற்றுலா மையங்களை வனத்துறை மூலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தரும் வகையிலும், வருவாய் வரும் வகையிலும் சுற் றுலா மையங்களை வனத்துறை மூலமாக அமைக்க கருத்துரு ஏதும் தற்போது இல்லை. மேலும், சுற்றுலா மையங்கள் வன உயிரின உய்விடங்களில் வனத்துறையால் உருவாக்கப்படு வதில்லை. வன உயிரின உய்விடங்களில் சுற்றுச் சூழல், வனத் தாவரங்கள் மற்றும் வன உயிரின பாதுகாப்பு முதலியவற்றைக் கருத்திற்கொண்டு வன உயிரின உய்விடங்களில் கூடுதலாக சுற்றுலா மையங்கள் அமைக்கலாகாது.

[1993 பிப்ரவரி 10

26—

**அழகர்மலையிலிருக்கும் வனக் கட்டிடத்தை புதுப்பிக்கும் பணி**

வினா எண் 6278—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நத்தம் ஒன்றியம் வேம்பரணி அருகில் உள்ள அழகர் மலையிலிருக்கும் வனக்கட்டிடம் புதுப்பிக்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படவிருக்கிறது ?

**விடை—**

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

நத்தம் ஒன்றியம் வேம்பரணி அருகில் உள்ள வனத்துறை ஓய்வு விடுதியை பழுது பார்க்க 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 4,000 வனப் பாதுகாவலரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது.

27—

**சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை.**

வினா எண். 6334—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட வாரியாக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அண்ணா மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் புதிதாக நடப்பட்ட மரக்கன்றுகள் இத்திட்டத்தின் கீழ் எவ்வளவு ?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1. சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட வாரியாக செலவிடப்பட்ட தொகை விபரம் :

| மாவட்டம். | 1988-89 | 1989-90 | 1990-91 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| சேலம் .. .. | 64.50 | 1,33.12 | 173.23 |
| தர்மபுரி .. .. | 23.38 | .. | |
| திருவண்ணாமலை–சம்புவராயர் .. .. | 72.35 | 74.74 | 74.98 |
| வடஆற்காடு–அம்பேத்கார் | 53.90 | 60.81 | 60.57 |
| கோயம்புத்தூர் .. | 14.42 | 20.62 | 22.78 |
| பெரியார் .. .. | 16.93 | 20.06 | 22.00 |
| உதகமண்டலம் . | 2.99 | 4.59 | 5.89 |
| திருச்சிராப்பள்ளி .. | 86.47 | 84.11 | 83.34 |
| தென்னாற்காடு .. | 88.25 | 99.59 | 1,00.18 |
| செங்கை எம்.ஜி.ஆர். | 71.67 | 1,00.88 | 1,32.10 |
| மதுரை .. .. | 32.99 | 76.63 | 62.73 |
| பசும்பொன் தேவர் திருமகனார் .. | 53.67 | 64.41 | 49.00 |
| இராமநாதபுரம் .. | 36.64 | 50.06 | 58.35 |
| புதுக்கோட்டை .. | 34.58 | 43.43 | 47.00 |

| மாவட்டம். | 1988-89 | 1989-90 | 1990-91 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தஞ்சாவூர் .. .. | 32.86 | 51.42 | 52.29 |
| அண்ணா .. .. | 51.32 | 42.25 | 53.26 |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் .. .. | 72.92 | 69.54 | 67.94 |
| சிதம்பரனார் .. .. | 33.25 | 48.84 | 50.13 |
| கன்னியாகுமரி .. .. | 2.83 | 5.67 | 9.59 |
| காமராசர் .. .. | 36.73 | 45.85 | 43.45 |
| வனப்பாதுகாவலர், சுர்ந்தாய்வு, சென்னை | 16.33 | 61.45 | 58.74 |
| இதரத் துறைகளுக்கு .. | 58.88 | 90.35 | 174.91 |
| மொத்தம் .. .. | 9,57.86 | 1,248.42 | 1,402.37 |

2. அண்ணா மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக நடப்பட்ட மரக்கன்றுகள் விவரம் :—

| வருடம். | எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1988-89 .. .. . . | 20,04,381 |
| 1989-90 . . . . . . | 8,23,217 |
| 1990-91 . .. .. .. | 11,37,163 |



28—

## திருப்பூர் நகரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளை நிலையம் அமைத்தல்.

வினா எண். 8069—திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :-

(அ) திருப்பூர் நகரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

(இ) அதன் மூலம் எத்தனை புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும் ?

விடை.—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ): திருப்பூர் ஈரோடு நகரிலிருந்து 56 கி.மீ. தொலைவிலே உள்ளது. திருப்பூரிலிருந்து 4 பேருந்துகள் தான் இயக்கப்படுகின்றன ஈரோடு நகராட்சி பேருந்து நிலையத்தினுள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதால் திருப்பூர் நகரத்தில் கிளை உப பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை. எனவே புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துவது பற்றிய திட்டமும் பரிசீலனையில் இல்லை.

29—

## CENTRAL ASSISTANCE TO COMBAT AND APPREHEND SANDALWOOD SMUGGLERS.

Question No. 8357—Thiru M. Sundaradass : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) Whether the Tamil Nadu Government sought as central assistance to combat and apprehend sandalwood smugglers in this state ?

(b) the details thereof ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சந்தன மர வனத்தையும் வனப் பாதுகாப்பையும் வலுப்படுத்த அத்தியாவசிய தேவைகளான வனப்பீட்டுகளை மாற்றி அமைத்தல், நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்குதல் நடமாடும் சோதனைச் சாவடி, வனக்காவல் நிலையம் அமைத்தல் போன்ற சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வனப் பாதுகாப்புப் படையை வலுப்படுத்தவும் மற்றும் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய தேவையினை விளக்கி சுமார் ரூ. 8.50 கோடி அளவில் திட்டங்கள் தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

30—

ஆலங்குடியை மையமாகக் கொண்டு மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் 8377—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில், ஆலங்குடியை மையமாகக் கொண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

ஆலங்குடி தொகுதியில் ஆலங்குடியை மையமாகக் கொண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்ப தற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப் பட்ட பின் பணிமனை அமைப்பதற்கான கட்டிடப் பணிகள் துவக்கப்படும்.



31—

விளவங்கோடு வட்டம் மார்த்தாண்டம்—பனச்சமூடு சாலையில் நகரப்பேருந்துகளுக்கு கட்டண நிலையை மாற்றியமைத்தல்.

வினா எண். 8423—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகளுக்கு 2 கி.மீ. தூரம் ஓர் பாயிண்ட் என்று உள்ளபோது விளவங்கோடு தாலுக்காவில் மார்தாண்டம் பனச்சமூடு சாலையில் ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவான இடைக்கோடு பஞ்சாயத்து ஆபீஸ் சந்திப்பு மேலபாலை, இடைத் கோடு—மெல்பாலை போன்ற பாயிண்ட்களின் இடைவெளி இரண்டு கிலோ மீட்டருக்கு குறைவானது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொது மக்கள் நலன் கருதி அதை மாற்றியமைக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மார்த்தாண்டம்—பனச்சமூடு (வழி—மேல்புறம், மேல்பாலை) தடத்தின் தூரம 18.0 கி.மீ. ஆகும். அத்தடத் தில் 10 கட்டண நிலைகள் உள்ளன. கட்டண அமைபபின்படி முக்கிய கிராமங்களுக்குக் கட்டண நிலை ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டு வருகிறது. அதன்படி கட்டண நிலைகளின் இடைப்பட்ட தூரம் சிலவற்றில் 2.0 முதல் 2.5 கி.மீ. வரையிலும், சிலவற்றில் 2.0 கி.மீக்கும் குறைவாகவும் உள்ளது. ஆனால், மொத்தத்தில் பார்க்கும்போது சராசரியாக 2.0 கிலோ மீட்டருக்கு ஒரு கட்டண நிலை என்பது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தடம் இதே கட்டண நிலைகளுடன் 1972-க்கு முன்பிருந்தே இயக்கப்பட்டு வருகிறது. மேலும், மார்த்தாண்டத்திலிருந்து மேல்புறம், மஞ் சாலமூடு, மேல்பாலை வழியாக பனிச்சமூட்டிற்கு இயக்கப்பட்டு வரும் தடப் பேருந்தின் தூரம் 19.0 கி.மீ. அளவும் 12 கட்டண நிலைகளைக் கொண்டதாகவும் 1985ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிறது. கட்டண விதி ஆணையிலும், நடைமுறைக் கூட்பட்டு ஒரு கட்டண நிலை உத்தேசமாக 2.0 கி.மீ. வரை இருக்கலாம் என உள்ளது. அதன்படி இந்தத் தடத்திலும்

கட்டண நிலை சராசரி 2 கி.மீ. தூரத்திற்கு ஒன்று என்று உள்ளது. இந்நிலையில் 1972—ஆம் ஆண்டுக்கு முன்பே அமலில் உள்ள இக்கட்டண நிலைகளை மாற்றியமைக்க இயலாத நிலையில் உள்ளது.

32—

அண்ணா மாவட்டத்தில் முடிவுபெறாத நிலையிலுள்ள வன நிர்ணயச்சட்டம்சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்.

வினா எண். 8691—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளில் வன நிர்ணயச் சட்டம் சம்பந்தமான நடவடிக்கைகள் இன்னும் முடிவு பெறாத நிலையில் உள்ளன?

(ஆ) இதனால் எந்தெந்த அபிவிருத்திப் பணிகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள் தடைபட்டு உள்ளன?

(இ) இத்தடைகள் நீங்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில், திண்டுக்கல் வட்டத்திலுள்ள சிறுமலை மேற்குப் பகுதி, கன்னிவாடி வனப் பகுதி–1 மற்றும் கன்னிவாடி வனப்பகுதி–3, கொடைக்கானல் வட்டத்திலுள்ள ஆயக்குடி வனப்பகுதிகளில் வன நிர்ணயச் சட்டம் (Forest sette'ment) சம்மந்தமான நடவடிக்கைகள் இன்னும் முடிவு பெறாத நிலையில் உள்ளன.

(ஆ) வன நிர்ணயத் திட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்பு இருப்பதனால் வனத்துறையின் மூலம் செய்யப்படும் மேற்குமலைத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டப்பணிகள் தடைப்பட்டு வருகின்றன. ஆனால் போக்குவரத்துப்பணி மேற்கொள்வதில் தடையேதும் இல்லை.



(இ) வன நிர்ணயப் பணிகள் விரைவில் முடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

33—

மதுரையில் ஒவ்வொரு பகுதியிலும் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துப் பணிமனை அமைத்தல்.

வினா எண் 9089— திரு ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரைப் போல மதுரையின் ஒவ்வொரு பகுதியிலும் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்.

சென்னை மாநகரைப்போல மதுரையிலும் பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே மதுரையில் சில இடங்களில் நகரப் பேருந்துப் பணிமனைகள் அமைந்துள்ளன. இது தவிர மதுரை நகரைச் சுற்றியுள்ள சில முக்கிய இடங்களில் பணிமனைகள் நகரப் பேருந்துகளுக்காக அமைந்துள்ளன.

34—

கடன் நிவாரணம் பெற்ற நெசவாளர் எண்ணிக்கை:

வினா எண். 5985—திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 10 ஆயிரம் வரை விவசாயக் கடன் நிவாரணத் திட்டம் 1990–ன் கீழ் எந்தெந்த நிபந்தனைகளின் பேரில் நிவாரணம் வழங்கப்படுகிறது?

(ஆ) இத்திட்டம் அமுல் செய்யப்பட்டதிலிருந்து இது வரை, இதன்படி, கடன் நிவாரணம் பெற்ற நெசவாளர் எண்ணிக்கை எவ்வளவு?

[1993 பிப்ரவரி 10

(இ) அளிக்கப்பட்ட நிவாரணத் தொகை எவ்வளவு ?

விடை —

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

(அ) மத்திய அரசு அங்கீகரித்த வேளாண்மை மற்றும் கிராமப்புற கடன் நிவாரணத் திட்டம் 1990-ன் அடிப்படையில், மாநில அரசு அரசாணை பல்வகை எண். 571 (கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை) நாள் : 25-6-1990-ன்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும், கைவினைஞர்களுக்கும், கடன் நிவாரணத் திட்டத்தை அமுல் படுத்தியது. இதன்படி மாநிலத்தில், கூட்டுறவு அமைப்பின் கீழ் கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணமும் நூலும் கடனாகக் கருதப்பட்டு 2—10—1986 முதல் கடன் தொகை பிடித்தம் செய்யப்படும் வகையில் 1—4—1986 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ கடன் வழங்கப்பட்டு 2—10—1989 அன்று, நிலுவையிலுள்ள தொகையில் ரூ. 10,000 வரை நிவாரணம் அளிக்கப்பட்டது.

(ஆ) இத்திட்டம் அமுல் செய்யப்பட்டதிலிருந்து இதுவரை 802 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த, 47,844 நெசவாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

(இ) இத்திட்டத்தின் கீழ், இதுவரை நிவாரணம் அளிக்கப்பட்ட தொகை ரூ. 223.51 இலட்சம்.

35—

**இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தில் அரசு கொள்முதல் மதிப்பு.**

வினா எண். 6533—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கிய இலவச வேட்டி சேலை திட்டங்களுக்காக கடந்த 3 ஆண்டுகளில் கூட்டுறவு சொசைட்டிகள் உற்பத்தி செய்தவற்றில் அரசு கொள்முதல் செய்தவற்றின் மதிப்பு எவ்வளவு ?



1993 பிப்ரவரி 10]

(ஆ) அவற்றிற்கான விலை நிர்ணயம் எந்த நெறிமுறையின்படி நிர்ணயிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு அரசால் அமுல்படுத்தப்பட்ட இலவச வேட்டி, சேலை திட்டங்களுக்கு தேவைப்பட்ட ஜனதா ரக வேட்டி மற்றும் சேலைகள் தமிழகத்தில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு அவை கொள்முதல் செய்யப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| வருடம். | கொள்முதல் விபரம். |
| --- | --- |
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1989–90 .. .. .. .. .. | 45,72.28 |
| 1990–91 .. .. .. .. .. | 11,60.34 |
| 1991–92 .. .. .. .. .. | 12,61.10 |

(ஆ) தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்ற இலவச வேட்டி சேலை திட்டங்களுக்கு வேட்டி சேலையின் விலையினை அரசே நிர்ணயம் செய்கிறது. நூல்விலை, நெசவுக்கூலி, சாயக்கூலி, உற்பத்தி செலவு ஆகிய இனங்களை கருத்தில்கொண்டு, வேட்டி சேலைகளின் கொள்முதல் விலையை நிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படுகிறது.

36—

**ஊத்துமலை கிராமத்திற்கு பாசன வசதித் திட்டம்**

வினா எண். 86— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை கிராமத்திற்கு கருப்பா நதி அணையிலிருந்து வீரசிகாமணி குளம் மூலம் பிரிந்து வரும் கால்வாயை சீர்படுத்தி பாசன வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1993 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) வீரசிகாமணி பெரியகுளத்திற்கு பாப்பான்கால் வாய் மூலம் தண்ணீர் வருகின்றது. மேற்க்கண்ட வழங்கு வாய்க்காலுக்குச் சீரமைப்பு பணி மிகவும் அவசியமாகச் செய்யப்பட வேண்டும். இக்கால்வாயின் நீளம் 14.48 கி.மீ. இக்கால்வாயின் முதல் 600 மீட்டர் கல் பதிக்கப் பட்டுள்ளது. மிகவும் மேடிட்ட பகுதியான 7,860 மீட்டர் முதல் 11,620 மீட்டர் வரை மட்ட அளவுப் பணிகள் மேற்கொண்டு இரு மதிப்பீடுகள் ரூ. 76,000-க்கும் மற் றும் ரூ. 57,000-க்கும் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) போதிய நிதி ஆதாரம் இல்லாமையால் மராமத்துப் பணிகளை எடுத்து செயலாக்க இயலாத நிலையில் உள்ளது.

37—

விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கியதன் மூலம் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு.

வினா எண். 3965—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் கொடுத்த தால் மின்சார வாரியத்திற்கு ரூ. 550 கோடி இழப்பு ஏற்படுவதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

1—8—1990 முதல் தமிழக மின்வாரியத்தின் எல்லைக் குட்பட்டுள்ள விவசாயிகள் இலவசமாகப் பயன்படுத்தும் மின் சக்தி வருடம் ஒன்றிற்கு 4,040 மில்லியன் யூனிட்டுகளாகும்.



1993 பிப்ரவரி 10]

ஆரம்பத்தில் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய ஆன செலவு 132.39 பைசா என இருந்து பின்னர் நிலக்கரி மற்றும் போக்குவரத்து கட்டண விலை ஏற்றத்தினால் ஒரு யூனிட்டுக்கு 137 பைசாவாகியுள்ளது. எனவே எதிர்பார்த்த இழப்பு வருடத்திற்கு ரூ. 550 கோடி ஆகும்.

38—

சங்ககிரியில் அரசு அலுவலகங்களுக்கு பொதுப் பணித்துறை மூலம் ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 4406—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரியில் வருவாய்த்துறை, வணிக வரித்துறை, நிதித்துறை, வேளாண்மைத்துறை, கல்வித் துறை ஆகிய அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கிவருவ தால் ஒருங்கிணைந்த கட்டிடம் பொதுப்பணித்துறை மூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இது சம்மந்தமாகப் பொதுப்பணித்துறையிடம் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

39—

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு ஐரோப்பிய பொருளாதாரக்குழு மூலம் ஏரிப்பாசன சிமெண்ட் கால்வாய் கட்டும் பணி.

வினா எண். 4495—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐரோப்பிய பொருளாதாரக் குழு மூலம் தமிழகத்துக்கு எவ்வளவு தொகை 1989—90, 1990—91-க்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது?

(ஆ) அதன் மூலம் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திற்கு ஏரிப்பாசன சிமெண்ட் கால்வாய் கட்டும் வேலை எப்போது நிறைவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஐரோப்பிய பொருளாதாரக் குழு மூலம் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1989–90, 1990–91–க்கு கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1989–90 : | முதல் கட்டம் .. .. .. .. | 215.00 |
| | இரண்டாம் கட்டம் .. .. | 347.00 |
| 1990–91 : | முதல் கட்டம் .. .. .. | 470.00 |
| | இரண்டாம் கட்டம் .. .. | 870.00 |

(ஆ) செங்கற்பட்டு–எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம் முதல் கட்டத்தில் 38 பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டு நிறைவுற்றன.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் செங்கற்பட்டு–எம். ஜி. ஆர். மாவட்டத்தில் 1992 ஆம் ஆண்டு மார்ச்சு முடிய 29 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பணிகள் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும்.

40—

## கீழக்கலங்கல் கிராமம் பெரியகுளத்திற்கு அடைப்புப் பலகைகள் அமைத்தல்.

வினா எண். 5115—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் கீழக்கலங்கல் கிராமம், பெரியகுளத்தில் அடைப்பு பலகைகள் (shutters) இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அடைப்புப் பலகை (shutters) போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அடைப்புப் பலகைகளை பழுது பார்க்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவ்வருடத்தில் செயலாக்கப்படும்.

41—

## ஆதி திராவிடர் இலவச வீடுகளுக்கு இலவச மின்விளக்குத் திட்டம்.

வினா எண். 6007—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒரு குடிசைக்கு ஒரு இலவச மின்விளக்குத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் இலவச குடியிருப்பு வீடுகளுக்கு மின்விளக்கு இணைப்பு அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை நத்தம் தொகுதியில் சாணார்ப்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் ஆதி திராவிடர் இலவசக் குடியிருப்பு வீடுகளுக்கு அளிக்கப்பட்ட மின்விளக்கு எண்ணிக்கை விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 31–3–1992 வரை நத்தம் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு கொடுத்த இலவச மின் இணைப்பு பின்வருமாறு:

| | |
|---|---|
| நத்தம் ஊராட்சி ஒன்றியம் .. .. | 962 |
| சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியம் .. | 754 |
| மொத்தம் .. | 1,716 எண்ணிக்கை |

42—

**தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப்படி மற்றும் நகரஈட்டுப்படி.**

வினா எண். 6669— திரு உ. பலராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு மின்வாரியத்தை சேர்த்த தொழிலாளர்களுக்கு HRA 15 சத விகிதம் மற்றும் CCA 8 சதவிகிதம் வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

மின்வாரியத் தொழிலாளர்களுக்கு விழுக்காடு டிப்படையில் வீட்டுவாடகைப்படி, நகரஈட்டுப்படி வழங்கப்படுவது இல்லை. சம்பள விகிதாச்சார அடிப்படையிலேயே படிகள் வழங்கப்பட்டு வருகிறது.

43—

**திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக் கொல்லையில் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போடுதல்.**

வினா எண் 6875— திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக்கொல்லையில் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சி மேட்டுக்கொல்லையில் உள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு திட்டத்தின் கீழ் மின்வசதி கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

44—

**பேரணாம்பட்டிலுள்ள டிரான்ஸ்பார்மர்களை பழுதுபார்க்கும் பணி**

வினா எண். 8397—டாக்டர் ஜெ பரந்தாமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேர்ணாம்பட்டில் நீண்ட நாட்களாக செயல்பட்டு பழுதடைந்த நிலையிலிருக்கும் டிரான்ஸ்பார்மர்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

விடை—

பேர்ணாம்பட்டில் நீண்ட நாட்களாக செயல்பட்டு பழுதடைந்த நிலையில் டிரான்ஸ்பார்மர்கள் ஏதும் தற்போது இல்லை. பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்கள் உடனே இரண்டு தினங்களுக்குள் மாற்றியமைக்கப்பட்டு மின் விநியோகம் தடையின்றி வழங்க மின்வாரியம் கண்காணித்து வருகிறது.

45—

**மின்வாரியத்தின் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் மின்சார உபயோகிப்பாளர்கள் அமைப்பை ஏற்படுத்துதல்.**

வினா எண். 9295—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மின் வாரியத்தின் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் மின்சார உபயோகிப்பாளர்கள் அமைப்பை ( Section officer ) ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் வாரியத்தின் 2,500 பிரிவு அலுவலகங்களிலும் ''மின்சார உபயோகிப்பாளர்கள் அமைப்பு'' ஒன்றினை ஏற்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது. ஆனால் இந்த அமைப்பை மின் நுகர்வோர்களே அமைக்க வேண்டியிருந்தமையால், இதனைச் செயல்படுத்துவது கடினம் என்கிற கருத்தின் அடிப்படையில் அத்தீர்மானம் கைவிடப்பட்டது.

46—

மங்களூர் தொகுதியில் சாத்துக்குடல் முதல் முகுந்தநல்லூர் வரை சாலைபோடும் திட்டம்.

வினா எண். 1272—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் சாத்துக்குடல் முதல் முகுந்தநல்லூர் வரை சாலைபோடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சாத்துக்குடல் கிராமம் முதல் முகுந்த நல்லூர் கிராமம் வரை இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மண்சாலை உள்ளது. இச்சாலை செல்லும் நேர்ப்பாட்டில் பட்டா நிலங்கள் அமைந்துள்ளதால் மேம்பாடு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இச்சாலைப் பகுதியை வாகன போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் மேம்பாடு செய்யவும், இச்சாலையில் குறுக்கிடும் ஓடைகளில் சிறு பாலங்கள் அமைக்கவும் மற்றும் நிலம் கையகப்படுத்தவும் சுமார் ரூ. 10 லட்சம் செலவாகும். இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.





47—

ஆண்டாங்கொல்லையிலிருந்து அனந்த கோபாலபுரம் வரையுள்ள சாலையை மராமத்து செய்து கப்பிச்சாலையாக மாற்றல்.

வினா எண் 1894—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லையிலிருந்து அனந்த கோபாலபுரம் வரை உள்ள சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம் பாதரங்கோட்டை (தெ) ஊராட்சி ஆண்டாங்கொல்லையிலிருந்து அனந்தகோபாலபுரம் வரை உள்ள சாலையின் நீளம் 2.6 கி.மீ. ஆகும். இச்சாலையை முழுவதும் கப்பிச்சாலையாக மாற்ற ரூ. 2.60 லட்சம் செலவாகும். நிதி பற்றாக்குறையின் காரணமாக இச்சாலையினை மேம்படுத்த செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

48—

அதம்பை வடக்கு ஆதிதிராவிடர் தெருவிலிருந்து வல்லம்ப கொல்லை வரையுள்ள குறுக்குச்சாலையை கப்பிச்சாலையாக மாற்றல்.

வினா எண். 1899—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம், அதம்பை வடக்கு ஆதிதிராவிடர் தெருவிலிருந்து வல்லம்ப கொல்லை வரை செல்லும் குறுக்குச்சாலையைப் பராமரித்து கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை (வ) ஆதி திராவிடர் தெருவிலிருந்து வல்லம்ப கொல்லை வரை செல்லும் குறுக்குச் சாலையை கப்பிச்சாலையாக மாற்றித்தர நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. நிதிநிலைக்கேற்ப, இப்பணியை 1992-93-ல் எடுத்துச் செய்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

49—

சூரங்கொல்லை - உதயசூரியபுரம் வரையுள்ள சாலையை கப்பிச் சாலையாக மாற்றல்.

வினா எண். 1912—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த சூரங்கொல்லையிலிருந்து உதய சூரியபுரம் வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நடுவிக் கோட்டை செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச்சாலையாக மாற்ற நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.



1993 பிப்ரவரி 10]

50—

கழுகுப்புளிக்காடு ஆதி திராவிடர்களுக்கு மேலும் 20 காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 1919—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுபுளிக்காடு ஆதி திராவிடர்களுக்கு மேலும் 20 காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றி
யம், கழுகுபுளிக்காட்டில் 66 அரிசன குடும்பங்கள் உள்ளன.
1987-88 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்
பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் தொகுப்பு வீடுகள் ஏதும்
கட்டப்படவில்லை. மீதமுள்ள 46 குடும்பங்களில் 1992-93-ம்
ஆண்டில் 20 வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தச்சக்காடு கிராமத்திலுள்ள பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்தல்.

51—

வினா எண். 4111—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தச்சக்காடு கிராமத்திலுள்ள பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்துத் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தச்சக்காடு ஊராட்சியின் நிதிநிலைமை போதுமானதாக இல்லாததால் நிழற்குடை அமைக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1993 பிப்ரவரி 10

52—

தலைஞாயிறு ஒன்றியத்தில் பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண். 5347—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) தலைஞாயிறு ஒன்றியத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

53—

வேதாரண்யம் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண். 5348—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வரலாற்று சிறப்புமிக்க வேதாரண்யம் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஏற்கனவே இயங்கி வரும் பேருந்து நிலையம் போதுமானதாகவும் இடவசதி உள்ளதாகவும் அமைந்துள்ளதால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.



1993 பிப்ரவரி 10]

54 –

செங்குளம் பிரிவு முதல் தாளக்கரை வரை சாலை அமைத்து பேருந்து விடுதல்

வினா எண் 5662 –திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், தாளக்கரைக்கு செங்குளம் பிரிவு முதல் தாளக்கரை வரை சாலை அமைத்து பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர், ஒன்றியம், தாளக்கரைக்கு செங்குளம் பிரிவு முதல் தாளக்கரை வரை உள்ள சாலை வண்டிப் பாதையாகவுள்ளது. இது வனத் துறையைச் சார்ந்தது. மத்திய அரசு அனுமதி பெற்ற பின்னர் தான் சாலை அமைக்க இயலும்.

55 –

காவேரிப்பாக்கம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

வினா எண் 5954 –திரு. ஏ. எம். முனிரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோளிங்கர் தொகுதியில் மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியமான காவேரிப்பாக்கம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1993 பிப்ரவரி 10

56—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்ரசிந்தாமணியில் தொலைக் காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் அமைத்தல்.

வினா எண் 6407 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்ரசிந்தாமணிக்கு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலிப்பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங் களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங் களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப் படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சி களைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சி யின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

57—

சோலைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் வானொலிப்பெட்டி அமைத்துக் கொடுத்தல்.

வினா எண். 6466—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காட்டிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு ஒரு தொலைக் காட்சிப்பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991–92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங் களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங் களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

58—

ரெகுநாதபுரத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலிப் பெட்டி வழங்கல்.

வினா எண் 6765—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வாத்தலைக்காடு ஊராட்சி ரெகுநாதப்புரத்திற்கு தொலைக் காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1991—92-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங் களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்

களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக் குடியிருப்பிற்கு 1991—92-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

59—

**போளூர் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கல்.**

வினா எண் 6856—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் (ஊராட்சிகளுக்கு) ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வீதம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதிநிலைமையைப் பொறுத்துத் தொலைக் காட்சிப் பெட்டிகள் அளிக்கப்படும்.



60—

**கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கல்.**

வினா எண். 6993—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கொள்ளுக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

61—

**செகன் காட்டிற்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப்பெட்டி வழங்கல்.**

வினா எண் 7084—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செகன் காட்டிற்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டி வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லல.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் .

62—

ஒலி ராமன் காட்டிற்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டி வழங்குதல்.

வினா எண் 7198—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒலிராமன் காட்டில் தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருவாய்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி,





விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள் . தனியாக இக்குடியிருப்பிற்கு 1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

63—

ஈச்சன் விடுதிக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7314—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஈச்சன் விடுதி மேற்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த் கேதக்கத் தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஈச்சன்விடுதி மேற்கில் 1991–92 ஏ. ஆர் பி. மூலம் 60,000 லிட்டர் கொள்ளவுள்ள மின் விசைத் திட்டம் நடப்பில் உள்ளது.

64—

ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தைச் சீரமைக்கக் குழு அமைத்தல்.

வினா எண். 7420—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் நிர்வாகத்தைச் சீரமைக்க குழு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் நிர்வாகத்தைச் சீரமைக்க குழு அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

65—

பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியமைத்தல்.

வினா எண் 7434—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியமைக்க வேண்டுமென அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டது ?

(ஆ) அவற்றில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கடந்த 3 ஆண்டுகளில் கீழ்வரும் பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியமைக்க கருத்துரு பெறப்பட்டது.—

| வரிசை எண். | பேரூராட்சியின் பெயர். | | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1 | வீரப்பன் சத்திரம் | .. | பெரியார். |
| 2 | [illegible]பாளையம் | .. | பெரியார். |
| 3 | திருக்கோவிலூர் | .. | தென்னாற்காடு. |
| | பரங்கிப்பேட்டை | .. | டி |
| 5 | குறிஞ்சிப்பாடி | .. | டி |



| | | | |
|---|---|---|---|
| 6 | கள்ளக்குறிச்சி | ... | தென்னாற்கரடு |
| 7 | சின்னாளம்பட்டி | ... | திண்டுக்கல்-அண்ணா |
| 8 | நத்தம் | .. | டி |
| 9 | கூடலூர் | ... | மதுரை. |
| 10 | அவனியாபுரம் | ... | டி |
| 11 | திருப்பரங்குன்றம் | .. | டி |
| 12 | உசிலம்பட்டி | .. | டி |
| 13 | இனாம்கரூர் | ... | திருச்சிராப்பள்ளி. |
| 14 | குளித்தலை | ... | |
| 15 | கூத்தநல்லூர் | ... | நாகப்பட்டினம்-காயிதே மில்லத். |
| 16 | திருத்துறைப்பூண்டி | ... | டி |
| 17 | ஓசூர் | ... | தருமபுரி. |
| 18 | அதிராமபட்டிணம் | .. | தஞ்சாவூர். |
| 19 | திருச்செந்தூர் | .. | சிதம்பரனார். |
| 20 | காயல்பட்டிணம் | .. | டி |
| 21 | வந்தவாசி | ... | திருவண்ணாமலை-சம்புவராயர். |
| 22 | போரூர் | .. | டி |
| 23 | பேரணாம்பட்டு | ... | வடாற்காடு-அம்பேத்கார் |
| 24 | விக்ரமசிங்கபுரம் | .. | திருநெல்வேலி-கட்டபொம்மன். |
| 25 | அம்பாசமுத்திரம் | .. | டி |
| 26 | பம்மல் | .. | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் |
| 27 | திருத்தணி (பஞ்சாயத்து நகரியம்.) | .. | டி |
| 28 | திருக்கழுக்குன்றம் | ... | டி |
| 29 | இளையான்குடி | ... | பசும்பொன் முத்துராமலிங்கம். |
| 30 | கீழக்கரை | ... | இராமநாதபுரம். |
| 31 | பள்ளிப்பாளையம் | ... | சேலம் |

(ஆ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தேர்வுநிலை பேரூராட்சி 15–1–1992 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சி, மூன்றாம் நிலை நகராட்சியாக 1–4–1992 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 29 பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியமைப்பது குறித்தும் அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

[1993 பிப்ரவரி 10

66—

வீரமுடையாநத்தத்தில் வானொலி மன்றக் கட்டிடம் அமைத்தல்.

வினா எண் 7631—செல்வி கோ மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியம் வீரமுடையாநத்தத்தில் வானொலி மன்றக் கட்டிடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?
(ஆ) ஆம் எனில், எப்போழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:
(அ) ஆம்.
(ஆ) 1992-93-ம் ஆண்டில்.

67—

பெரிய நற்குணத்தையும் சின்ன நற்குணத்தையும் இணைக்கும் இணைப்புச் சாலை அமைத்தல்.

வினா எண் 7684—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரிய நற்குணத்தையும் சின்னநற்குணத்தையும் இணைக்கும் இணைப்புச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரிய நற்குணத்தையும் சின்ன நற்குணத்தையும் இணைக்க வேண்டுமானால் தனியார் பட்டா நிலங்களைக்கையகப்படுத்தி சாலை அமைக்க வேண்டியுள்ளது. இதில் விவசாய நிலம், கிருத்துவ வழிபாட்டுத் தலம் மற்றும் கல்லறை உள்ளதால் நிலம் கையகபடுத்த இயலாது. எனவே இணைப்புச் சாலை அமைக்க இல்லாது



1993 பிப்ரவரி 10]

68—

சிதம்பரநாதன்பேட்டை கிராமத்திற்கு கான்சாகிப் வாய்க்கால் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 7785—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சியில் சிதம்பரநாதன்பேட்டை கிராமத்திற்கு கான்சாகிப் வாய்க்கால் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் குமாரமங்கலம் ஊராட்சியில் சிதம்பரநாதன்பேட்டை கிராமத்திற்கு கான்சாகிப் வாய்க்கால் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

69—

ஆத்தூர் ஒன்றியத்தில் மீதமுள்ள ஊராட்சிகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கல்.

வினா எண் 7906—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள 22 ஊராட்சிகளில் இரண்டு ஊராட்சிக்கு மட்டும்தான் இதுவரை வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 20 ஊராட்சிகளுக்கும் விரைவில் வானொலிப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தேவையான வானொலிப் பெட்டிகளை, அவற்றின் நிதியிலிருந்தே ஊராட்சிகள் வாங்கிக் கொள்ளலாம். எஞ்சியுள்ள 20 ஊராட்சிகளுக்கு, தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வானொலிப் பெட்டிகள் வழங்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

70—

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கல்.

வினா எண் 9456—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளுக்கு இதுவரை தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படாததால் உடனடியாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டுகளில் 4 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

வரும் ஆண்டுகளில் நிதி ஒதுக்கத்திற்கேற்பத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்கப்படும்.



71—

திருத்தங்கல் பேரூராட்சி துப்புரவுத் தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

வினா எண் 9854—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருத்தங்கல் பேரூராட்சியில் துப்புரவுத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

72—

மதுரையிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை பரமக்குடி நகருக்கு மாற்றுதல்.

வினா எண் 1661—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரையில் இருப்பதை பரமக்குடி நகருக்கு மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

73—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு புதியதாக கண்காணிப்புக் குழு நியமனம்.

வினா எண் 3339—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் எல்லாக் கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் விழிப்புணர்ச்சிக் குழு, கண்காணிப்புக்குழு, நீக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை நீக்கி புதியதாக கண்காணிப் புக்குழு எப்பொழுது நியமனம் செய்யப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட் டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் புதிய தாக நியாயவிலைக் கடைகளுக்கான விழிப்புப் பணிக் குழு 30—10—1991 அன்றும், வட்ட அளவிலான விழிப்புப் பணிக்குழு 1—11—1991 அன்றும், மாவட்ட அளவிலான விழிப்புப் பணிக்குழு 11—11—1991 அன்றும் நியமித்து நியமன ஆணை அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு விட்டது.

34—

சாலைக்கரை கிராமத்திற்கு தனி கிராம அங்காடி அமைக்கும் திட்டம்.

வினா எண் 4246—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிமடம் தொகுதியில் உள்ள சாலைக்கரை கிராமத் திற்கு தனி கிராம அங்காடி அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா—



விடை—

மாண்புமிகு திரு.ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதியில் உள்ள சாலைக்கரை கிராமத் தில் 120 குடும்ப அட்டைகளே உள்ளன. இவை திருக்களப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பெரிய கிருஷ்ணாபுரம் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட் டுள்ளன. இந்த நியாய விலைக் கடையிலும் மொத்தம் 662 குடும்ப அட்டைகளே இணைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணா புரம் நியாயவிலைக் கடைக்கும், சாலைக்கரை கிராமத்திற்கும், உள்ள தூரம் 1 கி.மீ. மேலும் போதுமான சாலை வசதி உள்ளது. எனவே, சாலைக்கரையில் தனியே அங்காடி துவக்க வாய்ப் பில்லை.

75—

மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசு பெறுகின்ற அரிசி.

வினா எண் 4455 —திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசு பெறுகின்ற அரிசி மானிய விலையில் பெறப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் மூலம் பெறுகின்ற அரிசிக்கும் அதற்கும் உள்ள விலை வித்தியாசம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சாதாரண ரகத்திற்கான அரிசியின் கொள்முதலில் மத்திய அரசின் விலைக்கு, மாநில அரசின் கொள்முதல் விலைக் கும் அதிகபட்சமாக ரூ. 59.20-ம், சன்ன ரகத்திற்கு ரூ. 65.20ம் மிகச் சன்ன ரகத்திற்கு ரூ. 67.30ம் ஆகின்றது. மத்திய அரசின் கொள்முதல் விலையையே தமிழ்நாடு அரசும் கடைப்பிடித்தா லும், மாநிலத்தில் ஏகபோக கொள்முதல் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்

தொகையாக ரூ. 35-ம் கூடுதலாக கொடுக்கப்படுவதால் தமிழ் நாடு பொது விநியோக அரிசிக் கொள்முதல் விலை கூடுதலாகின்றது.

76—

காசம்பட்டியில் தனி நியாயவிலைக் கடை துவங்குதல்.

வினா எண் 4586—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், காசம்பட்டியில் மக்கள் ரேஷன் பொருட்களை வாங்க 6 கிலோமீட்டர் தொலைவு செல்லும் நிலையிலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) காசம்பட்டியிலேயே தனி ரேஷன் கடை ஒன்று துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காசம்பட்டி கிராமத்திலுள்ள குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள வத்திப்பட்டியில் இயங்கி வரும் ரெட்டியப்பட்டி நியாயவிலை அங்காடியில் 1,200 அட்டைகளுக்குக் குறைவாக உள்ளதாலும், காசம்பட்டியிலிருந்து நியாய விலை அங்காடி 3 கிலோ மீட்டர் சுற்றளவிலேயே இருப்பதாலும் பகுதிநேர அங்காடி திறக்க நேர்ந்தால், அங்காடியை நடத்திவரும் அங்கவாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு நஷ்டம் அதிகரிக்கும் என்பதாலும், காசம்பட்டி கிராமத்தில் தனியாக ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க வாய்ப்பு இல்லை.

77—

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும் குடும்ப அட்டை மூலம் அரிசி வழங்கும் முறை.

வினா எண் 6265—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அட்டை வைத்துள்ள எல்லோருக்கும் அரிசி வழங்கும் தற்போதைய முறையை மாற்றி குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே அரிசி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமலுக்கு வரும்?



விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

78—

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் தட்டச்சர்களுக்கு உதவியாளர் பதவி உயர்வு வழங்கல்.

வினா எண் 7466—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்தவாறு தற்போது தட்டச்சர் பதவியில் 6 ஆண்டு பணி முடித்தோருக்கு உதவியாளர் பதவி உயர்வு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணி விதியில் தட்டச்சர் பதவியில் 6 ஆண்டு பணி முடித்தோருக்கு உதவியாளர் பதவி வழங்கப்படுகிறது. உதவியாளர் பதவி உயர்வுக்கு பணி மூப்புப்படியும் அனைத்து தகுதிகளையும் உடைய இளநிலை உதவியாளருக்கும் தட்டச்சருக்கும் 4 : 1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

[1993 பிப்ரவரி 10

79—

## கூட்டுறவு தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்

வினா எண் 7763—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைந்துள்ளன ?

(ஆ) மேலும் எங்கெங்கு புதிதாக துவங்க அரசு உத் தேசித்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத் துறை அமைச்சர் :

(அ) கூட்டுறவு தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் ஏதும் இதுவரை அமைக்கப்படவில்லை.

(ஆ) 31—1—1992 தேதியிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசாணை (பல்வகை) எண் 49-ல் ''தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி கூட்டுறவுச் சங்கம்'' ஒன்றை அமைக்கவும், மேற்படி சங்கத்தின் மூலம் தர்மபுரி மாவட்டம் ''பர்கூர்'' என்னுமிடத்திலும், தஞ் சாவூர் மாவட்டம் ''பட்டுக்கோட்டை'' என்னுமிடத்திலும் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி நடத்தவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்படி அரசாணைப்படி, ''தொழிற் நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட்டுறவு சங்கம்'' சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 4—2—1992 அன்று பதிவு செய்யப்பட்டு 12—2—1992 முதல் செயல்படத் துவங்கி உள்ளது. மேற்படி கூட்டுறவுச் சங்கம், பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் தொழில் பயிற்சி நிலையங்களை நடப்பு ஆண்டிலேயே தொடங்கு வதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.



1993 பிப்ரவரி 10]

80 —

## இரண்டாயிரம் மக்கள் வசிக்கும் பகுதிக்குக் ஒரு நியாயவிலை கடை நிறுவுதல்.

வினா எண் 8474—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 2,000 மக்கள் வசிக்கும் பகுதிக்கு ஒரு நியாயவிலைக் கடை என நிறுவ வேண்டும் என்று மாநில அரசுக்கு மத்திய அரசு யோசனை ஏதும் கூறியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 2,000 மக்கள் வசிக்கும் பகுதிக்கு ஒரு நியாய விலைக்கடை நிறுவ வேண்டுமென மாநில அரசுக்கு மைய அரசிடமிருந்து யோசனை ஏதும் வரவில்லை.

81—

## தமிழ்நாட்டில் எல்லைக்கு அருகிலுள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்.

வினா எண் 9471—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம் ஏற்றுக்கொண்டால் பெருமளவில் அரிசி கடத்தல் குறையும் என்பதால் அந் நியாய விலை கடைகளை அக்கழகம் ஏற்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை— [1993 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்
டுறவுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பொது விநியோக நியாயவிலை அங்
காடிகளைக் கூட்டுறவுத் துறையோ தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகமோ நடத்துவதற்கும், அரிசி கடத்தப்படுவதற்
கும் தொடர்பு இல்லை. அரிசி கடத்தல் சம்பந்தமாக மாவட்ட
பறக்கும் படைக் குழுவினர் மற்றும் குடிமைப் பொருள் குற்றப்
புலனாய்வு காவல்துறை அடிக்கடி தணிக்கை செய்து, குற்றங்
கள் நடைபெறா வண்ணம் கண்காணித்து வருகின்றனர். எனவே
தமிழ்நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக்
கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு
மாற்றும் திட்டக் குறிப்பு அரசிடம் இல்லை.

82—

## குழந்தைத் தொழிலாளர் வேலைக்கமர்த்தல் தடுப்பு, ஒழுங்கு முறைச் சட்டம்.

வினா எண் 6243— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு
மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குழந்தைத் தொழிலாளர் வேலைக்கமர்த்தல் தடுப்பு,
ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி கடந்த 3 ஆண்டுகளில் எந்தெந்தத்
தொழிற்சாலைகளில் 4 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்கள்
வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது ?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(இ) குடும்ப வறுமை சூழ்நிலை காரணமாகத்தான் அத்
தகு சிறுவர், சிறுமியர் வேலைக்கு செல்லும் நிலையிருப்பதால்
அவர்களின் மறுவாழ்வுக்காக அரசு ஏதேனும் திட்டம் செயல்
படுத்த உத்தேசித்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் :

(அ) எந்த தொழிற்சாலையிலும் குழந்தை தொழிலாளர்
கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.



1993 பிப்ரவரி 10]

## அரசுத் துறைகள் மற்றும் அரசு பொது நிறுவனங்களிலுள்ள பணியிடங்களில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்குப் பணிவாய்ப்பு.

வினா எண் 9404— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா :—

(அ) அரசுத் துறைகளிலும், அரசு பொது நிறுவனங்களி
லும் காலியாக உள்ள பணியிடங்களில் வேலையில்லாப் பட்டதாரி
களுக்குப் பணி வாய்ப்பு அளிக்கின்ற வகையில் அரசு உடனடி
நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசுத் துறைகளில் எழுத்தர், தட்
டச்சர் மற்றும் சுருக்கெழுத்தர் போன்ற பணியிடங்கள் தேர்
வாணையத்தின் மூலமாக நிரப்பப்பட வேண்டும் என்ற ஆணை
தற்போது செயல் முறையில் இருந்து வருகிறது. பொதுவாக,
வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்பவர்களில் மிக
அதிக எண்ணிக்கை உள்ள மனுதாரர்கள் பொதுக் கல்வித்
தகுதியுடன் (எஸ்.எஸ்.எல்.சி.) எழுத்தர் பதவிக்குப் பதிவு செய்
கிறார்கள். எழுத்தர் பணிகளுக்கு தற்காலிக நியமனம் கூட
தற்போது தேர்வாணையத்தின் மூலமாகவே நியமனம் செய்யப்
படவேண்டும் என்ற விதி முறை நடைமுறையில் உள்ளது.
அரசுப் பொது நிறுவனங்களில் உள்ள காலியிடங்கள் (Public
sector undertaking) தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்கள்
மூலமாக நிரப்பப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு குறிப்பாக
விதி முறைப்படி பட்டதாரிகள் மட்டுமே நியமனம் செய்ய
லாம் என்ற பணியிடங்களுக்கு வேலையளிப் போர் தெரிவிக்கும்
கல்வித் தகுதியின் அடிப்படையில் பட்டதாரிகள் மட்டுமே பரிந்
துரை செய்யப்படுகிறார்கள். இதர வேலைகளுக்கு, அந்
நிறுவனங்கள் தெரிவிக்கும் அடிப்படைக் கல்வித் தகுதியின் அடிப்
படையில் மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.
பொதுவாகப் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும்
கேட்கப்படும் போது பட்டப் படிப்பு படித்தவர்களும் பதிவு மூது
நிலை (S niority registration) அடிப்படையில், அத்தகைய
வேலைகளுக்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை
செய்யப்படுகிறார்கள்.

84—

விவசாயப்பள்ளியில் பயிற்சி முடித்துத் தேர்வு எழுதுவோர்க்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்.

வினா எண் 8950— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்ட அளவில் வேளாண்மைத் துறை உழவர் பயிற்சி நிறுவனத்தின் மேற்பார்வையில் நடைபெறும் விவசாயப் பள்ளிகளில் 10 மாதங்கள் பயிற்சி முடித்து தேர்வு எழுதுவோருக்கு எந்த வகையான சான்றிதழ் அரசு வழங்குகிறது ?

(ஆ) இந்தச் சான்றிதழ் டிப்ளமோ பயிற்சி சான்றிதழாக வழங்க வேண்டுமென அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசின் முடிவென்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) விஞ்ஞான வேளாண்மைப் பயிற்சியை குறிப்பிட்ட காலத்தில் அதாவது ஒரு வருடத்தில் வெற்றிகரமாகக் குறிப்பிட்ட மாணவர் முடித்து விட்டார் எனச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சட்டசபையில் ஓராண்டு பயிற்சியினை, ஈராண்டு வேளாண் சான்றிதழ் பயிற்சியாக மாற்றப்படும் என அறிவித்துள்ளதையொட்டி அரசு ஈராண்டு வேளாண்மைப் பட்டயப் படிப்பு 1992-93 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட வேளாண்மை பள்ளிகளில் நடைபெற ஆணையிடப்பட்டுள்ளன

1. குடுமியான்மலை (புதுக்கோட்டை மாவட்டம்.)

2. நவ்லாக் (வட ஆற்காடு மாவட்டம்).

மேலும், ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப்படிப்பு சென்னையிலுள்ள தரமணியில் மட்டும் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.



164982

85—

வீட்டுவசதி வாரியத்தின் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்குதல்.

வினா எண் 6060—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டி ஒதுக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படுமா ?

(ஆ) ஆமெனில் எப்போது ?

(இ) கடன் தொகையை வசூலிக்காமல் சம்பளத் தொகையில் வசூலித்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகளைப் பெற, வாரியத்திற்கு உரிய படிவத்தில் விண்ணப்பித்து குலுக்கலில் தேர்வு செய்யப்பட்டால் வீடு ஒதுக்கீடு செய்யப்படும். மற்ற ஒதுக்கீட்டாளரிடமிருந்து எம்முறையில் வீட்டின் விலை வசூலிக்கப்படுமோ அம்முறையிலேயே சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும்.

86—

குடிசைவாழ் மக்கள் நிலையை மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்கள்.

வினா எண் 77[illegible]9— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குடிசைவாழ் மக்கள் நிலையை மேம்படுத்த அரசால் சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

(இ) அவற்றினால் பயன்பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) குடிசைப் பகுதிகளில் சமூகப் பொருளாதாரக் கார
ணங்களால் கல்வி வசதி பெற முடியாமல் உள்ள இளைஞர்
களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய துறை
களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. புகையாத அடுப்புகளின் மூலம்
ஏற்படும் எரிபொருள் சிக்கனம் குடிசைவாழ் மக்களுக்கு விவர
மாக அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வப்போது சமுதாயக் கூட்
டங்கள் நடத்தித் திட்டங்களின் பயன் பற்றியும் வாரியத்தால்
அமைக்கப்பட்ட வசதிகளை பாதுகாத்தல் போன்றவைகளைப்
பற்றியும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. சமுதாயத்
தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு குடிசைப் பகுதி
களில் சுகாதார நல முகாம்கள் நடத்தப்படுகின்றன.

(இ) கடந்த 31—3—1992 வரை 7,257 நபர்களுக்கு ரூ. 99.75 இலட்சங்கள் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

87—

## Increase of slums in Madras city

Question No. 8135—Thirumathi V.G. Manimegalai: Will the Hon. the Minister for Housing and Urban Development to pleased to state :

(a) Whether the slums in the Madras city is on the increase now ?

(b) The steps taken to check this trend ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) குடிசைமாற்று வாரியத் திட்டப்பகுதிகளிலும்,
சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்ட பகுதிகளிலும் புதிதாகப்
போடப்படும் குடிசைகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வரு
கின்றன. அரசு ஆணை எண் 1488, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித்துறை, நாள் 3—11—1988இல் அரசு நிலங்களில்
ஆக்ரமணம் ஏற்படாவண்ணம் தடுக்க சம்பந்தப்பட்ட அரசு
துறைகள் நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.



88—

## ஆலங்குளம் தொகுதி பள்ளிகளில் மாணவர்களுக்கு வாங்கப்படும் சீருடைகள் மற்றும் காலணிகள்.

வினா எண் 8787— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆலங்குளம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கும் சீருடைகள், காலணிகள் போதுமான எண்ணிக்கைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஆலங்குளம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கும் சீருடைகள் மற்றும் காலணிகள் தேவையான எண்ணிக்கையில் வாங்கப்பட்டு வருகிறது.

89—

## ஆதிதிராவிடர் நலத்துறையில் வழங்கப்படும் தையல் இயந்திரங்கள்.

வினா எண் 5353 – திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் பெண்களுக்கு ஆதி திராவிடர் நலத்
துறையால் வழங்கப்படும் இலவச தையல் இயந்திரம் ஒவ்வொரு
மாவட்டத்திற்கும் எத்தனை இயந்திரம் ஒதுக்கப்படுகின்றன ?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) 1990-91 ஆம் ஆண்டிற்கான தொழிற் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர்களுக்கு தொழிற் கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் பெண்களுக்கு மாவட்ட வாரியான தையல் இயந்திரங்கள் வழங்கிய விவரம் :—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | ஆதிதிராவிடர் பெண்களுக்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 சென்னை | 12 |
| 2 செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். | 5 |
| 3 வடஆற்காடு—அம்பேத்கார் | 50 |
| 4 தென்னாற்காடு | 25 |
| 5 தஞ்சாவூர் | 28 |
| 6 திருச்சிராப்பள்ளி | 26 |
| 7 மதுரை | 9 |
| 8 இராமநாதபுரம் | 11 |
| 9 கன்னியாகுமரி | 18 |
| 10 திருநெல்வேலி | 15 |
| 11 சேலம் | 53 |
| 12 தர்மபுரி | 5 |
| 13 கோயம்புத்தூர் | 17 |
| 14 நீலகிரி | 27 |
| 15 புதுக்கோட்டை | 18 |
| 16 பெரியார் | .. |
| 17 பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | .. |
| 18 காமராசர் | 10 |
| 19 சிதம்பரனார் | 33 |
| 20 திருவண்ணாமலை-சம்புவராயர் | 5 |
| 21 திண்டுக்கல்—அண்ணா | .. |
| மொத்தம் | 367 |





(ஆ) நிதி நிலைமைக்கேற்ப தையல் இயந்திரங்கள் மாவட்டங்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

90—

## சத்தியமங்கலம் தொகுதியிலுள்ள ஆதிவாசிகள் சொசைட்டியில் பணிபுரியும் பழங்குடியினர் எண்ணிக்கை.

வினா எண் 6934—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் உள்ள ஆதிவாசிகள் சொசைட்டியில் பணிபுரியும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர் எத்தனை பேர் ?

(ஆ) என்ன என்ன பொறுப்புகளுக்கு அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள் ?

(இ) எந்த ஆண்டு முதல் இந்த மலைவாழ் மக்கள் கூட்டுறவு சொசைட்டியின் மூலம் இலாபத் தொகையினை உறுப்பினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படாமல் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் உள்ள பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

(ஆ) அவர், சத்தியமங்கலம் வனச் சரகத்தில் வனப் பொருள் சேகரப் பணியில் மேலாள் ஆக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

(இ) 1988–89, 1989–90 ஆகிய இரு ஆண்டுகளுக்கு தணிக்கை நடைபெற்றுக்கொண்டுள்ளது. தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றதும் இலாபம் இருப்பின் அது சட்ட விதிகளின் படி சங்க உறுப்பினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

91—

**பேர்ணாம்பட்டு ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.**

வினா எண் 8269— டாக்டர் ஜெ. பரந்தாமன: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பேர்ணாம்பட்டு ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பேர்ணாம்பட்டு ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளியை தற்போது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

92—

**ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக பேர்ணாம்பட்டில் காலணி தொழிற்சாலை துவங்குதல்.**

வினா எண் 8270— டாக்டர் ஜெ. பரந்தாமன: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாக பேர்ணாம்பட்டில் காலணி தொழிற்சாலை துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலமாக பேர்ணாம்பட்டில் காலணி தொழிற்சாலை துவங்குவதற்கேதுவான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

(ஆ) இது தொடர்பான முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



93—

**குரும்பர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.**

வினா எண் 10367—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள குரும்பர் சமூகத்தை ஷெட்யூல்டு ட்ரைப்ஸ் (எஸ்.டி.) பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

குரும்பர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு, கடிதம் (நிலை) எண் 1406 சமூக நலம், நாள்: 29—12—1978-ல் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

94—

**தீண்டாமை குற்றத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள்.**

வினா எண் 10524—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குடி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் கீழ் தீண்டாமைக் குற்றத்திற்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டுகளில் வழக்குகள் ஏதேனும் தொடரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வழக்குகளின் விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| 1990 .. .. .. .. | 787 |
| 1991 .. .. .. .. | 861 |
| 1992 .. — — — | 628 |

(30—6—1992 முடிய).

95—

அக்கனேஷ்புரம் கிராமத்திற்கு சமூகநலக்கூடம் கட்டும் பணி.

வினா எண். 11202—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிமடம் தொகுதியில் அக்கனேஷ்புரம் கிராமத்திற்கு சமூகநலக்கூடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



96—

பரமக்குடி நகரில் சலவைத்துறைகள் கட்டுதல்.

வினா எண் 11367—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகரில் சலவைத் துறைகள் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரில் சலவைத் துறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

பழனி வட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான விடுதிகள் எண்ணிக்கை.

வினா எண் 11711—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தில் பிற்பட்ட மாணவ மாணவியருக்கான விடுதிகள் எத்தனை உள்ளன ?

(ஆ) எங்கெங்கு உள்ளன ?

(இ) எவ்வளவு பேர்களுக்கு தங்கும் வசதி செய்து தரப் பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) பழனி வட்டத்தில் மூன்று பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் உள்ளன. மாணவியர் விடுதி இல்லை.

(ஆ) 1. திருநகர், பழனி (பள்ளி)

2. நெய்காரப்பட்டி.

3. வேம்பார்பட்டி.

(இ) ஒவ்வொரு விடுதியின் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 50 ஆகும்.

98—

பெருங்களூரில் புதிய பிற்பட்டோர் நல விடுதி அமைக்கும் திட்டம்.

வினா எண் 11837—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள பெருங்களூரின் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் இல்லை.

99—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இயங்கும் கதர் உற்பத்தி மற்றும் கிராம கைத்தொழில்கள்.

வினா எண் 5540—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு மிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில கதர் வாரியத்தின்கீழ் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இயங்கும் கதர் உற்பத்தி மற்றும் கிராம கைத் தொழில்கள் விவரம் என்ன ?



(ஆ) தாலுகாதோறும் கதர் வாரியத்தின் கீழ் அந்தந்த தாலுகாவில் கிராமத் தொழில்களை ஊக்குவிக்க கைவினைத் தொழில் நிலையம் துவக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) கதர் கிராமத் தொழில் வாரியம் பின்வரும் அமைப்பு களின் மூலம் தனது திட்டங்களை மாவட்டந்தோறும் செயல் படுத்தி வருகிறது.

1. வாரிய அலகுகள்.

2. தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

3. தனி நபர்க்கு நிதி உதவி அளித்தல்.

அதன் அடிப்படையில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத் தில் கீழ்க்கண்டவாறு கதர் மற்றும் கிராமத் தொழில் அமைப் பின் கீழ் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(அ)

| | | |
|---|---|---|
| 1. கதர் கிராமிய நூற்பு நிலையம் | .. | 32 |
| 2. கதர் உபகிளை | .. .. | 6 |
| 3. கதர் விற்பனை நிலையம். | .. | 9 |

(ஆ) தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான தாலுக் காக்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் அதைச் சார்ந்த கிராமங்களிலும் கதர் கிராமத் தொழில் மேம்பாட்டிற்காக எங்கெங்கு வாய்ப்புகள் உள்ளனவோ அங்கங்கு வாரிய அலகு கள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டும் தனி நபர் களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டும் கிராம கைத்தொழில்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஆண்டுதோறும் தீபாவளி மற்றும் பண்டிகை கால சிறப்பு தள்ளுபடி விற்பனையின் போது கதர் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் மாவட்டந்தோறும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மருத்துவ நிலையங் களிலும் துவக்கப்பட்டு, தீவிர கதர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

[1993 பிப்ரவரி 10

கைவினைத் தொழில்கள், நிலையங்களை தனியாக துவக்கினால் அவற்றை இலாபகரமாக இயக்க வாய்ப்பில்லை என்ற காரணத்தினால் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு கதர் கிராமத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர் களுக்கு அவர்கள் நேரிடையாக ஈடுபடுகிற தொழிலுக்கு நிதி உதவி அளித்து ஊக்குவித்து வருகிறது.

எனவே தாலுக்காதோறும் கிராமத் தொழில்களை ஊக்கு விக்க கைவினைத் தொழில் நுட்ப நிலையம் துவக்கிட வாய்ப்புகள் இல்லை.

100—

திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் நடைபெற்ற படித்த வேலையில்லா தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி முகாம்கள்.

வினா எண் 5708—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில், படித்த வேலையில்லா தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி முகாம் கள் 1988–89, 1989–90, 1990–91 ஆகிய ஆண்டுகளில் எத் தனை நடைபெற்றன ?

(ஆ) இந்தப் பயிற்சி முகாம்களினால் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆண்டுவாரியாக எவ்வளவு ?

(இ) இந்தப் பயிற்சி முகாம்கள் சிறப்புத்தன்மைகள் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ)

| ஆண்டு. | முகாம்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| 1988–89 .. .. ... — | 1 |
| 1989–90 ... .. — .. | 2 |
| 1990-91 — ... — | 2 |



1993 பிப்ரவரி 10]

(ஆ) :

| ஆண்டு. | பயனடைந் தோர் எண்ணிக்கை. |
| --- | --- |
| 1988-89 | 28 |
| 1989-90 | 70 |
| 1990-91 | 46 |

(இ) : தொழில் முனைவோர் அபிவிருத்தித் திட்டம் என்பது ஊக்கமான திறமையான தொழில் முனைவோர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு வியாபார நிர்வாகம், உற்பத்தி நிர்வாகம், நிதி மற்றும் ஆட்கள் நிர்வாகம் முதலியவை களுக்கு பயிற்சி அளித்து அவர்களை தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியில் இயங்கக்கூடிய தொழிலாக ஏற்படுத்தச் செய்கிறது. இந்தத் திட்டம் விழிப்புணர்ச்சி, செயல்திறன் ஊக்கம் ஆகியவைகள் ஏற்படுத்திடவும், தொழிலை திறம்பட நிறைவேற்றவும் ஏதுவாகிறது. இந்தத் தொழில் முனைவோர் திட்டம் உபயோகமுள்ள நல்ல திட்டம் மற்றும் தொழில் முனைவோர்களை உடனடியாக தொழில் துவக்கவும் முக்கிய மாக இது தொழில் முனைவோரின் முதல் சந்ததி என சொல் வதுடன் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கும் இது உகந்ததாக இருக்கிறது.

பட்டியல்—14

1—

தமிழகத்தில் வெளி மாநிலங்களின் பரிசுச் சீட்டு விற்பனை.

வினா எண் 11731—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வெளி மாநிலங்கள் பரிசுச் சீட்டுகளை விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:

மாநில அரசுகளால் நேரடியாக நடத்தப்படும் பரிசுச் சீட்டுகளை மட்டும் தமிழகத்தில் விற்கலாம். அரசாங்கத்தின் பெயரில் தனியார் நடத்தும் பரிசுச் சீட்டுகள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இத்தடை உத்தரவை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்குகளில் இடைக்கால தடை உத்தரவு பெற்று அத்தகைய பரிசுச் சீட்டுகள் தற்சமயம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2—

நீதிமன்ற கட்டணத்தாள்கள் கிடைக்காதபோது நீதிமன்றத்தில் கட்டணத்தைச் செலுத்துதல்.

வினா எண் 7423—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோர்ட்பீஸ் ஸ்டாம்புகள் சரியாக உரிய நேரத்தில் கிடைக்காதபோது அதற்கான கட்டணத்தை நீதிமன்ற அலுவலகங்களில் ரொக்கமாகச் செலுத்தி சலான்களைப் பெற்று மனுக்களுடன் இணைத்திட அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

நீதிமன்றக் கட்டணத்தாள் சரியாக உரிய நேரத்தில் கிடைக்காதபோது அதற்கான கட்டணத்தை நீதிமன்ற அலுவலகங்களில் ரொக்கமாகச் செலுத்தி உரிய சலான்களுடன் மனுக்களை இணைத்திடும் கருத்துருவை சில நடைமுறை இடர்பாடுகளை முன்னிட்டு உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை.

3—

பஞ்சம்பாளையம் ஊராட்சியில் நில ஆக்கிரமிப்பு.

வினா எண் 5081—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அண்ணாமடுவு என்ற பச்சாம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட



1993 பிப்ரவரி 10]

இடத்தில் 3 ஏக்கர் காலி நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆக்கிரமிப்பை நீக்கி, வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு வீடு கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) 1.06.0 ஹெக்டேர் பரப்பில் 7 தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

(ஆ) ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணையாகக் கருதப்பட்டு, 24-1-1992 அன்று அகற்றப்பட்டன. வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(இ) மேற்சொன்ன 1.06.0 ஹெக்டேர் நிலத்தில் (2.62 ஏக்கர்) தலா 2 சென்ட் வீதம் சுமார் 100 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கவும், எஞ்சியுள்ள 62 சென்ட் நிலம் நடை பாதை போன்ற பொது உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4—

வேதாரண்யம் பகுதியில் கால்நடைப்பட்டி.

வினா எண். 5350—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யம் பகுதிகளிலுள்ள விளை நிலங்களை அழித்து வரும் கால்நடைகளை அடைக்க கால்நடைப்பட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

புதிதாக கால்நடைப்பட்டி அமைக்கும் உத்தேசம் இல்லை. வேதாரண்யம் பகுதியில் ஏற்கனவே பழுந்தடைந்த நிலையில் உள்ளது. இந்த கால்நடைப்பட்டி உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டு மொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து இந்த கால் நடைப்பட்டி உள்ளிட்ட கால்நடைப்பட்டிகளை பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கட்டிடப்பணி.

வினா எண் 5365—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் அரசு திட்டமிட்டபடி கட்டிடப் பணிகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) இவ்வலுவலக வளாகம் கட்ட முதலில் மதிப்பீடு செய்யப்பட்ட உத்தேச தொகை எவ்வளவு?

(இ) இறுதியாக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஈ) மதிப்பீட்டைவிட இறுதிச் செலவு அபரிமிதமாக உயர்ந்ததன் காரணம் என்ன?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 368.50 இலட்சம்.

(இ) 320.00 இலட்சம்.

(ஈ) வினாவுக்கு இடமில்லை.

6—

கிராம நிருவாக அதிகாரிகள் புறம்போக்கு நிலங்கள் குறித்த விவர அறிக்கைகளை பதிவு செய்தல்.

வினா எண் 9634—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம நிர்வாக அதிகாரிகள் தங்கள் அதிகார வரம்பில் உள்ள புறம்போக்கு நிலங்கள் குறித்த விவர அறிக்கைகளை அலுவலகத்தில் வைத்திருக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

கிராம நிர்வாக அதிகாரிகள் தங்கள் அதிகார வரம்பிலுள்ள புறம்போக்கு நிலங்கள் குறித்த விவர அறிக்கைகளை பதிவு செய்து பராமரித்து அலுவலகத்தில் வைத்திருத்தல் தொடர்பாக அரசு கடிதம் (நிலை) எண் 353, வருவாய்த்துறை, நாள் 18-3-1992-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்பேரில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

7—

இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல்.

வினா எண் 10740—திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) இருப்பிடச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் வட்டாட்சியர் வழங்குவது குறித்து அரசாணை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 19–6–1984 ஆம் நாளும் வருவாய் (நிலை) 1004 ஆம் எண்ணும் கொண்ட அரசாணையின்படி இருப்பிடச் சான்றிதழ்களும், 10–11–1983 ஆம் நாளும் வருவாய் (நிலை) 1888ஆம் எண்ணும் கொண்ட அரசாணையின்படி தாழ்த்தப்பட்டவர்கள் சாதிச் சான்றிதழ்களும் வட்டாட்சியரால் வழங்கப்படுகின்றன.

தேசிய மாணவர் படையில் மாணவர்கள் சேர்வதை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம்.

வினா எண் 3423—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ மாணவியர் அதிகமான எண்ணிக்கையில் தேசிய மாணவர் படையில் சேர்வதை ஊக்கப்படுத்த ''சிறப்புத் திட்டங்கள்'' ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

9—

மாவட்ட வாரியாக அறிவொளி இயக்க மையங்கள் :

வினா எண் 6270—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் அறிவொளி இயக்க மையங்கள் மாவட்ட வாரியாக எத்தனை நிறுவப்பட்டுள்ளன ?



(ஆ) அறிவொளி இயக்கப் பணியில் எத்தனை பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் ?

(இ) 1990-91 ஆம் ஆண்டு அத்திட்டங்களின் கீழ் கல்வி அறிவு பெறப்பட்டவர்கள் எத்தனைபேர் ?

விடை

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) (1) காமராசர் மாவட்டம்—16,000.

(2) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் 10,000.

(3) புதுக்கோட்டை மாவட்டம்—21,000.

(ஆ) அறிவொளி இயக்கப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| (1) மத்திய திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் | 10 |
| (2) திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் | 58 |
| (3) உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் | 215 |
| (4) தொண்டர்கள். | 47,006 |
| | 47,289 |

(இ) 1991-92-இல்தான் இத்திட்டம் துவங்கப்பட்டது. எனவே 1990-91 ஆண்டுக்கான விவரங்கள் அளிக்கும் பிரச்சினை எழாது.

10 –

பி. முட்லூர் மேல்நிலைப்பள்ளிக்கு ஆய்வுக்கூடம்.

வினா எண் 7603—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பி. முட்லூர் ஊராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு ஆய்வுக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வியமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பி. முட்லூர் அரசு மேல் நிலைப்பள்ளி 1990-91-ஆம் ஆண்டு மேல் நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. நிதி வசதியைப் பொறுத்து மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வக வசதி மற்றும் உபகரணங்களை அரசு அவ்வப்போது வழங்கி வருகிறது. இப்பள்ளியின் தேவைகளும் உரிய நேரத்தில் அரசின் கவனத்திற் கொள்ளப்படும்.

11—

நல்லாசிரியர் விருதுபோல் நல் மாணவர் விருது வழங்குதல்.

வினா எண் 7885—திரு. ம. கின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நல்லாசிரியர் விருது வழங்குவதைப்போல் நல் மாணவர் விருது வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12 —

களத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடத்திற்கு புறம் போக்கு நிலம் ஒதுக்குதல்.

வினா எண் 8128—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் உயர் நிலைப் பள்ளிக்கட்டிடம் கட்ட பொது மக்களால் 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் வழங்கப்பட்டுள்ளதை நில உரிமை மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை, தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், களத்தூர் கிராமம், புல எண். 367 நத்தம் புறம்போக்கு மொத்த நிலமான 10.60.05 ஹெக்டேரில் 2,05.0 ஹெக்டேர் நிலத்தை களத்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு வருவாய் (நிலை) ஆணை எண். 1591 நாள் 4—12—1991-ன்படி நிலக்கிரயமின்றி இலவசமாக உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்காக கல்வித்துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

13—

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் எம். பில்., பி. எச். டி. வகுப்புகள் தொடங்குதல்.

வினா எண். 9033—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதிதாக எம். பில்., பி.எச்.டி. பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் சேர்ந்துள்ளனர் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) ஆம்.

(ஆ) 1991-92 கல்வியாண்டில் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் (எம்.பில்.) 28 பேரும் முனைவர் பட்டப் படிப்பில் (பி.எச்.டி.) 23 பேரும் சேர்ந்துள்ளனர்.

14—

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாக முந்திரிக் காடுகள் ஏலம் விடுதல்.

வினா எண். 9035—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தில் உள்ள முந்திரி காடுகள் ஏலம் 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் விடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு ஏலம் விடப்பட்டது

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) தொகை விவரம் வருமாறு :

| | |
|---|---|
| 1989—ஆம் ஆண்டு | ரூ. |
| 1990-ஆம் ஆண்டு | 16,200 |
| 1991—ஆம் ஆண்டு | 476 |
| | 7,100 |

15—

முன்னீர்பள்ளம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றம் செய்தல்.

வினா எண். 9340—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பாளையங்கோட்டை தாலுகா, முன்னீர்பள்ளம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) முன்னீர்பள்ளம் அரசு உயர்நிலைப் பள்ளியை 1992-93-ஆம் ஆண்டில் மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக்கள் ஏதும் தற்போது இல்லை.

16—

ஆரணி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றம் செய்தல்.

வினா எண். 10085—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆரணி அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஏற்கனவே 7—7—1980 முதல் அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டு, செயற்பட்டு வருகிறது.

17—

அந்தியூர் தொகுதியிலுள்ள இரு அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு போதிய வகுப்பறைகள் இல்லாதது.

வினா எண். 10080—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள இரு அரசினர் மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் வருகைக்கேற்ப வகுப்பறை இல்லாது உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தியூர் சிங்கம்பேட்டை மேல்நிலைப் பள்ளிகட்கு புதிய வகுப்பறைகளை 1992-93-ல் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகட்கு கட்டிடம் கட்ட அரசால் ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டிலிருந்து பள்ளிகள் தேர்வு செய்யும்போது அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பள்ளியும் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

18—

நகராட்சிகள் நிர்வகிக்கும் மருந்தகங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுதல்.

வினா எண். 2248—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நகராட்சிகள் நிர்வகித்து வரும் மருந்தகத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

ஊராட்சிகள் நிர்வகித்து வரும் சுமார் 76 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அது குறித்து ஆணை வெளியிடப்படும்.

19—

பெரணமல்லூர் தொகுதியில் காலரா மற்றும் பாம்புக் கடிக்கு மருத்துவ மனைகளைத் துவக்குதல்.

வினா எண். 3560—திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரணமல்லூர் தொகுதியில் அரியபாடி, பூங்குளம் சத்திரம் கிராமத்தை ஒட்டிய கிராமங்களில் காலரா நோய் மற்றும் பாம்பு கடித்து உடனடி மருத்துவ சிகிச்சை அளிக்காத தால் சிலர் இறந்தது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அங்கு உடனடியாக அரசு மருத்துவமனை துவங்க நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம். அரியபாடி கிராமத்தில் ஒரு நப ரும் மற்றும் பூங்குளம் கிராமத்தில் 2 நபர்களும் குடற்அழற்சி நோயால் இறந்தனர். பெரணமல்லூர் சட்டமன்ற தொகுதி யைச் சேர்ந்த வடுகன் குடிசை என்ற கிராமத்தில் பாம்பு கடி யினால் ஒரு நபர் இறந்தார். உடனுக்குடன் தடுப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெரணமல்லூர் தொகுதியில் ஏற்கெனவே ஆனைபோகி, கொளம்பலூர், மாடம் மற்றும் பெரணமல்லூர் ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இதைத் தவிர, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 4 அல்லது 5 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இதனால் இப்பகுதியில் மேற்கொண்டு அரசு மருத்துவமனை துவக்க அவசியமில்லை.



20—

பர்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நல்ல மருத்துவர்களை நியமனம் செய்தல்.

வினா எண் 5574—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம் பர்கூரில் உள்ள ஆரம்ப சுகா தார நிலையத்திற்கு மருத்துவர்கள் வந்து பணியாற்றாமல் மாதம் ஒரு முறை வந்து கையொப்பம் மட்டும் போட்டு அரசின் சம்பளத்தினை மட்டும் பெற்று வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு துரித நடவடிக்கை எடுத்து வேறு நல்ல மருத்துவர்களையும் ஊழியர்களையும் நியமனம் செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) எந்தவிதமான புகாரும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

21—

அலிவலம்—நம்பிவயல் சாலைத் தொடர் நடவு தைல மரங்கள் ஏலம்.

வினா எண். 1163—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம், நம்பிவயல் சாலையில் உள்ள ஆர்.எஸ்.பதி மரம் 10 ஆண்டுகளாகியும் வெட்டப்படாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடன் வெட்ட அரசிடம் செயற்குப்புதி உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை சரகம், பட்டுக்
கோட்டை வட்டத்தில் அலிவலம் நம்பிவயல் சாலையிலுள்ள
பொதுப்பணித்துறை பராமரிப்பிலுள்ள பிரிவு வாய்க்கால் கரை
யில் 1982-ஆம் வருடம் 5.0 கிலோ மீட்டர் தூரத்திற்கு தைல
மரங்கள் வனத்துறையின் சமூகக்காடுகள் பிரிவினால் நடப்
பட்டது. பொதுவாக தொடர் நடவு தோட்டங்கள் இயற்கைச்
சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு ஏலத்தில் விடப்படுவ
தில்லை. எனவே, எந்தத் தொடர் நடவு தோட்டங்களும் இது
வரையிலும் ஏலம் விடப்படவில்லை. ஆனால், நல்ல வளர்ச்சி
யுள்ள தைல மரங்களை மட்டும் அதன் மறு துளிர்ப்பு தன்மையை
முன்னிட்டு சுழற்சிக்காலம் முடிந்தவுடன் மரக் கூழ் பயன்படுத்தும்
தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்
படுகிறது.

22—

பேராவூரணி-கிரமங்கலம் (வழி) மேற்பனைக்காடு படப்பனார்வயல் பஸ் தடம்.

வினா எண் 2532—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி
கிரமங்கலத்திற்கு படப்பனார் வயல், மேற்பனைக்காடு வழி
யாக ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்
ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு
வரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி-கிரமங்கலம் (வழி) மேற்பனைக்காடு படப்
பனார்-வயல் தட நீளம் 16.2 கி. மீ. ஆகும். பேராவூரணி
-கிரமங்கலம் படப்பனார் வயல் மேற்பனைக்காடு தடத்
தில் பேராவூரணி-மேற்பனைக்காடு வரை உள்ள பகுதி பேரா
வூரணி-அறந்தாங்கி பிரதான தடத்தின் பகுதியாக அமைந்து



ள்ளது. இப் பகுதியில் தினசரி 2 நகரப் பேருந்துகள் 24 நடை
கள் இயக்கப்படுகின்றன. ஆலங்குடி-மேற்பனைக்காடு (வழி)
கிரமங்கலம் படப்பானர் வயல் தடத்தில் மருது பாண்டியர்
போக்கு வரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கப்படுகின்றது. இவ்
வழித் தடத்தில் அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்ற
பகுதி களாகும். தற்போது உள்ள பேருந்து வசதியே போது
மானது ஆகும். எனவே, பேராவூரணி-கிரமங்கலம் தடத்தில்
நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

23—

மயிலாடுதுறை-மறையூர் வழித் தடத்தில் மீண்டும் பேருந்தை விடுதல்.

வினா எண் 5738—திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன்:
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மயிலாடு துறையிலிருந்து
மறையூர் பஞ்சாயத்திற்கு சென்று கொண்டு இருந்த பேருந்தை
மீண்டும் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து விடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு
வரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம் மயிலாடு துறை
யிலிருந்து மறையூர் பஞ்சாயத்திற்கு பேருந்து விட செயற்
குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. 4—12—1980
முதல் மறையூர்-பூம்புகார் தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து
கும்பகோணம் மயிலாடுதுறை பிரதான சாலையிலிருந்து மறை
யூர் செல்லும் பிரிவுச் சாலை மோசமான நிலையில் இருந்ததால்
22—11—1984 முதல் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது.
எனினும், தற்போது தடம் எண் 21சி, 1பி மூலம் தினசரி நான்கு
நடைகள் மயிலாடு துறை அசிக்காடு வழி மறையூர் தடத்தில்
நகரப் பேருந்தாக இயக்கப்படுகிறது. எனவே, தற்போ
துள்ள பேருந்து வசதியே போதுமானது எனக் கருதப்படுகிறது.

24—

**தமிழ்நாட்டில் போலி ஓட்டுநர் உரிமங்களை தடுக்க நடவடிக்கை**

வினா எண் 5841—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் போலி ஓட்டுநர் உரிமங்கள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைந் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1. போலி ஓட்டுநர் உரிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அது தொடர்பாக காவல் துறைக்கு புகார் தரப்பட்டு சட்டபூர்வமான நடவடிக்கை காவல் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

2. தற்போது சென்னையில் உள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணிப்பொறி (Computer) மூலம் ஓட்டுநர் உரிமங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையால் போலி ஓட்டுநர் உரிமங்கள் முற்றிலும் தடுக்கப்பட்டு விடும்.

3. அரசு, இத்துறைக்கு இந்த ஆண்டு கூடுதலாக தற்போது பணியாளர்களை வழங்க இருப்பதால் அவர்களின் துணையுடன் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களின்பெறப்படும் ஓட்டுநர் உரிமங்கள் கண்காணிக்கப்பட்டு போலியானவை கண்டுபிடிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிடும்.

25—

**பெண்ணாடம்- சென்னை வழித் தடத்தில் திருவள்ளுவர்போக்குவரத்துப் பேருந்து.**

வினா எண் 8021—திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —



மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரிலிருந்து சென்னைக்கு நேரடியாக விரைவுப் பேருந்து திருவள்ளுர் போக்குவரத்துக் கழகத்தால் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

26—

**அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் ஊனமுற்றோர் மற்றும் முதியோருக்கு இருக்கை வசதி.**

வினா எண். 8458—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல்லவன் பேருந்துகளில் உடல் ஊனமுற்றோர், முதியோருக்கென தனி இரு இருக்கைகள் ஒதுக்கீடு செய்திருப்பது போல் மாவட்டங்களில் இயங்கும் அரசு நகரப் பேருந்துகளிலும் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் இருக்கைகள் இறங்கும் வழிக்குப் பக்கத்தில் உள்ள இருக்கைகளாக ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் ஏற்கனவே உடல் ஊனமுற்றோர் மற்றும் முதியோருக்கென தனி இரண்டு இருக்கைகள் நகரப் பேருந்துகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஆ) அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இறங்கும் வழிக்குப் பக்கத்தில் உள்ள பயணிகள் இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

27—

பூண்டி மாதா கோவில் — சென்னை வழித் தடத்தில் விரைவுப் பேருந்து விடுதல்.

வினா எண். 8615— திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பூண்டி மாதா கோவிலுக்கு பக்தர்கள் வெளி மாவட்டங் களில் இருந்து அதிக அளவில் வந்து போய்கொண்டு இருப்ப தால் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பூண்டி மாதா கோவிலுக்கும் சென்னைக்கும் இடையே விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பூண்டி மாதா கோவில் தட நீளம் 250 கி.மீ.க்கும் கூடுதலாக உள்ளதால், இத் திட்டத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டுமே பேருந்து இயக்க இயலும். தற்போது பேருந்து ஒன்றினை இயக்க திருவள்ளு வர் போக்குவரத்துக் கழகத்திடம் திட்டம் எதுவுமில்லை சோழன் போக்குவரத்துக் கழகம் இத்திட்டத்தில் பேருந்து இயக்க இயலாது.

28—

பொதுப்பணித் துறை கண்மாய்களில் சமூக நலக் காடுகள்.

வினா எண். 1256— திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்பு மிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறை கண்மாய்களில் பயிர் செய்யப்படும் சமூக நலக் காடுகள் பாதுகாப்பை எந்தத் துறை ஏற்கின்றது ?

(ஆ) அதை வெட்டுவதற்கு ஏலம் மரங்களின் எந்த வய தில் அல்லது தடிமன் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது?



விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சமூக காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பொதுப் பணித் துறை மற்றும் பஞ்சாயத்துக் கண்மாய்களில் சம்பந்தப்பட்ட துறையின் இசைவு பெற்று சமூக வனத் தோட்டங்கள் எழுப்பப்பட்டு வனத்துறையால் பாதுகாக் கப்பட்டு வருகின்றன. வனத் துறையால் நடப்பட்ட மரத் தோட்டங்கள், வனத் துறையால் பாதுகாக்கப்படுகின்றன. அவ்வாறு நடப்பட்ட மரங்கள் 10 வருடங்கள் முதிர்வு பெற்ற வுடன் வனத் துறையால் மகசூல் அளவு கணக்கிடப்பட்டு உரிய நியாய விலை நிர்ணயம் செய்யப்பட்டு, பஞ்சாயத்து/கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கீடு மூலமோ அல்லது பொது ஏலத்தின் மூலமோ அறுவடை செய்யப்படுகின்றது.

29—

காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு நகரங்களில் பட்டு பருத்தி ரகங் களுக்கென்று நவீன விற்பனை வளாகங்கள்.

வினா எண். 7431. திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கைத்தறி விற்பனை பெருக்க அனைத்து ரக கைத்தறி துணிகளுக்கும் ஒரே இடத்தில் கிடைக்க அனைத்து வசதிகளுடன் சென்னையில் அமைந்துள்ள அடுக்கு விற்பனைக் கூடம் போல் கைத்தறி வணிகம் பெருமளவில் நடக்கும் காஞ்சிபுரம், ஈரோடு, பவானி, ஆரணி, சின்னாளப்பட்டி, துறையூர் போன்ற இடங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெச வாலைகள் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் பட்டு ரக துணி களுக்கென்றே ஒரு நவீன விற்பனை வளாகமும், பருத்தி துணிக்கென்று ஈரோட்டில் ஒரு விற்பனை வளாகமும் 1992—93 ஆம் அமைக்கப்பட உள்ளது. இதற்கென்று

ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூபாய் 22.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வேறு இடங்களில் நவீன விற்பனை வளாகம் அமைக்க தற்பொழுது கருத்துரு இல்லை.

**30—**

**தமிழ்நாட்டில் ஏற்றுமதி செய்யும் வகையில் தரமான லுங்கி உற்பத்தி.**

வினா எண். 7737—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடயளிப்பாரா —

(அ) ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் லுங்கிகள் எவ்வளவு ?

(ஆ) ஏற்றுமதிக்கான தரமான லுங்கி உற்பத்தியை மேம் படுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யவும் அரசிடம் ஏதேனும் கருத்துரு உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

(அ) கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் லுங்கிகளின் மதிப்பு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| 1987—88 .. .. .. | 19.21 |
| 1988—89 .. .. .. | 20.47 |
| 1989—90 .. .. .. | 19.75 |
| 1990—91 .. .. .. | 23.75 |
| 1991—92 (ஜனவரி 1992 முடிய) .. | 30.16 |

(ஆ) ஆம்.



ஏற்கெனவே கைத்தறி லுங்கிகள் தயார் செய்து
(இ) ஏற்கெனவே ... 

ஏற்கெனவே கைத்தறி லுங்கிகள் தயார் செய்து (இ) ஏற்கெனவே சிறப்பு திட்டமாக கூட்டு

**31—**

**தமிழ்நாடு மின்வாரியம் போதிய உபகரணங்களை இருப்பில் வைக்க நடவடிக்கை.**

வினா எண். 436—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மின்வாரியத்திடம் போதிய மின் உபகரணங்கள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

மின் உபகரணங்களைச் சேகரிப்பதில் தாமதம் ஏற்படு (ஆ) மின் உபகரணங்களைச் ... 

1993 பிப்ரவரி 10]

32—

வைகையில் இருபுறமும் பார்த்திபனூர் அணைவரை கால்வாய் கட்டுதல்.

வினா எண். 1386—திரு. வ.மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விரகனூர் மதகு அணையில் இருந்து திருப்புவனம் வரை கால்வாய்களில் தண்ணீர் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது போல் வைகையில் இருபுறமும் வேதியேனந்தல் அணைவரை கால்வாய் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றில் இரண்டாவது ரீச்சில் வீரகனூர் ரெகுலேட்டர் முதல் பார்த்திபனூர் ரெகுலேட்டர் வரை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்களுக்கு தண்ணீர் வழங்கு அமைப்புக்களை சீர் செய்யவும், பிரமனூர், பழையனூர், மாரநாடு, திருப்பாசெட்டி, குவளவெளி, கால்வாய்களைச் சீரமைக்கவும், மிளகனூர் மானாமதுரை மற்றும் பசலை கால் வாய்களின் பொதுக் கரைகளை சீரமைத்து பழைய நிலைக்கு உயர்த்தவும் ஒரு திட்டம் ரூபாய் 50.50 இலட்ச மதிப்பீட்டில் 1992—93 ஆண்டின் பகுதி இரண்டு திட்டமாக அறிவிக்கப்பட்டு 1992—93 ஆண்டில் செலவு தொகையாக ரூபாய் 10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (பார்த்திபனூர் அணையை அப்பகுதியில் வேதியேனந்தல் அணை என்று குறிப்பிடப்படுவதாகத் தெரிகிறது)

33—

வைகை அணை கட்டிய பிறகு வெள்ளச் சேதம்.

வினா எண். 1712—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை அணை கட்டிய பிறகு ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் எவ்வளவு ?



[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

1959இல் வைகை அணை கட்டிய பிறகு, 1976 ஆம் ஆண்டு முடிய வைகை நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் வெளியேற்றங்களினால் இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வெள்ளச் சேதங்கள் ஏதுமில்லை.

1980 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளச் சேதம் எதும் இல்லை. 1977, 1978, 1979, 1981 மற்றும் 1983—84 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்த வெள்ளச் சேதத்தின் மதிப்பு ரூபாய் 946.66 இலட்சம்.

34—

பள்ளிகொண்டாவிலுள்ள மின் மாற்றியை மாற்றி அமைத்தல்.

வினா எண். 2879—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டாவில் தெரு விளக்குகள் சரிவர எரியாததால் அங்குள்ள மின் மாற்றியை (Transformer) மாற்றி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பள்ளிக்கொண்டாவிலுள்ள மேல்நிலைத் தொட்டிக்கான ஒருமுனை மின்பாதை மும்முனை மின்பாதையாக மாற்றியமைக்கப்பட்டு 14—1—1992 முதல் மும்முனை மின்சக்தி அளிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக பள்ளிக்கொண்டாவில் மின் அழுத்தம் சீரடைந்து தெரு விளக்குகள் நன்கு எரியும் நிலையில் உள்ளன.

1993 பிப்ரவரி 10]

35—

கருப்பம்புலத்திலுள்ள பழுதடைந்த பூஸ்டரை பழுது பார்த்தல்.

வினா எண். 5183—திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் தொகுதி, கருப்பம்புலத்தில் அமைக்கப் பட்டிருக்கும் பூஸ்டர் பல மாதங்கலாக பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை சரி செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வேதாரண்யம் தொகுதி கருப்பம்புலத்தில் அமைககப் பட்டிருக்கும் பூஸ்டர் மிகப் பழையதாகையால், அதனைச் சரி செய்ய இயலவில்லை. எனவே, இதனைப் பயனற்றதென, ஒதுக்கிக் கழிக்கும் செயற்குறிப்பு மினவாரியத்தின் ஆய்வில் உள்ளது. இந்தப் பகுதியில், தோப்புத்துறை என்ற இடத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 1992—93 ஆம் ஆண்டில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் துணை மின் நிலையம் பயன்பாட்டுக்கு வந்தபின், மேற்குறிப்பிட்ட பூஸ்டர் இல்லாமலேயே இந்தப் பகுதியில் மின் அழுத்த நிலைமை சீரடையும்.

36—

பொதுப்பணித் துறையில் தற்காலிகப்பணியாளர்களை நிரந்தரம் செய்தல்.

வினா எண். 5226—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொதுப்பணித்துறையில் தற்காலிகப் பணியாளராக (என்.எம்.ஆர்.) பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்க அரசு முன் வருமா?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பொதுப் பணித்துறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள தினக்கூலி பணியாளர்களை பணி அவ்வப்போது வரன் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

37—

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அருள்மொழித்தேவன் காலனிக்கு தெரு விளக்கு.

வினா எண். 7780—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அருள் மொழித்தேவன் காலனிக்கு தெருவிளக்கு போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அருள்மொழித்தேவன் காலனியில் ஏற்கெனவே 20 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. கூடுதல் விளக்கு கோரி விண்ணப்பம் ஏதும் இல்லை.

38—

ஆலங்குளம்—நல்லூர் சாலையைப் பழுது பார்த்தல்.

வினா எண். 8605—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஆலங்குளத்திலிருந்து நல்லூருக்குச் செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சாலை செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

39 —

பாப்பான்குளம், புதுக்குளம், அர்ப்பன் குளம், மாறன் குளம் ஆகிய குளங்களுக்கு தனியாக சப்ளை சானல் அமைத்தல்.

வினா எண். 8632 — திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி கடனாநதி அணைக்கட்டிலிருந்து வடக்கு அரியநாயகிபுரம், மாறன்குளம் வரை தண்ணீர் வருவதற்கு பாப்பான்குளம், புதுக்குளம், அர்ப்பன்குளம் ஆகிய குளங்களில் (Supply channel) அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி கடனா நதி அணைக்கட்டு திட்டத்திலுள்ள காங்கேயன் கால்வாய் மூலம், பாப்பான்குளம், புதுக்குளம், அர்ப்பன்குளம், மாறன் குளம் ஆகிய குளங்கள் பாசன வசதி பெற்றுள்ளது. தனியாக சப்ளை சேனல் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் செயற் குறிப்பில் இல்லை.



40—

பொழிக்கரை சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 8636—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி டவுன் பஞ்சாயத்து பொழிக்கரை ரோடு (Public work) அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இச்சாலை அமைப்பதற்கு பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 0.86.0 ஹெக்டேர் நிலம் நில மாற்றம் செய்யப்பட வேண்டியதல்லாமல், தனியாருக்குச் சொந்தமான 0.08.5 ஹெக்டேர் நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

41— கீழப்பாவூர் தெப்பகுளம் பழுதுபார்க்க நடவடிக்கை.

வினா எண். 568—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கீழப்பாவூர் நகரத்தில் ஒன்றாவது வார்டில் உள்ள தெப்பக்குளம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கீழப்பாலூர் பேரூராட்சியில் நிதி நிலைமை திருப்திகர மாக இல்லாத காரணத்தினால் இக்குளத்தை தற்பொழுது பழுது பார்க்க இயலாத நிலை உள்ளது.

42—

ஆனந்தவள்ளி வாய்க்கால் கரைச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை.

வினா எண். 677—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஆவணத் திலிருந்து பேராவூரணி செல்லும் ஆனந்தவள்ளி வாய்க்கால் கரை யில் செல்லும் கப்பிச்சாலையைச் செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் ஆவணத்திலிருந்து பேராவூரணி செல்லும் ஆனந்தவள்ளி வாய்க் கால் கரையில் செல்லும் கப்பிச்சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்ற தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

43—

தகுதியடைந்த தேர்வு மற்றும் சிறப்பு நிலை ஊராட்சிகளை நகராட்சிகளாக உயர்தத நடவடிக்கை.

வினா எண். 796—டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல தேர்வு நிலை, சிறப்பு நிலை நகரப் பஞ்சா யத்துக்கள் தகுதி அடைந்தும் நகராட்சிகளாக உயர்த்த படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 29 பேரூராட்சிகளை நகராட்சி களாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. ஒசூர் தேர்வுநிலை பேரூராட்சி 15—1—1992 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக மாற்றியமைக்கப்பட் டுள்ளது. திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை மூன்றாம் நிலை நகராட்சியாக 1—4—1992 முதல் மாற்றியமைத்து இறுதி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

44—

களக்குடி கிராமத்தில் குடிநீர் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா எண். 1366—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண் மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம் களக்குடி மக்களுக்கு குடிநீர்த்தொட்டி அமைத்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) களக்குடி கிராமத்திற்கு தேவைப்படும் குடிநீரின் மொத்த அளவு 1,26,400 லிட்டர் ஆகும். இங்கு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நீராதாரம் இன்னும் கிடைக்கவில்லை. நீராதாரம் அமைத்த வுடன் திட்டம் செயலாக்கப்படும்.

45— [1993 பிப்ரவரி 10

## பாதரங்கோட்டை ஆண்டால் கொல்லை ஏரியை பராமரிக்கத் திட்டம்.

வினா எண். 1896—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சி ஆண்டால் கொல்லை ஏரியை தூர் எடுத்து பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவோணம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சியில் போதிய நிதி வசதியின்மையால் ஆண்டால் கொல்லை ஏரியை தூர் எடுத்து பராமரிக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

46—

## மேட்டூர்-காடையாம்பட்டி குடிநீர்த் திட்டம்.

வினா எண். 2588-ஏ—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர்—காடையாம்பட்டி குடிநீர்த் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மேட்டூர்—காடையாம்பட்டிக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.



1993 பிப்ரவரி 10]

47—

## ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட நத்தம் ஒன்றிய ஆதிதிராவிடர் குடியிருப்புகள்

வினா எண் 5298—திரு எம் ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நத்தம் தொகுதி, சாணார்ப் பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் 1988-89, 1989-90, 1990-91 ஆகிய ஆண்டுகளில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவ்வாண்டுகளில் கட்ட திட்டமிடப்பட்ட ஆதி திராவிட குடியிருப்பு வீடுகள் அனைத்தும் கட்டி ஆதி திராவிடர்களுக்கு குடியிருக்க ஒதுக்கப்பட்டுவிட்டனவா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்-ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் நத்தம் சாணார்பட்டியில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் வீடுகளின் எண்ணிக்கை.

| | நத்தம் | | | சாணார்பட்டி |
|---|---|---|---|---|
| 1988—89 | 130 | .. | .. | 153 |
| 1989—90 | 100 | .. | .. | 112 |
| 1990—91 | 110 | .. | .. | 140 |

(ஆ) மேற்படி ஆண்டுகளில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு, ஆதி திராவிடர்களுக்கு குடியிருக்க ஒதுக்கப்பட்டு விட்டன.

———

48—

அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் பேருந்து நிலையம்.

வினா எண். 6298—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதி அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஏற்கெனவே பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. அவ்விடம் போதுமானதாக இல்லாதிருந்தாலும், புதிய பேருந்து நிலையம் அமைக்க தகுதியான இடம் இல்லாத காரணத்தால் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

களத்தூர் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கும் திட்டம்.

வினா எண். 7121—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் மயானத்திற்கு போகும் பாதையில் ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்தி சாலை அமைத்து தகரக் கொட்டகை போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், களத்தூர் மயானத்திற்கு போகும் பாதையில் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி சாலை அமைத்து, தகரக் கொட்டகை போடும் வேலைகளை 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப, எடுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

பூவாணத்திலிருந்து பிரியும் வாய்க்காலில் மூன்றாவது தற்காலிக மடையை நிரந்தரமாக்குதல்.

வினா எண். 7202—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஒன்றியம் பூவாணத்திலிருந்து பிரியும் வாய்க்காலில் மூன்றாவது தற்காலிக மடையை நிரந்தரமாக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் சேது பாவா சத்திரம் ஒன்றியம் பூவாணத்திலிருந்து பிரியும் வாய்க்காலில் சிலர் அனுமதியின்றி கரையை வெட்டி அமைத்த மூன்றாவது குழாய் அவசியமற்றது என்பதால் அகற்றப்பட்டது. இரண்டாம் மதகு அப்பகுதியின் தேவையை நிறைவு செய்யப் போதுமானது.

51—

களத்தூர் கூட்டுறவு சங்கத்திற்குச் செல்லும் பாதையை சாலையாக மாற்றுதல்.

வினா எண். 7222—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கூட்டுறவு சங்கத்திற்கு செல்லும் பாதையை சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1993 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் களத்தூர் கூட்டுறவு சங் கத்திற்கு செல்லும் 300 மீட்டர் தூரம் பாதை தற்போது பொது மக்கள் சென்று வருவதற்கு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை சாலையாக மாற்றுவது பற்றிய செயற் குறிப்பு ஏதும் இல்லை.

52—

களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் பெரமன் ஊரணி யை சுத்தப் படுத்துதல்

வினா எண் 7241—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா ?

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர்களின் பெரமன் ஊரணியை சுத்தப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கிழக்கு ஆதி திராவிடர்களின் பெரமன் ஊரணியை களத்தூர் ஊராட்சி மற்றும் பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தின் நிதி வசதியைப் பொறுத்து நடப்பு ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ சுத்தப்படுத்திக் கொடுக்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி யர் நடவடிக்கை தொடர்ந்துள்ளார்.

53—

பூவாணம் வடக்குப் பகுதியில் மேல் நிலை நீர்த்தொட்டி அமைத்தல்.

வினா எண். 7320. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் வடக்குப் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க செயற் குறிப்பு உள்ளதா?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பூவாணம் வடக்குப் பகுதி யில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க செயற் குறிப்பு இல்லை.

54—

உப்புளிக்கோட்டை 6,7 வார்டுகளை ஒரே வார்டாக மாற்றி அமைத்தல்.

வினா எண். 7332—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரம் உப்புளிக் கோட்டை 6, 7 வார்டுகளாக பிரித்ததைத் தவிர்த்து ஒரே வார்டாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி பேரூராட்சி, 6 மற்றும் 7-வது வார்டுகளை ஒரே வார்டாக மாற்றுவதற்கான செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

55—

கீழ்மனக் காட்டிற்கு தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகள் வழங்குதல்.

வினா எண். 7418—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேது பாவா சத்திரம் ஒன்றியம், கீழ்மனக்காட்டிற்கு தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதி நிலைக்கேற்ப ஒவ்வோர் ஊராட்சிக்கும் தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். இதன்படி சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 1991-92 ஆம் ஆண்டிற்கு 36 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 1992-93 ஆம் ஆண்டிற்கு 33 தொலைக் காட்சிப் பெட்டிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. தனியாக இக் குடியிருப்பிற்கு, தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதிகளிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம்.

56—

புதுக் குப்பம் மீனவர் கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண். 7584— செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி புதுக் குப்பம் மீனவர் வாழும் கிராமத்திற்கு சாலை வசதி செய்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) புவனகிரி தொகுதி புதுக் குப்பம் மீனவர் வாழும் கிராமம் பரங்கிப்பேட்டையிலிருந்து சாமியார் பேட்டை செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இச்சாலை தார்ச் சாலையாகவும் பேருந்து செல்லும் சாலையாகவும் அமைந்துள்ளது. எனவே சாலை வசதி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



57—

பிச்சாவரம் கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண். 7595— செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வடக்குப் பிச்சாவரம் கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வடக்குப் பிச்சாவரம் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் ஒரு பகுதி தனியார் நிலம் வழியாகச் செல்கிறது. நில ஆர்ஜிதம் செய்தால்தான் சாலை அமைக்க இயலும். தற்போது இது பற்றிய செயற்குறிப்பேதுமில்லை.

58—

மஞ்சக்குழி வாய்க்கால் குறுக்கே பாலம்:

வினா எண். 7598—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மஞ்சக்குழி ஊராட்சி மஞ்சக்குழி ஆதிதிராவிடர் காலனிக்கு செல்ல வாய்க்காலைத் தாண்டி குறுக்கே பாலம் அமைத்துத் தர அரசு ஆவனசெய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது.

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப் பேட்டை ஒன்றியம் மஞ்சக்குழி ஊராட்சி மஞ்சக்குழி ஆதி திராவிடர் காலனிக்கு அரிய கோஷ்டி வாய்க்காலைத் தாண்டி செல்ல குறுக்கே பாலம் அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

கொடிக்கால் நகரில் குளம் வெட்டி படித்துறை அமைத்தல்.

வினா எண் 7649—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப் பேட்டை ஒன்றியம் கொடிக்கால் நகருக்கு குளம் வெட்டி படித்துறை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் கொடிக்கால் நகருக்கு குளம் வெட்டி படித்துறை கட்டும் பணியினை நடப்பு ஆண்டு அல்லது அடுத்த ஆண்டில் நிதி வசதியைப் பொறுத்து எடுத்துச் செய்ய தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



60—

சின்ன குமட்டி மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கத் திட்டம்.

வினா எண். 7696—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள சின்னகுமட்டி மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) டானிடா திட்டத்தின் கீழ் 1993-94 ஆம் [illegible] ஐந்து தாரா கைப்பம்புகள் போடப்படும்.

61—

பெரிய குமட்டியில் வானொலி மன்றம்.

வினா எண். 7699—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள பெரிய குமட்டியில் வானொலி மன்றம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1992-93ஆம் ஆண்டில்.

62—

நற்கவந்தன்குடி ஊராட்சியில் வானொலி மன்றம்.

வினா எண். 7791—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கவந்தன் குடி ஊராட்சியில் வானொலி மன்றம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வரும் நிதியாண்டில் இது பற்றி ஆய்வு செய்யப்படும்.

63—

சேத்தியாத்தோப்பில் பேருந்து நிலையம்.

வினா எண். [illegible]—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி சேத்தியாத் தோப்பில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புவனகிரி தொகுதி சேத்தியாத் தோப்பு பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) புதிதாக பேருந்து நிலையம் அமைப்பதற்காக வாங்கப்பட்டுள்ள இடத்திலுள்ள உயிருள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்திய பின்னர், சென்னையிலுள்ள பொதுப்பணித் துறை தலைமைக் கட்டிடக் கலைஞரிடம் பேருந்து நிலையம் அமைப்பதற்கான மதிப்பீடுகள் மற்றும் வரைபடம் அங்கீகாரம் பெற்ற பின் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் பெற்று திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

64—

சங்கராபுரம் ஒன்றியத்திலிருந்து கல்ராயன் பகுதியைப் பிரித்து தனி ஒன்றியமாக அமைத்தல்.

வினா எண். 7871. திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலைப் பகுதி வளர்ச்சிப் பெறும் வகையில் சங்கராபுரம் ஒன்றியத்திலிருந்து தனியாகப் பிரித்து, தனி ஒன்றியமாக அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கல்ராயன் மலைப்பகுதியை ஊராட்சி ஒன்றியமாக அமைப்பது தொடர்பான கருத்துருவின் மீது அனைத்து அம்சங்களும் பரிசீலிக்கப்பட்டு, சாத்தியப்பட்டால் ஊராட்சி ஒன்றியமாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1993 பிப்ரவரி 10

65—

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரே மாட்டைப் பலர் காட்டி கடன் பெறுவதைத் தடுத்தல்.**

வினா எண். 7873—திரு. கே. சுந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஒரே கறவை மாட்டை பலர் காண்பித்து கடன் பெறுவது தடுத்து நிறுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாவட்டங்களில் கோட்ட வளர்ச்சி அலுவலர் அந்தஸ்துக்குக் குறையாத அலுவலர்களால் சொத்துக்கள் ஏற்படுத்தப்படுவதையும் பராமரிக்கப்படுவதையும் சரிபார்க்கும் பணி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் பேரில் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் கால்நடைகளுக்கு அடையாள எண். பச்சை குத்தப்படும். எனவே கால்நடை மாறாட்டம் செய்ய வழி இல்லை.

66—

**மேலமஞ்சக்கரை கிராம குளத்தை மராமத்து செய்தல்**

வினா எண். 7924—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டைத் தொகுதி, வாராப்பூர் பஞ்சாயத்துக்குட்பட்ட மேலமஞ்சக்கரை கிராமத்தின் குளம் நீண்ட நாட்களாக மராமத்து செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் குளம் தூர் எடுக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?



1993 பிப்ரவரி 10 ]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலுள்ள குளங்கள் சுழற்சி முறையைப் பின்பற்றியும் நிதிநிலைமையைப் பொறுத்தும் மராமத்து செய்யப்படுகின்றன. அதனடிப்படையில் நடப்பு ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலோ நிதி நிலைமையைப் பொறுத்து மராமத்து செய்யப்படும்.

67—

**அடப்பன்காரச் சத்திர சத்திரத்தை பழுதுபார்த்தல்.**

வினா எண். 7959—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை தொகுதி நத்தம் பண்ணை பஞ்சாயத்திற்குட்பட்ட அடப்பன்காரச் சத்திரத்தில் உள்ள சத்திரம் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்திருத்தம் செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(ஆ) புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நத்தம் பண்ணை ஊராட்சியைச் சேர்ந்த அடப்பன்காரச் சத்திரத்தில் உள்ள சத்திரம் பழுதடைந்துள்ளது என அரசு அறியும்.

(ஆ) இச்சத்திரத்தைப் பழுது பார்க்க ரூபாய் 1,50,000 செலவாகும் என்பதால் இதற்கான நிதிவசதி தற்சமயம் நத்தம் பண்ணை ஊராட்சியிலோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திலோ இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதி நிலைமை அபிவிருத்தியடைந்ததும், இப்பணியினை எடுத்துச் செய்ய மாவட்ட ஆட்சியர் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

68— [1993 பிப்ரவரி 10

## திண்டுக்கல் நகராட்சியில் தனியார் சங்கம் அமைத்து பூ மார்க்கெட் நடத்தத் தடை.

வினா எண் 8049—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிப் பகுதிகளில் தனி நபர் அல்லது தனியார் சங்கங்கள் தனி மார்க்கெட் நடத்தக் கூடாது என்று நகராட்சி விதி இருந்தும் திண்டுக்கல் நகரில் பூ வியாபாரிகள் சங்கம் என்ற பெயரில் தனி நபர்கள் பூ மார்க்கெட் நடத்துகின்றனரா?

(ஆ) ஆம் எனில், அதனை நகராட்சியின் கீழ் உட்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள் உள்ள ஸ்பென்சர் காம்பவுண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பெற்ற தீர்ப்பின் அடிப்படையில், நகராட்சி அனுமதி பெற்று, தனியார் பூ மார்க்கெட் நடத்துகின்றனர்.

69—

## மாதிரிப் பேருந்து நிலையங்கள் அமைத்தல்.

வினா எண் 8072—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதிரிப் பேருந்து நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், முதல் கட்டமாக எத்தனை நகரங்களில் ஏற்படுத்தப்படும்?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று நகரங்களில் மாதிரிப் பேருந்து நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

70—

## ஜெயங்கொண்டான் காலனியில் சமுதாய கூடம் கட்டுதல்.

வினா எண் 9172—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஜெயங்கொண்டான் காலனிக்கு சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில், ஜெயங்கொண்டான் காலனிக்கு சமுதாயக் கூடம்கட்ட 1992-93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செயல் திட்டம் உள்ளது.

71—

## பின்னலூர் ஊராட்சிக்கு நிழற் குடை.

வினா எண் 9188—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், பின்னலூர் ஊராட்சிக்கு நிழற்குடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை
வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 22,200 மதிப்பீட்டில் பயணிகள் நிழற்
குடை கட்டப்பட்டு திட்டப்பணி முடிவடையும் தருவாயில்
உள்ளது.

72—

மீராலூர் ஆதி திராவிடர் பஸ் நிலையத்திற்கு நிழற்குடை.

வினா எண் 9209—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா:

(அ) புவனகிரி ஒன்றியத்தில் உள்ள மீரா ரார் ஆதி திரா
விடர் பகுதியில் பேருந்து நிலைய நிழற்குடை அமைத்துக்
கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள
மீராலூர் ஆதி திராவிடர் பகுதியில் பேருந்து நிழற்குடை
அமைக்கும் பணி 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்
புத் திட்டத்தில் நிறைவேற்றிட செயல் திட்ட அறிக்கையில்
சேர்க்கப்பட்டுள்ளது.

73—

அனந்தபுரம் இடுகாட்டுப் பாதையை செப்பனிடுதல்.

வினா எண் 9546—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா:

ஆரணி சைதாப்பேட்டை அனந்தபுரம் இடுகாட்டுப்
பாதையை செப்பனிட வேண்டுமென்ற பொதுமக்களின் கோரிக்
கையை அரசு பரிசீலனை செய்யுமா?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சைதை அனந்தபுரம் தெருவிலிருந்து சுடுகாட்டுக்குச்
செல்லும் பாதையின் நீளம் சுமார் 1 கி.மீ. ஆகும். இப்பாதை
தற்போது ஜல்லி தளம் அமைக்கப்பட்ட பாதையாக உள்ளது.
இதனை செப்பனிட்டு தார் சாலையாக மாற்றியமைக்க தோராய
மாக ரூ. 2.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
தற்போது இந்நகராட்சியின் நிதிநிலைமை திருப்திகரமாக
இல்லையென்பதால் இப்பணியினைத் தற்போது செயல்படுத்த
இயலாத நிலையில் நகராட்சி உள்ளது. இப்பணியினை அரசிட
மிருந்து மானியம் பெற்று செயல்படுத்த அரசுக்கு கருத்துரு
அனுப்ப தக்க நடவடிக்கை ஆரணி நகராட்சியால் எடுக்கப்
பட்டு வருகின்றது.

74—

ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் மேல் நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 9563—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்
பாரா:

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சியில் புதுப்பேட்டை
மேடான பகுதிக்கு குடிநீர் வழங்க மேல்நிலைத் தொட்டி கட்டப்
பட்டு குடிநீர் வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆத்தூரில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 14.5 இலட்
சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி
யிலிருந்து புதுப்பேட்டை பகுதிக்கு நீர் கொடுக்க பகிர்மானக்
குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத் திட்டப் பணிகள் ஜூன்
மாதம் 1993-க்குள் பயனுக்கு கொண்டு வரும் வகையில் திட்டப்
பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் புதுப்பேட்டை
பகுதிக்குத் தேவையான நீரழுத்தம் 8 மீட்டர்கள் மட்டுமேயான
தால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திட்டத்தின் மூலம் இப்பகுதி
யில் கடைசி பகுதியில் கூட 13,728 மீட்டர்கள் அழுத்தம் கிடைக்
கும். எனவே புதுப்பேட்டை மேடான பகுதிக்கு தனியாக
மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் கருத்துரு இல்லை.

[1993 பிப்ரவரி 10

75—

பழநி நகராட்சியில் பொதுச் சுகாதாரப் பிரிவின்கீழ் நடவடிக்கை.

வினா எண் 9679—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுகாதாரமற்ற முறையில் பராமரிக்கப்பட்டதற்காக பழநி நகராட்சி எல்லைக்குள் உள்ள எத்தனை ஹோட்டல்கள் மீது கடந்த இரண்டு ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பழநி நகராட்சி எல்லைக்குள் 264 ஹோட்டல்கள் மற்றும் டீக்கடைகள் வைத்து நடத்தப்படுகின்றன. 1939 ஆம் வருட தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் பிரிவுகளின்கீழ் 252 கடைகள் பார்வையிடப்பட்டு குறைகளை நிவர்த்திக்க நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 236 கடைகளில் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 1954 ஆம் வருட உணவு கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் நகருக்குள் உள்ள 12 ஹோட்டல்களில் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவற்றின் 8 இனங்களில் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையிலுள்ளன.

76—

பாகோடு பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 9997—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு பேரூராட்சியில் உள்ள குடிநீர் திட்டங்களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எத்தனை?

(ஆ) செயல்படாமல் இருப்பவை எத்தனை?

(இ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பாகோடு பேரூராட்சியில் பாகோடு-பாளையங் கெட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) செயல்படாத திட்டங்கள் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

77—

அருமனை பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 10000—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அருமனை பேரூராட்சியில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எத்தனை?

(ஆ) செயல்படாமல் இருக்கும் திட்டங்கள் எத்தனை?

(இ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்களை மீண்டும் செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) அருமனை பேரூராட்சியில் அருமனை கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது.

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

[1993 பிப்ரவரி 10

78—

காட்டாத்துறை பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 10001—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதி காட்டாத்துறை பேரூராட்சியில் உள்ள குடிநீர் வழங்கும் திட்டங்களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எத்தனை?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்களை மீண்டும் செயல்பட வைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) காட்டாத்துறை பேரூராட்சியில் சாமியார் மடம் குடிநீர்த் திட்டம், காட்டாத்துறை குடிநீர்த் திட்டம், குழிவிளை குடிநீர்த்திட்டம், முழுகு மூடு குடிநீர்த்திட்டம், பிலவிளை குடிநீர்த் திட்டம் ஆகிய ஐந்து குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) காட்டாத்துறை பேரூராட்சியில் செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் ஏதும் இல்லை.

79—

ஆற்றூர் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண். 10002—திரு. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதி ஆற்றூர் பேரூராட்சி குடிநீர் வழங்கும் திட்டங்களில் தற்போது செயல்பட்ட திட்டங்கள் எத்தனை?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்களை மீண்டும் செயல்பட வைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆற்றூர் பேரூராட்சியில் ஆற்றூர் குடிநீர்த் திட்டம், தெம்மனூர் குடிநீர்த் திட்டம், ஏற்றக்கோடு குடிநீர்த்திட்டம், தொழிச்சல் குடிநீர்த்திட்டம் ஆகிய நான்கு குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) ஆற்றூர் பேரூராட்சியில் செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் ஏதும் இல்லை.

80—

திருவட்டார் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண். 10003—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதி திருவட்டார் பேரூராட்சியில் உள்ள குடிநீர் வழங்கும் திட்டங் களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்களை மீண் டும் செயல்பட வைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) திருவட்டார் பேரூராட்சியில் கொல்வேலி குடிநீர்த் திட்டம், திருவட்டார் குடிநீர்த் திட்டம், திருவரம்பு மற்றும் அம்பலக்காலை கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஆகிய மூன்று குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது.

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் ஏதும் இல்லை.

[1993 பிப்ரவரி 10

81—

## பொன்மனை பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண். 10004—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதி பொன்மனை பேரூராட்சியில் உள்ள குடிநீர் வழங்கும் திட்டங்களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எததனை ?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்கள் மீண்டும் செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பொன்மனை பேரூராட்சியில் வெண்டலிக்கோடு குடிநீர்த்திட்டம், ஈஞ்சன்கோடு குடிநீர்த்திட்டம் ஆகிய இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் ஏதும் இல்லை.

82—

## திற்பரப்பு பேரூராட்சியில் குடிநீர் திட்டங்கள்.

வினா எண். 10005—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதி திற்பரப்பு பேரூராட்சியில் உள்ள குடிநீர் வழங்கு திட்டங்களில் தற்போது செயல்படுவது எத்தனை ?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்கள் மீண்டும் செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) திற்பரப்பு பேரூராட்சியில் திற்பரப்பு குடிநீர்த் திட்டம், தும்பக்கோடு குடிநீர்த் திட்டம் ஆகிய இரண்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) திற்பரப்பு பேரூராட்சியில் சேக்கால் குடிநீர்த் திட்டம், அரமன்னம் குடிநீர்த் திட்டம், காமூர்கையாலக்கல் குடிநீர்த் திட்டம் ஆகிய மூன்று குடிநீர்த் திட்டங்களின் பணிகள் செயல்முறையில் உள்ளது. இக்குடிநீர்த் திட்டங்களின் பணிகள் அனைத்தும் விரைவில் முடித்து செயல்படுத்தப்படும்.

83—

## குலசேகரம் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண். 10006—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதியில் குலசேகரம் பேரூராட்சியில் உள்ள குடிநீர் வழங்கும் திட்டங்களில் தற்போது செயல்படும் திட்டங்கள் எத்தனை?

(ஆ) செயல்படாமல் இருக்கும் குடிநீர் திட்டங்களை மீண்டும் செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) குலசேகரம் பேரூராட்சியில் குலசேகரம் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. செருப்பாலூர் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படுத்தப்படும்.

(ஆ) செயல்படாமல் உள்ள குடிநீர்த் திட்டங்கள் ஏதும் இல்லை.

[1993 பிப்ரவரி 10

84—

**ஆத்தூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சந்தனகிரி முல்லைவாடிப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி.**

வினா எண். 10347—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

ஆத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில்
இருந்து சந்தனகிரி முல்லைவாடி வழியாக ஆத்தூர் குடிநீர்
தலைமை நீரேற்று நிலையத்திற்கு வருவதால் இக்குடிநீர்
அப்பகுதி மக்களுக்குக் கிடைக்க புதிய டேங் கட்டி தண்ணீர்
ஏற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு. திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆத்தூர் குடிநீர்த் திட்டத்தில் இருந்து மேற்கூறிய
பகுதிகளுக்கு குடிநீர் வழங்க சாத்தியக் கூறு இல்லை.

85—

**மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இராமநாதபுரம் கூட்டுறவு மத்திய வங்கியை இராமநாதபுரத்திற்கு மாற்றுதல்.**

வினா எண். 3547—திரு. மு. தென்னவன் : மாண்புமிகு
உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு செயல்
படும் இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும்
இராமநாதபுரம் கூட்டுறவு விற்பனை இணையம் இராமநாத
புரத்திற்கு கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனை
யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியினை இராமநாதபுரத்திற்கு கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இராமநாதபுரம் கூட்டுறவு விற்பனை இணையம் என்று எதுவும் மதுரையில் செயல்படவில்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஆஸ்திப் பொறுப்புக்களை புதிய மாவட்டங்களுக்கு மாற்றம் செய்வதற்கு பம்பாயிலுள்ள இந்திய தலைமை வங்கியிடம் கோரப்பட்ட ஒப்பளிப்பும், இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகத்தை மதுரையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்ற இந்திய தலைமை வங்கியிடம் கோரப்பட்ட அனுமதியும் கிடைத்த பின்னர், இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையிடம் இராமநாதபுரத்திற்கு மாற்றப்பட உள்ளது.

86—

**தமிழ்நாட்டிலுள்ள நியாய விலை கடைகளின் எண்ணிக்கை.**

வினா எண். 4086—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நமது மாநிலத்தில் உள்ள நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவற்றை மேலும் அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) தற்போது நமது மாநிலத்தில் 21,977 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) 1,200 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரித்து புதிய கடைகளைத் திறக்கும் செயற்குறிப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1993 பிப்ரவரி 10

87—

போளூர் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் சுயசேவைப் பிரிவு ஏற்படுத்துதல்.

வினா எண் 6867—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியில் சுயசேவைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

88—

கட்டயங்காடு கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 7303—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு கூட்டுறவு வங்கி, ஒட்டங்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் 1971 ஆம் ஆண்டிலேயே இணைக்கப்பட்டு விட்டதால், புதிய கட்டிடம் கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.



1993 பிப்ரவரி 10]

89—

கூட்டுறவுச் சங்கங்களின் முழுநேரப் பணிபுரியும் செயலாளர்களின் நியமன முறை.

வினா எண் 7735—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களின் முழு நேரப் பணிபுரியும் செயலாளர்கள் கூட்டுறவுத் துறை மூலம் நியமிக்கப்படுகிறார்களா அல்லது சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களே நேரடியாக நியமிக்கின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுச் சங்கங்களில் முழுநேரம் பணிபுரியும் செயலாளர்கள் கூட்டுறவுத்துறை மூலமாக நியமிக்கப்படுவதில்லை. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 73-ன்படி கூட்டுறவுச்சங்கங்களில் முழு நேரம் பணிபுரியும் செயலாளர்களும் மற்றும் அனைத்து ஊழியர்களும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

90—

வால்பாறை தேயிலைத் தோட்ட மருத்துவமனைகள்.

வினா எண் 11573—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் எத்தனை Group Hospitals மற்றும் Garden Hospitals செயல்படுகின்றன?

(ஆ) இவைகள் பிளாண்டேசன் லேபர் ஆக்ட் (Plantations Labour Act, ) 1951-ன்படி அமைத்து செயல்படுகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்:

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் உள்ள தொகுதி மருத்துவ மனைகளின் எண்ணிக்கை—ஏதுமில்லை.

வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் உள்ள தோட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை—13.

வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் உள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை—25.

(ஆ) மேற்படி தோட்ட மருத்துவமனைகள் தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் மருத்துவ திட்ட அங்கீகாரம் வழங்கப்பட்ட அரசாணைகளின்படி செயல்பட்டு வருகின்றன. மேலும் உதகை, உதவி மருத்துவரின் (தோட்டங்கள்) ஆய்வின் போது குறைகள் காணப்படின் தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

91—

## தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தி.

வினா எண் 6526—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தி ஆண்டு வாரியாக எவ்வளவு?

(ஆ) கடலெண்ணெய் உற்பத்தி பற்றாக்குறை காரணமாக வெளி மாநிலங்களிலிருந்து கடந்த 3 ஆண்டுகளில் நிலக்கடலை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?





விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நிலக் கடலை உற்பத்தி ஆண்டு வாரியாக விவரம் வருமாறு.—

### நிலக்கடலை உற்பத்தி விவரம்.

(அளவு: இலட்சம் டன்னில்.)

| பொருள். | 1988-89. | 1989-90. | 1990-91. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நிலக்கடலை .. .. | 10.94 | 12.11 | 11.79 |

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டிற்கு வெளிமாநிலங்களிலிருந்து பெற்ற நிலக்கடலை விவரம்:

(அளவு: டன்னில்.)

| விவரம். | 1988-89. | 1989-90. | 1990-91. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆறு மற்றும் இரயில் மூலமாகப் பெறப் பட்டவை. | 53 | 97 | விவரங்கள் பெறப்பட வில்லை. |
| சாலை வழி மூலமாகப் பெறப்பட்டவை. | 25,678 | 21,246 | விவரங்கள் பெறப்பட வில்லை. |
| மொத்தம் .. | 25,731 | 21,343 | |

92—

## கட்டிடத் தொழிலாளர்களுக்கென வீட்டுவசதி திட்டத்தில் ஒதுக்கீடு

வினா எண் 8686—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசின் வீட்டு வசதித் திட்டங்களில் நலிந்தோருக் கான பிரிவில் கட்டிடத் தொழிலாளர்களுக்கு என குறிப்பிட்ட சதவிகிதம் வீடுகள் ஒதுக்க நிர்ணயிக்கக் கோரி தமிழ் மாநில கட்டிடத் தொழிலாளர் சங்கம் அரசுக்கு முறையீடு செய் திருக்கிறதா?

[1993 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவென்ன?

விடை —

மாண்புமிகு திரு.டி.எம்.செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) முறையீடு செய்திருந்தது.

(ஆ) ஏற்கனவே பல பிரிவினருக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மனைகள் வீடுகள் ஒதுக்கீடு சம்பந்தமாக தனி விழுக்காடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாலும், பொதுமக்களுக்கு என்று 37 சதவீதம் மட்டுமே உள்ளதாலும் அக்கோரிக்கை நிறைவேற்ற இயலாது எனத் தெரிவிக்கப்பட்டது.

93—

**அழகிய பாண்டிபுரத்தில் வீட்டு வசதி வாரிய கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.**

வினா எண் 8786—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் அழகிய பாண்டிபுரத்தில் வீட்டு வசதி வாரிய கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

இல்லை. அழகிய பாண்டியபுரம் மக்கள் தங்களது வீட்டு வசதி தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு திருநெல்வேலி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பயனடையலாம்.



1993 பிப்ரவரி 10]

94—

**நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா மற்றும் மூன்று சக்கர வண்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை.**

வினா எண் 5133—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் அனுமதிக்கப்பட்டு 1988-89, 1989-90, 1990-91, ஆகிய ஆண்டுகளில் நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா மற்றும் மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் விண்ணப்பித்தவர்கள் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இவற்றிற்காக வங்கிகள் மூலம் அளிக்கப்பட்ட கடனுதவி எவ்வளவு?

(இ) இவற்றிற்காக அரசின் மானிய உதவி எவ்வளவு?

விடை —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

| | சாணார்பட்டி யூனியன். 1988-89. 1989-90, 1990-91, | நத்தம் யூனியன். 1988-89, 1989-90, 1990-91. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) 1. விசை பொருத்திய சைக்கிள் ரிக்ஷா விண்ணப்பித்தவர்கள். | ஜூலை 1989ல் இரண்டு பேர் விண்ணப்பித்துள்ளார்கள். | |
| 2. மூன்று சக்கர வண்டிகள் விண்ணப்பித்தவர்கள். | | |
| (ஆ) வங்கி மூலம் அளிக்கப்பட்ட கடனுதவி. | வழங்கப்படவில்லை. | வழங்கப்படவில்லை. |
| (இ) அரசு மானியம் | ஷை | ஷை |

விண்ணப்பித்த இருவருக்கும் வங்கியில் கடன் அனுமதிக்கப்படவில்லை.

[1993 பிப்ரவரி 10

95—

போளூரில் ஆதிதிராவிடர் மாணவர் மாணவிகள் நல விடுதிகள்.

வினா எண் 6808—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூரில் ஆதி திராவிட நல மாணவர் விடுதி ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே விடுதிகள் அமைக்க (கட்டிடம்) அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ). போளூர் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி கட்டுவதற்கு 8-12-1990-ல் ஆணையிடப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. போளூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுவதற்கு வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப இப்பணியை மேற்கொள்வது பற்றி கருதப் படும்.

96—

அறகளூர் ஆதிதிராவிடர் பள்ளி மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 8815—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் அறகளூர் ஆதி திராவிடர் பள்ளி மாணவர்கள் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?



1993 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைக்கேற்ப இது பரிசீலிக்கப்படும்.

97—

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்கு அளிக்கப்படும் தொகையை உயர்த் துதல்.

வினா எண். 641—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற் படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்கு மாதா மாதம் உணவுக்காக வழங்கப்படும் தொகை விலைவாசிப் புள்ளிப்படி குறைவு என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் பற்றி ஒரு செயற்குறிப்பு தனியே ஆய்வில் உள்ளது.

98—

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி தாமிரபரணி நதிக்கரையில் சலவைக் கூடம் அமைத்தல்.

வினா எண். 11693—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக் குறிச்சி பேரூ ராட்சி, தாமிரபரணி நதியோரக் கரையில் சலவைத் தொழி லாளர்கட்கு சலவைக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம்
மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

இல்லை

99—

சிறுதொழில் வளர்ச்சிக்கு அரசு மானிய உதவி
மற்றும் கடன் உதவி.

வினா. எண். 5707—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்பு
மிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா :—

(அ) சிறுதொழில் வளர்ச்சிக்காக என்ன நெறிமுறைகள்
அடிப்படையில் அரசு மானிய உதவி மற்றும் கடனுதவி
அளிக்கப்படுகின்றன.

(ஆ) நத்தம் தொகுதில் 1988—89, 1989—90,
1990—91 ஆகிய நிதியாண்டுகளில் சிறு தொழில் வளர்ச்சி
திட்டத்தின் கீழ் அரசு மானிய உதவி மற்றும் கடன்
உதவி பெற்று தொழில் தொடங்கியோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவர்களுக்கு அரசு வழங்கிய மொத்த மானிய உதவி
மற்றும் கடனுதவி எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்
துறை அமைச்சர் :

(அ) அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள பின் தங்கிய மற்றும்
மிகவும் பின்தங்கிய வட்டங்களில் சிறு தொழில்கள் மற்றும்
அரசு சார்புடைய அமைப்புகளால் நிறுவப்படும் தொழில்
வளாகங்கள் தொழில்பேட்டைகள் ஆகியவற்றில் உள்ள சிறு
தொழில்களுக்கு அதன் நிலையான சொத்துக்களில் 15 விழுக்காடு
வரை முதலீடு உதவித்தொகை அதிகபட்சம்
ரூ. 15.00 லட்சம் வரை ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும்
அளிக்கப்படும். அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள மிகவும்
பின்தங்கிய வட்டங்களில் அமைந்துள்ள தொழில் நிலையங்க
களுக்கு உதவித் தொகை 19—9—1991 முதல் 15 விழுக்காட்டி
லிருந்து 20 விழுக்காடு அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.
இது அதிகபட்சம் ரூ. 20.00 இலட்சமாக இருக்கும். இரும்பு
மற்றும் எஃகுகளை சுத்தப்படுத்துதல், அலுமினியத்தை
சுத்தப்படுத்துதல். கேல்சியம் கார்பைட் போன்ற தொழில்





நிலையங்கள் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியற்றவையாகும்.
சிறப்பு மாநில முதலீட்டு மூலதன உதவித் தொகை மின்னணுத்
தொழில்களுக்கு 20 விழுக்காடு அதிகபட்சம் 35 இலட்சமும்
தோல் பதனிடும் தொழில்களுக்கு 20 இலட்சமும் ஆட்டோ
மருந்துகள் போன்றவற்றிற்கு ரூ. 15.00 இலட்சமும் அளிக்கப்
படும்.

2. தொழில் நிலையங்கள், உற்பத்தியினைத் துவக்கிய
நாளிலிருந்து ஓராண்டிற்குள், உதவித் தொகை பெறுவதற்குரிய
விண்ணப்பங்களை தாக்கல் செய்ய வேண்டும். குறைந்
தழுத்த மின்சாரத்தை பயன்படுத்துகிற 1—1—1980-லிருந்து
உற்பத்தியைத் துவக்கிய பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்
களும் குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகைத் தொகை
பெறத் தகுதியுடையதாகும். தகுதிச் சான்றிதழ் பெறு
வதற்குரிய விண்ணப்பங்கள், உற்பத்தியினைத் துவக்கிய
நாளிலிருந்து அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில்
எது பின்னரோ, அந்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள்
தாக்கல் செய்ய வேண்டும். மிகவும் பின்தங்கிய வட்டங்களில்
அமைந்துள்ளவை, மற்றும் புதுக்கோட்டை, மானாமதுரை
மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள ''தமிழ்நாடு தொழில்
மேம்பாட்டுக் கழக'' தொழில் வளாகங்களில் அமைந்துள்ள
அனைத்து புதிய சிறு தொழில்கள், 18—4—1990 அல்லது
இதற்கு பிறகு உற்பத்தியினைத் துவக்கியிருந்தால் அவைகள்
செலுத்த வேண்டிய விற்பனை வரியை அந்நிறுவனங்கள் மொத்த
முதலீட்டில் அளவிற்கு மிகாமல் ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளுபடி
சலுகை பெற தகுதி உடையவைகளாகும். மேற்சொன்ன
பகுதிகளில் ஏற்கனவே இருந்து வரும் தொழில் நிலையங்கள்
தங்களது விரிவாக்கம் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியவற்றில்
ஈடுபட்டுள்ளவைகள், ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளுபடி சலுகை
பெற தகுதி உடையவைகளாகும். இது விரிவாக்கம் மற்றும்
மாற்றியமைத்தல் ஆகியவற்றின் கீழ் நிலையான சொத்துக்
களில் செலுத்தப்பட்ட மொத்த முதலீடு அளவிற்குள் இருக்க
வேண்டும். பின்தங்கிய வட்டங்கள் மற்றும் எவ்வித அரசு
சார்பு அமைப்புகளினாலும் செப்பனிடப்பட்ட தொழிற்
பேட்டைகள் ஆகியவற்றில் அமைந்துள்ள புதிய தொழில்
நிலையங்கள் 18—4—1990 மற்றும் அதற்குப் பிறகும் உற்பத்தி
யினைத் துவக்கியிருந்தால், அத்தகைய தொழில் நிலையங்கள்,
9 ஆண்டுகள் வரை விற்பனை வரித் தள்ளி வைப்பிற்கு தகுதியுடை
யவையாகும். இது நிலையான சொத்துக்களில் செலுத்தப்பட்ட
மொத்த மூலதனம் முழு அளவிற்கும் பொருந்தும். விரிவாக்கம்
அல்லது மாற்றியமைத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஏற்
கனவே இருந்து வரும் தொழில் நிலையங்களுக்கு விற்பனை
வரித் தள்ளிவைப்பு 9 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அவ்
வாறு வழங்கப்படும் மொத்தத் தொகை, நிலையான சொத்துக்
களில் 80 விழுக்காட்டிற்கு அதிகமாக இருக்கலாகாது. இவ்
வாறு தள்ளி வைக்கப்பட்ட தொகையானது 10-வது மற்றும்

[1993 பிப்ரவரி 10

11-வது ஆண்டுகளிலிருந்து வட்டியின்றி செலுத்தப்பட வேண்டும். இதர பகுதிகளிலுள்ள புதிய தொழில் நிலையங்கள், 18—4—1990-க்குப் பிறகு உற்பத்தியினைத் துவக்கியிருந்தால், ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரித் தள்ளிவைப்பிற்கு அவைகள் தகுதியுடையவையாகும். இது நிலையான சொத்துக்களில் செலுத் த்ப்பட்ட மொத்த முதலீட்டில் அதிகபட்சமாக 60 விழுக்காடு அளவிற்கு இருக்கும். மற்றும் விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள புதிய தொழில் நிலையங்கள், ஐந்தாண்டுகளுக்கு இந்த விற்பனை வரித் தள்ளிவைப்பிற்கு தகுதியுடையவையாகும். இது நிலையான சொத்துக்களில் செலுத்தப்பட்ட கூடுதல் முதலீட்டில் அதிக பட்சம் 50 விழுக்காடு அளவிற்கு இருக்கும். தள்ளிவைக்கப்பட்ட தொகையானது 6 மற்றும் 7-வது ஆண்டுகளிலிருந்து வட்டி யின்றி திரும்பச் செலுத்தப்பட வேண்டும். கீழ்க்கண்ட மரபு வழியிலான மற்றும் வள அடிப்படையிலான மின்சாரத்தை பயன் படுத்துகின்ற தொழில்கள் நீங்கலாக அனைத்து சிறு தொழில் நிலையங்கள், 22—5—1981-க்குப் பிறகு புதிய ஜெனரேட்டரை பொருத்தியிருந்தால், இத்தகைய தொழில் நிலையங்கள் 15 விழுக்காடு ஜெனரேட்டர் உதவித் தொகை பெறத் தகுதி யுடையவையாகும்.

1. சிமிட்டி
2. சர்க்கரை
3. ஜவுளித் தொழில்கள்
4. கனிமம் கல்வெட்டி எடுப்பது
5. மாவு ஆலைகள்
6. உணவகங்கள்
7. உணவு எண்ணெய்கள் மற்றும் கரைசல் பொருட்கள்
8. அரிசி ஆலைகள்
9. சுத்திகரிக்கப்பட்ட நீர், குளிர்பானங்கள் மற்றும் ''மால்ட்'' பிரித்தெடுத்தல்.
10. கருங்கல் பளபளப்பாக்கும் தொழில் நிலையங்கள் (கனிமம் மற்றும் கல்வெட்டி எடுத்தலுக்கு சம்பந்தப் பட்டவை.)
11. ஜவுளித் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட துணிகளைப் பக்குவப்படுத்துதல் முதலியன.
12. மட்பாண்டப் பொருள் உற்பத்தி மற்றும் அதிக மின்சாரம் நுகரும் 2,000 கிலோ வாட்டுக்கும் அதிகமாய் மின்சாரம் தேவைப்படும் இரும்பு மற்றும் அலுமினியத் தொழில்கள்.



1993 பிப்ரவரி 10]

(தொகை ரூபாய் இலட்சத்தில்).

ஆ. நத்தம் வட்டம். (1988-89)

| | தொழில் நிலைய எண்ணிக்கை. | |
|---|---|---|
| 1. வட்டியில்லா விற்பனை வரிக் கடன் | 1 | 0.84 |
| 2. குறைந்தழுத்த மின் கட்டண உதவித் தொகை. | 2 | 0.06 |
| 3. மாவட்டத் தொழில் மையக் கடன்கள். | 2 | 0.50 |
| | 5 | 1.40 |

(1989-90)—

| | | |
|---|---|---|
| 1. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் | 1 | 0.35 |
| 2. குறைந்தழுத்த மின் கட்டண உதவித் தொகை. | 2 | 0.01 |
| | 3 | 0.36 |

(1990-91)—

| | | |
|---|---|---|
| 1. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் | 1 | 0.35 |
| 2. குறைந்தழுத்த மின்கட்டண உதவித் தொகை. | 3 | 0.03 |
| | 4 | 0.38 |

(இ) இது போன்ற சிறு தொழில் நிலையங்களுக்கு அளிக் கப்பட்ட மொத்த உதவித் தொகை மற்றும் கடன்கள் :

| | |
|---|---|
| 1988-89 .. .. .. | 1.40 |
| 1989-90 .. .. .. | 0.36 |
| 1990-91 | [illegible] |

00—

## நத்தம் தொகுதியில் பட்டு வளர்ப்புத் திட்டம்.

வினா எண். 5969— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நத்தம் தொகுதியில் எந்தெந்த கிராமங்களில் பட்டுப்பூச்சி வளர்க்க எவ்வளவு நிலங்கள் பட்டு வளர்ப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன?

(ஆ) ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நத்தம் கிராமத்தில் மட்டும் 1982-83 ஆம் ஆண்டு முதல் 1988-89 ஆம் ஆண்டு வரை 3.30 ஏக்கர் பரப்பளவுக்கு குத்தகைக்கு தனியார் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு விளக்க பட்டுப் பண்ணையாக செயல்பட்டது. அதன் பின் 1989-90 முதல் வேறொரு தனியார் குத்தகை நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் முடிய 1.50 ஏக்கர் பரப்பில் அரசு விளக்க பட்டுப் பண்ணை செயல்பட்டு வந்தது. நத்தம் தொகுதியில் வேறு எந்த கிராமத்திலும் அரசு பட்டுப் பண்ணைகள் அமைப்பதற்காக அரசு நிலங்களை எடுக்கவில்லை. இந்தப் பட்டுப் பண்ணை விளக்கப் பண்ணையாக செயல் பட்டதுடன் கூடுதலாக அப்பண்ணையில் உற்பத்தி செய்யப பட்ட மல்பரி இலைகளை உபயோகப்படுத்தி பட்டுப் பூச்சி யும் வளர்க்கப்பட்டது. மேற் குறிப்பிட்ட 3.30 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் தான் எடுக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்தப்படவில்லை. இப்பகுதியிலுள்ள விவசாயிகளே புழு வளர்ப்பு நுணுக்கங்களை அறிந்து கொண்டதால், இந்த விளக்கப் பண்ணை செயல்படத் தேவையில்லை எனக் கருதி இதன் செயல்பாடுகள் 30—6—1990 அன்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஏற்கனவே குறிப்பிட்டது போல் 1982-83 முதல் 1989-90 வரை நத்தம் கிராமத்தில் தான் குத்தகை நிலத்தில் அரசுப் பட்டுப் பண்ணை அமைத்து





பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்தது. தற்போது இந்த நிலம் அரசுக் கட்டுப்பாட்டில் இல்லை. மேலும் தனியார் குத்தகை நிலங்களில் அரசுப் பண்ணைகள் செயல்பட வேண்டாம் என்று கொள்கையளவில் முடிவு எடுத்த காரணத் தால், மேற்படி நத்தம் பட்டுப் பண்ணை 30—6—1990-க்குப் பின் நிலச் சொந்தக்காரரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற் றது என்பதைக் குறிக்கும்.

## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. (குறுக் கீடு).

டாக்டர் தே. குமரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங் கள் (குறுக்கீடுகள்). என்னுடைய அறையிலே வந்து நீங்கள் கேட்டீர்கள். உங்களுக்கு விளக்கம் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு). அப்போது என்னுடைய அறையில் வந்து நீங்கள் கேட்டிருக்க வேண்டியதே இல்லை. (குறுக்கீடு). உங்களு டைய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் என்னுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இன்று இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. துறையிலிருந்து பதில் வந்தவுடன் உங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படும். (குறுக்கீடுகள்). ஏறத்தாழ என்னிடத்தில் 100—130 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. 130 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் நீங்கள் நாள் தோறும் நின்று கொண்டிருந் தால் அவையின் நடவடிக்கையை நடத்த முடியாது, உட்காருங் கள் (குறுக்கீடுகள்). அரசாங்கத்திடமிருந்து எனக்குப் பதில் வந்தவுடன் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு இரண்டு முக்கிய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக் கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு). தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு). நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் (குறுக்கீடு).

முற்பகல் 11-05.

டாக்டர் தே. குமரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பரவாயில்லை என்று சொல்வது சரியல்ல. (குறுக்கீடு) குமாரதாஸ் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் பேசுகிறபோது பேசலாம். (குறுக்கீடு) நான் இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து கேட்ட போது சொன்னேன் (குறுக்கீடுகள்). உங்கள் விருப்பத்திற்கேற்ப விதிகளைத் தளர்த்தி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நாள்தோறும் கேள்வி நேரம் முடிந்தவுடன் இதேமாதிரி எடுத் தால் —100, 130 பேர் கொடுத்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) 100, 130 பேர்களும் இதே முறையில் எழுந்து சத்தமிடுவதை அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 'சீரோ அவர்' . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலரும் கவன ஈர்ப்புத்தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை, 25,000 வீடுகளை இழந்த பிரச்சினை பற்றி எழுப்புகிற நேரத்தில் இந்த நாளில் எடுத்துக்கொள்கிறேன் என்று நீங்கள் சொல்வது கூட அவ களுக்கு ஓரளவுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும். அந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற எம்.எல்.ஏ-க்கள் பெரிய அளவில் பதட்டம் அடைந்திருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையை எப்போது எடுத்துக்கொள்ளலாம், எப்போது எடுத்துக்கொள்வேன் என்று அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது விதி 55-ன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாப் பிரச்சினைகளிலும் இது தான் முக்கியமானது. மற்றவையெல்லாம் முக்கியம் அல்ல என்று கருத முடியாது. (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல் வதைக் கேட்கவேண்டும். குமாரதாஸ், நீங்கள் கொடுத்ததுதான் முக்கியம் என்று சொன்னால் எப்படி? (குறுக்கீடு) அதேபோன்று





கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சினையைப் பற்றி கன்னியாகுமரி மாவட்ட மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கொடுத்திருப் பார்கள். (குறுக்கீடு) நான் பழையபடியும் விதிகளை நினைவு படுத்தவேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். ' (interruption) A member while speaking must not use his right of speech for the purpose of obstructing the procedings of the Assembly".

டாக்டர் தே. குமாரதாஸ் : விதியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி இல்லை என்றால் நீங்கள் யார்? நான் யார்? (குறுக்கீடு) விதி இருப்பதால்தான் நீங்கள் உறுப்பினர். நான் பேரவைத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விதி இல்லை என்றால் இந்த நேரத்தில் நீங்கள் எழுந்து நிற்பதற்கே உரிமை இல்லை. இந்த விதிகள்தான் (குறுக்கீடு) உங்களுக்கு உறுப்பினர் ஆகிற தகுதியையும் எனக்குச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஆக இருக்கிற உரிமையையும் கொடுத்திருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விதிகளைப் பற்றிக் கவலை இல்லை என்று சொன்னால் நீங்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடு) இந்த விதிகளைப் பற்றிக் கவலை இல்லை என்று சொல்கிறபோது நீங்கள் இந்த அவையில் இருக்க வேண்டியதில்லை. (குறுக்கீடு) இந்த விதிகளைப் பற்றிக் கவலைப் படாத உறுப்பினர் இந்த அவையிலே இருக்க வேண்டியதில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து திரு. குமாரதாஸ் வெளியேறலாம். (குறுக்கீடு) அவை நடவடிக்கைக்குக் குந்தகம் செய்யும் திரு. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) மார்ஷல், திரு. குமாரதாஸை வெளியேற்றவும். திரு. குமாரதாஸை அவையை விட்டு அப்புறப்படுத்தவும்.

(திரு. குமாரதாஸ் அவையில் இருந்து பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுகிறபோது பேசலாம் என்று கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) எழுத்து மூலமாக உங்களுக்கு எழுத்து மூலமாக, நான் உங்களுக்குக் கொடுத்து இருக்கிறேன். . . .

திரு. சி. ஞானசேகரன் : ஸ்பீக்கர் சார், மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை.

திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. குமார தாஸ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. அவரை நான் வெளியேற்றிவிட்டேன். எனவே அதுபற்றிப் பேச வேண்டாம். அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது, உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் வலியுறுத்த வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சிங்காரம் தன்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தாத காரணத்தால் பேரவையின் ஒப்புதலோடு அது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

### தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங் களின் காவேரி பாசன நெற்பயிர்களைப் பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடவேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கு. தங்கமுத்து, கு. சீனிவாசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் போன்ற பகுதிகள் காவேரி, கல்லணைக் கால்வாய் வடவாறு பாசனப் பகுதிகளில் மற்றும் வெண்ணாறு, வெட்டாறு போன்ற பாசனப் பகுதிகளில் நெல் தாளடிப்பயிர் தண்ணீர் தட்டுப்பாட்டால் காய்ந்துவிடும் நிலை உள்ளதால் அதற்கு ஒரு முறை தண்ணீர்ப் பாசனம் தரும் மேட்டூரிலிருந்து குறைந்த பட்சம் 10 தினங்களுக்காவது பாசனம் தரும் வகையில் தண் ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற கவன ஈர்ப்புத் தீர் மானத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து....



முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ளதைப் படித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்று சொல்லவேண்டும்.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களிலுள்ள காவேரி பாசனப் பகுதிகளிலுள்ள நெற் பயிர்களை பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடவேண்டியது'' குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

### அறிக்கை.

அரசு ஆணை வாலாயம் எண் 690, பொதுப்பணித்துறை, நாள் 3—6—1992-ன்படி 28—1—1993 அன்று படுகைப் பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில் காவிரிப் படுகை பாசனப் பகுதிகளில் உள்ள தாளடி நெற்பயிர்களைக் காப்பாற்று வதற்காக, விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கையின் அடிப் படையில் 7—2—1993—லிருந்து 7 நாட்களுக்கு, மேட்டூர் அணை யிலிருந்து நாள் ஒன்றுக்கு 10,000 மில்லியன் கன அடி (கியூசக்ஸ்) விதம் மொத்தம் 6.048 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடுவதற்கு அரசு ஆணை வாலாயம் எண் 124, நாள் ; 6—2—1993—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி.வி. இராஜேந் திரன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். நீங்கள் அங்கேயிருந்துகொண்டு பேசிக் கொண் டிருக்க வேண்டாம்.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்த அடுத்த நாளே காவிரி நீர் பாசன பகுதி மக்களுடைய நிலையினை உணர்ந்து, தேவையினை உணர்ந்து இதய தெய்வம் டாக்டர்

[திரு. கு. தங்கமுத்து] [1993 பிப்ரவரி 10

புரட்சித் தலைவி அவர்களின் அரசானது (மேசையைத் தட்டும்
ஒலி) தாளடி பயிர்களுக்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும்
நிலைமையை நாங்கள் கேட்காமலேயே உணர்ந்து திறந்து
விட்டு காவிரி நீர் பாசனப் பகுதி மக்கள் பயன அடைகின்ற
நிலைமையை உருவாக்கியதற்காக நான் தஞ்சை மாவட்டம்,
நாகை—காயிதே மில்லத் மாவட்டப் பகுதி மக்களின் சார்பாக
வும், காவிரி பாசனப் பகுதி விவசாயிகளின் சார்பாகவும் முத
லிலே நன்றியை இதய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இதைப்போல், இப்போது திறந்து விடப்பட்டிருக்கிற தண்ணீர்
7 தினங்களுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடை
மடைப் பகுதிகளைப் பொறுத்தவரை இன்னும் குறைந்த பட்சம்
3 தினங்களுக்கு நீடித்துக் கொடுத்தால் எல்லா பகுதி மக்களுக்
கும் பயப்படும் சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்தினால்
அரசு இதையும் நிறைவேற்றித் தருமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, 2,54,213 ஏக்கர் நிலங்களுக்கு
பாசன வசதி கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு
இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்
பேரில் உடனடியாக தஞ்சை மற்றும் நாகை—காயிதே மில்லத்
மாவட்டங்களினுடைய விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று
இந்த அரசு நடவடிக்கை எடுத்து இப்போது தண்ணீர் பாய்ந்து
கொண்டிருக்கிறது. ஏழு நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்
படும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீர்
போதவில்லை என்று சொன்னால் நெற்பயிர்களைக் காப்பாற்று
வதற்கு தேவை என்று அரசு கருதுமானால் உறுப்பினர்களுடைய
கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. கு. சீனிவாசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை, நாகை—காயிதே மில்லத் மாவட்டங்களில்
விவசாயப் பெருங்குடி மக்களுடைய வேதனையை உணர்ந்த
முதல்வராக இருக்கின்ற காரணத்தினாலே விவசாயப் பெருங்
குடி மக்களுடைய குறையைத் தீர்க்கும் வகையிலே அந்தப்
பகுதியிலே வாடுகின்ற பயிர்களுக்கு தண்ணீரை ஒரு வாரத்திற்குத்
திறந்து விட உத்தரவிட்டு விவசாயப் பெருங்குடி மக்களு
டைய வேதனையைத் தீர்த்திருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்து, இங்கே ஒரு வார காலம் தண்ணீர்
திறந்துவிடப்பட்டாலும் இன்னும் சட்ட மன்ற உறுப்பினர்
திரு. தங்கமுத்து அவர்கள் கூறியதைப் போல, மூன்று நாட்
களுக்குக் கூடுதலாக தண்ணீர் திறந்து விடவேண்டும். இல்லை
யென்றால் தண்ணீரை அங்கே தடுக்கின்ற போது, மேலும்
மூன்று நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கான அளவுக்
குத் தண்ணீரை தேக்கி வைத்தாவது, அந்தத் தண்ணீரைக் திறந்து
விட்டு பிறகு தண்ணீரை மூடவேண்டும் என்ற வேண்டுகோளை
வைத்து அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.



1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி இருக்
கிறேன், 7 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று.
ஏனென்றால் தண்ணீரை நாங்கள் கொடுக்கின்ற போது,
தண்ணீர் வீணாகி விடக்கூடாது. இருக்கின்ற நிலங்களுக்கு
விடப்படும் தண்ணீர் போதும் என்று அதிகாரிகள் தெரிவித்ததன்
அடிப்படையிலே ஏழு நாட்களுக்குக் கொடுக்கிறோம். நான்
ஏற்கனவே தெரிவித்ததுபோல, அந்தப் பயிர்களைக் காப்பாற்ற
மேலும் மூன்று நாட்களுக்கு வேண்டுமென்று சொன்னால், அது
கல்லணையிலே தேக்கி வைக்கிறோமா அல்லது நேரடியாக
தருகிறோமா என்பது பிரச்சினையல்ல. அங்கு தண்ணீர் போக
வில்லை என்ற நிலைமை இருக்குமானால் உடனடியாக அதி
காரிகளைத் தொடர்பு கொண்டு பயிர்களைக் காப்பாற்று
வதற்கு மேலும் 3 நாட்களுக்கு நீட்டித்துக் தரப்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள்
குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது
நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள்
குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற
றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்)
தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் மீது பொது
நிறுவனங்கள் குழு (1990-91) அளித்த ஐம்பத்தைந்தாவது
அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்
கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தி மூன்றாவது
அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982–83
மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில்
(வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள்
குறித்து பொது நிறுவனங்கள் குழு (1991–92) அளித்த பதி
னேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு
எடுத்த நடவடிக்கை பற்றிய எண்பத்தி நான்காவது அறிக்கை.

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம்
ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு ஆதி திரா
விடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடர்பான பத்தி குறித்து
பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த இருபத்திரெண்
டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு
மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தைந்
தாவது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்
றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் (வணிகம்)
மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1991-92) முப்பதாவது
அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை மீது அரசு மேற்கொண்டு
எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய எண்பத்தாறாவது
அறிக்கை.

5. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்
பாட்டுக் கழகத்தின் செயல்பாடு குறித்த (1992-93) ஆம்
ஆண்டிற்கான எண்பத்தேழாவது அறிக்கை.

## 6. சட்டமுன் வடிவு (அறிமுகம் செய்தல்.)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்
வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்
டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச்
சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை
அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்
(தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் . . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ் நீங்கள்
Technical ஆக object பண்ணுகிறீர்களா? அல்லது நான் object
பண்ணுகிறேன் என்று மட்டும் சொல்லுகிறீர்களா ?

Thiru S. SUNDARADOSS: Hon. Speaker Sir I oppose
the bill at the introduction stage itself.





மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்
(தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப்
பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு
மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம்
பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்.)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன்
அறிமுகம் செய்கிறேன்.

## 7. தீர்மானம்.

### விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவரின்
தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் 36 மற்றும்
37 ஆகியவற்றைத் தளர்த்தி, மேற்படி விதிகளில் விதி 95-ன்
கீழ் ஓர் அரசினர் தனித் தீர்மானம் கொண்டுவர அனுமதி
அளிக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

## 8. தனித் தீர்மானம்

சென்னைத் தொலைக்காட்சி நிலையம் இரவு 9 மணிவரை
தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்பவும் மாநில மொழிக்கு
மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தனித்
தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா வகுத்துத்
தந்த இருமொழிக் கொள்கையில் அனைத்து இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுதும் உறுதியாக
உள்ளது. தொடர்ந்து இக்கொள்கையில் உறுதியோடு இருக்
கும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மாநில ஆட்சிமொழி
யாகவும், ஆங்கிலம் அகில இந்திய தொடர்பு மொழியாகவும்
இருக்கவேண்டும் என்கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்ற
மும் இல்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. (மேசையைத்
தட்டும் ஒலி).

அண்மையில் மத்திய அரசு தொலைக்காட்சியில் தமிழ்மொழி
நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் நேரத்தை மாற்றி, இந்திமொழி
நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இத
னால் தமிழக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பது
மட்டுமல்ல சந்தேகமாக நம்மீது இந்தியைத் திணிக்க மீண்டும்
மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கருதி தமிழகம்
முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தமிழக மக்களின்
உணர்வுகளே எங்கள் உணர்வுகள் என்ற நிலையில் அந்த
உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவற்றை மத்திய
அரசுக்குத் தெரிவிக்கும் முகத்தான் ஒரு தீர்மானத்தை இந்தப்
பேரவையில் நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை எனக்
கருதி கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :



முற்பகல் 11-20

"கட்டாய இந்தி மொழித் திணிப்பு கூடாது என்று
பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், புரட்சித்
தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும்
தமிழக மக்களின் எண்ணத்தை வலியுறுத்தும் வகையில் இம்
மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்
றில் தெளிவுற வலியுறுத்தப்பட்ட இருமொழிக் கொள்கையைச்
செயற்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை
ஆகும். அதுவே தமிழக மக்கள் அனைவரின் முழுமையான
விருப்பம் ஆகும்.

இந்தி மொழி பேசாத மக்களின்மீது நேரடியாகவோ
அல்லது மறைமுகமாகவோ, இந்தி மொழியைத் திணிப்பதற்கான
நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருவது, இந்தி
மொழி பேசாத மக்களுக்குப் பெருங்கவலையையும், அச்சத்தையும்
ஏற்படுத்தி வருகின்றது. இந்தி மொழி பேசாத மக்கள் மாற்றம்
ஒன்றை விரும்பாதவரையிலும் ஆங்கிலமே இணையத்தின்
ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்ற உறுதி
மொழி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் தரப்பட்டு,
அவருக்குப் பின் வந்த பாரதப் பிரதமர்கள் அனைவராலும்
தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழி
யினை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்
என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

பேரறிஞர் அண்ணாவின் வழியில் புரட்சித் தலைவர்
எம். ஜி. ஆரின் அடிச்சுவட்டில் நடந்து வரும் தமிழக அரசு,
அப்பெருந்தகையோர்கள் கண் எனக் கட்டிக்காத்து வந்த
இருமொழிக் கொள்கையை எல்லா வகையிலும் செயல்படுத்தி
வருகிறது. தொடர்ந்து அதனைக் கட்டிக்காத்து தீவிரமாகப்
பின்பற்ற உறுதி பூண்டு உள்ளது.

இந்நிலையில், தமிழகத்திற்கு மட்டுமென்றே சென்னைத்
தொலைக்காட்சி நிலையத்தின் முதல் அலைவரிசை நிகழ்ச்சி
களை தமிழில் இரவு 9.00 மணி வரை ஒலிபரப்ப கொடுத்
திருந்த பிரத்தியோக அனுமதியை மைய அரசு தன்னிச்சை
யாக கடந்த 1-1-1993 முதல் இரவு 8-45 மணி வரைதான்
என்று குறைத்து ஆணையிட்டு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த நேரக்குறைப்பை ஈடு செய்யும் வகையில் தொலைக்
காட்சி தமிழ் நிகழ்ச்சிகள் முன் கூட்டியே தொடங்கப்படுகின்றன
என்ற முகாந்திரம் அளித்தாலும், இரவு 9-00 மணி வரை
காட்டப்பட்ட தமிழ் நிகழ்ச்சிகள் தற்போது 8-45 மணிக்கே
முடிவடைகின்றன என்பதையும், பெரும்பாலான மக்கள்
பார்க்கக் கூடிய இந்த நேரத்தை மைய அரசு குறைத்திருப்பது,
மறை முகமாக இந்தி மொழி ஆதிக்கத்தைப் புகுத்த
மேற்கொண்ட முயற்சியோ என்று ஐயுறத்தப்படுகிறது.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 பிப்ரவரி, 10

மேலும் தற்போது தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் அறிவியல் நிகழ்ச்சிகள், தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் மற்றும் உயர் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இந்திமொழி யிலேயே அமைந்துள்ளன. எனவே, தமிழகத்திலுள்ள மக்கள் இந்நிகழ்ச்சிகளினால் பயன்பெறும் வாய்ப்பை இழந்த நிலையில் உள்ளனர். மத்திய அரசின் தகவல் தொடர்பு சாதனங்கள் இந்த அளவு இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இந்தித் திணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோ என்ற ஐயப்பாட்டை தமிழக மக்கள் மனதில் ஏற்படுத்தி, ஒரு பதட்ட நிலையை உருவாக்கி உள்ளது.

தமிழக மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும், கவலைகளையும் முழுமையாகப் போக்கும் வகையில் மீண்டும் இரவு 9-00 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகளை சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர் ஒளிபரப்ப அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மாநில மொழியாகிய தமிழ் மொழிக்கு அரசமைப்புச் சட்டத்தில் கொடுத்துள்ள உரிய இடத்தை மதித்துச் செயல்படும் வகையிலும், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியைக் காக்கும் வகையிலும், மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் இம்மாமன்றம் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது''.

இத்தீர்மானம் தமிழக மக்களின் ஒட்டுமொத்த உள் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கட்சிப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். எனவே தீர்மானத்தை பேரவை ஒருமுகமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அனைவரையும் கேட்டுக்கொள்ளு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இத்தகைய தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்படுவது இன்றைய காலகட்டத்தின் அவசியம் என்று நானும் கருதுகிறேன். எனவே இதை ஒரு முகமாக நிறைவேற்றுகிற வகையில் விவாதமின்றி நிறைவேற் றலாமென்று கருதுகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்** : பேரவைத் தலைவர் அவர்கள், எங்களையும் கருத்து சொல்ல அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சரி. திரு. பீட்டர் அல்போன்ஸ்.



1993 பிப்ரவரி 10] முற்பகல் 11.25

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின் மீது இந்திய தேசிய காங் கிரஸ் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின்மீது காங்கிரஸ் கட்சி கொண்டுள்ள கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னால், இந்த தீர்மானத்தில் கண்டுள்ள சில தவறான தகவல்களை இந்த அவையின் மூலம் தமிழக மக்களுக்குத் தெரிவிக்கின்ற கடமை எனக்கு இருப்ப தாக அறிகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே நான்காவது பாராவில், ''இந் நிலையில், தமிழகத்திற்கு மட்டுமென்றே சென்னை தொலைக் காட்சி நிலையத்தின் முதல் அலை வரிசை நிகழ்ச்சிகளை தமிழில் இரவு 9.00 மணி வரை ஒளிபரப்ப கொடுத்திருந்த பிரத்தியேக அனுமதியை மைய அரசு தன்னிச்சையாக கடந்த 1.1.1993 முதல் இரவு 8.45 மணி வரைதான் என்று குறைத்து ஆணையிட்டு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது'' என்று சொல்லப்பட்டுள்ளது.

இதிலே 'தமிழகத்திற்கு மட்டுமென்றே' என்ற வார்த்தை எங்களைப் பொறுத்தவரை அரசியல் நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தின் உள்ளே செலுத்தப் பட்டிருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். இந்த அவையில் மைய அரசு ஆள்கிற காங் கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே, மைய அரசின் நடவடிக்கைகளை இந்த மாமன்றத்தின் மூலம் தமிழக மக்களுக்குக் கொண்டு வரவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

பொதுவாக தொலைக்காட்சியின் ஒளிபரப்புகள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன. ஒன்று நேஷனல் டெலி காஸ்ட். அதாவது தேசிய நிகழ்ச்சிகள். மற்றொன்று ரீஜனல் டெலிகாஸ்ட். அதாவது மாநில நிகழ்ச்சிகள். தேசிய நிகழ்ச்சிகள் என்பது இந்தியா என்கின்ற துணைக் கண்டம், இந்தியா என்கின்ற நிலப் பரப்பு, இந்தியா என்கிற நாடு எங்கெல்லாம் பரந்து இருக்கிறதோ, அது காஷ்மீராக இருந் தாலும் சரி, கன்னியாகுமரியாக இருந்தாலும் சரி, ஒரே நேரத்தில் ஒளிபரப்பப்படுவது நேஷனல் டெலிகாஸ்ட் என்று சொல்லப்படுகிற தேசிய நிகழ்ச்சி ஒன்றுதான். மாநில ஒளிபரப்பு என்பது அந்தந்த மாநிலங்கள் தங்கள் மொழிகளுக்கு தங்கள் கலாச்சாரத்திற்கு தங்கள் பண்பாட்டுக்கேற்றவாறு, அதற்குத் தகுந்தவாறு நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொள் கின்றன. இந்த தேசிய நிகழ்ச்சி என்பது, இன்று ஆங்கிலம்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1993 பிப்ரவரி 10

பேசுகின்ற வடகிழக்கு மாநிலமாக இருந்தாலும் சரி, காஷ்மீரி
பேசுகின்ற காஷ்மீர் மாநிலமாக இருந்தாலும் சரி, காஷ்மீரி
மொழி பேசுகின்ற ஒரிசா மாநிலமாக இருந்தாலும் சரி, ஓரியா
காளம் பேசுகின்ற மேற்கு வங்க மாநிலமாக இருந்தாலும் சரி, வங்
தெலுங்கு பேசுகின்ற ஆந்திரப், கன்னடம் பேசுகின்ற கர்நாட
கம், மலையாளம் பேசுகிற கேரளா, தமிழ் பேசுகிற தமிழ்
மாநிலம், இங்கு எல்லாம் ஒரு மணித்துளி கூட மாறுபாடு இல்லா
மல், எல்லா மக்களுக்கும் ,இந்த 80 கோடி ஜனத்தொகைக்கும்
ஒரே நேரத்தில்தான் ஒளிபரப்பப்படுகிறது.

அப்படி ஒளிபரப்பப்படுகிற நேரத்தில்தான் ஒரு சிறிய
மாற்றத்தை இன்றைய தினம் மத்திய அரசின் தொலைக்காட்சி
நிறுவனம் செய்திருக்கிறது. இதிலே, 'தமிழகத்திற்கு மட்டு
மென்றே' என்ற வார்த்தை எதற்காக வரவேண்டும் ஏன்
அந்த வார்த்தை இந்தத் தீர்மானத்திற்குள்ளே வரவேண்டும்
என்பதை நான் கேட்கிறேன். மரியாதைக்குரிய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது இதைத் தெளிவுபடுத்து
வார்கள் என்று நினைக்கிறேன்.

மகாலக் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை மத்திய அரசி
லிருந்து அமைத்திருக்கிறார்கள். அதாவது இன்றைய தினம்
தொலைக் காட்சி என்பது சமூகத் தொடர்பு சாதனம் என்று
. . . . . . . . (குறுக்கீடு)

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. பீட்டர் அல்
போன்ஸ், நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் பேசுகிறபோது சில
குறிப்புகள் தவறு என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அமைச்சர்
கள் அதற்குப் பதில் சொல்லக் கூடாதா ? நீங்கள் சொல்கிற
கருத்திலே கூட தவறு இருந்தாலும், அமைச்சர் சொல்கிற
போது, அதைத் திருத்திக் கொள்ளலாம், அல்லது மறுப்புத்
தெரிவிக்கலாம். அதற்கும் உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது
அல்லவா ?

*<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : பேரவைத்
தலைவர் அவர்களே, நான் அவருக்கு உதவுகிற முறையில்தான்
சொல்கிறேன். பண்டித நேரு அவர்கள் கொடுத்திருக்கிற
உறுதி மொழி தமிழகத்திற்கு மட்டும் தான். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : எதிர்க்கட்சித் தலைவர்



1993 பிப்ரவரி 10]

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தவறு. ஜவஹர்லால் நேரு
அவர்கள் கொடுத்த உறுதிமொழி இந்தி பேசாத மாநிலங்கள்
அனைத்துக்கும் பொருந்தும். தமிழகத்திற்கு மட்டுமல்ல
(குறுக்கீடு) இன்னும் சொல்லப் போனால் இந்தி பேசாத பகுதி
மாநிலங்கள். . . . (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : எதிர்க் கட்சித் தலைவர்
பேசிக் கொண்டிருக்கிறார்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u>: நாகாலாந்து விரும்பி
னாலும் கூட ஆங்கிலம் நீடிக்கும் என்பது, அரசியல் சட்டத்தி
லேயே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11.30.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u>: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியை எதிர்த்த மாநிலம்
தமிழ்நாடு மட்டும்தான். தமிழ்நாட்டுக்கு மட்டும் தான் அந்த
உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்கள் இந்
தியை ஏற்றுக் கொண்டு விட்டன. இப்போது தமிழ்நாட்டின்
மீது இந்தியைத் திணிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன
என்பது உண்மை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் உதகமண்ட
லத்துக்கு வந்த நமது உள்துறை அமைச்சர் அவர்கள் இந்தியா
விலே இரண்டு மாநிலங்கள் பிரிந்து போகின்றன.
ஒன்று காஷ்மீர் மத அடிப்படையில்; இன்னொன்று தமி
ழகம்; மொழி அடிப்படையில் என்று அச்சுறுத்தி சென்று இருக்
கிறார்கள். ஆகவே, இது திட்டமிட்டு நடைபெறுகின்ற செய்தி.
ஆகவேதான், நாங்கள் இந்த அளவிற்கு உணர்வோடு, தமிழ்
உணர்வோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக்கின்
றோம். நீங்கள் இந்தியை ஆதரிப்பது பற்றி எங்களுக்குக் கவலை
இல்லை.

<u>திரு. வி. தண்டாயுதபாணி</u>: பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்
கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அவர் பாயின்ட் ஆப் ஆர்
டர் என்று சொல்கிறார். என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேருஜியினுடைய உறுதிமொழி என்பது So long as non Hindi Speaking people......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எதிர்க்கடசித் தலைவர் சொல்லி விட்டார். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. (குறுக்கீடு) அந்த கிளாரிபிகேஷனை எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசலாம். (குறுக்கீடு). அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமரி அனந்தன், அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆப் ஆர்டர் இதிலே இல்லை என்று சொல்லி விட்டேன். பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லியதற்குப் பிறகு என்ன இருக்கிறது.? (குறுக்கீடுகள்) இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, (குறுக்கீடு) அதை எதிர்க் கட்சித் தலைவர் சொல்லி விட்டார். திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே எங்கள் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுவதற்கு நீங்கள் தொடர்ந்து அனுமதிக்கிறீர்கள் அவர் பேசுகிறார் ஆனால், இடையிலே இது பாயின்ட் ஆப் கிளாரிபி கேஷன். மரியாதைக்குரிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் கள் அவருக்கு பதில் சொல்கிற முகத்தான் சொல்கின்ற கருத் துக்கு அவர் மறுத்து அளிப்பார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடையிலே முடிக்கின்றபோது நீங்கள் இந்தியை ஆதரிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள். இந்தியை ஆதரித்து நாங்கள் யாரும் இல்லை. அவரும் இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடுகள்) திரு. செல்வராஜுக்கு உள்ள உரிமை, திரு. கே. பி. ராஜுக்கும் இருக்கும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, இந்தத் தீர்மானத்திலே 4-வது பாராவில் ஒரு தவறு இருப்பதாகச் சொன்னார். அதாவது, தமிழகத்திற்கு என்றே (குறுக்கீடு) 'தமிழகத்திற்கு மட்டும் என்றே' என்ற வார்த்தைகளை அவர் ஆட்சேபித்தார். அதாவது மத்திய அரசு என்ன மாற்றம் செய் தாலும் என்ன நேரத்தை ஒதுக்கினாலும் தேசிய நிகழ்ச்சி





களைப் பொறுத்தவரை எல்லா மாநிலங்களுக்கும் விரோதமான விதியைத்தான் அறிவித்து இருக்கிறது; முறையைத்தான் அறிவித்து இருக்கிறது என்பதை அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் என்னிடத்தில் உள்ள தகவலை அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை தொலைக்காட்சி நிலையம் மாலை 5.30 மணி முதல் இரவு 9 00 மணி வரை மண்டல ஒளிபரப்பில் தமிழ் மொழி நிகழ்ச்சிகளை ஒளி பரப்பி வந்தது. ஆனால் 1-1-1993 முதல் இதனை 5.00 மணி முதல் இரவு 8.45 மணி வரை என்று ஒளிபரப்பு நேரத்தை மத்திய அரசு மாற்றி உள்ளது. இந்தியாவில் உள்ள மற்ற எல்லா தொலைக் காட்சி நிலையங்களும் மாலை 5.30 மணி முதல் இரவு 8.40 மணி வரை ஒளிபரப்பிய சமயத்தில் அதாவது 1-1-1993-க்கு முன் தமிழகத்தில் மட்டும்தான் சிறப்பு இனமாக சென்னை தொலைக்காட்சி நிலையம் மாலை 5.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை அனுமதிக்கப்பட்டு இருந்தது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதனால்தான் 'தமிழகத்திற்கு மட்டும் என்றே' என்ற வார்த்தைகளை இந்தத் தீர்மானத்தில் இணைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது 1-1—1993 முதல் தொலைக்காட்சி ஒளி பரப்பு தொடங்கும் நேரத்தை எல்லா மாநிலங்களுக்கும் மாலை 5.30 மணியிலிருந்து 5.00 மணி என்று மாற்றி அமைத்ததுடன் பிற மாநிலங்களில் முடிவடையும் நேரமாக இருந்த இரவு 8.40 மணியை 8.30 மணி என்றும், சென்னை தொலைக் காட்சியைப் பொறுத்தவரை 8.45 மணி என்றும் மாற்றப்பட்டுள்ளது எனவே தமிழகத்திற்கு மட்டும் என்றே சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சார் நீங்கள் வந்து சும்மா இருக்க வேண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடுகள்).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அவரைச் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நடந்ததும் தப்பு தானே? நீங்கள் எப்படி திரும்பிப் பேசலாம்? (குறுக்கீடு) நீங்கள் பேசுவதும் தப்பு தானே? அவர் உட்கார்ந்து கொண்டு உங்களிடத்தில் ஏதோ சொல்கிறார். நான் உங்களுக்கு சமக் கொடுத்து. பேசுங்கள் என்று முறையாக வாய்ப்புக் கொடுத்து

இருக்கிறபோது, நீங்கள் அவரைப் பார்த்துப் பேசுவது எப்படி
முறையாக இருக்கும்? (குறுக்கீடு) எந்த விதியின் கீழே இப்போது
நீங்கள் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) தயவு செய்து நீங்கள்
எனக்கே கற்றுத் தரக் கூடாது. பேசுகிற உறுப்பினரைக் கட்டுப்
படுத்துகிற உரிமை பேரவைத் தலைவருக்கு உண்டு. (குறுக்
கீடு) நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள் என்று அனுமதி
அளித்தால், நீங்கள் இன்னொரு உறுப்பினரைப் பார்த்து
பேசுகிறபோது அதில் என்ன நியாயம் இருக்கிறது? உங்களைப்
பேச நான் அனுமதித்து இருக்கிறேன். தயவுசெய்து நீங்கள்
என்னைட பார்த்துப் பேச வேண்டும். நான் அனுமதிக்காத
ஒருவர் பேசியதற்கும், நான் அனுமதித்துப் பேசுகிற உங்
களுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : I never ordered you. I only request you to control them.

முற்பகல் 11.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பேசுமாறு
அழைக்கிறேன். மற்ற உறுப்பினர்களை நான் கட்டுப்படுத்து
கிறேன். இப்போது உங்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன்.
பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நம்முடைய முத
லமைச்சர் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள். என்
னிடம் இருக்கிற தகவல்கள், இன்றையதினம் தொலைக்
காட்சி நிறுவனத்தினுடைய டைரக்டர்-ஜெனரலாக இருக்கிற
கிருஷ்ணன் தமிழ் மண்ணில் பிறந்தவர். ஒரு பச்சைத் தமிழர்.
அவர் தமிழ் நாட்டுக்கு வந்து அவர் சொன்ன வார்த்தைகளை
இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான்
விரும்புகிறேன். தமிழ் நிகழ்ச்சிகளின் நேரம் குறைக்கப்பட
வில்லை. மாறாக தமிழ் நிகழ்ச்சிகள் நேரம் அதிகரிக்கப்
பட்டுள்ளது. இப்போது நடந்தது இந்த நேர மாறுதல் மட்டுமே.
இதுவரையில் மாலை 5.30 மணி முதல் 9.00 மணி வரை
தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு வந்தன. இப்போது
8.45 மணிக்கு தேசிய நிகழ்ச்சி தொடங்கி விடுகிறது. 15
நிமிடங்கள் தமிழ் நிகழ்ச்சி குறைகிறது. இதற்குப் பதிலாக தமிழ்
நிகழ்ச்சி மாலை 5.00 மணிக்கே தொடங்கி விடுகிறோம்.
இதில் 30 நிமிடங்கள் அதிகமாகி இருக்கிறது. ஆகவே, மொத்
தத்தில் தினமும் கூடுதல் தமிழ் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்கள்
கிடைக்கிறது. எனக்குத் தெரியவில்லை—இந்தத் தீர்மானத்தின்
மூலம் கூடுதலாக 15 நிமிடங்கள் தமிழுக்கு, தமிழ் மொழிக்கு
தமிழ் மக்களுக்கு, தமிழ் நிகழ்ச்சிக்கு கிடைப்பதை இந்தத்
தீர்மானம் எதிர்க்கிறதா? (குறுக்கீடுகள்)



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் விரும்பிப்
பார்க்கக்கூடிய நேரத்தை மாற்றியதைத்தான் இந்தத் தீர்மானம்
எதிர்க்கிறது (மேசையைத் தட்டும ஒலி).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அப்படி நீங்கள் சொல்ல
வில்லை. இந்தத் தீர்மானத்தில் என்ன சொல்லியிருக்கிறது
என்றால்...... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அந்தத் தீர்மானத்
திலேயே இருக்கிறது. மற்ற உறுப்பினர்கள் அமைதியாக
இருக்க வேண்டும். (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவர்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அதற்கு அடுத்த பத்தியில் சரியாகச் சொல்லி
யிருக்கிறார்கள்....

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : அதைத்தான் படிக்கப்
போகிறேன்.....

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்) : அதில் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் மிகத் தெளிவாக, 'பெரும்பாலான மக்கள் பார்க்கக்
கூடிய இந்த நேரத்தை மைய அரசு குறைத்திருப்பது,
மறைமுகமாக இந்தி மொழி ஆதிக்கத்தைப் புகுத்த மேற்
கொண்ட முயற்சியோ என்று ஐயுறப்படுகிறது' என்று
குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இதைப்பற்றி பேசுவதற்கு முன்பாக தீர்மானத்தை முழுவது
மாகப் படித்துவிட்டுப் பேசுவது நல்லது என்று நான் தெரிவித்
துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் சட்டப் பேரவையி
னுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு மரியாதையோடு
சொல்லிக்கொள்வேன். நானும் படித்து விட்டுத்தான் பேசுகிறேன்.
(குறுக்கீடுகள்) அதிலே உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். அதில்
இரவு 9.00 மணி வரை காட்டப்பட்ட தமிழ்நிகழ்ச்சிகள் தற்போது
8.45 மணிக்கு முடிவடைகின்றன என்று சொல்லியிருக்கிற
நீங்கள், இதற்கு முன்னால் 5.30 மணிக்கு ஆரம்பிப்பது இப்போது
5.00 மணிக்கு ஆரம்பிக்கிறது என்று ஏன் சொல்லவில்லை என்று
நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : தலைவர்
அவர்களே, அதே பத்தியில் முதல் வரியைப் படிக்கச் சொல்
லுங்கள். 'இந்த நேரக் குறைப்பை ஈடு செய்யும் வகையில்

தொலைகாட்சி தமிழ் நிகழ்ச்சிகள் முன்கூட்டியே தொடங்கப் படுகின்றன என்று முகாந்திரம் அளித்தாலும் என்ற வரிகளை ஏன் உறுப்பினர் மறந்து விட்டார்? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வி. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே பாய்ண்ட் ஆப் கிளாரிபிகேஷன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அவர் பேசுவதில் என்ன கிளாரிபிகேஷன்?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : முன்கூட்டியே ஆரம் பிக்கப்படுகிறது என்ற வார்த்தைகளை நான் சொல்ல வில்லை ஆனால் அதிகமாக 1/4 மணி நேரம் கிடைத்து இருக்கிறது என்பது ஏன் மறைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அதிலே கூடுதலாக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்து சொல்லப்பட் டிருக்கிறது. இப்போது இரவு 2.00 மணியிலிருந்து காலை 4.00 மணி வரையில் கூட நீங்கள் கொடுக்கலாம். அந்த நேரத்தை கூட எடுத்துக் கொண்டு நிறைய நேரம் கொடுத்து விட்டார்கள் என்று மத்திய அரசாங்கத்தை நாங்கள் பாராட்ட முடியாது. இதுவரையில் பொதுமக்கள் அதிகமாக பார்க்கிற நேரம் என்று எடுத்துக்கொண்டால் 9.00 மணி வரையில்தான். எனவே, அந்த நல்ல நேரத்தை தமிழுக்கு கொடுக்காமல் செய்திருக்கிறார்கள் என்பதைத் தான் புரட்சித் தலைவி அவர் கள் இங்கே வலியுறுத்தி இருக்கிறார்கள். நீங்கள் அதை விட்டுவிட்டு வேறுவிதமாகப் பேசிக்கொண்டிருப்பதுதான் எங்க ளுக்கு வேடிக்கையாக இருக்கிறது (குறுக்கீடுகள்).

முற்பகல் 11—40

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள்—அப்போது தேசிய ஒளிபரப்பு இந்தியில் செய்தி 8.45-லிருந்து ஆரம்பிக்கும். இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங் களுக்கும் என்று இருந்தபோது அவரே, இந்திய அரசுக்கு கடிதம் எழுதி, இந்தியில் மாநிலச் செய்திகளை வாசிப்பதில் பயன் இல்லை என்பதை எடுத்துக் காட்டி, 9 மணி வரையிலும் அவர்கள் வாங்கினார்கள். இங்கே தமிழ்நாட்டிற்கு மட்டும் அது இருக்கிறது. அதனால்தான், ஒரு சான்றாக வைத்து, பஞ்சாபிலேகூட எதிர்த்து கிளர்ச்சி செய்தார்கள். அதையேகூட தமிழ்நாட்டிற்கு மட்டும் நீங்கள் இந்தியில்



செய்தி சொல்வதை நிறுத்திவிட்டு, தமிழில் அதிக நேரம் கொடுத்து இருக்கிறீர்களே என்று கூடப் பஞ்சாபிலே சொன் னார்கள். ஆகையினாலே, தமிழ்நாட்டிற்கு என்று இருந்த அந்த உரிமை இப்போது தன்னிச்சையாக பறிக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்ல. அவ்வப்போது, இந்தி திரைப்படங்கள், இந்தி நிகழ்ச்சிகள் என்று தொலைக்காட்சிப் பெட்டியை தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்த முடிவதே இல்லை. தேசிய கருத்துக்கள்............(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசட்டும் (குறுக்கீடு). திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி யார் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது, மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதி அந்த நேரத்தை வாங்கி னார்கள் என்று சொன்னார்கள். அடிக்கடி இந்த மன்றத்தில் நான் பேசுகின்றபோது, சமூக நலத்தை தனது மனதில் கொண்டு திராவிட இயக்கத்தினுடைய மூத்த தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. எஸ்.டி.எஸ். அவர்கள், நமது மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் இந்த மன்றத்திலே பேசுவதை நினை்பேன். ஏதாவது ஒரு குறையை இந்த மன்றத்திலே சொ்கின்றபோது, இரண்டு பேருமே எழுவார்கள். எழுந்து அந்தக் குறைக்கு ஆதாரம்........(குறுக்கீடுகள்). இப்படிச் செய்தால் நான் எப்படிப் பேசுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள், இரண்டு பேரும் எழுவார்கள் என்று சொல்கிறீர்கள். அது அவர்களுடைய உரிமை. இந்த மன்றத்தில் இருக்கின்ற எல்லா உறுப்பினர் களும் பெற்றிருக்கிற உரிமை. வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் எழுவார்கள் என்று சொல்கிற அந்தத் தொனி நன்றாக இல்லை. (குறுக்கீடு). பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : ஏதாவது ஒரு குறையினை வலுவாகச் சொல்கின்றபோது, ஆதாரத்தோடு சொல்லுகின்றபோது, அவர்கள் கேட்பார்கள், இதை வந்து எங்களிடம் நேரில் சொல்லக் கூடாதா, சட்டமன்றத்திற்கு வரவேண்டும் என்று காத்திருக்கிறீர்களா என்று கேட்பார்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்).

[1993 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு பிரச்சினை
களிலே ஆதாரம் கேட்பது என்பது வேறு.
யில், தங்களிடத்திலே மாண்புமிகு இந்தப் பிரச்சினை
தெரிவித்தது — நீங்கள் இதிலே முதலமைச்சர் அவர்கள்
வாசகம் எழுப்பப்பட்டு இருக்கிறது. ஆரம்பத்திலேயே ஒரு தவறான
என்று தெரிவித்து இருப்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமே
ஆரம்பித்தீர்கள். அதிலேதான் தவறான வாசகம் என்று
அவர்கள் தன்னுடைய மாண்புமிகு முதலமைச்சர்
பேச்சுக்களிலே குறுக்கிட கருத்தைத் தெரிவித்து உங்களுடைய
மட்டும்தான் என்றிருக்கிற வேண்டி வந்தது. தமிழ்நாட்டிற்கு
இதுவரையில் நாம் பிரத்தியேக உரிமையைத்தான்
கள். மற்ற பயன்படுத்தி வந்தோம் என்று சொன்னார்
தேசிய எல்லா மாநிலங்களிலும் மாலை 8.40-க்கே
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடங்குகிறபோது, தமிழ்நாட்டு
கும் என்பதை நிலையத்திலே மட்டும் 9 மணிக்குத் தொடங்
எனவே, அந்த அவர்கள் ஆதாரபூர்வமாகத் தெரிவித்தார்கள்.
அதையேதான் வார்த்தை இருக்கிறது என்று சொன்னார்கள்.
புரட்சித் தலைவர் திரு. பண்ருட்டியார் அவர்களும், ஆமாம்,
பிரத்யேக உரிமையை அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்தப்
னார்கள். நாங்கள் வாங்கினோம் என்று சொன்
என்பதற்காகத்தான், எனவே, நீங்கள் தெரிவித்த முதல் கருத்து தவறு
எல்லாம் இந்த வாக்குவாதங்கள், குறுக்கீடுகள்
நியாயப்படுத்திப் வந்திருக்கின்றனவே தவிர, நீங்கள் அதையே
(குறுக்கீடு). பேசிக் கொண்டிருப்பது நல்லது அல்ல.
கொண்டேன். நான் முதலிலேயே எல்லோரையும் கேட்டுக்
வேற்றுகிற இந்தத் தீர்மானத்தை ஒருமுகமாக நிறை
வாதப் வகையில் கருத்துக்கள் அமைந்தால் நல்லது என்று.
நாம் பிரதிவாதங்கள் வளர்ந்து கொண்டே போவது என்பது
இதை இந்தத் தீர்மானத்தை ஒருமுகமாக நிறைவேற்றவில்லை.
ஒரு கட்சி எதிர்த்தது என்பதைப் போல ஒரு தொனி
வெளியிலே சென்றுவிடும். எனவே, இதை மனதிலே வைத்து
மாண்புமிகு உறுப்பினர் பேசுவது நல்லது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் கேட்க ஆசைப்
படுவது எல்லாம், ஒருவேளை அப்படி ஒரு கால் மணி நேரம்
வேண்டும் என்று கேட்கின்ற நீங்கள், இதிலே ஒரு சந்தேகத்தை
எழுப்பி இருக்கிறீர்கள். அதாவது மறைமுகமாக இந்தி
மொழி ஆதிக்கத்தைப் புகுத்த மேற்கொண்ட முயற்சியோ
என்று ஐயுறப்படுகிறது. you are entertaining one (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர்,



1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய பெருந்தன்மையால்
சந்தேகப்படுகிறோம், ஐயுறுகிறோம், என்று சொல்கிறார்
கள். அப்படிச் சொல்ல வேண்டியதில்லை. இந்தியைத்
திணிப்பதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்
கிறார்கள் என்று நேரடியாக சொல்ல வேண்டியதைத்
தான் முதலமைச்சர் அவர்கள் அப்படி சொல்லக் கூடாது
முதலமைச்சர் என்ற முறையில் அப்படிச் சொல்லக் கூடாது
என்று மிக நாசூக்காக இப்படிச் சொல்லியிருக்கிறார்களே
ஒழிய, உண்மையில் பார்க்கப் போனால், இந்தியைத்
திணிக்க வேண்டுமென்ற உணர்வுதான் மத்தியப் பேரரசுக்கு
இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல ஆசைப்படு
கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக்
கொண்டு வந்த நேரத்தில், இந்தத் தீர்மானம் தமிழகத்திற்கு
நன்மை பயக்குமேயானால் அதை முழு மனதோடு வர
வேற்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருந்தது.
ஆனால் தீர்மானத்திலே இருக்கின்ற சில குறைபாடுகளைச்
சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எங்களுடைய கட்சிக்காரர்
களுக்கு உண்டு என்ற முறையில் திரு. பீட்டர் அல்போன்ஸ்
அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும் நீங்கள் வேறு
அர்த்தங்கள் கண்டுபிடித்தால் அது மிகவும் சிரமமாகும்.
தமிழைக் காப்பதில், தமிழ் மொழிக்காக சேவை செய்வதில்,
தமிழ் மொழிக்காக, தியாகங்கள் செய்வதில் காங்கிரஸ்
என்றும் சளைத்தது அல்ல. மொழிவாரி மாநிலங்கள் என்று
பிரிக்கப்படுவதற்கு முன்பே (குறுக்கீடு) மொழிவாரி
மாநிலங்கள் என்று பிரிக்கப்படுவதற்கு முன்பே தமிழ்நாடு
காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைத்தது காங்கிரஸ் கட்சி
ஒன்று மட்டுமே என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இங்கே
தமிழ் பயிற்சி மொழியாக வரவேண்டும், தமிழ் அரியாசனம்
ஏறவேண்டும், தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டும்
தமிழ் நீதிமன்ற மொழியாக வரவேண்டுமென்று நடவடிக்கை
கள் எடுத்தது காங்கிரஸ் கட்சிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பண்ருட்டியார் தெரி
வித்த கருத்திற்கு மட்டும் நீங்கள் கருத்துத் தெரிவிக்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : உள்நோக்கம்
கற்பிக்கக் கூடாது. பேரவை விதியில் தெளிவாகக் குறிப்
பிடப்பட்டுள்ளது. பேரவை விதிகளுக்கு எதிராக அவர்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 பிப்ரவரி 10

பேசுவதையும், பேரவை விதிகளுக்கு எதிராகவே இந்தத்
தீர்மானம் இருக்கிறது என்பதையும் நான் சொல்லியாக
வேண்டும். பேரவை விதி 80......(குறுக்கீடு) I am o.ı a
point of order. He cannct rise (Interruption)

பேரவை விதி 80—தீர்மானம் என்று அனுமதிக்கப்பெற
வேண்டுமாயின், அது கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்ட
தாக இருத்தல் வேண்டும். வாதங்கள், யூகங்கள், கேலி
சொற்கள், மறைமுகமான குற்றச்சாட்டுகள், அவதூறான
கூற்றுகள் அடங்கி இருக்கக் கூடாது என்று தெளிவாகச்
சொல்கிறது. (குறுக்கீடு) இருங்கள் அவசரப்படாதீர்கள்.

அதேபோன்று தனித் தீர்மானங்கள் கொண்டுவரப்
படுகிறது. விதி 173 (அ)—அதில் வாதங்கள், யூகங்கள்
கேலிச் சொற்றொடர்கள் அல்லது அவதூறான சொற்கள்
அடங்கி இருத்தல் கூடாது. தீர்மானத்திலேயே யூகங்கள்
வருகின்றன. தீர்மானத்திலே வருவது. மட்டுமல்ல, அமைச்சர்
இப்போது சொல்கிறார். நான் நேரடியாகவே சொல்கிறேன்
இது திணிப்பு என்று சொல்கிறார். மத்தியிலே..........
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விதிகளுக்கு
எல்லாம் உட்பட்டு, எத்தகைய யூகங்களோ அல்லது வியூகங்
களோ, வேறுவிதமான குற்றச்சாட்டுகளோ உள்ளடக்கி இந்தத்
தீர்மானம் இல்லை. இது (குறுக்கீடு) விதிகளுக்கு உட்பட்டு
எல்லாம் இருந்துதான் நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழி
வதற்கு அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நீங்கள் அனுமதித்
தால் நான் கேட்கக் கூடாது என்று இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்கக் கூடாது
என்றில்லை. நீங்கள் விவாதத்தில் வைத்துக்கொள்ளலாம்
(குறுக்கீடு).

Thiru S. R. BALASUBRAMONIAN : you are b und by
the constitution (Interruption) you are b und by the rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Yes, Yes.
இவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதே கூட ஒரு
யூகத்திலே இருந்திருக்குமேயானால், நீங்கள் தெரிவிப்பது சரி.
ஒரு நேரக் குறைப்பு என்பது நேரடியாக இப்போது நிகழ்ந்து
இருக்கிறபோது இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்
டிருக்கிறது. இதுவே ஐயத்தின் அடிப்படையில் வந்திருக்கிறது



1993 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

என்பதாக நீங்கள் சொன்னால்தான் இதை அனுமதிக்க
இருப்பது பற்றிய பரிசீலனையை நான் செய்யவேண்டும்.
நடந்த ஒரு சம்பவத்திற்குத்தான் இங்கே தீர்மானம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. எனவே அந்த விதிகளுக்கு உட்பட்டே
இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே ஐயத்திற்கு இடமான
ஒரு பிரச்சினை இல்லை. இது நேரடியாக நடந்திருக்கக்
கூடிய ஒரு காரியம். கால் மணி நேரத்தைக் குறைத்தது
என்பதை சந்தேகப்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு
வந்திருக்கிறீர்கள் என்றால் தான் நீங்கள் சொல்வது
பொருந்தும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே .......... (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பாயின்ட் ஆப்
நார்டரில் பேசிக் கொண்டிருக்கும்பொழுது குறுக்கிட்டால்
நான் பேசி முடிக்க வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லி
விட்டேனே, இது பாயின்ட் ஆப் ஆடர் அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : you cont say so எதை
எழுப்பினாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்
இப்படி மிரட்டக் கூடாது.

Thiru S. R. BALASUBRAMONIAM : you are bound by
the constitution. You are bound by the rules (Int rrupion).

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து நான் சொல்
வதைக் கேட்க வேண்டும். நான் சொல்லாமல் வேறு யார்
சொல்வது? நான் விதிகளின்படிதான் நடக்க வேண்டும். நீங்
களும் அந்த விதிகளின்படிதான் நடக்க வேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் எழுப்பியதை
நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்ல முடியாது.
நீங்களும் விதிகளின்படிதான் நடக்க வேண்டும். விதிகளை மீறி
நடக்கக் கூடாது. (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் என்னை டிக்டேட் செய்ய முடியாது. you cannot dictate terms to me leader of the opposition cannot dictate terms to the chair. குறுக்கீடு. நான் சொல்லாமல் வேறு யார் சொல்வது?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று நீங்கள் எப்படிச் சொல்வீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு யார் சொல்ல வேண்டும் உங்களுக்கு? மற்ற உறுப்பினர்கள் சொன்னால்தான் ஏற்றுக் கொள்வீர்களா? (குறுக்கீடு) தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நீங்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினீர்கள். உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு முறைப்படி எழுந்து பதில் சொன்னேன். நீங்கள் என்ன சொன்னீர்கள்? விதி 80-ன்படி 173-ன்படி தீர்மானம் யூகத்தின் அடிப்படையில் இருக்கக் கூடாது என்று விதி இருக்கிறது என்று எழுப்பினீர்கள். யூகத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் வரவில்லை, வெளியே நடந்த சம்பவத்தை ஆதார பூர்வமாக வைத்துத்தான் இந்தத் தீர் மானம் வந்திருக்கிறது. என்ற அடிப்படையில் நான் அனுமதித்து இருக்கிறேன். எனவே அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டு வருவாய்த் துறை அமைச்சரை அழைத் திருக்கிறபோது, நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது என்று சொன்னாலோ, நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று கேட்டாலோ அது தவறு.

திரு. எஸ். ஆர்.பாலசுப்ரமணியன் : நான் சொல்லாததை எல்லாம் சொல்லுகிறீர்கள். நீங்கள் பெரிய இடத்திலே உட் கார்ந்து இருக்கிறீர்கள். அதனால் அப்படி பேசக் கூடாது. நான் சொல்லாததை சொன்னதாக சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'Yon cannot say so' என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: நாங்கள் பேசுகிற போது மைக் வேலை செய்வது இல்லை. இந்தப் பேரவையில் எதிர்க்கட்சியினர் பேசவே கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எழுந்து நிற்கிற போது எதிர்க்கட்சித் தலைவர் என்று அல்ல, யார் நின்றாலும் மைக் வராது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) வருவாய்த் துறை அமைச்சருக்கும் மைக் வராது. அதுதான் விதி. இப்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசு கிறபோது தமிழை காப்பதற்காகவும், வளர்ப்பதற்காகவும் காங்கிரஸ் பேரியக்கம் எந்த தியாகமும் செய்வதற்கு தயாராக இருக்கிறது, பாடுபட்டிருக்கிறது என்று சொல்கிறபோது தமிழ் நாட்டு மக்கள் ஏதோ இப்படி தவறாக சொல்லுகிறார்களே என்று கருதுவார்களோ என்பதற்காக அவர் சொன்னதற்கு நான் ஒன்றை சொல்ல ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள் செய்த தியாகத்தினால்தான், தாளமுத்து நடராசன் இறந்ததும் இந்தியாவையே காத்ததா?—1965 ஆம் ஆண்டு நூற்றுக் கணக் கான பேர்கள் அடிபட்டதும் 7, 8 பேர்கள் சிறை சென்றதும் அவர்களின் தமிழ் மொழிப் பற்றினால்தானா? இன்றைக்கு நாமெல்லாம் தமிழ்நாட்டிலே பிறக்கவில்லை. நானெல்லாம் தமிழ்நாட்டிலே பிறக்கவில்லை. இங்கே உள்ளவர்களில் பெரும் பாலோர் தமிழ்நாட்டிலே பிறக்கவில்லை. வருங்கால சந்ததிகள் தமிழ் நாட்டிலே பிறக்க வேண்டும் என்பதற்காக சென்னை ராஜதானியை தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் இயக்கங்கள் பாடுபட்டு பாடுபட்டு எவ்வளவு பேர்கள் சிறைக்குச் சென்றார்கள் என்பது உங்களுக் குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி.) ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் 1967-க்குப் பிறகு - பிறந்தவர்களை தமிழ்நாட்டில் பிறக்க வைத்தார்கள். இந்த நாட்டிற்கு தமிழ் நாடு என்ற பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சங்கரலிங்கம் என்பவர் உயிர் நீத்த போது கூட நீங்கள் அதனை செய்யவில்லை. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக போராட்டங்கள் நடத்தி எவ்வளவு பேர்கள் சிறைச்சாலை சென்றார்கள். எவ்வளவு பேர்கள் அடிபட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது தமிழுக்காக பாடுபட் டோம் என்று நீங்கள் சொன்னால் வெளியே உள்ளவர்கள் உங்களைப் பற்றி என்ன எண்ணுவார்கள் என்பதை நான் சொல்ல மாட்டேன். (மேசையை தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1967-க்குப் பின்னாலே (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடித்து விடட்டும்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களை [illegible] அனுமதி யோடு மாண்புமிகு முதிய அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் காங்கிரஸ் கட்சி தமிழை வளர்த்தது என்று சொன்ன கருத்து, வெளியே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் சொன்னால்

[திரு குமரி அனந்தன்) [1993 பிப்ரவரி 10
என்று சொன்னார்கள். எனவே அந்தக் கருத்துக்கு உடனடியாக
பதில் சொல்ல வேண்டும் என்ற அவசியம் ஏற்படுகிறது. முதலிலே,
முற்பகல் 11—55

1987க்குப் பின்னாலே பிறந்தவர்கள் தான் தமிழ்நாட்டிலே
பிறந்தார்கள் என்ற பெயரை உண்டாக்கிக் கொடுத்ததற்கு
நீங்கள் உரிமை எடுத்திருக்கிறீர்கள். அந்தப் பகுதிக்கு நான்
வர இருக்கிறேன். அதற்கு முன்பு என்று சொல்கிறேன். 1947-க்
குப் பிறகு பிறந்தவர்கள் தான் சுதந்திர நாட்டில் பிறந்திருக்
கிறார்கள் என்ற பெயரையே காங்கிரஸ்காரன்தான் வாங்கிக்
கொடுத்தான். (கூச்சல்-குழப்பம்) இருங்கள். இல்லையா?
(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எங்கேயோ திசை
திருப்புகிறீர்கள். உட்காருங்கள். வருவாய்த் துறை அமைச்சர்
சொன்னது தமிழ்நாடு பற்றி. காங்கிரஸ் கட்சி தான் சுதந்திரம்
வாங்கிக் கொடுத்தது என்பதை அவர் மறுக்கவில்லை. (கூச்சல்
குழப்பம்). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக்
கொடுத்தது (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். உங்களையெல்
லாம் பேசச் சொல்லவில்லை. உட்காருங்கள். எல்லாம் தெரியும்
உட்காருங்கள். யார் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது? (கூச்சல்-
குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரே சொல்லுவார்.
சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது காங்கிரஸ்தான் என்று அவரே
ஏற்றுக் கொள்கிறார். பல தடவை சொல்லியிருக்கிறார். தயவு
செய்து உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.
(கூச்சல்-குழப்பம்). இல்லை. அதை அவர் நான் மறுக்கவில்லை.
என்கிறார். அதை அவர் மறுக்கவில்லை. இப்பொழுது மறுத்
தால்தானே. (கூச்சல்-குழப்பம்) அவர் தமிழ்நாடு என்கிறார்.
நீங்கள் சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததற்குப் போகிறீர்கள்.
அதை அவர் மறுக்கவில்லை. (கூச்சல்-குழப்பம்.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்
களே, இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது இந்திய
தேசிய காங்கிரஸ் கட்சி என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.
இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது காங்கிரஸ்
கட்சி மட்டும் தான் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருக்
கிறீர்கள். அதுமட்டுமா, இல்லையா என்பதை நான் விளக்குவது
என்னுடைய கடமை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1993 பிப்ரவரி 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இந்த நாட்டிற்கு சுதந்திரம் நீங்கள் வாங்கிக் கொடுத்ததுக
கிறீர்கள் என்று சொன்னால், இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்
கியபொழுது. இந்திய தேசிய காங்கிரஸ் மட்டும் தான் பாடு
பட்டது, அவர்கள் மட்டும்தான் ஜெயிலுக்குச் சென்றார்கள்
என்பது உண்மை இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன். உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், 1920 ஆம்
ஆண்டு நீதிக் கட்சி தமிழ்நாட்டிலே ஆட்சி புரிந்தது. (கூச்சல்-
குழப்பம்) 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சி சென்னை ராஜதானி
யில் இன்றைக்கு இருக்கிற கேரளாவில் இருக்கிற கொச்சி
திருவாங்கூரை நீக்கி, மைசூரில் இருக்கின்ற மைசூர் சாம்ராஜ்ஜி
யத்தை நீக்கி, ஆந்திராவில் இருக்கின்ற ஹைதராபாத்
நிஜாமை நீக்கி, சென்னை ராஜதானி என்கிற பெரிய
மாநிலத்தை நீதிக் கட்சி இங்கே ஆண்டது 1920 ஆம் ஆண்டு
என்பதைத் தெரிவித்து (கூச்சல்-குழப்பம்) 1922 ஆம் ஆண்டு
இங்கே இருக்கின்ற பி. அண்டு சி. மில்லில் ஆங்கிலேயர் ஆட்சிக்
காலத்தில், அன்றைக்கு ஆங்கிலேயராக இருந்த கவர்னர் அவா
கள் திரு.வி.க. அவர்களையும், சர்க்கரை செட்டியார் அவர்
களையும் நாடு கடத்திய போது, அன்றைக்கு இருந்த நீதிக் கட்சி
ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய்த்துறை அமைச்சர் கொஞ்சம் அமருங்கள் (குறுக்கீடுகள்) நான் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பேச அழைத்தவுடன் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கொண்டால் நான் எப்படி அவையை ஒழுங்குபடுத்த முடியும்? (குறுக்கீடுகள்) நான் வருவாய்த் துறை அமைச்சரைப் பேச அழைத்திருக்கிறேன். நான் பேச அழைத்ததற்குப் பிறகு நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால் அல்லவா நான் ஒரு நேரத்திலே வருவாய்த் துறை அமைச்சரை அமர்த்த முடியும்? (குறுக்கீடுகள்) தயவுசெய்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அமர வேண்டும். (குறுக்கீடுகள்) நான் வருவாய்த் துறை அமைச்சரைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அழைக்கிற உரிமை எனக்கு இல்லையா? நான் அவரை அழைத்ததற்குப் பிறகு எதிர்க் கட்சித் தலைவரும் மற்றவர்களும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்).

நண்பகல் 12—00

பேரவைத் தலைவர் என்கிற முறையில் நான் ஒழுங்குபடுத்துவதற்கு எனக்கு எங்கே இடம் கொடுக்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுந்த உடனேயே எல்லா அமைச்சர்களையும் உட்காரச் சொல்லி விட்டு, அவரைப் பேசச் சொன்னேன். அவர் தமிழ்நாடு என்கிற பிரச்சினையை விட்டு, சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது காங்கிரஸ் கட்சிதான் என்றார். அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். (கூச்சல்

குழப்பம்) அமைச்சருக்கு நான் வாய்ப்புக் கொடுத்த உடனேயே
அவரைப் பேச விடாமல் எல்லா உறுப்பினர்களும் எழுந்து
கொண்டால் நான் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? (கூச்சல்
குழப்பம்) நான் அவரையே கூட அந்தப் பிரச்சினையோடு விட்டு-
விடுங்கள் என்று சொல்வதற்கே எனக்கு எங்கே இடம் கொடுத்து
இருக்கிறீர்கள் ? (கூச்சல்-குழப்பம்) வருவாய்த் துறை அமைச்சர்
என்று நான் அழைத்து, அவர் எழுந்த உடனேயே காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும்— திரு. குமரி
அனந்தன் மட்டுமாவது கேட்டால் பரவாயில்லை. எல்லா உறுப்
பினர்களும் எழுந்து கொண்டால் இது நியாயமா? இந்தத் தீர்
மானத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் கருதி தமிழ் மக்களுடைய
உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது இந்தத் தீர்மானம் என்ற
முறையில் இதற்கு நீங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். இவ்வாறு
நீங்கள் இதிலே இடையூறு செய்வதால் இந்தத் தீர்மானத்தையே
எதிர்க்கிறீர்கள் என்கிற பொருள்தான் வெளியிலே செல்லும்.
(கூச்சல்-குழப்பம்) காங்கிரஸ் எதிர்ப்பு என்பதுதான் வெளி
யிலே போகும். (கூச்சல்-குழப்பம்) தயவு செய்து அதற்கு இடம்
கொடுக்க வேண்டாம் என்றுதான் நான் முதலிலேயே சொன்
னேன். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் வேறு முடிவோடு வந்திருந்
தால் நான் என்ன செய்வது? பேரவைத் தலைவர் வருவாய்த்
துறை அமைச்சரை அழைத்த உடனேயே எல்லா உறுப்பினர்
களும், எழுந்து நின்று கொண்டால் நான் எப்படிக் கட்டுப்படுத்த
முடியும்? வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பேச்சின்
இறுக்கே, ஒருவர் என்றால் பரவாயில்லை; எல்லா உறுப்பினர்
களும் எழுந்து நின்று விளக்கம் கேட்பது எப்படி முடியும்?
(கூச்சல்-குழப்பம்) இது எப்படி நியாயமாகும்? எனவே
நின்றாலும் எழுந்து நின்று கொள்கிறீர்கள். நான் எழுந்து
உறுப்பினரைப் பேச அழைத்தாலும் எல்லா உறுப்பினர்களும்
எழுந்து நிற்கிறீர்கள். நிறைவேற்றப்பட இருக்கிற தீர்மானம்
என்பது ஒருமுகமாக நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்குத்
தமிழ் மக்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்கிற ஒரு தீர்மானம்.
இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தமிழ்
நாட்டிலே இருக்கிற ஒவ்வொரு தமிழனும் இன்றைக்கு எண்ணிக்
கொண்டிருக்கிற தீர்மானம் (மேசையைத் தட்டும் ஒலி.) அந்தத்
தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது நீங்கள் இப்படி இடையூறு
செய்கிறீர்கள் என்று சொன்னால் (கூச்சல்-குழப்பம்) 6 கோடி
தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பு அளிக்க
வில்லை என்றுதான் பொருள்படும். (கூச்சல்-குழப்பம்) கோஷம்
எழுப்புவதாலோ கூச்சல் போடுவதாலோ இந்தத் தீர்மானத்தை
எதிர்க்கிறீர்கள் என்கிற செய்திதான் வெளியிலே செல்லும்.
(கூச்சல்-குழப்பம்) இதுவரையிலும் பேசிய உறுப்பினர்கள்,
இதை ஆதரிக்கிறோம் என்று யாரும் சொல்லவில்லை. இதை
எதிர்க்கிறோம் என்பதற்குரிய அடையாளமாகத்தான் இது
நிறைவேறுகிற இந்தக் கால கட்டத்தில் நீங்கள் இடையூறு செய்
கிறீர்கள் என்றே நான் கருத வேண்டியிருக்கிறது. மேற்கொண்டு
இதில் அமைதியாக நீங்கள் உட்கார்ந்து வருவாய்த் துறை



அமைச்சர் அவர்களைப் பேச நீங்கள் அனுமதிக்கவில்லை
என்று சொன்னால் விவாதத்திற்கு இடமில்லை; விவாதம் முடிந்
தது என நான் நேரடியாக தீர்மானத்தை ஓட்டெடுப்புக்கு விட
வேண்டி வரும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள். (கூச்சல்-குழப்பம்) நான் வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களை அழைத்து இருக்கிறேன். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக் கட்சிகூட காங்கிரஸ்
கட்சியை எதிர்த்தது என்பதும், நீதிக் கட்சி ஒன்றே ஆங்கில
ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது என்பதைச் சொல்வதற்குத்தான்
வந்திருக்கிறேன். அப்போது காங்கிரஸ்காரர்களை நாடு கடத்
தியபோது, அன்றைக்கு இருந்த அமைச்சரவை (கூச்சல்-
குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னவென்று
சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆங்கில ஏகாதி
பத்தியத்தை எதிர்த்து ராஜிநாமா செய்தார்கள். (கூச்சல்-
குழப்பம்) காங்கிரஸ்காரர்களை நாடு கடத்திய தீர்மானத்தை
அன்றைகு இருந்த கவர்னர் அவர்கள் (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதிக்க வேண்டும்.
(கூச்சல்-குழப்பம்) நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்
களைப் பேச அழைத்து இருக்கிறேன். திரு. குமரி அனந்தன்
பேசியதற்குப் பிறகு வருவாய்த் துறை அமைச்சரை நான்
அழைத்து இருக்கிறேன். அவர் ஒரு விளக்கம் சொல்லிக் கொண்டு
இருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆங்கில ஏகாதி
பத்தியம் நடத்தி வந்த (கூச்சல்-குழப்பம்) சர்க்கரை செட்டி
யாரையும், திரு.வி.க. -வையும் ஆங்கில ஏகாதிபத்தியம் (கூச்சல்-
குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுவதற்கு நீங்கள்
இடையூறு செய்கிறீர்கள் என்று சொன்னால் இந்தத் தீர்மானத்
திற்கே இடையூறு செய்கிறீர்கள். இந்தத் தீர்மானத்தை அடுத்து
நான் வாக்கெடுப்புக்கு விட வேண்டி வரும். மாண்புமிகு வரு
வாய்த்துறை அமைச்சர், (கூச்சல்-குழப்பம்).

(பேரவைத் தலைவர்) [1993 பிப்ரவரி 10

பிற்பகல் 12-05

தமிழ் மக்களுடைய உள்ளுணர்வுகளை அப்படியே பிரதிபலிக்கிற ஒரு தீர்மானத்தை இங்கே விவாதிக்க விடாது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தடைசெய்து கொண்டிருக்கிற காரணத்தால் (கூச்சல்-குழப்பம்) இந்தத் தீர்மானம் நிறைவேறக் கூடாது என்றே அவர்கள் கருதுகிறார்கள். இந்தித் திணிப்பு தமிழகத்தில் இருந்தே ஆகும் என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்) தமிழகத்தில் 1965-ல் எண்ணற்ற தியாகிகள் தங்களுடைய இன்னுயிரை இழந்ததை இன்னும் மதிக்காமல் இருக்கிறார்கள் என்றுதான் பொருள். எனவே, இந்த இன்றியமையாத தீர்மானத்தை 60 பேர் தடுத்துவிட முடியாது. இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலே தமிழகத்திலே இருக்கிற ஆறரைக்கோடி தமிழர்கள் இருக்கிறார்கள். இந்த ஆறரைக்கோடி தமிழர்களுடைய மக்கள் விரோதக் குரல் தான் இங்கே எழுப்புகிற குரல்.

எனவே, தீர்மானத்தைப் பேரவையினுடைய முடிவுக்கு விட்டு நான் நிறைவேற்றுவதுதான் என்னுடைய கடமை. ஏற்கனவே, தீர்மானத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய முழு விளக்கத்தையும் இங்கே தெரிவித்துவிட்ட காரணத்தால் தீர்மானத்தை இப்பொழுது பேரவையின் முடிவுக்கு விடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்,

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத்தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்).

அமைதி. அமைதி. அமைதியாக இருங்கள்.

தமிழ் மக்களுடைய உணர்வுகளை வெளிக்காட்டுகிற இந்தத் தீர்மானம் நிறைவேறியதில் பேரவைத் தலைவர் என்கிற முறையில் என்னுடைய மட்டற்ற மகிழ்ச்சியை இந்த நிறைவேறிய தீர்மானத்தோடு இணைத்துக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்).



1993 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

பேரவையை நடத்த விடாமல், பேரவை விதிமுறைகள் அனைத்துக்கும் விரோதமாக இங்கே குரல் எழுப்புவதுகூடாது என்கிற விதி தெளிவாக இருந்துங்கூட, பேரவை விதிகளை மதியாது பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் உண்டாக்குகிற எதிர்கட்சித் தலைவரவர்கள் பேரவையை விட்டு வெளியேறவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் பேரவையை விட்டு வெளியேற வேண்டும்.

(திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் சில உறுப்பினர்கள் கோஷம் எழுப்புகிறார்கள்). (கூச்சல்-குழப்பம்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மார்ஷல், திரு.எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

குரல் எழுப்பிக்கொண்டிருக்கிற திரு. சுந்தரதாஸ் அவர்களை வெளியேற்ற வேண்டும், மார்ஷல்—மற்ற காவலாளிகள் அவர்களுக்கு உதவக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சுந்தரதாஸ், திரு. ரங்கநாதன், மற்றும் இந்தத் தரப்பில் தரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற எல்லோரையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

உட்கார்ந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லோரையும் — மார்ஷல் சார்ஜண்ட்டுக்கு உதவியாக காவலாளிகளும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன். வெளியேற்ற உத்தரவிடுகிறேன் (கூச்சல்-குழப்பம்). வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

அவையிலிருந்து அப்புறப்படுத்துமாறு உத்தரவிடுகிறேன். ஒவ்வொரு உறுப்பினர்களையும் வெளியேற்றுகிறபொழுது காவலாளிகளுக்கு இடையூறு செய்வது சட்டப்படி குற்றம் (கூச்சல்-குழப்பம்) குண்டுக்கட்டாகத் தூக்கி அப்புறப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) எல்லோரையும் அப்புறப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—10

வெளியேற்றுகிற காவலர்களைத் தடுப்பதோ, அவர்களோடு மோதுவதோ வேறுவிதமான குற்றங்களுக்கு ஆட்படுத்தப்பட்டதாக ஆகும். (கூச்சல்-குழப்பம்) காவலர்கள் பேரவைத் தலைவருடைய உத்தரவுக்கிணங்க வெளியேற்றுகிறபோது, அவர்களோடு மோதுவது என்பது சரியல்ல. (கூச்சல்-குழப்பம்)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப் பட்டனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்டவர்கள், பேரவையின் வளாகத்திலேயே எந்தப் பகுதியிலேயும் இருக்கக்கூடாது என்பது விதி. எனவே, லாபியிலே இருந்து குரல் எழுப்புகிற தன்மை இருக்குமேயானால், அவையிலே இருந்து வெளியேற்றப் பட்டவர்கள் அவைக்கு முற்றிலும் புதியவர்கள் Strangers என்று கணக்கிடப்பட்டு வேறுவகையான நடவடிக்கைகளுக்கும் அவர்கள் ஆளாக வேண்டிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

லாபியில் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் நபர்களை காவலர்கள் எவ்வித தயவுதாட்சண்யமுமின்றி பேரவை வளாகத்தை விட்டு வெளியேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 9. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. மா. சுந்தரதாஸ் ; இருக்கையில் இல்லை ; முன்மொழியப்படவில்லை திரு. வ. சத்தியமூர்த்தி.

*திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் தமிழகத்தின் முதலமைசர் அவர்கள், எது செய்தாலும் நிறைவாக மிக அழகாக, நேர்த்தியாக செய்து முடிக்கக்கூடியவர்கள் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். இதய தெய்வம் அமரர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இன்றையதினம் நினைவாலயம் சென்னையிலே எழுப்பப்பட்டிருக்கிறது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள், இந்தத் தமிழகத்தில் அவருடைய முக அழகிற்கு நிகரான அழகன் எவருமே இல்லையென்ற அளவில் உலகத்து மக்களையெல்லாம் ஈர்க்கக்கூடிய சக்தி படைத்தவர். சென்னை மாநகருக்கு வருபவர்கள், புரட்சித் தலைவர் முகத்தை ஒருமுறை தரிசனம் செய்துவிட்டுச் செல்ல வேண்டுமென்ற ஆசையோடு வருவார்கள் அன்றைய தினம் சென்னை மாநகருக்கு வரக்கூடியவர்கள், வெளியூரிலிருந்து வரக்கூடியவர்கள் தலைவர் உயிரோடிருக்கும்போது, புரட்சித் அவர் முகத்தைப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டுமென்று ஆசையோடு வந்தார்கள். இன்று வரக்கூடியவர்கள் எல்லாம் புரட்சித்





தலைவருடைய நினைவாலயத்தை ஒருமுறை கண்ணுற்றுச் செல்ல வேண்டுமென்று ஆசையோடு வருகிற அளவுக்கு இந்தியாவிலேயே மிக அழகானதொரு நினைவாலயம் இருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவருக்குத் தான் இருக்கிறது என்கிற வகையிலே மிகச் சிறப்பாக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான பேர்கள் வந்து தரிசனம் செய்கிற போது, இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய நினைவாலயத்தைக் கட்டிமுடித்த, புரட்சித் தலைவி அவர்களை எண்ணி பெருமைப் பட்டு, தன்னுடைய இதய சிம்மாசனத்திலே ஏற்றிவைத்து அவரை வணங்கி வருகிறார்கள் என்பதையும் நினைத்து, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆற்றலைக் கண்டு நான் பாராட்டுகிறேன்

பிற்பகல் 12.15

இந்த மன்றத்தில் 1991—92 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிற போது. ஒரு உறுப்பினர் குறிப்பிட்டு பேசி இருக்கிறார் விடுதலைப் புலிகளை ஒடுக்கும் இந்த ஆட்சிக்கு, இந்த ஆட்சியின் முதலமைச்சருக்கு, தமிழக அரசுக்கு குங்குமம் சுமக்கும் கழுதையாக நாங்கள் இருப்போம் என்று சொன்னார்கள். குங்குமத்தை சுமக்கும் கழுதையாக நாங்கள் இருப்போம் என்று சொன்னவர்கள் ஊர் ஊராக இன்றைய தினம் டஞகு மூட்டையை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் அதை நாம் இன்றைய தினம் காண்கின்றோம் ஒன்றுமட்டும உண்மைகுங்குமச் சுமப்பதும் அழுக்கு மூட்டை சுமப்பதும் கழுதையினுடைய விருப்பம் அல்ல. கழுதையை வளர்ப்பவனுடைய விருப்பம் என்பதை இங்கே தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சிக்கு எதையும் அவர்கள் சுமக்க வேண்டாம் ஒன்றை மட்டும் செய்தால் போதும். அவர்கள் ஆட்சி மத்தியில் நடக்கின்றதே அந்த ஆட்சியாளர் களைப் பார்த்து இலவச மின்சாரத் திட்டத்திற்குக் குறுக்கே நிற்காதீர்கள் என்று சொல்லுங்கள். அதுபோன்று அரிசி விலையை உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுங்கள். அதுபோன்று வெளிநாட்டிலிருந்து கடத்தல் பொருள்களையும், போராளிகளையும் நாட்டிற்குள் அனுமதிக் காதீர்கள் என்று சொல்லுங்கள் அதுபோன்று தமிழக அரசினால் நிறைவேற்றப்பட்ட பினாமி நில ஒழிப்புத் திட்டத்திற்கு அனுமதி கொடுங்கள். மிகப் பெரிய நிலவந்தர் களிடம் இருக்கும் நிலங்களை ஏழையெளியவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு உறுதுணையாக இருங்கள் என்று உங்களுடைய ஆட்சியாளர்களிடம் நீங்கள் கேட்டுக் கொண்டால் மட்டுமே போதும். தமிழக ஆட்சிக்கு நீங்கள் எந்த சுமையையும் தாங்க வேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் இதற்கு முன்பு
பேசும் போது ஆனந்தமாக இருக்கும், ஏற்கனவே ஒரு கட்
டத்தில் 'ஆண்மைக்கும்' 'பெண்மைக்கும்' வரி விலக்கு
வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் நேற்
றைய தினம் பேசுகின்ற போது அவர்களுடைய பேச்சில்
உண்மையைப் புரிந்து கொண்ட தன்மையின்மையை
புரிந்து கொண்டோம். அவர்கள் இருக்கின்றது சாத்
தான் குளம் தொகுதி. அங்கு இருப்பவர் இராமநாதபுரம்
தொகுதியில் காவல் துறையினர் கள் இறக்கச் சொல்லி கட்
டாயப்படுத்தி அப்படி கள் இறக்காத 100 பேர்கள் மீது
பொய் வழக்குப் போட்டிருப்பதாகச் சொல்லுகின்றார்.
நாங்கள் அந்தப் பகுதியில் குடியிருப்பவர்கள். கள்ளச்
சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்காக இங்கே காங்கிரஸ்
காரர்கள் வாதிடுகின்ற நிலையில் அங்கே கள்ளத்தனமாக
இறக்குபவர்கள் மீது வழக்குப் போட்டால் அதற்கு இங்கே
வக்காலத்து வாங்குவது காந்தியத்தின் தன்மையா என்பதை
நான் கேட்க விரும்புகின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)
அவர்களுக்கு நான் சவாலாகச் சொல்ல விரும்புகின்றேன்.
அவர்கள் எங்களோடு வந்தால் வழக்குப் போட்டவர்கள்
இன்றும் கள் இறக்கும் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்பதை
நிரூபிக்கத் தயாராக இருக்கின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்
கிறேன். அங்கு தாமரைக்குளம் என்ற கிராமத்தில் இருக்கின்ற
திராவிடமுன்னேற்றக் கழகப் பிரமுகர் பல பேரை இதுபோன்ற
தகாதசொழிலில் ஈடுபடுத்தி புரோகராக இருக்கின்றார். அவர்
கொடுக்கின்ற தவறான தகவலின் பேரில் இப்படிப்பட்ட
பொய்யான தகவலை இந்த அவைக்குத் தந்திருக்கின்றார்
என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

1967 ஆம் ஆண்டுக்கு முன்புதான் தமிழகத்தில் உள்ள
குளங்களும், குட்டைகளும், தூர்வாரப்பட்டன என்ற குற்றச்
சாட்டை இங்கே எடுத்துப் பேசினார்கள். ஆம். 1967-க்கு
முன்பு காங்கிரஸ் ஆட்சியில் குளங்களையும் குட்டைகளை
யும் தூர் வாருகிறோம் என்று தங்களுக்குத் தாங்களே வாரிக்
கட்டிக் கொண்டதினால் தான் 1967 பொதுத் தேர்தலில்
மக்கள் மாறி ஓட்டுப் போட்டார்கள். அதனால்தான் நாங்கள்
இங்கு இருக்கின்றோம். நீங்கள் ஆளும் உரிமையை அன்றி
லிருந்து இன்றுவரை பெறமுடியவில்லை என்பதை
உணர்ந்து தெளிவாக, எச்சரிக்கையாக இந்த ஆட்சி நடந்து
கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரில் ஒரு ஊராட்சி
ஒன்றியத்திற்கு ஒரு கோடி ஒக்கப்பட்டது உண்மையா?
நெடுஞ்சாலைத் துறையில் கிராம சாலைகள் திட்டத்தி

பிற்பகல் 12-20



பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே உண்மையில் ஏற்கனவே ஒதுக்
கப்பட்டது போல் இல்லாமல் இந்தத் தொகையையும்
மாற்றி விட்டார்களா என்ற ஒரு ஐயத்தை இங்கே கிளப்
பினார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கனவே கிராம
சாலைகள் திட்டத்தின் கீழ் 1 கி. மீட்டருக்குக் கூட வேலை
நடப்பது இல்லை. ஒரு மாவட்டத்தில் எடுத்துக் கொள்வோமே
யானால் அதிகபட்சம் ஒரு 10 கி. மீட்டருக்கு எடுத்துக் கொள்
வார்கள். ஆனால், இன்றைய தினம் தன்னிறைவுத் திட்டத்தில்
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், 10-லிருந்து 15 கிலோ
மீட்டர் தூரம் தார் சாலைகள் போடப்படுகிறது என்று சொன்
னால் அது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒரு
கோடி ரூபாயிலிருந்து கூடுதலாக கொடுக்கப்பட்டது என்பது
ஏனோ அவர்களுக்குப் புரியவில்லை. கடந்த திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஒரு மாவட்டத்திற்கு
500 விளக்குகள் போடுவதற்குக் கூட நிதி ஒதுக்கீடு செய்யப்
படவில்லை. ஆனால் இதய தெய்வம் தமிழகத்தினுடைய
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சிறப்புத் தன்
னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்
களிலும் 500-லிருந்து 1000 வரை புதிய தெரு விளக்குகள்
போடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்
னால் அது சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் கொடுத்த
கூடுதல் ஒரு கோடி ரூபாயிலிருந்துதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது
என்று ஏனோ அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை
என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இங்கு நேற்றைய தினம் தேசப்பிதா மகாத்மா காந்தி
அவர்களுடைய சிலை வெடிகுண்டு வைத்து தகர்த்தப்பட்டது
பற்றி அங்கலாய்த்துக் கொண்டார்கள் காங்கிரஸ்காரர்கள்.
அவர்களைப் பார்த்து நான் கேட்க விழைகிறேன். பாட்டாளி
மக்கள் கட்சியை தடை செய்ய வேண்டுமென்று முதல்வர்
அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கின்றார்கள். இங்
குள்ள சட்டமன்ற காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்
களும் பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்ய வேண்டுமென்ற
கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல்
விடுதலைப் புலி இயக்கத்தை தடை செய்ய வேண்டுமென்று
மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. இந்த நேரத்தில் மகாத்மா
காந்தியினுடைய சிலைக்கு வெடிகுண்டு வைத்த வழக்கில் ஒரு
கல்லூரியினுடையமுதல்வர் காவல் துறையினரால் கைது செய்யப்
படுகின்றார். அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லி
எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார், போராட்டத்தைத்
தூண்டிக் கொண்டிருக்கிறார், போராடுவோம் என்று சொல்
கிறார், பாட்டாளி மக்கள் கட்சியினுடையத் தலைவர். இங்
கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் நேற்றைய தினம் இங்கே
அரசாங்கத்தைப் பார்த்து ஒரு களங்கத்தை சாட்ட முற்பட்

டார்கள். அதாவது விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு
அளிக்கின்றீர்களோ, இந்த வழக்கிலிருந்து பாதுகாப்பு
அளிக்கின்றீர்களோ என்று எங்களுக்கு சந்தேகம் ஏற்படுகிறது
என்று சொன்னார்கள். அந்தக் கட்சியினுடைய மாநிலத்
தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, அந்த வழக்கில் கைது
செய்யப்பட்ட ஒரு கல்லூரி முதல்வரை விடுதலை செய்ய
வேண்டுமென்று போராடிய அந்தப் பாட்டாளி மக்கள் கட்சி
யினுடைய தலைவரை, எந்தக் கட்சியை தடை செய்ய
வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டிருக்
கிறதோ, இந்த தமிழக அரசு மத்திய அரசை கேட்டுக் கொண்
டிருக்கிறதோ, அந்தக் கட்சியினுடைய தலைவரை ஒரு
மணி நேரத்திற்கு மேல் சந்தித்து இரகசியமாக பேசி இருக்கின்
றார். திடீரென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தமிழ
கத்தில் தடைசெய்யப்படவேண்டிய ஒரு கட்சியினுடைய தலை
வரை, விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற ஒரு தலைவரை இரக
சியமாக சந்தித்துப் பேசியதன் அவசியம் என்ன, அந்தரங்கம்
என்ன, புதியதாக ஏற்பட்டிருக்கின்ற உறவு என்ன என்பதை
இந்த மன்றத்தில் காங்கிரஸ்காரர்கள் விளக்கக் கடமைப்பட்டி
ருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட
கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய
நல் ஆட்சியில் இன்றையதினம் தொழில் துறை மிகச்சிறப்பாக
செயல்பட்டு வருகிறது. ஒரு நாட்டிற்கு இன்றையதினம் முக்கிய
மான அத்தியாவசியமான தேவை மின்சாரம். அந்த மின்சாரம்
இந்தியாவில் தமிழகத்தில்தான் தன்னிறைவோடு இருக்கிறது.
எதிர்காலத்தினுடைய தேவையை திட்டமிட்டு பல புதிய திட்
டங்கள் உருவாக்கி இருக்கிறார்கள். தனி நபர்களுக்கு மின்
சாரத் துறையிலே இடமுண்டு என்ற வகையில் பல திட்டங்கள்
வகுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் இந்தத் தமி
ழகம் எதிர்காலத்தில் ஒளிமயமாக இருக்கப் போகின்றது என்ப
தற்கு ஓர் அடையாளம் என்று சொல்லி நான் ஆளுநர் உரையை
வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> டாக்டர்ஜெய்சன் ஜேக்கப்.

<u>டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:</u> மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த
விவாதத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற ஆட்சியில் தொட்டுப்
பார்க்காத, எண்ணிப் பார்க்காத திட்டங்களை எல்லாம் தொட்
டுப் பார்த்து, எண்ணிப் பார்த்து, அவைகளில் ஏற்படுகின்ற
பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கின்ற வகையில் சீர்திருத்தம்





செய்கிற சட்டங்களைத் திட்டங்களை, மற்ற மாநிலங்
களுக்கு வழிகாட்டுகின்ற பல திட்டங்களை அறிவிக்கின்ற வகை
யாக இந்த கவர்னர் உரை அமைந்திருந்கிறது. எனக்கு
முன்னால் பேசிய மற்ற உறுப்பினர்கள் எலலாம் எல்.டி.டி.ஈ.
யைப் பொறுத்தமட்டில் பல உண்மைகளை இங்கே சுட்டிக்
காட்டினார்கள். அமைதிப் பூங்காவாக இருந்த இந்தத் தமிழ
கத்தை ஆயுத கலாசாரத்திடமிருந்து மீட்டுத் தந்து மீண்டும்
அமைதிப் பூங்காவாக மாற்றியப் பெருமை நம்முடைய முதல்
வரையே சாரும். தன்னுடைய உயிரையும் துச்சமென மதித்து
அமைதிப் பூங்காவாக தமிழகத்தை மீண்டும் ஆக்கிய ஈடில்லா
முதல்வர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் என்பதை
யாரும் மறுக்க இயலாது.

பிற்பகல் 12.25

நல்ல உள்ளம் கொண்டவர்கள், நடுநிலையாளர்கள் இதைப்
பாராட்டுகிறார்கள். குற்றம் காண விழைபவர்கள் குறை
கூறுகிறார்கள். 2—2—93 அன்று மதுரையில் பேட்டி அளித்த
மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் எல்.டி.டி.இ. நடவடிக்கைகள்
மீண்டும் தலை தூக்கி விட்டதாகவும், அவர்களின் ஏஜெண்
டுகள் மூலமாக திட்டங்களைத் தீட்டி நடவடிக்கைகளில் ஈடு
படத் தொடங்கி விட்டதாகவும் கூறி இருக்கிறார்கள். இது
3—2—1993 மாலை முரசு பத்திரிகையில் 4-ஆம் பக்கத்தில்
செய்தியாகக் கூட வெளிவந்து இருக்கிறது. இந்த விடுதலைப்
புலிகளினுடைய விவகாரத்தில் மாநில அரசுக்குத் தெரியாத
விஷயங்கள் எல்லாம் இவர்களுக்குத் தெரிகிறது என்றால்
உண்மையிலேயே நாங்கள் சந்தேகப்படுவது எல்லாம் இவர்
களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கும் என்பது
தான். அந்த அச்சம்தான் எங்களுக்கு ஏற்படுகிறது.

சமீபத்தில் காங்கிரஸ் இயக்கத் தலைவர் ஒருவர், விடுதலைப்
புலிகளினுடைய படத்தைப் பிடித்துக் கொண்டு, பிரபாகர
னுடைய படத்தைப் பிடித்து கொண்டு, தாணுவினுடைய
படத்தைப் பிடித்துக் கொண்டு ஊர்வலமாகச் சென்ற ஒரு
கட்சியினுடைய தலைவரைச் சந்தித்து ஒரு மணி நேரம் உரை
யாடி இருக்கிறார்கள் என்றால் நான் இங்கே எழுப்புகிற சந்
தேகத்திற்கு நிச்சயமாகக் காரணம் இருக்கும் என்றே சிந்திக்கத்
தோன்றுகிறது.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்திலே விடு
தலைப் புலிகள் எந்த அளவுக்கு ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள்
என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். இங்கே
இருந்த கொஞ்ச நஞ்சம் பேரையும் சிங்கமென இருக்கிற எங்
கள் முதலமைச்சர் இந்த நாட்டை விட்டே விரட்டி இருப்பது
எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஒன்றை மட்டும் தெளி

வாகச் சொல்கிறேன். விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டிருக்
கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் விடு
தலைப் புலிகளினுடைய நடமாட்டம் இங்கே இருக்கிறது என்று
சொல்வது ஏதோ வேண்டுமென்றே குறை சொல்வது போல
இருக்கிறது. அதாவது ஒன்று சொல்வார்கள். தூங்கு
பவனைக் கூட எழுப்பிவிடலாம். ஆனால் தூங்குவது போல்
நடிப்பவனை எழுப்புவது கடினம். அதே நேரத்தில் இங்கே
இருக்கிற உண்மையை மறைத்து மீண்டும் குறை சொல்லி, இந்த
மன்றத்திலே, மன்ற நடவடிக்கைக்கு மாறாக நடந்து கொண்ட
காங்கிரஸ் தோழர்கள் தயவு செய்து ஒரு உண்மையை மட்டும்
மறந்து விடக் கூடாது. இந்த மன்றத்திலே இருப்பவர்கள்
எல்லாம் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொது
மக்களுடைய பிரதிநிதிகளாக இன்றைக்கு புரட்சித் தலைவி
அவர்களின் தலைமையில் மிகத் திறமையாகச் செயல்பட்டுக்
கொண்டு இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள், இந்
தத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எந்த ஒரு முதலமைச்
சரும் இந்த நாட்டை ஆண்டதை விட மிகச் சிறப்பாக அமை
தியை நிலை நாட்டி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்
கள்.

அயோத்தி பிரச்சினையைத் பொறுத்தவரையில் புரட்சித்
தலைவியினுடைய பேச்சைக் கேட்டிருந்தால் அந்தப் பிரச்
சினையே எழுந்திருக்காது. அயோத்தி பிரச்சினையில்
இந்த நாடே பற்றி எரிந்து கொண்டிருந்த போது இங்கே
அமைதியை நிலைநாட்டி கட்டிக் காத்தவர்கள் நம்முடைய
இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். காங்கிரஸ்
ஆளுகிற மாநிலத்திற்குக்கூட நம்முடைய மாநிலத்திலிருந்து
இரண்டு பெட்டாலியன்கள் போலீஸை அனுப்பி சட்டம்,
ஒழுங்கை அந்த மாநிலத்தில் பாதுகாத்த பெருமை நம்முடைய
புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. இப்படி ஆளுகிற
நம்முடைய முதல்வர் அவர்களைப் பார்த்து சட்டம் ஒழுங்கு
தமிழ்நாட்டில் கெடும் அபாயம் உள்ளது என காங்கிரஸ் கட்சித்
தலைவர் பேசி இருக்கிறார். அது பிப்ரவரி மாதம் ஆறாம் தேதி
பாண்டிச்சேரி எடிஷன் தினமலர் பத்திரிகையில் வெளிவந்தி
ருக்கிறது. காங்கிரஸ் ஆளும் பக்கத்து மாநிலமான ஆந்திரா
வில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளதா என்று பார்த்தால் அங்கே
ஒரு எம்.எல்.ஏ. 15 நாட்களாக உயிரோடு போராடிக் கொண்
டிருக்கிறார். அவரை மீட்க வழி தெரியாதவர்கள், திகைப்
பவர்கள் இன்றைக்கு புரட்சித் தலைவியைப் பார்த்து குறை
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆளும் மாநிலம் மராட்டிய மாநிலம். அந்த
மராட்டிய மாநிலத்தில் தமிழனைப் பாதுகாக்க வழியில்லை.
அங்கே சட்டம் ஒழுங்கு தினம் தினம் மோசமடைந்து கொண்டி
ருக்கிறது. ஆனால் அந்தப் பிரச்சினையில் உடனடியாகத்



தலையிட்டு தமிழனைக் காப்பதற்கு முயற்சிகளை மேற் கொண்
டார்கள் எங்களுடைய உத்தமத் தலைவி, எங்கள் தாய் புரட்சித்
தலைவி அவர்கள்.

தவறிழைக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதில்
மிகக் கவனமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்
தில் என்னுடைய தொகுதிக்கு அருகில் பிரச்சினை பற்றிச்
சொன்னார்கள். அதாவது சில அதிகாரிகள் கள்ளச் சாராயத்
திற்குத் துணை போகிறார்கள் என்று சொன்னார்கள். நான்
அந்த அதிகாரிகளிடத்திலே சொன்னேன். நீங்கள், இதே
போல் செயல்பட்டுக் கொண்டிருந்தால் நான் இது சம்பந்த
மாக எங்கள் முதலமைச்சருக்குத் தெரிவிப்பேன் என்று சொன்
னவுடன் அந்த அதிகாரி உடனடியாக என்னிடத்தில் வந்து
அப்படியெல்லாம் செய்யவில்லை, செய்யமாட்டோம்,
எனவே தயவு செய்து முதலமைச்சருக்கு நீங்கள் எதையும்
தெரிவிக்காதீர்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு
இன்றைக்கு முதலமைச்சருடைய பெயரைச் சொன்னாலே
நாட்டிலே தவறு செய்பவர்கள் திருந்துகிற நிலை இருக்கி
றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12—30

அதேபோல, மாடர்னைசேசன் ஆப் தி போலீஸ் என்பது மிக
வும் வரவேற்க வேண்டிய ஒரு திட்டம். இதற்கு முன்பு இருந்த
ஆட்சியிலே காவல்துறை பயன்படுத்திய வாகனங்கள், காவல்
துறை பயன்படுத்திய தொலை தொடர்புச் சாதனங்கள், காவல்
துறை பயன்படுத்திய ஆயுதங்கள் எல்லாம் பார்க்கிறபோது,
அன்றைக்கு ஒரு சின்ன தவறு செய்துவிட்டு ஒருவன் தப்பிச் சென்
றால் காவல்துறையினர் பின்னாலே செல்வதற்குக்கூட வாகனங்
கள் இல்லை. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவி ஆட்சியிலே
நவீனமாக்கப்பட்ட 'ட்ராக்ஸ்' போன்ற வாகனங்கள், ஒயர்லெஸ்
தொடர்பு சாதனங்கள், அதேபோல நவீன ஆயுதங்கள்
எல்லாம் வந்திருப்பதைப் பார்க்கிறபோது, எந்த அளவுக்கு காவல்
துறை நவீனமாக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதனால்
தவறுகள் இந்த மாநிலத்திலே எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது
என்பதையும் நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, பாரத ரத்னா மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களுடைய சதுக்கத்தை 1.55 கோடி ரூபாயில்
இன்றைக்கு மிகச்சிறப்பாக கட்டி அமைத்திருக்கிறார்கள். என்னி
டத்திலே ஒரு நண்பர் சொன்னார்கள். நான் மாண்புமிகு
புரட்சித் தலைவருடைய சதுக்கத்தைப் பார்க்கிறபோது, இந்த
நாட்டிலே இது இரண்டாவது தாஜ்மகால்-ஐ புரட்சித் தலைவி

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 பிப்ரவரி 10

அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த
அளவுக்கு இன்றைக்கு எல்லோரும் பாராட்டக்கூடிய அளவுக்கு
அந்த சமாதி அமைந்திருக்கிறது.

4—2—1993 அன்று தினத்தந்தியிலே காங்கிரஸ் தலைவர்
ஒரு செய்தியைக் கொடுத்திருக்கிறார். அந்த பத்திரிகையிலே
14-வது பக்கத்திலே வெளியாகியிருக்கிறது. அவர் என்ன
சொல்லி இருக்கிறார் என்றால் எம்.ஜி.ஆர். காங்கிரசுடன்
நல்லுறவு வைத்திருந்தார். அவர் மிகவும் பெருந்தன்மையான
மனிதர் என்று சொல்லியிருக்கிறார்.

இதை நீங்கள் சற்று கூர்ந்து பார்க்கவேண்டும். அவர்
சொல்வது, புரட்சித் தலைவர் அவர்கள் காங்கிரசோடு நல்லு
றவு வைத்திருந்தாராம். ஆனால் இவர் பெருந்தன்மையானவர்
அல்ல. இங்கே அவர் மறைமுகமாக நம் இதய தெய்வத்தை
குறை சொல்வதுபோல் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றை
மட்டும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். எங்களைப் பொறுத்தமட்டில் இராஜீவ் காந்தி அவர்
களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் நரசிம்மராவ்
போன்ற தலைவர்கள் எல்லாம் பெருந்தன்மையானவர்கள்.
ஆனால் தமிழக அரசிடம் நல்லுறவு கொண்டிருந்தவர்கள்,
கொண்டிருப்பவர்கள், எங்களுக்கு தலைவலி யார் என்றால்,
இங்கே இருக்கிற சில தலைவர்கள்தான். எங்களுக்கு அவர்கள்
தலைவலியாக இருக்கிறார்கள்.

அதேபோல கருணாநிதி அவர்கள் வைத்திருந்த குடையை
அகற்றி, புரட்சித் தலைவருக்கு புது சமாதி அமைத்து பொலிவைக்
கண்டவர் புரட்சித் தலைவி அவர்கள், உள்ளபடியே பரந்த
உள்ளத்தோடும், மிகவும் வேதனையோடும் சொல்கிறேன்.
அமரர் இராஜிவ்காந்தி அவர்கள்தமிழகத்திலே புரட்சித் தலைவி
யின் ஆட்சி மலரவேண்டும் என்று விரும்பினார்கள்.
விரும்பினார்கள். தேர்தல் பிரச்சாரத்தின்போது, தன் இன்னு
யிரை தமிழகத்திலே ஈந்தார்கள். உளமார

எப்போதும் நான் இங்கேயிருந்து என்னுடைய தொகுதிக்கு
ஆரணிக்குச் செல்லும்போது, ஸ்ரீபெரும்புதூரைக் கடந்துதான்
செல்லவேண்டியிருக்கிறது. அப்படி செல்கின்றபோது அங்கே
இருக்கின்ற இராஜீவ் காந்தி சதுக்கத்தைப் பார்க்கிறபோது உண்
மையிலேயே வேதனை அடைகிறேன். இதை ஏன் சொல்கிறேன்
என்றால், நாங்கள் கட்டித் தருகிறோம் என்று சொன்னாலும்,
வேண்டாம், நீங்கள் கட்ட வேண்டாம், நாங்கள் கட்டிக்கொள்
கிறோம் என்றும் நாங்கள் வரைபடம் தருகிறோம், அதற்கு ஏற்
றாற்போல் நீங்கள் கட்டுங்கள் என்றும் எங்களிடத்திலே சொல்
கிறார்கள். ஆனால் இன்றைக்குக்கூட—அவர் மாண்டு ஒன்றரை
ஆண்டுக்காலம் ஆகிறது.—இன்றைக்குக்கூட வரைபடமே வந்த



1993 பிப்ரவரி 10] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

பாடில்லை. நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். அந்தப்
பொறுப்பை எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே
விட்டுவிடுங்கள் என்கிறோம். ஏனென்றால் இன்றைக்கு அகில
உலகமே பாராட்டக் கூடிய அளவுக்கு 7½ மாத காலத்திலே ஒரு
ஸ்டேடியத்தையே உருவாக்கி, ஆசியாவிலேயே ஸ்டேடியங்
களின் ராணி என்று சொல்லக்கூடிய அளவுக்கு, உலகமே வியக்
கும் வண்ணம் ஒரு ஸ்டேடியத்தைக் கட்டி வைத்திருக்கின்ற எங்
களுடைய தலைவிக்கு, உங்களால் முடியாவிட்டாலும்கூட, உங்
கள் தலைவர் இராஜீவ் காந்திக்கு நீங்கள் எப்படி நினைக்கிறீர்
களோ அதையும் விட மிக அழகாக ஒரு மிகச் சிறப்பான சதுக்
கத்தை உருவாக்கக்கூடிய திறமை எங்களுடைய இதய தெய்வத்
திற்கு உண்டு என்று சொல்கிறேன். ஏழரை மாத காலத்திலே
இந்த உலகே வியக்கும் வண்ணம் அந்த ஸ்டேடியத்தைக்
கட்டியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் 1991-ல்
திட்ட இலக்கை விட குறிப்பாக 1992-93ல் இலக்கை
விஞ்ச வழி காண வலியுறுத்தும் உங்கள் மனோ
திடத்தை நல்ல உள்ளம் கொண்டவர்கள் பாராட்டுவார்கள்.
பெப்ரவரி மாதம் ஆறாம் தேதி தினமலரில் வெளியான செய்தி
யில் ரேஷன் அரிசி விலை உயர்வுக்கு மத்திய அரசு மீது மாநில
அரசு குற்றம் சாட்டுகிறது என்று ஒரு காங்கிரஸ் தலைவர்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? அரிசி விலை
உயர்வுக்குக் காரணம் மத்திய அரசு தானே? ஆனால் அப்படி
இருந்தும்கூட, இன்றைக்கு இந்தியாவிலே மிகக் குறைந்த விலை
யிலே அரிசி வழங்குகிற மாநிலமாக தமிழகம் இருக்கிறது. எங்
களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு
தமிழகத்திலே இருக்கிற மக்களுடைய குறைகளை அறிந்து குறை
களைப் போக்கி அவர்களுடைய குறைகளை நீக்குகிற தாயாக
விளங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் மத்திய அரசினுடைய முதலீடு மிகவும்
குறைந்திருக்கிறது. அதுபோல பாம்பே ஹையிலே இருந்து தென்
மாநிலங்களுக்கு இணைப்பு என்ற திட்டம் வெறும் கொள்கை
அளவிலேதான் இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் அந்த
திட்டத்தை விரைவிலே அமல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்
திக் கொண்டிருக்கிறார்கள். மத்தியில் ஆளுவது காங்கிரஸ்
தானே. இவை எல்லாம் வருவதற்கு சுட்டிக்காட்டிபெற்று
தந்து, இன்றைக்கு அதையெல்லாம் பரிந்துரை செய்து பெற்று
தந்தோம் என்று சொன்னால் அது உண்மையிலேயே பாராட்டக்
கூடியது.

பிற்பகல் 12-35

ஆனால் அந்த எண்ணம் உங்களுக்கு இல்லை என்பது
எங்களுக்கு நன்றாகவே தெரிகிறது. 45 கோடி செலவில்
ஒரு கோடியே 20 இலட்சம் பேர்களுக்கு இன்றைக்கு

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 பிப்ரவரி 10

வேட்டி, சேலை வழங்குகிற திட்டம், 70 கோடி நிதி ஒதுக்கி
அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குகின்ற திட்டம்
அன்னை தெரசாவே மனமார பாராட்டக்கூடிய அரசுத்
தொட்டில் திட்டம், சத்துணவுத் திட்டத்தை 6 முதல் 36
திங்கள் வரை உள்ள குழந்தைகளுக்காக வலுப்படுத்தியுள்ள
திட்டங்கள், ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்,
1993–க்குள் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எல்லா
அடிப்படை வசதிகளையும் வழங்குகின்ற திட்டம், வீடு
இல்லாத அனைவருக்கும் வீடு வழங்குகின்ற திட்டம், போரா
ளிகளை அடக்கிய விதம், ஒற்றுமையை நிலைநாட்டும்
பாங்கு, பொருளாதார வளர்ச்சியைக் காண்பதில் மேற்
கொண்டுள்ள சிறிய முயற்சிகள் இவை அனைத்திற்கும் தாயே
உலகே உங்களைப் பாராட்டுகிறது. நாளையின் கனவுகளின்
இன்றைய நிஜங்களாக, இன்றைய நிஜங்களின் நாளைய
நிருபணங்களாக புரட்சித் தலைவி அவர்கள் செயல்
படுகிறார்கள் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி,
புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதம் தொட்டு வணங்கி
இடம் சார்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் பரந்தாமன்.

*<u>டாக்டர் ஜெ. பரந்தாமன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இருபதாம் நூற்றாண்டிற்கும் இருபத்தோராம்
நூற்றாண்டிற்கும் தமிழகத்தின் நிரந்திர பொற்கால முதல்
வராக விளங்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் சாதனை
களை, நிர்வாகத் திறமைகளை இந்த தமிழகமும், இந்தியாவும்,
உலகமும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. டாக்டர் புரட்சித்
தலைவிதான் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் டாக்டர் புரட்சித்
தலைவி. டாக்டர் புரட்சித் தலைவிதான் தமிழ்நாடு. தமிழ்நாடு
தான் டாக்டர் புரட்சித் தலைவி என்றுள்ள இன்றைய நிலை
மாறி நாளை டாக்டர் புரட்சித் தலைவிதான் இந்தியா. இந்தியா
தான் டாக்டர் புரட்சித் தலைவி என்று வரும் என்பது உறுதி.
(மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் நிரந்தர இடம்
டாக்டர் புரட்சித் தலைவிக்கு உண்டு. டாக்டர் புரட்சித்
தலைவியை புறக்கணித்துவிட்டு இந்திய வரலாற்றை யாரா
லும் இனிமேல் எழுத முடியாது. டாக்டர் புரட்சித் தலை
விதான் ஆதியும் அந்தமும். டாக்டர் புரட்சித் தலைவியை
எதிர்ப்பவர்கள், தாக்குபவர்கள் அவதூறு பேசுபவர்கள்
மக்கள் மனதிலிருந்து புறக்கணிக்கப்படுவார்கள் என்பது
ஆண்டவன் கட்டளை.

எதிர்காலத்தைக் கணித்து தொலைநோக்கு பார்வையோடு
இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்
கத்தில் சர்வதேச பிரச்சினையாகவுள்ள மசூதியை இடிக்காமல்



1993 பிப்ரவரி 10] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

ராமர் கோவிலை கட்ட வேண்டும் என்றது உலக அமைதிக்கு,
சமாதானத்திற்குச் சொன்ன வழியாகும். இந்தவகையில்
உலக அமைதிக்கு, சமாதானத்திற்கு வழங்கப்படுகின்ற நோபல்
பரிசு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வழங்கப்பட
வேண்டும். டாக்டர் புரட்சித் தலைவி தேசியத் தலைவி.
அதனால்தான் சுதந்திரத்திற்காக போராடிய, சுதந்திரம்
வாங்கிய காலத்தில் இருந்தே மறக்கப்பட்டிருந்த, புறக்
கணிக்கப்பட்டிருந்த சுதந்திரப் போராட்ட வீரர்களை மதித்து
கவுரவித்தவர் இந்தியாவிலேயே டாக்டர் புரட்சித் தலைவி
ஒருவர்தான், வாய்கிழிய தேசியம் பேசுகின்ற தேசியக்
கட்சியும், தேசியத் தலைவர்களும் கூட சுதந்திரப் போராட்ட
வீரர்களை மதித்து கவுரவிக்கவில்லை.

தமிழைக் காப்பாற்றுகின்ற ஒப்பற்ற திராவிட சக்தியாக தமிழக
முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக்
கொண்டிருக்கிறார்கள். இந்தி எந்த ரூபத்தில் தமிழகத்தில்
நுழைந்தாலும் விரட்டியே தீருவோம் என்று டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் அறைகூவல் விட்டுள்ளார்கள்.
இதனால் தமிழைக் காப்பாற்றுபவர்கள் யார்,. இந்திக்கு
வால்பிடிப்பவர்கள் யார் என்பதை தகுந்த நேரத்தில்
தமிழக மக்களுக்கு அடையாளம் காட்டியவர் டாக்டர்
புரட்சித் தலைவி ஆவார்கள்.

கடந்த 20, 25 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத
பல கோரிக்கைகளை தாய் உள்ளத்தோடு வேகமாக நிறை
வேற்றி, 100 ஆண்டு சாதனைகளை 1 1/2 ஆண்டுக்
காலத்தில் நிறைவேற்றி சாதனைகளின் திலகமாக
தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மனித நேயம் மிக்க
ஈகை உள்ளம் கொண்ட உன்னதத் தலைவி ஆவார்கள்.
அதனால்தான் தமிழகத்தை வெள்ளம் சூழ்ந்த போது,
தமிழக மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது டெல்லி
யிலிருந்து திரும்பிய உடனே விமான நிலையத்திலேயே
அதிகாரிகளை வரவழைத்து மக்களின் நிவாரணப் பணிக்காக
போர்க்கால அடிப்படையில் ஆணையிட்டார்கள் இது அவர்களின்
வேகத்தையும் விவேகத்தையும் காட்டுகிறது. வெளியே சென்றால்
முதல்வரின் உயிருக்கு ஆபத்து என்றாலும் கூட தானே நேரில்
சென்று ஆறுதல் அளித்து உதவிகளை செய்த அந்தத் தாய்
உள்ளத்திற்கு என்றும் மக்கள் நன்றிக் கடன் பட்டவர்கள்
ஆவார்கள்.

தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்றால்
விடுதலைப் புலிகள் அடக்கப்பட்டார்கள்., ஒடுக்கப்பட்டார்
கள் என்றால், வன்முறையாளர்கள் தமிழகத்தைவிட்டு

[டாக்டர் ஜெ. பரந்தாமன்] [1993 பிப்ரவரி 10

ஓடி ஒழிந்தார்கள் என்றால், தமிழ்நாடு தொழில்துறையில் முன்னேற்றம் காண்கிறது என்றால் அதற்குக் காரணம் டாக்டர் புரட்சித் தலைவிதான். உலக நாடுகளில் டாக்டர் புரட்சித் தலைவி செய்கின்ற அளவுக்கு நலிந்த பிரிவினர்க்கு உதவிகளை வழங்குகின்ற அரசு எதுவும் நிச்சயம் இல்லை. ஏழைகளுக்கு இலவச வேறு வேட்டி சேலை என்றாலும் சரி, முதியோர்க்கு, உடல் ஊனமுற்றோர்க்கு, விதவைகளுக்கு உதவித் தொகை வழங் குவது என்றாலும் சரி, உலக நாடுகளிலேயே பெண்கள் முன்னேற்றத்திற்கு, பெண்கள் பாதுகாப்பிற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற திட்டங்களைபோல் வேறு யாரும் செய்யவில்லை. அதனால் தான் டாக்டர் புரட்சித் தலைவி பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தை ஏற்ப்படுத்தியுள்ளார்கள். பெண் குழந்தைகளை கொள்கிறார்கள் என்பதற்காக அரசுத் தொட்டிலை ஏற்படுத்தி பெண் குழந்தைகளைக் கொல்லக்கூடாது என்பதற்காகபெண்கள் வாழப் பிறந்தவர்கள், ஆளப்பிறந்தவர்கள நாங்கள் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார்கள்.

திறமையாக, அனைவரையும் ஒருங்கிணைக்கின்ற ஒரு சக்தியாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் வேகம் விவேகம் படைத்த ஒரு கம்ப்யூட்டர் போல் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் சர்வதேச தரம் மிக்க அளவில் 7½ மாதத்தில் ரூபாய் 40 கோடி செலவில் இதில் மத்திய அரசு வெறும் ரூபாய் 2 கோடி மட்டுமே தந்தாலும் கூட அதற்காக தயங்காமல் தளராமல் ஜவஹர் லால் நேரு ஸ்டேடியத்தை நவீனமயமாக்கியவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார்கள்.

பிற்பகல் 12–40

ஒரு இயக்கத்தின் தலைவனுக்கு உண்மையான வாரிசு செய்கின்ற பணியை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செவ்வனே செய்கிறார்கள். அதனால்தான் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ரூபாய் 1.5 கோடி செலவில் நினைவாலயம் கட்டியிருக்கிறார்கள். மற்ற இயக்கங்கள், மற்ற தலைவர்கள் மறைந்த தலைவர்களுக்கு இப்படிப்பட்ட கவுரவத்தை செய்தார்களா என்று தமிழ்க் மக்கள் கேட்கிறார்கள்.

தமிழகத்தில் மின் உற்பத்தியில் தன்னிறைவு, மின்வெட்டு இல்லாமல் உணவு உற்பத்தியில் சாதனை, சாலைகள், பாலங் கள் சிறப்பாக அமைப்பது, போக்குவரத்துத் துறையில் தமிழகம்



1993 பிப்ரவரி 10] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

உலக அளவில் மதிக்கப்படுவது, சமூக நலம், சத்துணவு, விவசாயம், தொழிலில் முதலாக இருப்பது-இவையெல்லாம் தமிழகம் முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்பதை உணர்த்துகின்றது. எல்லா மக்களும், ''வந்தாரே மகராசி, எல்லாம் உங்கள் கைராசி'' என்று பாராட்டுகின்ற அளவுக்கு இருக்கிறது.

டாக்டர் புரட்சித் தலைவி அரசின் சாதனைகளை சரியான முறையில் விளம்பரப்படுத்த வேண்டும். வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சாதனைகளை அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் தயாரித்து, திரையிடப் பட வேண்டும். வீடியோ கேசட்டுகளாக எடுத்து, கிராமங் கள் தோறும் அவை ஒளிபரப்பப்பட வேண்டும். மாவட்டம் நகரம், ஒன்றியம் பேரூராட்சி போன்ற மக்கள் கூடுகின்ற இடங்களில் பிரம்மாண்டமான புரட்சித் தலைவி அரசின் சாதனை விளக்கக் கல்வெட்டுகளை அரசின் மூலம் நிறுவ வேண்டும்.

டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்று, பலர் பயனடைந் திருக்கிறார்கள். எனவே அந்தத் திட்டம் மாதம் ஒரு முறை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

55 வயதிற்கு மேற்பட்ட முதியோர், உடல் ஊனமுற்றோர் விதவைகள் ஆகியோர் ஓய்வு ஊதியம் பெற மனுச் செய்தால் அவர்களுக்கு உடனடியாக ஓய்வு ஊதியம் அளிக்க வேண்டு கிறேன். ஒரு ஒன்றியத்திற்கு தொகுப்பு வீடுகள் குறைந்த பட்சம் 500-ஆவது கட்டித் தரப்பட வேண்டும். அதேபோல் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரால் ஒரு திட்டம் துவக்கி பிற்படுத்தப்பட்ட மக்கள், மிற்படுத்தப்பட்ட வர்களில் உள்ள ஏழைகள் அனைவருக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டுகிறேன்.

கிராமங்களில் சாண எரிவாயு விளக்குகள், எரிவதற்கும் சமையல் செய்தவற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். பழு தடைந்த சாண எரிவாயு கலன்களை சீர் செய்ய வேண்டும். ஒரு வட்டத்திற்கு ஒரு பொறியாளரை நியமித்து சமுதாய சாண எரிவாயுக் கலன்களை அமைத்து, கிராமங்களில் நூறு இருநூறு அமைத்து இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தலாம். இதனால் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யலாம். மக் களுக்கு இதனால் செலவு குறையும். விறகிற்காக காடுகளை அழிப்பதும் குறையும்.

ஆதிதிராவிடர்களுக்கு வெட்டித் தரப்படும் ஜீவன் தாரா கிணறுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் இவற்றின் கட்டிடங்களையே பயன் படுத்தி, ஷிப்ட் முறையில் காலையில் கல்லூரி, மாலையில்

[டாக்டர் ஜெ. பரந்தாமன்] [1993 பிப்ரவரி 10

தொழிற்பயிற்சி நடத்தலாம். இதனால் கட்டிடம் கட்டுவதில்
உள்ள பொருளாதாரப் பிரச்சினை நீங்கும். எஸ்.எஸ்.எல்.சி.
மற்றும் பிளஸ் 2 தேர்வு மையம் வழங்கும்போது மாணவர்
களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கிடாமல், மாணவர்கள்
வாழ்கின்ற இடம் தேர்வு எழுதச் செல்ல வேண்டிய தூரம்
சிரமம் மற்றும் பொருளாதாரச் செலவுகளை கணக்கிட
வேண்டும். இதன்படி பேரணாம்பட்டிற்கு பிளஸ் 2 தேர்வு
மையமும், மேல்பட்டிற்கு 10 ஆம் வகுப்பு தேர்வு மையமும்
வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி., தாட்கோ போன்ற
அரசுக் கடனுதவிகளை வழங்குவதில் வங்கிகள் ஆர்வம் காட்டு
வதில்லை. கடனை வசூலிப்பதிலும் ஆர்வம் காட்டுவதில்லை.
இவை முறைப்படுத்தப்பட வேண்டும். குற்றாலம், ஒகேனக்
கல் நீர் வீழ்ச்சிகளுக்கு போதிய வசதிகளைச் செய்து,
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் விளம்பரப்படுத்த
வேண்டும்.

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஏலகிரி, அமிர்தி
போன்ற சுற்றுலா இடங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்திட
வேண்டும். சென்னையில் நடைபெறுகின்ற பொருட் காட்சி
யினை ஆண்டு முழுவதும் நடத்த வேண்டும். இதனுடைய
பிரிவாக மாவட்டம், வட்டம், ஒன்றிய நகரங்களில் நடத்தி
அரசின் சாதனைகளை விளக்க வேண்டும். இங்கெல்லாம்
அழிந்து வருகின்ற கிராமியக் கலைகள் நசிந்துவிடாமல்
பாதுகாக்க, அரசின் சாதனைகளை விளக்க அவர்களைப்
பயன்படுத்திக் கொள்ளலாம்.

முஸ்லீம் மக்கள் அதிகமாக வசிக்கும் பேரணாம்பட்டு
தொகுதி மக்கள் 20, 25 ஆண்டுகாலமாக கேட்டு வந்த
கோரிக்கையை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள், இந்து, முஸ்லீம், கிருஸ்துவ மக்களை அணைத்துச்
செல்லும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்று
பேரணாம்பட்டுக்கு ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் தந்திருக்
கிறார் அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரணாம்பட்டு தொகுதி மக்களின் நீண்ட நாள் தேவை
யான பத்ரபல்லி அணைத்திட்டமும், பேரணாம்பட்டிற்கு
தீயணைப்பு நிலையமும், நிரந்தர பேருந்து நிலையமும்,
உதயேந்திரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், பச்சைக்குப்பம்
ரயில்வே கேட் அருகில் மேம்பாலமும், மாதனூருக்குக் காவல்
நிலையமும் நிதிநிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தத்தில் தமிழகத்தில்
நிரந்தர முதல்வராக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் காலத்தின் பொக்கிஷம், அவர்களுடைய காலத்திலே
தமிழகம் சிறந்து விளங்கும் என்று சொல்லி, உரையை நிறைவு
செய்கிறேன்.



1993 பிப்ரவரி 10]

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டி
ருக்கிற ஆளுநர் உரை மீதான தீர்மானத்தின்மீது
ஒருசில கருத்துக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே சொல்வதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நடை பெற்றுக்
கொண்டிருக்கிற இந்த விவாதத்தில், இந்த விவாதம்
துவங்குவதற்கு முன்னால் ஒரு தனித் தீர்மானத்தின் மீது
விவாதம் நடக்கிறபோது, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த
சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள்தான் இந்த இந்திய
நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தோம் என்று உரிமை
கொண்டாடினார்கள். காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, இப்போது
இரண்டாகப் பிரிந்திருந்தாலும் அன்றையதினம் ஒன்றாக
இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் நாட்டுக்குச் சுதந்திரம் பெறுவதில்
மிகப்பெரிய பங்கை ஆற்றியது சரித்திர வாயிலான உண்மை
யாகும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

உதாரணத்திற்குச் சொன்னால், 1946ஆம் ஆண்டு என்று
நினைக்கிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடைய கப்பலில்
காங்கிரஸ் கொடி, செங்கொடி, முஸ்லீம் லீக் கொடி ஆகிய
கொடிகளை ஏற்றி பம்பாய் துறைமுகத்திலே இந்திய
சிப்பாய்கள் கொண்டுவந்து நிறுத்தி, அன்றையதினம் வெள்ளையர்
களே வெளியேறுங்கள்' என்ற கோஷத்தை, முழங்
கினார்கள். இப்படித் தொடர்ந்து நடைபெற்ற இந்திய
சுதந்திரப் போராட்டத்திலே முற்போக்குடைய நல்லெண்ணம்
படைத்த அனைவரும் பங்கு பெற்றார்கள். ஆக, கம்யூனிஸ்ட்
கட்சியும்நீண்ட பெரும்போராட்டங்களில் பங்காற்றி நாட்டுக்குச்
சுதந்திரம் பெற்றது என்பதை இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து
இந்த நாட்டிலே மத்திய அரசுப் பொறுப்பை ஏற்றிருக்
கின்ற காங்கிரஸ் கட்சி பல்வேறு பொருளாதாரத் திட்டங்
களை அறிவித்திருந்தது. ஆனால் இப்போது மத்தியிலே
இருக்கிற நரசிம்மராவ் அரசு ஒரு புதிய பொருளாதாரக்
கொள்கையை அறிவித்திருக்கிறது. புதிய பொருளாதாரக்
கொள்கை என்று சொல்கிறபோது, நேருவால் உருவாக்க
முடியாத பொருளாதாரக் கொள்கை, இந்திராகாந்தி
அவர்களால் உருவாக்க முடியாத பொருளாதாரக் கொள்கை.
ராஜீவ்காந்தி அவர்களால் உருவாக்க முடியாத பொருளா
தாரக் கொள்கை அல்லது அவர்களால் கொண்டுவரப்பட்ட

[திரு. வே. தம்புசாமி] [1993 பிப்ரவரி 10

பொருளாதாரக் கொள்கைகள் தோற்றுவிட்டதன் காரண
மாக இன்றையதினம் புதிய பொருளாதாரக் கொள்கையை
கண்டுபிடித்து அறிவித்திருக்கிறார்கள் என்றுதான் பொருள்.
இப்படி அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்த பொருளாதாரக்
கொள்கைகளால் இன்றையதினம் நாட்டிலே கடுமையான
பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, அந்த பொருளாதார
நெருக்கடியிலே இந்திய நாட்டு மக்கள் சிக்கியிருப்பது மட்டு
மல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களாகிய
நாமும் அந்தப் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்
கிறோம்.

இன்றையதினம் புதிய பொருளாதாரக் கொள்கை என்று
சொல்கிறபோது உதாரணத்திற்கு எவ்வளவோ சொல்ல
முடியும். ஆனால் ஒரு மாநில சர்க்காரை திவாலாக ஆக்குகிற
புதிய பொருளாதாரக் கொள்கையாகத்தான் அது இருக்
கிறதே தவிர, மாநில அரசுகளையோ, மாநில மக்களையோ
வாழவைக்கிற அளவுக்கு, அவர்களை உயர்த்துகிற அளவுக்கு,
பொருளாதார விடுதலைக்கு அவர்களை இட்டுச் செல்
வதற்கான எந்த ஒரு பயனும் இந்தப் பொருளாதாரக்
கொள்கையாலே ஏற்படவில்லை என்பதை இன்றைக்கு நாம்
கண்கூடாகப் பார்க்க முடியும்.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற அடிப்படையில்
நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கக்கூடிய திட்டங்களில்
இன்றைக்கு வெட்டு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கல்விக்கு
நிதி ஒதுக்குவதில் வெட்டு ஏற்படுகிறது. சுகாதார நிதியில்
வெட்டு ஏற்படுகிறது, உற்பத்திக்குப் பயன்படுகிற இடு
பொருள்களின் மானியத்தில் வெட்டு ஏற்படுகிறது. நாட்டிலே
நல்ல பலன் ஏற்படுவதற்கு நேர்மாறாக இன்றையதினம்
அனைத்துத் தொழில்களும் தனியார் கைக்கு மாறுகிற
ஒரு சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தனியார் கைக்கு மாறுவது மட்டுமல்ல, இன்றையதினம்
அன்னிய முதலீட்டுக்கு இந்திய நாட்டிலே தாராளமாக
கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன என்பதை நாம்
மறந்துவிட இயலாது. இப்படிப் புதிய பொருளாதாரக்
கொள்கை இந்தியாவின் நல்ல பல திட்டங்களுக்கு வெட்டு
ஏற்படுத்தி இருக்கக்கூடிய பொதுவுடைமைத் தொழில்கள்
முழுமையும். மத்திய அரசின் தொழில்கள் முழுமையும்
தனியார் கைக்கு மாறுகிற ஒரு சூழ்நிலையையும் நாம் பார்க்
கிறோம். அதனுடைய விளைவாகத்தான் இந்த மாநிலத்தைப்
பொறுத்தவரையில் மாநில அபிவிருத்திக்குக் கூட, அத
னுடைய அவசரத் தேவைக்குக் கூட மத்திய அரசு நிதி
வழங்காமையையும் நாம் பார்க்கிறோம்.



1993 பிப்ரவரி 10] [திரு வே. தம்புசாமி]

உதாரணமாகச் சொன்னால், புயல் வெள்ளத்தினால்
ஏற்படுகிற இழப்புகளை ஈடு செய்வதற்காக ரூ. 530 கோடியை
நாம் கேட்டிருந்தும் மத்திய அரசு தர மறுத்து, மத்திய அரசும்
மாநில அரசும் சேர்ந்தே 68.52 கோடி ரூபாய் தான் செல
வழிக்கக் கூடிய நிலை ஏற்பட்டு இருப்பதை நாம் தெரிந்து
கொள்ளலாம். இதனால் வெள்ளத்தாலோ புயலாலோ பாதிக்
கப்பட்டிருக்கிற மக்களை முழுமையாக அதிலிருந்து நாம் மீட்டு
விடமுடியாத அளவுக்கு ஒரு நெருக்கடி இருக்கிறது. இன்னமும்
கூட, அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்கள் வீடுகளுக்குத்
திரும்ப முடியாத சூழ்நிலையும், இருக்கிற வீட்டைக்கூட
பழுது பார்க்க முடியாத சூழ்நிலையும், அங்கே பாதிப்புக்கு
ஆளாகியிருக்கிற விவசாயப் பொருட்களான நெல், கரும்பு,
வாழை போன்றவற்றின் இழப்பைக்கூட ஈடு செய்ய முடியாத்
ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றையதினம் புதிய பொருளாதாரக்
கொள்கையின் விளைவாக, நாளுக்கு நாள் விலைவாசி உயர்ந்து
கொண்டே வருகிறது. எதிர்காலத்திலே மேலும் அது உயரு
கின்ற ஒரு அபாய சூழ்நிலையும் இருக்கிறது என்பதை நாம்
மறந்துவிட இயலாது. அதனுடைய விளைவாகத்தான்
இன்றையதினம் நாட்டிலே அரிசி விலை உயர்ந்திருக்கிறது.
அதுபோன்று பல்வேறு அத்தியாவசியப் பண்டங்களினுடைய
விலைகளும் உயர்ந்திருக்கின்றன. டீசல், பெட்ரோல் போன்ற
பொருள்களின் விலைகளை மத்திய அரசு உயர்த்துகிறது.
ரயில் கட்டணத்தை உயர்த்துகிறது. இதர அத்தியாவசியப்
பண்டங்களின் விலையை உயர்த்துகிறது. மத்திய அரசு எப்படி
உயர்த்துகிறதோ, அதையேதான் மாநில அரசும் உயர்த்திக்
கொண்டிருக்கிறது. மாநில அரசு அரிசி விலையை உயர்த்தி
இருக்கிறது; பேருந்துக் கட்டணம், பால் விலை அதுபோன்று
அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்த்தப்பட்டு
இருக்கின்றன. ஒரு புறத்திலே மத்திய அரசின் பொருளாதார
நெருக்கடியினாலே மக்களுக்குத் தாக்குதல்; இன்னொரு
புறத்தில் மாநில அரசு விலையை உயர்த்துகின்ற தாக்குதல்;
அந்த இருபுற தாக்குதல்களை இன்றையதினம் தமிழக
மக்கள் சந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நாம்
மறந்துவிட இயலாது.

பிற்பகல் 12–50

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மத்திய அரசு
விலையை உயர்த்திக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.
ஆனால், எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிற

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1993 பிப்ரவரி 10

போது, நம்முடைய ஆற்றல் மிக்க முதலமைச்சராக இருந்து
வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சியிலேதான் எல்லா பொருட்களும்—
இன்றைக்கு அரிசியாக இருந்தாலும் சரி, பேருந்துக் கட்டணமாக
இருந்தாலும் சரி, மின்சாரமாக இருந்தாலும்சரி அவற்றின்
விலைகளை மற்ற எல்லா மாநிலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கிற
போது, இதுபோன்ற ஒரு ஆற்றல் மிக்க முதலமைச்சரை இந்திய
வரலாற்றிலே எந்த மாநிலத்திலேயும் பெற முடியவில்லை.
என்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) குறைத்து
சாதனை படைத்து இந்த ஏழை எளிய மக்களைக் காப்பாற்றிக்
கொண்டிருக்கிற ஆட்சி இது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு
கின்றேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிலையிலே இருந்து
விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதை, இல்லை என்று
மறுக்க முடியாது. அதே நேரத்தில் மத்திய அரசும் விலையை
உயர்த்தி இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆளுகின்ற
அவர்களுடைய கம்யூனிஸ்ட் பேரியக்கம் ஆண்டு கொண்டிருக்
கின்ற மாநிலத்தில் அரிசி விலை என்ன என்பதை உறுப்பினர்
அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அரிசி விலை அங்கே நடைமுறையிலே
இருக்கிறதே தவிர, இன்றைய நிலையிலிருந்து உயர்த்தப்பட
வில்லை. ஆனால், தமிழக அரசு இன்றைய நிலையிலிருந்து
விலையை உயர்த்தி இருக்கிறது என்றுதான் நான் குறிப்பிடு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவை
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்பு
சாமி அவர்கள் மிக அழகாக பேச்சைத் துவங்கி, மிக அழகாக
பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது ஏன் உயர்த்தப்பட்டது
என்ற உண்மையையும் அவர்களே சொல்லிவிட்டால், இந்த
நாட்டு மக்களுக்கு அதுதெளிவாக இருக்கும்; நாங்கள் சொல்லு
வதைவிட அவர்கள் சொன்னால் சரியாக இருக்கும்.



1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. ஜெயலலிதா: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
தம்புசாமி அவர்களுக்கு ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இன்று மேற்கு வங்காளத்தில், அவர்களுடைய
கட்சி ஆட்சி புரிகின்ற மாநிலத்தில மத்திய அரசு நிர்ணயித்து
உள்ள பொது விநியோக முறையில் கொடுக்கப்படுகின்ற விலை
யைவிட அதிகமான விலைக்கு அரிசி வழங்கப்படுகிறது என்பதை
யும், அதே நேரத்தில் இன்று கூட தமிழகத்தில் இந்த விலை
உயர்வு செய்த பிறகு கூட, மத்திய அரசு பொது விநியோக
முறையில் வழங்கும் விலையை விட குறைவான விலைக்கே
இங்கே வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தில் விலை கூடுதலாக
இருக்கலாம்; ஆனால், நடைமுறையில் இருந்த விலையை
உயர்த்தவில்லை. சீராக அதே விலையாக இருக்கிறது. ஆனால்,
தமிழ்நாட்டில அவ்வப்போது அரிசியினுடைய விலை உயர்த்தப்
பட்டுக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதுதான் என்னுடைய
கேள்வி ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்த்தப்பட்டு
இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவே இல்லை. அகில உலகம்
முழுவதும் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயும்
உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏன் உயர்த்தி இருக்கிறோம்
என்பதுதான் பிரச்சினை. அப்படியானால், கொள்முதல்
விலையை குறைத்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு உறுப்
பினர் கருதுகிறாரா? நெல் விலையினுடைய கொள்முதல்
விலையைக் குறைக்கலாமா? பால் விலையினுடைய கொள்
முதல் விலையை குறைக்கலாமா? மற்றவைகள் எல்லாம் குறைந்
தால், இதுவும் குறையும், மத்திய அரசு அதே விலையை ஏற்
றாமல் இருந்து இருக்குமேயானால், இங்கே ஏற்ற வேண்டிய
அவசியம் இல்லை.

இப்போது கூட மத்திய அரசு ஏற்கெனவே 1992 டிசம்பரில்
என்ன விலை இருந்ததோ, அந்த விலைக்கு அரிசியைக் கொடுக்க
வருமேயானால், நாமும் முன்னைய விலைக்கு விற்கத் தயார்.
தங்களுடைய அகில இந்திய செல்வாக்கை வைத்துக் கொண்டு
அந்த நிலைமைகள் ஏதாவது செய்ய முடியும் என்றால், செய்

தால், இங்கேயும் குறைக்கலாம். அங்கே ஏற்றினார்கள். ஆகவே,
இங்கே ஏற்றுகிறோம். ஆனால், பழி எங்கள் மீது அல்ல; டெல்லி
மீது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். மத்திய அரசு
உயர்த்துகிறது. அதையே பின்பற்றி மாநில அரசும் உயர்த்து
கிறது. ஆகவே, மத்திய அரசை எதிர்த்து நாங்கள் நிச்சயமாக
தொடர்ந்து பல்வேறு இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்
கிறோம். அதேமாதிரி, அப்படி மத்திய அரசு அரிசி விலையை
உயர்த்துகிற போது, மாநில அரசு போராடுவதற்கு தயாரா
என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அதனுடைய விளைவுகள்தான்
இப்போது நீங்கள் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.
இப்படியெல்லாம் நாங்கள் கேட்கிற காரணத்தினால் தான்
இந்த விளைவுகளை இன்றைக்கு கண் கூடாகக் கண்டுகொண்டு
இருக்கிறீர்கள். தம்புசாமி அவர்கள் மேற்கு வங்காளத்தைப்
பற்றிச் சொன்னார்கள். அங்கே ஒரே சீராக உயர்த்திக் கொண்
டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்போது ஒரே சீராக
இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியென்றால், நீங்கள்
ஏற்கெனவே எதிர்பார்த்து, மத்திய அரசாங்கம் உயர்த்தும்
என்று எதிர்பார்த்து அரிசி விலையை ஏற்கெனவே 5½, 5 3/4
ரூபாய்க்கு கொண்டு போய் நிறுத்தி விட்டீர்கள். இங்கே 3½
ரூபாய். அங்கே 5 3/4 ரூபாய்க்கு நீங்கள் கொடுத்துக் கொண்
டிருக்கிறீர்கள். எனவே, மத்திய அரசாங்கம் ஏற்றும் என்று
கருதி நீங்கள் ஏற்கெனவே உயர்வை மக்களுடைய தலையிலே
சுமத்திவிட்டீர்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
தம்புசாமி அவர்கள் மத்திய அரசு விலையை உயர்த்தியபோது
அதை எதிர்த்துப் போராடத் தயாரா என்று இங்கே கேட்
கிறார்கள் ஆனால், மத்திய அரசு விலையை ஏற்றியபோது



அவர்கள் ஆளுங்கட்சியாக இருக்கிற மேற்கு வங்காளத்தில்
போராடுவதற்கு பதிலாக, சில நாட்களிலேயே அரிசி விலையை
உயர்த்தி விட்டார்கள் என்பதை அவர் தெரிவிக்காதது வருந்தத்
தக்கது. அதுமட்டுமல்லாமல், ஆண்டு ஒன்றுக்கு அந்த மக்கள்
தொகையை விட குறைந்த மக்கள் தொகை கொண்ட தமிழகத்
தில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் 360 கோடி ரூபாய்
மானியமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். மேற்கு
வங்காளத்தில் அப்படி கொடுக்கப்படுவதில்லை. வெறும் 20
கோடி ரூபாய்தான் அங்கே மானியமாக அரிசிக்குத் தரப்படுகிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி.
பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்
கள் பேசுகிறார். நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும்.
சமீபத்தில் தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்த பின்னால் ஆளுகிற
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அரிசி விலையை
எதிர்த்து போராடுகிறது. மத்தியிலே அரிசி விலையை உயர்த்தி
யிருக்கிற காங்கிரஸ் கட்சியும் அரிசி விலையை எதிர்த்துப்போராடு
கிறது. அப்படியானால் யார் அரிசி விலையை உயர்த்தியிருக்
கிறார்கள் என்பதில் தமிழ் நாட்டு மக்களிடத்தில் ஒரு குழப்
பத்தை உருவாக்கும் விதத்தில் இருக்கிறதே, இதற்கு யார்
காரணம், அரிசி விலை உயர்வுக்கு அடிப்படைக் காரணம் என்ன
என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அது பழனிசாமி அவர்களுக்குப்
புரியவில்லையா? அது புரியவில்லை என்றால் நீங்கள் இங்கே
எப்படி பேசுவது? அதுதான் எங்களுக்குத் தெரியவில்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி அரிசி விலையை உயர்த்தி
இருக்கிறது என்பது உண்மை. அதை நாங்கள் மறுக்கவே
இல்லை. தொடர்ந்து காங்கிரஸ் கட்சி உயர்த்தி வருகிறது.
அதுவும் இந்த ஆண்டு ஏற்றவில்லை. ஏற்கெனவே 88 ரூபாய்
ஒரு குவிண்டாலுக்கு உயர்த்தி இருக்கிறது. அப்போதே 50
பைசா தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் உயர்த்தினார்கள்.
அப்போது கடும் எதிர்ப்பு வந்த காரணத்தால் திரும்பவும் அதைக்
குறைத்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு உயர்த்தவில்லை
அரிசி விலையை. அதற்குப் பிறகு உயர்த்தியதுதான் நம்முடைய...

[1993 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அது கடும் எதிர்ப்பால் அல்ல. ஏழை
மக்களுடைய கோரிக்கையை ஏற்று புரட்சித் தலைவி அவர்கள்
செய்தார்கள். கடும் எதிர்ப்பு என்பது வேறு, மக்களுடைய
கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. மக்களுடைய
கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுதான் அன்றைக்கு முதல்வர்
அவர்கள் குறைத்தார்கள். இன்றைக்கு அதற்கு வாய்ப்பு இல்
லாத சூழ்நிலையின் காரணமாக அதிகமாக 100 கோடி ரூபாய்
மானியம் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயத்திற்கு இந்த அரசு
ஆளாக்கப்பட்டதன் காரணமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்
பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். வி
சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்
கள் மாநில அரசும் போராடுகிறது, மத்திய அரசும் போராடு
கிறது குழப்பமாக இருக்கிறது என்று சொல்கிறார். மக்களைப்
பொறுத்தவரையில் இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் மத்திய
அரசுதான் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்கு
குழப்பம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி
தொடர்ந்து பேசுங்கள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேற்கு வங்கத்தைப் பற்றி நான் தொடர்ந்து சொல்
கிறேன். அரிசி விலை ஒரே சீராக இருக்கிறது, உயர்த்தவில்லை.
ஆனால், மாநில அரசு இப்போது உயர்த்தி இருக்கிறது.

மாண்புமிகு 'பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தவறான கருத்தை நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மத்திய
அரசு உயர்த்திய உடனே ஒரு வார காலத்திற்குள் மேற்கு வங்
காள அரசு அரிசி விலையை உயர்த்தி இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1993 பிப்ரவரி, 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி
அவர்கள் மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
ஆளுகிறது ; ஆகவே, 5 ரூபாய் சில்லரைக்கு விற்கிறோம்.
இங்கே நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறோம். ஆகவே, எதிர்க்
கிறோம் என்று ஒரே வரியில் விட்டுவிடுவார்களானால்
பிரச்சினையே வராது. (சிரிப்பு).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் பொதுவாக புதிய பொருளாதாரக்
கொள்கை என்ற அடிப்படையில் நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலை
மையில் கல்விக்கு மானியம் குறைக்கப்படுகிறது. அதுபோன்று
மருத்துவத்திற்கு மானியம் குறைக்கப்படுகிறது. இப்படித்
தொடர்ந்து மானியம் குறைக்கப்படுவதால் கல்வி தனியார்
கைக்கு மாறுகிற ஒரு அபாய சூழ்நிலையைப் பார்க்கிறோம்.
அதைப் போல மருத்துவமனைகளில் இன்றைய தினம் மருந்துகள்
இல்லாமல் ஒரு கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.
நானும் முதலமைச்சருக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்ச
ருக்கு கூடத் தொடர்ந்து அங்கே ஏற்பட்டிருக்கிற காலரா
நோயைத் தடுப்பதற்கான......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, இதிலும் நான் விளக்கம் சொல்லவேண்டிய
கடமை இருக்கிறது. ஏற்கெனவே ஒதுக்கியதைவிட மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் விலையுயர்வு ஏற்பட்ட காரணத்தால்
கடந்த ஆண்டு 6 கோடி ரூபாய் கூடுதலாக இடையிலே ஒதுக்கிக்
கொடுத்தார்கள். இந்த ஆண்டு அதே 6 கோடி ரூபாயை
தொடர்ந்து சேர்த்துக் கொடுத்தார்கள். இந்த இரண்டு ஆண்டு
களாக ஒரு புதிய நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. என்ன
வென்றுச் சொன்னால் இதுவரையில் ஆண்டுக்கு ஒருமுறை விலை
ஏறும். ஆனால், இடைக் காலத்தில் மருந்துகளுடைய விலை
ஏறத்தாழ 39 சதவீதம் ஏறிவிட்ட காரணத்தால், டெண்டர்
கோரப்பட்டு டெண்டர் முடிவெடுக்கப்பட்ட பின்னால் கூட
அவர்கள் மருந்துகளை சப்ளை செய்வதற்கு மறுக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

அதிலே இருக்கிற முறைகளின் காரணமாக, உடனடியாக
வேறு இடத்திலே வாங்குவதற்கு நிலைமை சரியில்லாமல் இருக்
கிறது. பலவிதமான மருந்துகள் கிடைக்காத நிலைமையும்

ஏற்படுகிறது. இதை எல்லாம் சமாளிப்பதற்காகத்தான் இந்த
ஆண்டிலிருந்து 70 கோடி ரூபாயை, அதற்காக முழுமையாக
ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு 56 கோடி ரூபாயை
ஒதுக்கியதிலிருந்து இந்த ஆண்டு 70 கோடியாக அதை உயர்த்தி,
புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வாங்குகிற
முறையிலே சில இடர்பாடுகள் இருக்கிற காரணத்தால், உடனடி
யாக மருந்துகளை வாங்கி, அதைத் தேவையான இடத்திற்குக்
கொடுக்க முடியவில்லை என்ற நிலையை உணர்ந்து புதிதாக
அதற்கு என்று தனியாக ஒரு அமைப்பையே ஏற்படுத்த வேண்டும்
மற்ற பணிகளைப் பார்ப்பவர்களே இதையும் பார்க்கிற காரணத்
தால், முழு நேரத்தையும் அதற்காகச் செலவழிக்க
முடியவில்லை, எனவே குறைபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன
என்பதைப் புரிந்து, தனியாக, அதற்காக என்று ஒரு கழகத்தை
ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, ஒரு கார்ப்பரேஷனை
அமைப்பதற்காக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.
வருகின்ற ஆண்டு அது துவங்குமேயானால், நிச்சயமாக
இந்தப் பிரச்சினை நூற்றுக்கு நூறு தீர்க்கப்படும் என்பதில்
எங்களுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. உடனடியாக,
இந்த இரண்டு மாதங்களுக்கும், இருக்கிற பிரச்சினையைச்
சமாளிப்பதற்காக, பிப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்
களுக்கு மட்டும் ஏறத்தாழ சென்னையில் இருக்கிற பொது
மருத்துவமனைக்கு மட்டும் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு
இருக்கிறது. அது போன்று மாவட்டத் தலைநகரங்களில் இருக்கிற
மருத்துவமனைகளுக்கு 5 லட்சம் ரூபாய் உடனடியாக ஒதுக்கித்
தரவேண்டும் என்று சொல்லி, ஏறத்தாழ 2½ கோடி ரூபாய்க்கு
மேலே, அந்தந்த மருத்துவமனைகளின் கையிலே நாங்கள்
கொடுத்திருக்கிறோம். எனவே, இந்த மருந்துப் பிரச்சினை
என்பது நிச்சயமாக இருக்காது. அடுத்த ஆண்டு இது முழுமை
யாகத் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தம்புசாமி : இது குறித்து நடவடிக்கை எடுப்ப
தாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்
துக் கொள்கிறேன். ஆனால் இப்போது என்ன அவசரத் தேவை
என்றால், அந்தப் பகுதியிலே காலரா நோய் வேகமாகப் பரவி
வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைத் தடுப்பதற்கான
முதல் சிகிச்சையாக உள்ள 'சலைன் பாட்டில்' சுத்தமாக
இடையாது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர்
அவர்களே, ஐ. வி. ப்ளுயிடைப் பொறுத்தவரையில், லாரி
லாரியாக, எங்கே தேவையோ அங்கே அனுப்பிக் கொண்டிருக்
கிறோம். காலரா என்பது திடீரென்று வந்துவிடுகிற காரணத்
தால், அளவுக்கு அதிகமாக அங்கே தேவைப்படுகிறது. உடனே,



இங்கே தலைமைக்கு அவர்கள் தொடர்பு கொள்கிறார்கள். லாரி
களின் மூலமாக நேரடியாக, இதுவரையில் நடக்காத அளவிற்கு
நாங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். சமீபத்திலே கூட
காஞ்சீபுரத்தில் ஒரு சிறிய சம்பவம் ஏற்பட்டுவிட்டது. நூற்றுக்
கணக்கான குழந்தைகள் மருத்துவமனைக்கு வந்தார்கள். இதைச்
சொன்னவுடனே, பக்கத்து மருத்துவமனைகளிலே இருக்கின்ற
மருந்துகளை எல்லாம் கொண்டு போய், அந்த நேரத்தில் சமா
ளித்து இருக்கிறோம். அதற்குப் பின்பு அங்கே வாங்கிக் கொடுத்
திருக்கிறார்கள். எனவே, தினந்தோறும் கண்காணித்துக் கொண்
டிருக்கிறோம். நிச்சயமாக இந்தப் பிரச்சினை வருவதற்கு
இனிமேல் நாங்கள் விடமாட்டோம்.

திரு. வே. தம்புசாமி : அதேபோன்று, இன்றைய தினம்
பொதுத் துறைகள் முழுமையும் தனியார் கைக்கு மாற்றப்படு
கின்ற ஒரு அபாயம் வளர்ந்து வருகிறது. இப்போது கூட
மக்களுடைய அடிப்படைத் தேவையாக இருக்கக்கூடிய மின்சாரக்
கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. மேலும் மின்சார
உற்பத்தி என்பது எதிர்காலத்தில் தனியார் கைக்கு மாற்றப்படும்
என்ற அபாயச் சங்கு ஊதப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை
எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே
அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டாம் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்தத் துறையிலே பணியாற்றக் கூடிய
ஏறத்தாழ 28 ஆயிரம் டெம்பரரி ஊழியர்களை அரசு அங்கீ
கரிக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தும் கூட
அரசு அதை ஏற்றுக் கொள்வதற்கானத் திட்டத்தை இந்த
ஆளுநர் உரையிலே குறிப்பிடவில்லை.

அதேபோன்று, ஒப்பந்தத் தொழிலாளர்கள், ஆதிலே பணி
யாற்றக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்கள், இன்றைய தினம்
தனி கான்ட்ராக்ட் மூலம் நியமிக்கப்படுகிறார்கள். அந்தக்
கான்ட்ராக்டர்கள் அரசு வழங்கக் கூடிய பணத்தை வாங்கிக்
கொண்டு போய்விடுகிறார்கள். ஆனால் எந்த ஒப்பந்த அடிப்
படையில் அந்தத் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படு
கிறார்களோ, அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.
உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், திருவாரூர்
யூனிட்டிலே வேலை செய்யக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்
களுக்கு 65 ஆயிரம் ரூபாய் வரையிலும் வழங்கப்பட வேண்டும்.
ஆனால், அரசு ஒப்பந்தக்காரருக்கு பணத்தைக் கொடுத்து
விட்டது. ஆனால் ஒப்பந்தக்காரர் அந்த ஒப்பந்தத் தொழி
லாளர்களுக்கு பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டார்.
இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆண்டாண்டுக் காலமாக உழைத்துக்
கொண்டிருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை அரசு
கவனித்து, விரைவாக....

[1993 பிப்ரவரி, 10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
பொதுப் பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி
அவர்கள் தனியாருக்கு மின்சார வாரியத்தை தாரை வார்ப்பது
போலப் பேசினார்கள். தமிழக அரசைப் பொறுத்த மட்டிலும்
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப்
பொறுத்த மட்டிலும், தனியார்களை இந்தத் துறையில் ஊக்கு
விக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே தவிர, ஏற்கனவே
அரசிலே இருக்கிற நம்முடைய மின் உற்பத்தித் திட்டங்களையோ
அரசின் பொறுப்பிலே இருக்கிற மின்உற்பத்தித் திட்டங்களையோ
தனியார் இடத்திலே கொடுக்கின்ற எண்ணம் இல்லை
தனியாரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது வேறு. தனி
யாரிடமே ஒப்படைப்பது என்பது வேறு, ஆகவே, மாண்புமிகு
உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இதைப் புரிந்து கொள்ள
வேண்டும். நம்மிடத்திலே சில திட்டங்கள் இருக்கின்றன.
நம்மிடத்திலே பணம் இல்லை. அதற்காக தனியார்களை
ஊக்குவிக்கிறோம். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசு
முழுப் பணத்தையும் செலவழித்து திட்டங்களைப் போட
முடியாது. பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாயை நாம்
செலவழிக்க வேண்டியிருக்கிறது அதற்கான நிதி ஆதாரங்கள்
நம்மிடத்திலே இல்லை. ஆகவே எதிர்காலத் தேவைகளை
முன்னிட்டு, வருங்காலத்தில் வர இருக்கிற நிலைமைகளைக்
கவனித்து, அவர்களை நாம் ஊக்குவிக்கிறோம். அவர்களும்
முதலீடு செய்கிறார்கள். இந்த அரசு அவர்களுக்கு இடத்தைத்
தருகிறது. நம்முடைய பக்கத்திலே மின்சார உற்பத்தி
அதிகமாக வரவேண்டும் என்பதற்காக, அவர்களை ஒரு
பகுதியாக ஏற்றுக் கொண்டு இருக்கிறோம்.
ஆகவே இதிலே் தனியார்களுக்கு தாரை வார்ப்பது என்பது இந்த
அரசினுடைய நோக்கமல்ல. தனியார்களை ஊக்குவிக்கின்றோம்
ஒன்று. இரண்டாவது ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சனை.
இது நீண்ட நெடுங்காலமாக நம்முடைய மின்சார வாரியத்தில்
இருக்கின்ற பிரச்சனை. இதற்கு ஒரு விளக்கத்தினை நான்
சொல்லியாக வேண்டும். ஒப்பந்தத்தின் அடிப்படையிலே சில
தொழிலாளர்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.
அந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சம்பளத்திற்கான பணத்தை
அந்த ஒப்பந்தக்காரர்களிடத்திலே கொடுக்கிறோம். உதாரண
மாக ஒரு வேலைக்கு 100 பேரை கூட்டிக்கொண்டு வருகிறார்கள்.
அந்த 100 பேரை கூட்டிக்கொண்டு வருவதற்கு ஒரு மேஸ்திரி
இருக்கிறார். அந்த அனல் மின் நிலையத்திலேயே 100 பேருக



1993 பிப்ரவரி, 10]

பேசிசில் கொடுக்கிறார்
குரிய சம்பளத்தை அந்த கான்ட்ராக்ட் பேசிசில் கொடுக்கிறார்
கள் அந்த அதிகாரிகள். அவர்கள் அந்த சம்பளத்தை பகிர்ந்து
கொடுக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டு
மென்ற ஒரு பிரச்சினை வந்தது. காலிக் கமிஷன் முறையில்
அவர்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள்.
இன்றைக்கு இருக்கின்ற நிதியாதாரத்தின் அடிப்படையில் நம்
முடைய மின்சார வாரியத்தை எப்படி நடத்திக் கொண்டிருக்
கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி
அறிவார்கள். ஆகவே அத்தனை பேரையும் எடுத்துக் கொள்வது
என்பது இயலாத காரியம் என்ற முறையிலே இன்றைக்கு உயர்
நீதிமன்றத்தை அணுகி, உச்ச நீதிமன்றத்தை அணுகி, அந்த
யோசனைக்கு மாற்று ஏற்பாடாக ஒரு மறுபரிசீலனை, மேல்
முறையீடு செய்கின்ற முறையை இன்றைக்கு இந்த அரசு ஏற்
படுத்தி, அதற்காக உச்ச நீதிமன்றத்தை அணுகிக் கொண்டிருக்
கிறோம். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்
கிறது. தொழிலாளர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொண்டால்
அவர்களுக்கு சம்பளம் வழங்கியாகவேண்டும். 18,000, 20,000
பேர் என்று அவர்களை நிரந்தரம் செய்கின்றபோது அவர்களுக்குக்
கொடுக்க வேண்டிய பல்வேறு சலுகைகளையும் மின் வாரியம்
கொடுத்தாக வேண்டும். ஆகவே அரசுக்கு இருக்கின்ற இக்கட்
டான சூழ்நிலையில் அத்தனை பேரையும் ஏற்றுக்கொள்ள முடி
யாத சூழ்நிலைகளின் காரணத்தால் குறிப்பிட்ட சிலரை, தகுதி
உள்ளவர்களை நாம் ஓரளவிற்கு எடுத்துக் கொண்டோம்.
அந்தத் தீர்ப்பை மதித்து எடுத்துக் கொண்டோம். அதற்கு மேலே
எடுத்துக் கொள்வதற்கு அரசிடத்திலே நிதியாதாரம் கிடையாது.
நிதியாதாரம் இல்லாமல் நாம் ஆட்களை சேர்த்துக் கொண்டு
நடத்த முடியாது. இருக்கின்ற சங்கடங்களினால்தான் இந்தப்
பிரச்சினை இருக்கிறது. இது உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறை
யீட்டிற்காகச் சென்றிருக்கிறது. ஆகவே தொழிலாளர் நலன்
பாதிக்கப்படுகின்ற பிரச்சினை இல்லை. இதுபோன்ற சிற்சில
தவறுகள் எங்காவது இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்
பினர் திரு. தம்புசாமி அவர்கள் இந்த அரசினுடைய கவனத்
திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்
ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பிரச்
சினை இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : அடுத்து நாகை மாவட்டத்தில் பிள்ளை
பெருமாள் நல்லூரிலே ஒரு மின் நிலையம் ஏற்படுவதற்கான
திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது எப்போது செயல்
படும்? அதனுடைய எதிர்காலத்து நிலைமை என்ன என்பதை
அமைச்சரவர்கள் அறிவிக்கவேண்டும்.

அதே மாதிரி நாகையிலே திருப்பூண்டிக்குக் கிழக்கே பூவத்தடி
யில் அனல் மின் நிலையம் ஏற்படுத்துவதற்காக 140 ஏக்கர்
நிலத்தை அரசு கையகப்படுத்தியிருக்கிறது. அந்தத் திட்டம்

[திரு. வே. தம்புசாமி] [1993 பிப்ரவரி, 10

என்னவானது என்பதும் இதிலே அறிவிக்கப்படவில்லை. முதல்
வருடைய பதிலுரையில் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதே நேரத்தில் இன்றைய தினம் விவசாயிகள் கடுமையான
நெருக்கடியிலே சிக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு
அறியும். அப்படி விவசாயிகள் ஒரு புறத்திலே இடுபொருள்
விலை உயர்ந்து இன்றைய தினம் அதிக கண்டுமுதல் என்று
சொன்னாலும்கூட, பெரும் பகுதியாக சென்ற ஆண்டு கண்டு
முதலை விட குறைந்திருக்கிறது என்று கூறமுடியும். உர விலை
உயர்ந்ததன் விளைவாக பயன்படுத்த முடியாமல் உற்பத்தி
குறைந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே நமது நாட்டில
உரத்தைப் பயன்படுத்தாமல் எந்த உற்பத்தியும் செய்ய முடியாத
ஒரு நிலை ஏற்பட்டு விட்ட பிறகு, இப்படிப்பட்ட சூழ்நிலைமை.
இந்த நிலைமையிலே நில வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி
உயர்த்தப்பட்ட நில வரியை அரசு கைவிடவேண்டுமென்று இந்த
நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ஒப்பந்த ஆசிரியர்கள் பிரச்சினை. இதைப்
பொறுத்தவரையில் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது.
அரசு கவனம் செலுத்தி, பிரச்சினையைத் தீர்த்து அவர்களுக்கு
வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே ஆலைகள் மூடப்பட்டிருக்
கின்றன. அந்த ஆலைகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை
எடுத்தாகவேண்டும். அத்தோடு ஓசூர், அசோக் லேலண்டு,
மேட்டூர் மில், புகளூர் சர்க்கரை ஆலை இவை முழுவதுமாக
மூடப்பட்டு, லட்சக்கணக்கான உழைக்கக் கூடிய தொழிலாளர்
கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டுமென்றால், புகளூர் சர்க்கரை ஆலையில் 700-க்கும்
மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வீதியிலே நின்று
கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அதிக
மாக தலையிட்டு, விரைவாக அந்தத் தொழிலாளர்களுக்கு பாது
காப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே
போல் நகரசுத்தித் தொழிலாளர்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, எத்தனை மூடப்
பட்ட தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன என்பது உங்களுக்குத்
தெரியும். பி. அண்டு சி. மில் திறக்கப்பட்டிருக்கிறது. ஸ்டாண்
டர்டு மோட்டார்ஸ் திறக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
உங்களுடைய கட்சி ஆட்சி செய்கின்ற மேற்கு வங்கத்தில் 10



1993 பிப்ரவரி 10] (மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.)

மில்கள் மூடப்பட்டு, 10,000 பேர் இன்றைக்கு வேலை இழந்
திருக்கின்ற ஒரு செய்தி உங்களுக்குத் தெரியுமா என்பதைத்தான்
ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

திரு. வே. தம்புசாமி : அந்த ஆலைகளை மத்திய அரசு
திறக்க வேண்டும் என்று தொடர்ந்து மாநில அரசே போராடிக்
கொண்டு வருகிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேற்கு வங்கத்
திலே 42 ஜவுளி ஆலைகள் இருக்கின்றன. அதிலே 21 தனியா
ருடையது, 5 அரசினுடையது, 14 அரசினுடைய கூட்டுறவில்
இருக்கிறது. அரசினுடைய கூட்டுறவில் இருப்பதிலேயே 3 ஜவுளி
ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

திரு. வே. தம்புசாமி : இங்கே ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்
சினைகளை விரைவாக தமிழக அரசு தீர்க்க தலையிட வேண்டும்
என்று சொன்னால் (சிரிப்பு)..... அதற்காக இங்கே நாம்
தலையிடாமல் இருக்கவேண்டுமா? இந்த மாநிலத்தைப்
பொறுத்த வரையில் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க
வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர வேறு
ஒன்றும் இல்லை. அதற்காகத்தான் சொல்லுகிறேன், அரசு இதில்
விரைவாக தலையிட்டு இந்தப் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும்.
அதே நேரத்தில் அப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபோது
ஆங்கே இருக்கக் கூடிய தொழிற்சங்கங்களை அழைத்து அதன்
மூலம் ஒரு தீர்வு காண்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாநகராட்சி தேர்தல். மாநகராட்சி, நகராட்சி
ஒன்றிய ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்தப்பெறாமல் காலம்
கடத்தப்படுகிறது. அதனுடைய விளைவாக அரசு என்ன திட்டங்
களை எடுத்தால்கூட அதை முறையாக செயல்படுத்த முடியாத
நிலை, மக்களுக்கு அவைகள் போய்ச் சேர முடியாத சூழ்நிலை
இருக்கிறது என்பதை நீங்களே கண்கூடாகப் பார்க்கிற நிலைமை
இருக்கிறது. ஆகவே இந்த தேர்தல்களை விரைவாக நடத்துவதற்
கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சென்னை மாநகராட்
சிக்குக்கூட 24 வயசு பையனைக் கேட்டால்கூட, இந்த
மாநகராட்சி தேர்தலைப் பற்றி அவனுக்கு தெரியாது. அப்படிப்
பட்ட நிலைமை தவிர்க்கப்பட வேண்டும் என்பது தான்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே
தமிழகத்தில் இருக்கிற எல்லா உள்ளாட்சிகளுக்கும் தேர்தலை
நடத்த வேண்டும் என்ற உணர்வோடுதான் திட்டம் தீட்டி
னார்கள். இடைக்காலத்தில் காவிரி நீர் பிரச்சினை காரண
மாகத்தான் ஒத்திவைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே
இப்போது வாக்காளர் பட்டியலை சரிபார்க்க வேண்டிய காரணத்
தினாலும், சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெறுகிற
காரணத்தினாலும் ஜூனுக்குப் பிறகு இந்தத் தேர்தலைப் பற்றி
தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள்
ஆலோசித்து அறிவிப்பார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : அடுத்து இன்றைய தினம் மாநக
ராட்சி வரையிலும், ஊராட்சி வரையிலும் திட்டங்களை நிறை
வேற்றுவதற்காக விழிப்புணர்வு கமிட்டி அமைப்பதாக அறிவிக்
கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியிலே அங்கீகரிக்கப்பட்ட
அனைத்து கட்சிகளுக்கும் உரிமை வழங்கி அவர்களும் அந்தக்
குழுவில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியில்
இருப்பவர்கள் மட்டும், அதிகாரிகள் மட்டும் இருக்கக் கூடிய
குழுவாக அது இல்லாமல், ஒரு ஜனநாயக உரிமை வழங்கி
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளையும் சேர்த்து அவர்களை
யும் இணைத்துக் கொண்ட ஒரு குழுவாக அது அமைக்கப்பட
வேண்டும். அப்போதுதான் அந்த திட்டங்களை முறையாக
செயல்படுத்துவதற்கு, அனைவரும் சொல்லக் கூடிய ஆலோசனை
களின் அடிப்படையிலே நாம் நிறைவேற்ற முடியும். அந்த
வகையிலே செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
அடுத்து குடும்ப அட்டைகள் வழங்குவதிலே மிகுந்த காலம்
கடந்து வருகிறது. அதனால் அத்தியாவசியப் பண்டங்களை
வாங்க முடியாமல் கிராமப்புற மக்கள் நகர்ப்புற மக்கள் சிரமப்
படுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அந்தப் புதிய
கார்டுகளை வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும்.
அதே போல் கூட்டுறவுத் தேர்தலையும் நடத்த வேண்டும்.

அடுத்து, இப்போது மதுவிலக்கு கொள்கையைப்பற்றி நாம்
பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் மதுவிலக்கு கொள்கை
தோற்றுவிட்டது என்ற முடிவிற்குதான் வரவேண்டும், தோற்று
விட்டது என்றேதான் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால் முதலிலே
பார் வைக்கிறபோதே நான் ஆட்சேபணை தெரிவித்தேன்.
ஆனால் பார் வைக்கப்பட்டது. பிறகு அது நீக்கப்பட்டது.
பார் வைப்பது ஏன் பிறகு அது நீக்கப்படுவது ஏன் என்பதே
தெரியவில்லை. இந்த மதுவிலக்குக் கொள்கையை கறாராக
அமல்படுத்துவதிலே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.



ஏனென்றால் இன்றைய தினம் கள்ளச் சாராயம் என்பது சமூக
விரோத சக்திகளின் கைக்கு மாறி காவல் துறையையே தாக்கு
கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது . . .

திரு. இரா. தாமரைக்கனி : ரஷ்யாவிலே பார் இல்லையா ?
அதை முதலிலே சொல்லுங்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்
திரு. தாமரைக்கனி அவர்கள் அமைதியாக அமர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. தம்புசாமி நீங்கள் 30
நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உடனடியாக
முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : இந்தக் கள்ளச் சாராயம் என்பது
சமூக விரோதிகளின் கையிலே மாறியிருக்கிறது. அதை அரசு
விரைவாக கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் காவல் துறை
யைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கு
வதிலே காலம் கடந்து வருகிறது என்கிற ஒரு ஆதங்கம் இருக்
கிறது. இதனால் எதிர்காலத்தில் அந்த இலாகா செயல்
படுவதிலே ஒரு தேக்க நிலை இருக்கும். ஆகவே அதனைப்
போக்குவதற்கு அவர்களுடைய பிரச்சினைகளையும் பார்த்து
பதவி உயர்வு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த
அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போல தேசம் கடுமையான நெருக்கடியிலே இன்றைய
தினம் இருக்கிறது. மத உணர்வு தூண்டப்பட்டு இன்றைய
தினம் நாட்டிலே ஏறத்தாழ மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள்
கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.
அந்த அடிப்படையிலே இங்கேயும் தமிழகத்திலேயும் மத
உணர்வு தூண்டப்படுவதற்கான சில தீய சக்திகள் விரைவாகச்
செயல்படுகின்றன.

பிற்பகல் 1-15

அரசு கண்காணிப்பாக இருக்க வேண்டும். அதே நேரத்தில்
கோவை நகரத்தில் இந்து விழிப்புணர்வு என்ற ஒரு மாநாடு
நடத்துவதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை அரசு தடை
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது
வளர்க்கப்படுமேயானால் எதிர்காலத்தில் என்ன விளைவுகளைச்
சந்திக்க வேண்டியிருக்கும் என்று யோசித்து நமது கடந்த
கால அனுபவங்கள், பம்பாயில் நடைபெற்ற அனுபவங்கள்
இவற்றை மனதில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று மத
நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசு தரப்பில் எந்த ஒரு

முயற்சியும் எடுக்கவில்லை. மத நல்லிணக்கத்தை உருவாக்கு
வதற்கு அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் நாம் என்ன சொல்
லிக்கொண்டிருந்தாலும் கொலை, கொள்ளைகள் என்பது
நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இன்றைய தினம் இரவு
திருட்டு என்பது மாறி, பகல் திருட்டு நடக்கக் கூடிய ஒரு
நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல கோவில் சொத்துக்கள்
இன்றைய தினம் கொள்ளை அடிக்கப்படுகின்றன. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு.
தாமரைக்கனி அமருங்கள், நீங்கள் முடியுங்கள். 31 நிமிடம்
பேசியிருக்கிறீர்கள்.

திரு. வே. தம்புசாமி : துணைத் தலைவர் அவர்களே,
கோவில் சொத்துக்களை இன்றைய தினம் பட்டப் பகலிலே
கொள்ளை அடிக்கின்ற சூழ்நிலை நாளுக்குநாள் அதிகரித்து
வருகிறது. அதை வெகுவாகத் தடுத்து நிறுத்துவதற்கு, கண்டு
பிடிப்பதற்கு, கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது போன்று எதிர்க்
கட்சிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணா
விரதம் இருக்கின்றபோது அதை எதிர்த்து உண்ணும் விரதம்
என்று அனுமதி கொடுப்பதே அநாகரிகமானது. அது நீண்ட
காலமாக இருக்கக் கூடியது. அது ஜனநாயக உரிமை, எனவே
அந்த மாதிரியான அனுமதியை வழங்கக்கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன். அது போன்று . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இத்தோடு முடித்துக்கொள்ள
வேண்டும். திரு. தென்னவன்.

திரு. ஜி. பழனிசாமி : துணைத் தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன பாயின்ட்
ஆப் ஆர்டர்? அவரிடம் சொல்லியாகிவிட்டது, குறுக்கிடவேண்
டாமென்று. அவர் கேட்டுக்கொண்டு அமர்ந்து விட்டார். அவர்
தொடர்ந்து சத்தம் போடவில்லையே. அவர் அமர்ந்துவிட்
டார். நீங்கள் மறுபடியும் அதைக் கிளப்பினால் அவர் பதில்
சொல்வார்.

திரு. ஜி. பழனிசாமி : துணைத் தலைவர் அவர்களே,
ஒவ்வொரு தடவையும் உறுப்பினர்கள் பேசுகின்றபோது, எந்த
ஒரு ஆர்டரும் இல்லாமல், அவர் ஒரு பிரச்சினையைக் கிளப்பிக்
கொண்டு சலசலப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். ஏற்
கனவே இது போல அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்
கிறது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை சொல்லி
யாகி விட்டது. இனிமேல் அவர் செய்ய மாட்டார். நீங்கள்
உட்காருங்கள். திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெறுகிற இந்த
விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய உணர்வுகளை
வெளிப்படுத்துகின்ற வாய்ப்பினை வழங்கியமைக்கு மீண்டும்
என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் நம்முடைய தமிழக முதல்வர் இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே
பேசுகின்றபோது விடுதலைப்புலிகளை ஒடுக்குவதில்,
அடக்குவதில், அவர்களுடைய நடமாட்டத்தை முடக்குவதில் தன்
னுடைய உயிரை பணயம் வைத்து மரணத்தை திரணமாக
மதித்து போராடி வருகிறேன், இராஜீவ் காந்தியைக் கொன்ற
கூட்டத்தை இந்த மண்ணிலே நடமாடுவதற்கு அனுமதிக்க
மாட்டேன் என்கிற உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையிலே
இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அதைப் புரிந்துகொள்ள
வேண்டியவர்கள், அந்த உணர்விலே இருக்க வேண்டியவர்கள்,
அந்த உணர்விலே இன்றைக்கு இருக்கிறார்களா என்கிற சந்
தேகம் எனக்கு வந்திருக்கிறது. இராஜீவ் காந்தியைக் கொன்ற
வர்களை கொன்றவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களோடு
இராஜீவ் காந்தியை . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தாமரைக்
கனி தயவுசெய்து குறுக்கிடாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்
கிறேன். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனியை தயவுசெய்து
அமைதியாக அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

திரு. மு. தென்னவன் : அப்படிப்பட்டவர்களை ஆதரித்து
ஊர்வலம் நடத்தியவர்களை பிரபாகரன் வாழ்க, சிவராஜன்
வாழ்க என்று வாழ்த்துப் பத்திரங்களை வாசிப்பவர்களை ஒரு
குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களை, அந்தக் கட்சியினுடைய
தலைவரை இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்
பொறுப்பில் இருப்பவர் சந்தித்துப் பேசுகிறார் என்றால் அவர்
எப்படிப்பட்ட உணர்வில் இன்றைக்கு இருக்கிறார் என்பதை
எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காந்தி சிலையை யாரோ சிலர் தகர்த்துவிட்டார்கள் என்ப
தற்காக, காங்கிரஸ் அலுவலகங்களை வெடி குண்டு வீசித்
தகர்க்க முயற்சிக்கிறார்கள் என்பதற்காக இங்கே சட்டம்
ஒழுங்கு பாதித்து விட்டது என்ற வகையில் விடுதலைப்புலிகள்
நடமாட்டம் அதிகரித்து விட்டது என்ற உணர்வில் அந்த

[திரு. மு. தென்னவன்] [1993 பிப்ரவரி 10

எண்ணத்தை இந்த நாட்டில் உருவாக்குவதற்காக காங்கிரஸ் கட்சி
யைச் சேர்ந்தவர்கள் முயற்சிக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகம்
அமைதிப் பூங்காவாக திகழ்கிறது. இந்தியத் துணைக் கண்டத்
தில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அமைதி தமிழகத்
தில் நிலவுகிறது என்று மாற்று முகாம்களில் இருக்கின்றவர்கள்
கூட முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் பாராட்டுகிறார் ;
முன்னாள் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள்கூட
பாராட்டியிருக்கிறார் ; பத்திரிகையில் வந்திருக்கிறது. இன்றைக்கு
தோழமைக் கட்சி என்று சொல்லிக்கொண்டு, தோழமை உணர்
வோடு நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம், குத்திக் காட்டுகிறோம்
அது எங்களுடைய கடமை என்று சொல்லிக்கொண்டு இன்றைக்கு
சட்டம் ஒழுங்கு இங்கே கெட்டிருக்கிறது என்கின்ற ஒரு நிலையை
உருவாக்க, தோற்றத்தை உருவாக்க நினைக்கிறார்கள்.

நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், பக்கத்
தில் இருக்கிற காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற ஆந்திரா மாநிலத்திலே
ஒரு சட்டமன்ற உறுப்பினர் அதுவும் ஆதி திராவிட வகுப்பை
சேர்ந்தவர் இன்றைக்கு தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு
முடக்கப்பட்டு, அடைக்கப்பட்டு இருக்கிறார். அவரைக்
காப்பாற்றுவதற்கு மத்தியில் இருப்பவர்கள் என்ன நடவடிக்கை
எடுத்து இருக்கிறார்கள். ஆந்திராவில் உயர் காவல் துறை
அதிகாரிகள் சுடப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல,
இன்றைக்கு திரிபுராவில் தேர்தல் என்று சொல்லுகிறார்கள்.
ஆனால் அங்கே பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய
அலுவலகங்கள் தாக்கப்பட்டிருக்கிறது. பொதுவுடமைக் கட்சி
யின் முன்னாள் அமைச்சர் ஒரு வீட்டில் அடைக்கப்பட்டு,
அந்த வீட்டிற்குள் வெடிகுண்டு வீசப்பட்டிருக்கிறது. ஆக இப்படிப்
பட்ட அடக்குமுறைகளை அவிழ்த்து விட்டு தேர்தலை சந்திக்க
முடியாமல், தேர்தலைச் சந்தித்தால் தோற்றுவிடுவோம் என்ற
எண்ணத்தில் இங்கே வெடி குண்டு என்று சொல்லுகிறவர்கள்
அங்கே வெடி குண்டை வீசி அங்கே அமைதி கெட்ட நிலையை உரு
வாக்கி தேர்தலை நடத்த விடாமல் தடுக்கின்ற முயற்சிகளை
இன்றைக்கு மத்திய அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

பம்பாய்த் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். ஒரே நேரத்தில்
100 பேர் கொளுத்தப்பட்டார்கள். தமிழகத்தைச்
சார்ந்தவர்கள், தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள், தமிழ் மொழி
பேசுகிறவர்கள் இந்திய துணைக் கண்டத்திலே வாழ முடியாத
நிலை ஏற்பட்டிருக்கிறது. காவிரிப் பிரச்சினை வந்தபோது
கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். கர்நாடகத்தில்
எப்படி தமிழர்களை விரட்டினார்களோ அதே நிலைதான்
இன்றைக்கு பம்பாயில் உருவாகியிருக்கிறது.

ஒரு காலத்தில் 'தமிழன் என்று சொல்லடா ; தலை
நிமிர்ந்து நில்லடா' என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு
தமிழன் என்றால் தலை இழந்து ; உடை இழந்து ; கடை



1993 பிப்ரவரி 10] [திரு. மு. தென்னவன்]

இழந்து, உடைமைகளை இழந்து ; ஓடி வருகின்ற ஒரு அவல
நிலைமை இந்திய துணைக் கண்டத்திலே உருவாகியிருக்கிறது.
ஒருமைப்பாட்டு உணர்வு எங்கே போயிற்று ; வண்ணங்கள்
மாறுபட்டாலும் எண்ணங்கள் மாறுபடக் கூடாது, நாம் அனை
வரும் இந்தியர்கள் என்று சொல்லுகிற காங்கிரஸ் கட்சியைக்
சேர்ந்தவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன், அந்த
உணர்வு இன்றைக்கு எங்கே போயிற்று. சொந்த நாட்டில் தமிழ்
மொழி பேசுகின்றவர்களை அண்டை நாட்டில் அடிபடுவதைப்
போல அடிபட்டு சாக வேண்டுமா ? ஆகவே அந்தக் கலவரத்தை
ஒடுக்குவதற்கு மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கி
கிறது. ஆகவே, இந்திய துணைக் கண்டத்திலே அத்தனை
மாநிலங்களிலும் இன்றைக்கு அமைதி இல்லை. பஞ்சாபில்
வாழ்கின்ற மக்கள் பதறிப் பதறி சாகிறார்கள் ; அசாமில்
வாழ்கின்றவர்கள் அலறி, அலறி சாகிறார்கள். உத்திரப்
பிரதேசம் ரத்தப் பிரதேசம் ஆகிவிட்டது. ராஜாக்களின்
சொர்க்கம் என்று வர்ணிக்கப்படுகின்ற காஷ்மீரத்தில் ஓடுகின்ற
பன்னீர் நதிகள் பற்றி எரிகிறது. அதைப் பற்றியெல்லாம்
மத்திய அரசு கவலைப்படவில்லை : எந்தவிதமான நடவடிக்கை
யும் எடுக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது,
அமைதியில்லை என்று சொல்லுவதற்கு என்ன * தகுதி
இருக்கிறது. ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அடுத்த
மாநிலத்திற்கு வந்தால் காப்பாற்றப்பட வேண்டுமென்று மத்திய
அரசு சொல்கிறது ; பிரதம அமைச்சர் சொல்கிறார்; ஆனால்
மேற்கு வங்கத்திலே ஒரு பெண் அமைச்சராக இருப்பவர் . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : * *
என்பதைத் தகுதி என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். திரு. ம. சின்னசாமி.

பிற்பகல் 1—25

<u>திரு. ம. சின்னசாமி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தகுதி, அருகதை என்பது தமிழ். **
என்பது வட சொல். ஆகவே, இரண்டும் ஒரே அர்த்தத்தைத்
தான் குறிக்கிறது. அது அன்-பார்லிமெண்டரி அல்ல என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

53—444—32

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அன்-பார்லி
மெண்டரி என்று சொல்லவில்லை. தகுதி என்று இருந்தால்
இன்னும் சரியாக இருக்கும் என்று சொன்னேன். நேற்றே
அது இங்கே திருத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலே பிரதம அமைச்சர்
நரசிம்மராவின் அமைச்சரவையிலே மத்திய அமைச்சர்
இருந்த மம்தா பானர்ஜி என்ற பெண் ஒரு முதலமைச்சருக்கு
முன்னே தாக்கப்பட்டார்; அடிக்கப்பட்டார்; சிறை பிடிக்கப்
பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்,
அமைச்சராக இருந்தபோதே. ஆனால் அந்த அமைச்சரைக்
காப்பாற்றுவதற்கு மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை
எடுத்தது ? ஒரு அமைச்சரைக் கூட காப்பாற்ற முடியாத நிலை
யிலேதான் மத்திய சர்க்கார் இருந்தது. அயோத்தியா பிரச்
சினையிலே, பாபர் மசூதி பிரச்சினையிலே நம்முடைய புரட்சித்
தலைவியினுடைய உணர்வுகளை, எண்ணங்களை, கருத்துக்
களை அன்றைக்குக் கேட்டிருந்தால், பாபர் மசூதி அன்றைக்
குக் காப்பாற்றப்பட்டிருக்கும். அனைத்து எதிர்க்கட்சியைச்
சார்ந்தவர்களும் பாபர் மசூதியைக் காப்பாற்றுகின்ற அதி
காரத்தைப் பிரதம அமைச்சர் கையிலே கொடுத்தார்கள்.
ஆனால் பாபர் மசூதி காப்பாற்றப்பட்டதா? காவிப் படையும்,
கூலிப் படையும், ஜாதிப் படையும் பாபர் மசூதியைத் தகர்த்
ததே; மத்திய சர்க்கார் ராணுவத்தை வைத்து வேடிக்கை பார்த்
துக் கொண்டு இருந்ததே. முப்படை வைத்திருக்கிற மத்திய
சர்க்கார் ஏன் பாபர் மசூதியைக் காப்பாற்றவில்லை ? காங்
கிரஸ் கட்சி தேர்தல் காலத்திலே, தேர்தல் அறிக்கையிலே,
பாபர் மசூதியைக் காப்பாற்றுவோம் என்று சொன்னதே,
பாபர் மசூதியைக் காப்பாற்ற முடிந்ததா? ராணுவத்தைக்
கையிலே வைத்து இருந்தும், முப்படை வைத்திருந்தும் காப்
பாற்ற முடியவில்லையே; அறுக்க முடியாதவன் கையில்
1008 அறுவாள் இருப்பதைப் போல கையாலாகாதவன் கையிலே
அதிகாரங்கள் இருந்த காரணத்தினாலேதான் பாபர் மசூதி
யைக் காப்பாற்ற முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி.)

இங்கே திரு. குமரி அனந்தன் பேசினார். மது விலக்குக்
கொள்கையைப் பற்றி பேசினார். மகாத்மா காந்தியை ஏற்றுக்
கொண்ட கட்சி காங்கிரஸ் என்று சொல்கிறார்கள். காந்தியை
ஏற்றுக் கொண்ட கட்சியைச் சார்ந்தவர்கள் ஆளுகின்ற மாநிலத்
திலே கூட மதுவிலக்குக் கொள்கை அமல் படுத்தப்படவில்லை.
மதுவிலக்குக் கொள்கையிலே மகாத்மாவாக விளங்குகின்ற,
புரட்சித் தலைவி ஆளுகின்ற தமிழ்நாட்டிலேதான் கள்ளச்





சாராயத்தை ஒழிப்போம் என்று அவர்கள் சூளுரைத்திருக்
கிறார்கள் என்பதனை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையிலே எங்களுக்கு ஒவ்
வொரு மாநிலத்திற்கும் ஒரு கொள்கை என்று காங்கிரஸ்
கட்சி சொல்லுகிறது. இது எப்படி இருக்கிறது என்றால் காங்
கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில், கடிகார ரிப்பேர் கடை
என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடிகார ரிப்பேர்
கடையில் சரியான நேரத்தைப் பார்க்க முடியாது. ஒவ்வொரு
கடிகாரமும் ஒவ்வொரு நேரத்தைக் காட்டும். அதைப்போல
காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒவ்வொரு மாநிலத்
திலும் ஒவ்வொரு கொள்கையைச் சொல்லுகிறார்கள். அப்
படிப்பட்டவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிற மதுவிலக்குக்
கொள்கையை, புரட்சித் தலைவி செயல்படுத்த நினைக்கின்ற
இந்தக் கொள்கையிலே உறுதியோடு செயல்படுகிறாரே அதை
விமர்சிப்பதற்கு அவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்
பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு அரிசி விலையைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.
இன்றைக்கு அரிசி விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆனால்
அதைப் பற்றி யாரும் வருத்தப்படவில்லை. அதற்குக் கார
ணம் வாங்கும் சக்தி அதிகரித்து இருக்கிறது. அரிசி விலையை
மட்டும் குறைக்கச் சொல்கிறார்கள். ஆனால் அந்த அரிசியை
உற்பத்திச் செய்கின்ற விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரத்தின்
விலையை மத்திய சர்க்கார் உயர்த்தியதே, ஒரு மடங்கல்ல, 100
மடங்கல்ல 300 மடங்கு உயர்த்தியதே, யார் அதைப்பற்றி
கவலைப்பட்டது ? டீசல் விலையை மத்திய சர்க்கார் உயர்த்திய
தே; இலவச மின்சாரமே கொடுக்கக் கூடாது என்று இன்றைக்கு
மத்திய சர்க்கார் சொல்லுகிறதே இதைப்பற்றியெல்லாம் காங்
கிரஸ் கட்சி கவலைப்படுகிறதா? இந்த நாட்டிலே உணவு
உற்பத்தி இன்றைக்கு அதிகரித்து இருக்கிறது. ஏறத்தாழ
90 இலட்சம் மெட்ரிக் டன் இன்றைக்கு உற்பத்தி செய்திருக்
கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி விவசாயிகள்
உற்பத்திச் செய்ததன் காரணமாகத்தான், கடுமையான
வெள்ளம் ஏற்பட்டாலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும்
இன்றைக்கு நெல்லின் உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. அதற்
குக் காரணம் விவசாயிகள். ஆகவே, விவசாயிகளுக்குக்
கொடுத்த உரத்தினுடைய மானியத்தை அன்றைக்கு மத்திய
சர்க்கார் ரத்து செய்ததே, யார் எதிர்த்து குரல் கொடுத்தது ?
அதற்கு என்ன காரணம்? விவசாயிகளுக்கு குரல் கொடுப்
பதற்கு, உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த விவசாயிகளுக்குத்
தோள் கொடுப்பதற்கு சங்கங்கள் இன்றைக்கு இல்லை. பஞ்
சாலைத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வேண்டுமென்றால்
போராடுகிறார்கள். போராட்டம் நடத்துகின்றார்கள். சம்
பளம் உயர்ந்து விடுகிறது. அவர்களுக்குச் சங்கம் இருக்கிறது.

[திரு. மு. தென்னவன்] [1993 பிப்ரவரி 10

அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வேண்டுமென்று கேட்டால்
அவர்களுக்கு போராடுவதற்கு சங்கம் இருக்கிறது. போராடு
கிறார்கள் ; சம்பளத்தைப் பெறுகிறார்கள். போராடு
போல பஞ்சாலைத் தொழிலாளர்கள். அதைப்
கள் ; சம்பளத்தைப் பெறுகிறார்கள். போராடுகிறார்
இருக்கிறது; போராடுகிறாகள் ; ஆசிரியர்களுக்குச் சங்கம்
ஆனால் இந்த நாட்டில் விவசாயிகள்தான் பெறுகிறார்கள்.
என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த முதுகெலும்பு
உரத்தின் விலையை விவசாயிகளினுடைய
இடுபொருட்களின் விலையை உயர்த்துகிற பொழுது
மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்த உயர்த்துகிறபொழுது
சர்க்கார் உரத்தின் மானியத்தைக் குறைத்ததே பொழுது, மத்திய
தில் யார் குரல் கொடுத்தது ? அந்த நேரத்
செய்கின்ற அரிசி விலையை மட்டும் விவசாயிகள் உற்பத்தி
சொல்கிறார்கள். குறைக்க வேண்டுமென்று

பிற்பகல் 1–30

ஆனால் இன்றைக்குச் சம்பளம் உயர்த்திருக்கிறதே, 500
ரூபாய் சம்பளம் வாங்கிய ஆசிரியர்கள் இன்றைக்கு 3,000
ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். இன்றைக்கு உழுவதற்குக்
கூலி உயர்ந்திருக்கிறது ; நடுவதற்குக் கூலி உயர்ந்திருக்கிறது;
அறுவடை செய்வதற்குக் கூலி உயர்ந்திருக்கிறது ; ஆனால்
அரிசி மட்டும் 2 ரூபாயில் இருக்க வேண்டுமா ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சட்டமன்ற உறுப்பினரை எடுத்துக் கொள்ளுங்கள் 750
ரூபாய் 5 வருஷத்திற்கு முன்னால் வாங்கினார்கள். இன்
றைக்கு 2,450 ரூபாய். ஆக, ரூபாயின் மதிப்பு குறைந்து
கொண்டே வருகிறது. ஆனால் அரிசி மட்டும் குறையக்
கூடாது ; அதே விலை இருக்க வேண்டுமென்று சொல்வதில்
என்ன நியாயம் ? ஆக, விவசாயிகளுக்கு வக்காலத்து
வாங்குகின்ற சங்கங்கள் இன்றைக்கு இல்லை. அவர்கள்
போராட முடியாது, நாங்கள் உற்பத்தி செய்ய முடியாது என்று
போராட்டம் நடத்தினால் அவர்களுக்கு வயிறு காய்ந்து விடும்.
ஆகவே அரசு ஊழியர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு அதிகாரிகளுக்கு
இருக்கின்ற வாய்ப்பு, பஞ்சாலைத் தொழி
லாளர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு, போக்குவரத்துத் தொழி
லாளர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு, விவசாயிகளுக்கு இல்லை.
ஆகவே, விவசாயிகள் நெல்லை இன்றைக்கு உற்பத்தி செய்
வதற்கு அதிகப் பணத்தைச் செலவழிக்க வேண்டி இருக்கிறது

100 ரூபாய்க்கு உரம் வாங்கியவர்கள் இன்றைக்கு
00 ரூபாய்க்கு உரம் வாங்க வேண்டியிருக்கிறது.
லி விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, உற்பத்தியைப் பெருக்



1993 பிப்ரவரி 10] [திரு. மு. தென்னவன்]

கினாலும், ''உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்
கூட மிஞ்சாது'' என்ற நிலைதான் இருக்கிறது. ஆனால்
அதைப் பற்றி யார் சிந்திப்பது ? இன்றைக்கு வாங்கும் சக்தி
உயர்ந்திருக்கிறது.

ஒரு காலத்திலே கிராமத்திலே 4 முழ வேட்டியைத்
தான் கட்டிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு யாராவது
4 முழ வேட்டியைப் பார்க்க முடிகிறதா ? 150 ரூபாய்க்குக்
குறையாமல் வேட்டி வாங்க வேண்டிய நிலை. முடி வெட்டு
வதற்குக் கூட 3 ரூபாயை கொடுத்துவிட்டு முடிவெட்டிக்
கொண்டிருந்தார்கள். இன்றைக்கு 50 ரூபாய் கொடுக்க
வேண்டியிருக்கிறது. ஆனால் அரிசி மட்டும் . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி
குறுக்கீடு செய்ய வேண்டாம்.

திரு. மு. தென்னவன் : ஆனால் அரிசியின் விலையை
மட்டும் கூட்டலாமா என்று கேட்பதற்கு என்ன தகுதி
இருக்கிறது ?

அன்றைக்குச் சிலப்பதிகாரத்தில் சொன்னார்கள்,
விவசாயிகளைப் பற்றி.

''இறப்போர் குற்றமும் பிறப்போர் குற்றமும்
உழவிடை விளைப்போர்''

என்று சிலப்பதிகாரம் சொன்னது.

''உழுகுலத்தில் பிறந்தோரே
உலகுய்யப் பிறந்தோரே
மேழி பிடிப்பவனே இந்த
மேனிக்குச் சோறு கொடுப்பவன்''

என்று கம்பன் சொன்னான்.

''ஓதுவார் தொழுவார் எல்லாம்
உழுவார் தலைக்கடையிலே''

என்று ஔவையார் சொன்னார்கள்.

''மாட மாளிகைகள் இருந்தும்
கூட கோபுரங்கள் இருந்தும்
அரண்மனையிலிருந்து புதிய பாரதத்தை
உருவாக்க முடியாது அது
வயல் வெளியிலிருந்துதான் உருவாகும்''

என்று ஒரு கவிஞன் சொன்னான்.

[திரு. மு. தென்னவன்] [1993 பிப்ரவரி 10

''குறையாத உழைப்பைக் கொடுத்து
குன்று போல் தானியம் குவிய
மாடாக உழைத்த தோள்கள்
எவருடைய தோள்கள்''

என்று பாரதிதாசன் கேட்டார்.

அந்த விவசாயிகளைப்பற்றிச் சிந்திக்கின்ற ஒரு முதல்
அமைச்சர் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிறார். புரட்சித்
தலைவியின் பொற்காலத்திலேதான் விவசாயிகள் மதிக்கப்
படுகிறார்கள். விவசாயிகளுக்கு வாழ்க்கை கிடைக்கும் என்று
நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வெளிநாட்டுக்காரன் இந்த நாட்டுக்கு வந்தான்.
'விண்ணை முட்டும் இமயத்தை பார்த்தேன்: அதில் மோதி
விளையாடும் முகிலைக் கண்டேன்; அழகு மிக்க கேரள
கடற்கரையைப் பார்த்தேன்; அஜந்தா, எல்லோரா குகை
களைப் பார்த்தேன்; தாஜ்மகாலின் அழகைப் பார்த்தேன்;
எதுவும் என் சிந்தனையைத் தொடவில்லை. கொடுமையான
வெயிலில், கொட்டுகின்ற மழையிலே, வயிற்றுப் பாட்டுக்காக
மாடாக உழைத்துக் கொண்டிருக்கிற விவசாயி என்
நெஞ்சத்தைத் தொட்டான்' என்று அவன் சொன்னான்.

அந்த உணர்வை எதிரொலிக்கின்ற ஒரு முதலமைச்
சராகப் புரட்சித் தலைவி அவர்கள் இருந்து கொண்டிருக்
கிறார்கள். உழவன் உழுது கொண்டு இருந்தாலும், அவன்
அழுது கொண்டு இருந்தாலும், உழுது கொண்டு இருக்க
வேண்டுமென்று சொல்லிச் சொல்லியே விவசாயிகளைப்
பற்றி யாரும் சிந்திக்கவில்லை. ஆக, விவசாயிகள் உற்
பத்தி செய்கின்ற பொருளுக்கு மட்டும் விலை குறைய
வேண்டுமென்று சொல்வதற்கு என்ன தகுதி இருக்கிறது?

இன்றைக்கு விவசாயிகளைப்பற்றி மத்திய சர்க்கார் சிந்திக்க
வில்லை. இன்றைக்கு அரிசி விலையை உயர்த்துவதற்கும்
மத்திய சர்க்கார்தான் காரணம். இன்றைக்கு விவசாயிகள்
படுகின்ற படு கஷ்டத்திற்கும் மத்திய சர்க்கார்தான் காரணம்.
புதிய பொருளாதாரக் கொள்கைகளைச் சொல்கிறோம்
என்று சொல்கிறார்களே, உரத்திற்குக் கொடுத்த மானி
யத்தை நிறுத்தினார்களா இல்லையா? இதற்குக் காங்கிரஸ்
காரர்கள் என்ன பதில் சொல்ல முடியும்? இன்றைக்கு
மாநில சர்க்கார் வருவாயைப் பெருக்குகின்ற வரிகளை
போட முடியாது. அந்த ஆதாரங்கள் மாநில சர்க்காருக்கு
இல்லை. நில வரியும், விற்பனை வரியும் மட்டும்தான்
மாநில சர்க்கார்க்குச் சொந்தம், மற்ற அத்தனை வரி
களும் மத்திய சர்க்காருக்குச் சொந்தம். இன்றைக்கு நாம்



1993 பிப்ரவரி 10] [திரு. மு. தென்னவன்]

மத்திய சர்க்காரிடத்திலே நிதி வேண்டுமென்று கேட்டால்,
ஏதோ சீதனமாக, தானமாகக் கேட்பதைப்போல நினைக்
கிறார்கள். இல்லை. நாம் சீதனமாக, தானமாகக் கேட்க
வில்லை. நமக்கு உரிமை இருக்கிறது.

இந்த மாநிலத்திலிருந்து பல வரிகளின் மூலம் வரு
கின்ற வருமானத்தை. மத்திய சர்க்கார் வைத்திருக்கிறது.
நம்முடைய பணத்தை அவர்கள் வைத்திருக்கின்ற
காரணத்தினால்தான் நாம் அவர்களிடத்திலே பணத்தைத்
தாருங்கள் என்று உரிமையோடு கேட்கிறோம். எதற்கு
எடுத்தாலும் கையேந்தி நிற்க வேண்டுமா? மத்திய சர்க்
காரைச் சுட்டிக்காட்ட வேண்டுமா என்று கேட்கிறார்கள்.

ஒரு காலத்திலே நம்முடைய நாட்டை வெள்ளைக்
காரன் ஆண்டான். இன்றைக்கு டெல்லிக்காரர்கள் ஆள்
கிறார்கள். நம்முடைய கையில் இன்னும் விலங்குகள்
பூட்டப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகும் நாம்
அதிகாரங்களை இன்னும் பெற முடியவில்லை. நம்முடைய
கையிலே பூட்டப்பட்டிருக்கிற விலங்கினுடைய சாவி
ஒரு காலத்திலே வெள்ளைக்காரன் கையிலே இருந்தது.
இன்றைக்கு டெல்லிக்காரன் கையிலே இருக்கிறது.
ஆக, சாவி வைத்திருப்பவனுடைய கை மாறி இருக்கிறதே
தவிர, இன்னும் விலங்கு உடைக்கப்படவில்லை. ஆக,
இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணம்
மத்திய சர்க்கார்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

அது மாத்திரம் அல்ல; இங்கே குளம் வெட்ட வேண்டும்,
ரோடு போட வேண்டும், விளக்கு வசதி செய்து கொடுக்க
வேண்டும், எல்லாப் பணிகளும் செய்ய வேண்டுமென்று
சொல்கிறார்கள். இந்தப் பணிகளையெல்லாம் செய்வதற்குப்
பணம் வேண்டாமா? அன்றைக்கு ரோடு போட வேண்டு
மென்று சொன்னால்— ஒரு பத்து வருஷங்களுக்கு முன்னால்
ஒரு கிலோ மீட்டர் மெட்டல் சாலை போடுவதற்கு முப்பதாயிரம்
ரூபாய் தேவைப்பட்டால் இன்றைக்கு இரண்டு இலட்சம்
ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இந்தப் பணத்தை
எங்கிருந்து கொண்டுவருவது? வரி போட்டால்தானே,
அந்த வரியை வைத்துத்தானே செய்ய முடியும்? வரியே
போடக் கூடாது என்று சொன்னால், நிலவரி போடக்கூடாது;
சொத்து வரி போடக்கூடாது; எந்த வரியும் போடக் கூடாது
என்று சொன்னால் எப்படி ஆட்சி இயங்கும்? சட்டமன்ற
உறுப்பினர் சம்பளத்தை வைத்து ஆட்சி நடத்த முடியுமா?
வரியை வைத்துத்தான், அந்தப் பணத்தை வைத்துத்தானே

திட்டங்களைப் போட முடியும்? அந்தத்
மேற்கொள்வதற்கு வரி போட்டால்தான் திட்டங்களை
முடியும்? அன்றைக்கு 100 கோடி ஆட்சி செய்ய
இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு செய்த வேலை
யிருக்கிறது. ஆனால் அன்றைக்கு 3 ரூபாய்க்கு செய்ய வேண்டி
வரி, இன்றைக்கும் அப்படியே இருக்க ரூபாய் என்றிருந்த
கடலிலிருந்து தோன்றுகின்ற நதி, முடியுமா? எப்படிக்
செல்கிறதோ, கடலிலே தோன்றுகின்ற மீண்டும் கடலுக்கே
ஆவியாகி, மேகமாக மலைக்குச் சென்று, மலை அந்த நீரானது
அருவியாகி, ஆறாகி—நதியாகி—மீண்டும் அருவியிலிருந்து
போல மக்கள் கொடுக்கிற வரிப் பணம் கடலிலே கலப்பதைப்
போய்ச் சேர்கிற அந்த வரிப் பணம் மீண்டும் மக்களுக்கே
கொள்ளப் போவது இல்லை. பணத்தை யாரும் எடுத்துக்
திட்டங்களை, புரட்சிகரமான ஆகவே, பல்வேறு நல்வாழ்வுத்
சிந்திக்காத செயல்படுத்தாத திட்டங்களை,
வேண்டுமென்று சொன்னால், திட்டங்களைச் யாரும்
மத்திய சர்க்கார் நிதி கொடுக்கவில்லை அதற்கு செயல்படுத்த
சர்க்கார் நிதியாதாரங்களைப் பெருக்க நிதி வேண்டும்.
பெருக்கினால்தான், தமிழ் மாநிலத்தை என்றால், மாநில
மாநிலமாக மாற்ற முடியும். ஆகவே, வேண்டும். அப்படிப்
முகாமில் இருப்பவர்கள் ஒரு முன்னேறுகின்ற
யதார்த்தமாகப் பேச வேண்டும். யதார்த்தங்களை மாற்று
அரசியல் ஆதாயம் பெற வேண்டும் புரிந்துகொள்ள வேண்டும்.
பேசக் கூடாது. ஆகவே, அரசியல் ஆதாயத்திற்காக,
தொலை நோக்குப் பார்வையோடு, புரட்சித் என்பதற்காக எதையும்
சிந்தனையோடு, இன்றைக்கு தலைவி அவர்கள்
கிறார்கள். சிந்தனையோடு, புதிய
ஆட்சி நடத்திக் கொண்டிருக்

இந்த மாநிலத்தில் உள்ள
திலும் இல்லை. இன்றைக்கு திட்டங்கள் எந்த மாநிலத்
வோம் என்று காங்கிரஸ்காரர்கள் வறுமையை வெளியேற்று
வெள்ளையனே வெளியேறு என்று வெளியேற்று
னார்கள். வறுமையை ஒரு காலத்தில் சொல்கிறார்கள்.
கிறார்கள். வறுமையை வெளியேற்றுவோம் என்று சொன்
சர்க்கார் என்ன திட்டத்தைக் வேண்டுமென்று சொல்
தமிழகத்திலே வறுமையை கொண்டு மத்திய
புரட்சித் தலைவி அவர்கள் வெளியேற்றுகிற வந்திருக்கிறது?
இலவச சத்துணவுத் திட்டம், கொண்டு திட்டத்தை,
இலவச மின்சாரம், இலவச இலவச வந்திருக்கிறார்கள்.
திட்டங்களைப் புரட்சித் தலைவி மருத்துவம் சீருடைத் திட்டம்,
இப்படிப்பட்ட திட்டங்கள், அவர்கள் இப்படி இலவசத்.
பொதுவுடமைக் கட்சி ஆளுகின்ற இந்தியத் தந்திருக்கிறார்கள்,
காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலத்திலேயோ, துணைக் கண்டத்திலே
தன்னிறைவுத் திட்டம் எந்த மாநிலத்திலேயோ அல்லது
மாநிலத்திலேயாவது இருக்கிறதா?
இருக்



கிறதா? 387 கோடி ரூபாயிலே இன்றைக்கு சாலை வசதிகள்
செய்துகொடுக்கப்பட்டிருக்கிறதே? தீட்டப்படுகிற திட்டங்கள்
அடித்தள மக்களின் இதயங்களைத் தொட்டாக வேண்டும்.
எத்தகைய மக்களுக்கு திட்டங்கள் தீட்டுகிறோம் என்பது
தான் முக்கியம் என்று புரட்சித் தலைவி அவர்கள் மக்களைப்
பற்றி சிந்தித்து, ஓலைக் குடிசையில் காலிக் கலயங்களை
நிரப்புகிற உத்தமத் தலைவியாக, புழுதி படிந்த கால்கள்,
அழுக்கேறிய உடை, துயரத்தை சந்திக்கிற முகம், இப்படிப்
பட்ட வறுமையின் வாட்டமாகத் திகழ்கிற ஏழை எளிய
மக்களை வாழ வைப்பதற்காக, தன்னையே அர்ப்பணித்துக்
கொண்டு, புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒருமைப்பாடு உணர்வு மிக்க முதலமைச்சராக
புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள். தேச விரோதச்
செயல்களில் ஈடுபடுபவர்கள், நாட்டைப் பிளவுபடுத்த
துண்டாட நினைப்பவர்கள், பிரிவினைவாதிகள், இவர்களை
அடக்குவதில், ஒரு துணிச்சல் மிக்க முதலமைச்சராக புரட்சித்
தலைவி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நான்
கேட்க விரும்புகிறேன்; ஆந்திராவிலே நக்ஸலைட்டை
உங்களால் ஒடுக்க முடிந்ததா? தீவிரவாதிகளை பஞ்சாபிலே
ஒடுக்க முடிந்ததா? பயங்கரவாதிகளை அஸ்ஸாமிலே ஒடுக்க
முடிந்ததா? ஒடுக்க முடியவில்லை. புரட்சித் தலைவி இங்கே
ஒடுக்கிக் காட்டியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)
அப்படிப்பட்ட பிரிவினைவாதிகளை, கோஷம் போடுகிறவர்
களை, கைது செய்து சிறையில் அடைத்து, அந்தக் கட்சி
யையே தடை செய்ய வேண்டுமென்று துணிச்சலாகச் சொன்ன
ஒரே முதலமைச்சர் ஒருமைப்பாடுள்ள முதலமைச்சர்
புரட்சித் தலைவிதான். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-40

இன்றைக்கு ஒருமைப்பாட்டைப் பற்றி காங்கிரஸ் காரர்கள்
பேசுகிறார்களே, அன்றைக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்
கின்ற வகையிலே கள்ளத் தோணியிலே, பாஸ்போர்ட் இல்லா
மல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கைக்குச் சென்றா
ரே; அப்படி கள்ளத் தோணியிலே சென்று நாட்டைக் காட்டிக்
கொடுக்கின்ற, பிரிவினையைத் தூண்டுகிற வகையில் நடந்து
கொண்ட அந்த நாடாளுமன்ற உறுப்பினர் மீது மத்திய சர்க்கார்
என்ன நடவடிக்கை எடுத்தது? ஒருமைப்பாட்டு உணர்வை பற்றிப்
பேசுவதற்குக் காங்கிரஸ் கட்சிக்கு என்ன தகுதி இருக்கிறது?
(மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒருமைப்பாடு உள்ள
முதலமைச்சராகப் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக்
கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு விடுதலைப் புலிகள் நடமாட்டம் ஒடுக்கப்
பட்டு, தமிழகம் அமைதியாக இருக்கிறது என்றால் காங்
கிரஸைச் சார்ந்தவர்கள் வீதியிலே நடமாட முடிகிறது என்
றால் அதற்குக் காரணம் புரட்சித் தலைவி அவர்கள்
முதலமைச்சராக இருப்பதுதான். புரட்சித் தலைவி அவர்கள்
முதலமைச்சராக இல்லையென்றால் காங்கிரஸ்காரர்கள் வீதியிலே
அமைதியாக நடமாட முடியாது என்பதை மட்டும்
புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள்
அவர்கள் தன் உயிரையே பணயம் வைத்துப் போராடிக்
கொண்டிருக்கிறார்கள். யாருடைய திருநாமம் என்றைக்கும்
இளைஞர்கள் இதயப் துடிப்போடு சேர்ந்து ஒலிக்கிறதோ
யாருடைய கதிர்முகம் தமிழகத்திலே மாந்தர்கள் முகத்
தாமரையை மலரச் செய்கிறதோ; யாருடைய சுட்டுவிரல்
அசைவுக்காகத் தமிழக வாலிபப் பட்டாளம் காத்துக் கிடக்
கிறதோ........ (மணி அடிக்கப் பெற்றது).

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர்
அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்
காருங்கள்.

திரு. மு. தென்னவன் : யாருடைய உழைப்பு ஏழை
களுக்குப் பயன்படுமோ; யாருடைய ஆட்சி ஏழைகளை
வாழ வைக்குமோ; அப்படிப்பட்ட பெருமைக்குரிய தலைவி
யாகப் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே முதலமைச்
சராக இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளி
நடப்புச் செய்துவிட்டார்களே, வெற்றிடங்களாக ஆகிவிட்டதே
என்று சொன்னார்கள். நான் ஒன்றைத் தெரிவிக்க
விரும்புகின்றேன். வரப்போகின்ற தேர்தலில் காங்கிரஸ்
கட்சிக்கு என்ன முடிவு ஏற்படும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி
ஒரு சாட்சி என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை
யைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த நிலையை அவர்கள் சந்திக்க
இருக்கிறார்கள். அதற்கு ஒத்திகை நாடகம்தான் பார்த்து
இருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கப்
போவதை நாம் இன்றைக்கு பார்த்துக் கொண்டிருக்
கிறோம். அந்த நிலைதான் அவர்களுக்கு ஏற்படப் போகிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் நல்ல திட்டங்களை இந்த
நாட்டு மக்களுக்காக அள்ளித் தந்திருக்கிறார்கள். ஆளுநர்
உரையிலே இந்த மக்களின் உணர்வினை, எண்ணங்களை





வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மக்களுடைய தேவைகளை,
குறைகளை நிறைவேற்றுகின்ற உணர்வு படைத்த ஒரு ஆளு
நர் உரையை வரவேற்று இந்த அளவோடு விடைபெறு
கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்
வாய்ப்பினை அளித்த தமிழகத்தின் காவல் தெய்வம் எங்
களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவி அவர்களை வணங்கி என்னுடைய உரை
யினைத் துவக்குகின்றேன்.

ஆளுநர் உரையில் தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த
மக்களுடைய நல்வாழ்க்கையையும், ஏழையெளிய மக்களு
டைய மேம்பாட்டினையும் கருத்திற்கொண்டு பல்வேறு நல்
வாழ்வுத் திட்டங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த
அனைத்துத் திட்டங்களை, இந்தத் தமிழக மக்களுடைய
நல்வாழ்வுக்காக, நடத்தப்படுகின்ற இந்த ஆட்சியில் தமிழக
மக்களை முன்நிறுத்தி, அவர்களுடைய மேம்பாட்டுக்காக
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களுடைய மேம்
பாடே எங்களுடைய குறிக்கோள் என்கிற நிலைமையிலே
இந்த உரையானது அமைந்திருக்கிறது.

**பிற்பகல் 1.45**

இங்கே பேசியவர்கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சி
எந்த விதத்திலே நடந்து கொண்டிருக்கிறது என்று பேசி
னார்கள். இங்கே நேற்றைய தினம் வெளிநடப்புச் செய்
தார்கள். இன்றைய தினம் வெளியேற்றப்பட்டார்கள்.
இந்த நிலை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை
நாம் எண்ணிப் பார்க்கிறபோது—இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தினுடைய
மக்களின் நல்வாழ்வுக்காக தேர்தல் காலத்திலே
கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலே
செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்
தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். தேர்தல் காலத்
திலே ஊர் ஊராகச் சென்று மக்கள் மத்தியிலே பேசு
கின்றபோது என்னென்ன வாக்குறுதிகளை முன் வைத்த
தோ அந்த வாக்குறுதிகளை இன்றைய தினம் நிறை
வேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சி

வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மக்களுடைய தேவைகளை, குறைகளை நிறைவேற்றுகின்ற உணர்வு படைத்த ஒரு ஆளுநர் உரையை வரவேற்று இந்த அளவோடு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கு. சீனிவாசன்.

<u>திரு. கு. சீனிவாசன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும் வாய்ப்பினை அளித்த தமிழகத்தின் காவல் தெய்வம் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி என்னுடைய உரையினைத் துவக்குகின்றேன்.

ஆளுநர் உரையில் தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த மக்களுடைய நல்வாழ்க்கையையும், ஏழையெளிய மக்களுடைய மேம்பாட்டினையும் கருத்திற்கொண்டு பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த அனைத்துத் திட்டங்களை, இந்தத் தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்காக, நடத்தப்படுகின்ற இந்த ஆட்சியில் தமிழக மக்களை முன்நிறுத்தி, அவர்களுடைய மேம்பாட்டுக்காக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களுடைய மேம்பாடே எங்களுடைய குறிக்கோள் என்கிற நிலைமையிலே இந்த உரையானது அமைந்திருக்கிறது.

**பிற்பகல் 1.45**

இங்கே பேசியவர்கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சி எந்த விதத்திலே நடந்து கொண்டிருக்கிறது என்று பேசினார்கள். இங்கே நேற்றைய தினம் வெளிநடப்புச் செய்தார்கள். இன்றைய தினம் வெளியேற்றப்பட்டார்கள். இந்த நிலை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறபோது—இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தினுடைய மக்களின் நல்வாழ்வுக்காக தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் தேர்தல் காலத்திலே ஊர் ஊராகச் சென்று மக்கள் மத்தியிலே பேசுகின்றபோது என்னென்ன வாக்குறுதிகளை முன் வைத்ததோ அந்த வாக்குறுதிகளை இன்றைய தினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சி

யோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே
மக்களை வலிய தேடிச் சென்று அவர்களுடைய இடத்திலேயே
அவர்களுக்கு நன்மைகள் செய்கின்ற ஒரு அரசாக—இன்றைய
தினம் புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவ நலத்திட்டம்
என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, அந்தத் திட்டத்தின் மூலம்
இன்றைய தினம் மக்களை நாமே நாடிச் சென்று–மருத்துவர்கள்
கிராமங்களை நாடிச் சென்று–அங்கே இருக்கின்ற மக்களுக்கு
நன்மை அளிக்கின்ற ஒரு திட்டத்தை இங்கே அறிவித்திருக்
கின்றார்கள் என்றால் மக்களை தேடிச் சென்று சேவை செய்
கின்ற அரசு, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு
என்பதை நாம் இங்கே ஒத்துக் கொண்டாக வேண்டும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

இன்றையதினம் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரை
சந்தித்த ஒரு காங்கிரஸ் தலைவரைப் பற்றி இங்கே பேசி
னார்கள். இங்கே பேசுகின்ற போது பாட்டாளி மக்கள்
கட்சியைத் தேச விரோதக் கட்சி என்றும், அதைத் தடை
செய்ய வேண்டுமென்றும் இங்கே சட்டமன்றத்திலே அவர்கள்
கோரிக்கையை வைத்த பின்பு, அவர்களை சந்தித்து இருக
கின்றார்கள் என்றால், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக்
இருக்கின்ற அவர்களை சந்தித்து இருக்கின்றார்கள் என்றால்,
இன்றையதினம் தமிழக காங்கிரஸ் கட்சியும் விடுதலைப்
புலிகளுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்று ஐயுற
வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்
காட்டினார்கள். இன்னும் ஒன்றை நான் வலியுறுத்திக்
கூற விரும்புவது, இன்னொரு அடிப்படைக் காரணம்
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எந்தச் ஜாதி இயக்
கத்தை, கட்சியை இன்றைய தினம் நடத்தியே வருகிறார்
களோ, அந்த ஜாதியை சார்ந்தவர் என்ற காரணத்
தினால் அந்தத் தலைவரை சென்று சந்தித்து இருப்பாரோ
என்று ஐயுறத் தோன்றுகிறது. இன்றையதினம் தமிழக
கத்திலே விடுதலைப் புலிகளை ஒழித்து தமிழகத்தை
அமைதிப் பூங்காவாக நடத்திச் சென்று கொண்டிருக்கிற
தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி
ஆட்சியிலே தமிழக மக்களுக்கு என்னென்ன நன்மைகள்
நிறைவேற்றப்படவேண்டுமோ, அத்தனை நன்மைகளையும்
இங்கே நிறைவேற்றப்படுகின்றன. இங்கே பேசிய உறுப்
பினர்கள், அரிசி விலையை ஏற்றியதைப் பற்றி கூறினார்கள்.
இன்றையதினம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர் திரு. தென்னவன் பேசுகின்றபோது, இன்றைக்கு
நாட்டிலே என்னென்ன பொருள்கள் எந்த அளவுக்கு விலை
உயர்ந்து இருக்கின்றன, நாட்டினுடைய வாழ்க்கைத்தரம்
எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கின்றது என்பதை சுட்டிக்
காட்டி, அரிசி விலை உயர்ந்து இருப்பது மக்களுடைய
வாழ்க்கைதரத்திற்கேற்ப வாங்கும் சக்தி அதிகமாகி





இருக்கின்ற காரணத்தினால் உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர
நிச்சயமாக மக்கள் மீது சுமையை சுமத்த வேண்டுமென்று
ஏழை எளிய மக்களை பாதிப்பபுக்குள்ளாக்க வேண்டு
மென்ற அந்த நிலைமை இங்கே உருவாக்கப்படவில்லை
என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.
இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களுக்
காக, இங்கே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற
மக்களுக்காக, அவர்கள் எந்தத் தரப்பிரனராக இருந்தாலும்,
மக்களுக்காக ஆட்சி நடத்துகின்ற ஒரே தலைவி புரட்சித்
தலைவி ஒருவர்தான். இன்றைக்கு மனிதனாகப் பிறந்த
யாராக இருந்தாலும், நீண்டநாள் வாழ்வதற்கு ஆசைப்
படுவார்கள். தன்னுடைய உயிரை எக்காரணம் கொண்டும்,
எப்பாடுபட்டாவது காப்பாற்றியாக வேண்டுமென்ற நிலைமை
யிலே, எந்த நபரும் தன்னுடைய உயிரை காப்பாற்றிக்
கொள்ள, காப்பாற்றும் முயற்சியிலே ஈடுபடுவார்கள். ஆனால்
இன்றையதினம் புரட்சித் தலைவி ஒருவர்தான் தன்னுடைய
உயிரைப் பொருட்படுத்தாது தன்னுடைய உயிருக்கு எந்த
நேரத்திலும் ஆபத்து வரலாமென்று தெரிந்து இருந்தும்,
விடுதலைப்புலிகளை ஒழித்தே தீருவேன், இந்த நாட்டை
ஆயுதக் கலாசாரத்திலிருந்து மீண்டும் அமைதிப் பூங்காவாக
ஆக்கிக் காட்டுவேன் என்ற வீர சபதத்தை ஏற்று அதை
நிறைவேற்றிக் தந்திருக்கின்றார்கள். இந்த நாட்டுக்கு
எந்தத் தியாகத்தையும் செய்ய புரட்சித் தலைவி அவர்கள்
தயாராக இருக்கின்றார்கள். இந்த நாட்டு மக்கள் புரட்சித்
தலைவி அவர்களை என்றென்றும் தமிழகத்தினுடைய
முதல்வராக இருப்பதற்கான வாய்ப்பினை நிச்சயமாக நிர்ண
யித்திருக்கின்றார்கள். அந்த நிலையை யாராலும், இங்கே வெளி
யேற்றப்பட்ட காங்கிரஸ்காரர்களாலும் ஒன்றும் செய்ய
முடியாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே காவல் துறையைப் பொறுத்தவரை நிச்சயமாக
காவல் துறை தமிழகத்தைப் பொறுத்தவரை, எந்த அளவுக்கு
நவீனப்படுத்தப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு நவீனப்
படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற ஆண்டிலே 9,500
காவலர்களை புதியதாக நியமிக்க வேண்டும். மதுவிலக்கு
அமலாக்கத்திற்கு நிச்சயமாக அவர்களுடைய உதவி நல்ல
முறையில் வேண்டுமென்ற காரணத்தினால் இன்றைக்கு கவர்னர்
உரையிலே 9,500 காவலர்களை நாங்கள் தேர்ந்தெடுக்க
இருக்கிறோம் என்ற நிலைமையை இங்கே அறிவித்திருக்கிறார்கள்.
அதற்கு என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்
கிறேன். அதே போன்று தொழில்களைப் பொறுத்த அளவிலே
தேசிய முதலீடு கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய்
இந்தத் தமிழகத்திலே உருவாக்கி இருக்கின்றோம் என்கிற
நிலைமையையும் இங்கே அறிவித்திருக்கின்றார்கள்.

[திரு. கு. சீனிவாசன்] [1993 பிப்ரவரி 10

அதே நேரத்தில் ஆரோமேட்டிக்ஸ் தொழிற்சாலை 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இங்கே நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிற நிகழ்ச்சியை நாம் வரவேற்றாக வேண்டும்.

பிற்பகல் 1-50

அதே போன்று புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்னுடைய முதல்வராக பொறுப்பேற்றதிலிருந்து, இந்தத் தமிழகத்திலே ஏழை எளிய மக்களின் குழந்தைகள் அனாதையாக, பெண் குழந்தைகள் சேலம் மாவட்டத்திலும், பல்வேறு மாவட்டங்களிலும் அனாதைகளாக விடப்பட்ட நிலைமையிலே, அனாதைப் பெண் குழந்தைகளை ஏற்று வளர்க்கின்ற திட்டத்தை இங்கே புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், ஏழை எளிய மக்களின்பால் கருணை கொண்டு, இங்கே தமிழ்நாட்டிலே யாரும் அனாதைகள் இல்லை; நான் இருக்கின்ற வரையில் நிச்சயமாக தமிழக மக்கள் எந்த நேரத்திலும் எதற்கும் கவலைப்பட வேண்டியது இல்லை என்ற நிலைமையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அந்தத் தொட்டில் திட்டத்தினை நிறைவேற்றி இன்றையதினம் பல்வேறு அநாதைக் குழந்தைகள அந்தத் தொட்டிலிலே, அரசுத் தொட்டிலிலே போடப்பட்டு அவர்கள் வளர்க்கப்படுகிறார்கள். அது எவ்வளவு பெரிய திட்டம், எந்த அளவுக்குத் திறமை உள்ள திட்டம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதே நேரத்தில் தமிழகத்தில் சாலைகளைச் செப்பனிடுவதற்கான மேம்பாட்டுத் திட்டத்தை இங்கே பொதுப்பணித்துறை மூலம் மிகவும் சிறப்பாகச் செய்து அதற்குத் தகுந்த அளவுக்கு, உரிய அளவுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்திலிருக்கிற மக்களின் அத்தியாவசியத் தேவையாக இருக்கிற இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற முக்கியமானத் தேவைகளை உணர்ந்து ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற ஓரே தலைவி தமிழக முதல்வராக இருக்கிற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்கள்தான். அந்தக் காரணத்தால்தான் இன்றையதினம் இலவச வேட்டி, சேலைத் திட்டத்தின் மூலம் பொங்கல் தினத்தன்று கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் செலவில் ஒரு கோடியே இருபது இலட்சம் பேருக்கு வேஷ்டி, சேலைகளை வழங்கி இருக்கிறார்கள். ஏழைய எளிய மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் இருக்கிற குழந்தைகள் மேம்பட வேண்டும், அவர்கள் நல்ல முறையில் வளர வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கி, பெரியவர்களுக்கும், முதியவர்



1993 பிப்ரவரி, 10] [திரு. கு. சீனிவாசன்]

களுக்கும் அந்தத்திட்டத்தை விரிவுபடுத்தி இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள் என்றால் அந்த நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதே நேரத்தில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இப்படி இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற அத்தியாவசியத் தேவைகளை உணர்ந்து மக்களின் மனநிலையை உணர்ந்து, மக்களின் தேவைகளைப் புரிந்து, மக்கள் செம்மையாக வாழவேண்டும், அவர்களின் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்கிற ஓரே லட்சியத்தை உயிரோட்டமாகக் கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே நிச்சயமாக என்றென்றும் தமிழக முதல்வராக புரட்சித் தலைவி அவர்கள்தான் நீடிப்பார்கள் என்று சொல்லி வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

* திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிற நல்ல வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் நீங்கள் 1.53-க்கு என்னை அழைத்திருக்கிறீர்கள். எனக்கு ஏறத்தாழ முக்கால் மணி நேரம் தேவைப்படும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் நீட்டித்துக் கொடுத்தால் பேசி முடித்துவிடலாம் அல்லவா?

திரு. எஸ். வி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய விஷயங்கள் பேசியாக வேண்டிய நிலை இருக்கிறது. இந்த 3 மாத காலத்தில் பல புதிய மனச் சூழ்நிலை உள்ளவர்களை எல்லாம் நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாணுவையும், சிவராசனையும் தேசத் துரோகி என்று சொன்னவர்கள், அவர்களை தலையில் தாங்கி பேட்ஜ் குத்திச் சென்றவர்களைத் தடை செய்ய வேண்டுமென்று இங்கே பேசியவர்கள் இன்றைக்கு அவர்களுடைய வீட்டிற்குப்போய் ஒரு மணி நேரம் பேசி விருந்துண்டுவிட்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்குக் காரணமாக இருந்த அரசாங்கத்தைப் பார்த்து விடுதலைப் புலிகளுக்குத் துணை நிற்கிற அரசு என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது குறித்தெல்லாம் நான் பேசியாகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்.

திரு. எஸ். வி. சண்முகம் : அது போலவே அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளையனை எதிர்த்து நீண்ட நெடிய காலம் போராடினார்கள். ஆனால் அந்த வெள்ளையன் ஆட்சி இருக்கிற வரை அண்ணல் மகாத்மா காந்தி உயிருக்கு எதுவும் நேரவில்லை. வெள்ளையன் வெளியேறிய பின்பு காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகுதான் அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் கொல்லப்பட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் மகாத்மா காந்தியினுடைய உயிரைக் காப்பாற்ற முடியாதவர்கள் . .

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, உட்கார வேண்டும்.

திரு. எஸ். வி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் மகாத்மா காந்தி உயிரைக் காப்பாற்ற முடியாதவர்கள், ஒரு சிலையைப் பாதுகாக்க முடியாதவர்கள் என்று இந்த அரசை பார்த்துக் குற்றம் சாட்டுவதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. இது குறித்தெல்லாம் நான் மிக அதிகமாகப் பேச வேண்டி இருப்பதால். . . . . . . . . . . .

பிற்பகல் 1.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் நீங்கள் நாளை மறுநாள் அவையில் தொடரலாம். அவருடைய பேச்சு நாளை மறுநாள் தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்தோடு முடிவுற்று பேரவை மீண்டும் நாளை மறுநாள் 12—2—1993, வெள்ளிக் கிழமை அன்று காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.56 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.





## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

79. 1991—92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

80. 1989—90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

81. 1991—92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்).

82. 1991—92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

83. 1991—92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1771) 47(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ்).

### ஆ. அறிக்கைகள் அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

14. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1—4—1989 முதல் 3—3—1990 வரையிலான இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

15. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தி மூன்றாவது அறிக்கை, 1992—93.

16. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தி நான்காவது அறிக்கை, 1992—93.

[1993 பிப்ரவரி 10

17. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை, 1992—93.

18. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை, 1992—93.

19. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை 1992—93.

20. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

21. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்.1 முதல் 100 வரை).

164982
600 008.